# பரத நாட்டியம்

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி



## தரம் 11

அழகியல் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

# பரத நாட்டியம்

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

## தரம் - 11

ஆழகியல் கல்வித்துறை
மொழிகள், மானுடவியல்,
சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
2009

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

**பரத நாட்டியம்**

தரம் - 11 ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

முதலாம் பதிப்பு - 2008
மீள்பதிப்பு - 2009

எல்லா உரிமையும் இலங்கை அரசினருக்கே

**ISBN - 978-955-654-157-1**

© தேசிய கல்வி நிறுவகம்

**அழகியல் கல்வித்துறை**
**மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்**
**தேசிய கல்வி நிறுவகம்**

**அனுசரணை :** ஆசிய அபிவிருத்தி வங்கி - இடைநிலைக்கல்வி நவீனத்துவ செயற்றிட்டம்

வெளியீடு
கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்காக
விஷ்வ கிரபிக்ஸ்
இல. 439/3/3, ஹோகந்தர வீதி,
பன்னிப்பிட்டிய.

# பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

தற்போதைய ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது ஆசிரியர்கள் தமது பாடங்களைக் கற்பிப்பதற்குப் பின்பற்ற வேண்டிய அவசியமான கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகளை மேற்கொள்வதற்கு சிறந்த ஒரு வழியாட்டியாகும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது நீங்கள், உங்கள் வகுப்பறைச் செயற்பாடுகளை மாணவர் - மையக் கற்றலுக்கு ஏற்ற வகையில் ஒழுங்கமைப்பதற்கான வழிகாட்டலை வழங்குகின்றது. இன்றைய வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை மாணவர் மையமாக ஒழுங்கமைப்பதென்பது எமது இலங்கை ஆசிரியருக்கும் வகுப்பறைக்கும் ஒரு புதிய அனுபவமன்று. எவ்வாறாயினும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி மூலம் மாணவர் மையக் கற்றல் - கற்பித்தல் முறைமையியலுக்கு ஒரு புதிய பண்புக் கூறு கிடைக்கிறது.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது மாணவர்களின் பங்குபற்றுதலை உறுதிப்படுத்தும் வகையில் பாடத்தைத் திட்டமிடுவதற்கு அவசியமான பாதையை வழங்குவதோடு மட்டுமல்லாது அதற்கு அவசியமான சூழலை மதிநுட்பத்துடன் கட்டியெழுப்பவும் உதவுகிறது.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் உள்ளார்ந்த அடிப்படையானது ஆசிரியர் என்பவர் வெறுமனே அறிவை ஊடுகடத்துபவராக அல்லாது அறிவில் மாற்றத்தை ஏற்படுத்துபவராகவும் இருக்க வேண்டும் என்னும் தத்துவத்தைக் கொண்டுள்ளது. இச்செயற்பாடானது மாணவரை கற்பவர் என்னும் நிலையிலிருந்து அறிவைத் தேடுபவர் என்னும் நிலையை அடைவதற்கும், இதன் மூலம் புதிய அறிவை உருவாக்கவும் உதவுகின்றது. ஆகவே, ஆசிரியர் என்பவர் மாணவருக்கு புதிய அறிவை ஆய்ந்தறிந்து கண்டுபிடிப்பதற்கான வழிகாட்டியாகவும் தூண்டியாகவும் செயற்பட வேண்டும்.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் உள்ளார்ந்த தத்துவமும் செயற்பாட்டு வடிவமைப்பும் பழமையான கற்பித்தல் முறைமையியலையும் சிந்தனைகளால் உண்டாகும் தடைகளையும் தகர்த்தெறிய ஆசிரியர்களைத் தூண்டும் என நம்பப்படுகின்றது. எனவே, ஆசிரியர்கள் புதிய கற்பித்தல் அணுகுமுறைகளையும் கற்பித்தல் முறைகளையும் அவசியம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். புதிய ஆயிரமாம் ஆண்டானது மிகப் பரந்த எல்லையற்ற புதிய அறிவின் தோற்றத்தையும் உருவாக்கத்தையும் கண்டுள்ளது. ஆகவே, ஒவ்வொருவரும் தமது புதிய செயற்பாடுகளை ஒரு முகப்படுத்தித் திட்டமிடுவதற்குப் பழைய முறைகளை மாற்றியமைக்க வேண்டிய தேவையுள்ளது.

ஆசிரியர் தனது கற்பித்தல் பணியில் பயன்படுத்தக்கூடிய அடிப்படையான அறிவுறுத்தல்களை வழங்குவதுடன் உயர் அணுகுமுறைகளை நோக்கி அவரை வழிநடத்துவதும் இவ்வகையான ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களின் ஊடாக எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் ஆசிரியர், இவ் அறிவுரைப்பு வழிகாட்டியை உரிய முறையில் கற்று அதனுடைய நோக்கங்களைக் கொண்டு வகுப்பறையில் உச்ச பயனைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம், வகுப்பறையை வினைத்திறன் மிக்கதும் தரமானதுமாக்குவதுடன் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை உயர்வடையச் செய்வதற்கும் ஆசிரியர் பெரும் முயற்சி மேற்கொள்ளுவார் என்பது எனது நம்பிக்கையாகும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் திறம்படத் தயாரித்து வெளியிடுவதற்கு தமது நேரத்தையும் சிறப்புத் திறமைகளையும் பங்களிப்பு செய்த தேசிய கல்வி நிறுவகத்தைச் சேர்ந்த பாட நிபுணத்துவர்களுக்கும் வெளி வளவாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

பேராசிரியர் லால் பெரேரா
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

## கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி

யாவருக்கும் கல்வி என்னும் நோக்கத்தை மையமாகக் கொண்டு எமது அரசு நாட்டிலுள்ள சகல பாடசாலை மாணவர்களுக்கும் இலவசமாகப் பாடநூல்களை வழங்கி வருகின்றது. அத்துடன் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளை ஆக்கி வழங்குவதானது கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் பண்புத்தர விருத்தியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வகுப்பறைக்குள்ளும் அதற்கு வெளியேயும் மாணவர்களின் அறிவுவிருத்திச் செயற்பாட்டுக்கு வழிகாட்டுவோர் ஆசிரியர்களே. மேலும், பாடத்திட்டத்தால் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டங்களை நோக்கி மாணவர்களை வழிநடாத்தும் முக்கிய நபரும் ஆசிரியரேயாவார். இந் நோக்கத்தை அடைவதற்கு இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்குக் கைகொடுக்கும். இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களைக் கற்றுப் பின்பற்றுவதன் மூலம் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை அதிக பயனுறுதியுடையதாக மாணவர்களுக்கு வழங்கும் பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களைச் சார்ந்ததாகும். இப் பொறுப்பை உணர்ந்து செயற்படும் நீங்கள் பெறுமதிமிக்க ஒரு வளம் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

அறிவு, திறன்கள், மனப்பாங்குகள், தேர்ச்சிகள் என்பவற்றையும் வலிமையான சமூக மற்றும் உள்ளார்ந்த திறன்களையும் கொண்ட முழுமையான பிரசைகளை சமூகத்திற்கு வழங்கும் பொறுப்பு உங்களுடையதே. தற்கால உலகின் சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய எதிர்கால சந்ததியை நீங்கள் உருவாக்குவீர்கள் என்பதே என் எதிர்பார்ப்பாகும். உங்கள் ஆற்றலை உறுதியாக்குவதன் மூலம் அவ் எதிர்பார்ப்பை வெற்றிகரமாக்குவதற்கு இவ் அறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்கு உதவும் என உறுதியாக நம்புகின்றேன்.

டபிள்யு.எம்.என்.ஜே புஸ்பகுமார
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
'இசுருபாய'
பத்தரமுல்ல

# உதவிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

இலங்கையின் கலைத் திட்டக் கொள்கையில் பாடசாலைக் கலைத்திட்டமானது, எட்டு வருடங்களுக்கு ஒருமுறை காலத்திற்கு இயைந்ததாகத் திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றது. அதற்கேற்ப 2007ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வருகின்ற கலைச் சீர்திருத்தத்தின் கீழ் இப்பாடத் திட்டமும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிவுரைப்பு வழிகாட்டி நூலும் அறிமுகஞ் செய்யப்படுகின்றன.

இதுவரை நடைமுறையில் இருந்த பாடத்திட்டங்களில் குறித்த பாடத்துடன் தொடர்பான விடயத் தலைப்புக்களும் அவற்றின் உள்ளடக்கமும் அமைந்திருந்தமையால், அவற்றைக் கற்பிக்கும் பணி ஆசிரியரின் மீது சுமத்தப்பட்டிருந்தது. இச்செயற்பாடுகள் மூலம் ஏராளமான தகவல்களை மாத்திரம் அறிந்த மாணவர் பரம்பரையொன்று உருவானது.

புதிய கலைத்திட்டச் சீர்திருத்தத்தின் கீழ் அறிமுகம் செய்யப்படுகின்ற பாடத்திட்டங்களில் அவ்வவ் பாடங்களில் மாணவர் அடைந்து கொள்ள வேண்டிய தேர்ச்சிகள் பல இனங்காணப் பட்டுள்ளன. இந்தப் புதிய பிரவேசத்தின் மூலம் அதிகமான விடயங்களைக் கற்று அதேநேரம் அவற்றை நடைமுறையில் செயற்படுத்துகின்ற, தேர்ச்சி கொண்ட மாணவர் பரம்பரையொன்றை உருவாக்குவது எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால், புதிய பாடத்திட்டத்தைக் கையாள்கின்ற ஆசிரியர்கள் இவ்வேறுபாட்டைச் சரியாகப் புரிந்து கொள்வதுடன் அதில் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

இந்நூலின் ஆசிரியர் அறிவுரை வழிகாட்டிப் பகுதியில் புதிய கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு விதந்துரைக்கப்பட்டுள்ளது. இச்செயலொழுங்கின் கீழ் மாணவன் நூலகத்தைப் பயன்படுத்துதல், நூல்களை வாசித்தல், சுற்றாடலை அவதானித்தல், தகவல் அறிந்தோரைச் சந்தித்து விடயங்களைச் சேகரித்தல், தமது சகபாடிகளிடம் இருந்து பல்வேறு விடயங்களைக் கற்றல், தாம் அறிந்தவற்றை அவர்களுடன் பரிமாறிக் கொள்ளல், இயலுமெனில் இணையத்தளம் மூலம் தகவல் திரட்டல், முதலான கண்டறிதல் மூலமான கற்றல் கலாசாரமொன்றைக் காணமுடியும். இவ்வாறு கண்டறியப்படுகின்ற தகவல்கள் மிகச் சரியாகவும், ஒழுங்குபடுத்தப் பட்டும் முழுமையாகவும் மாணவர்களை அடையச் செய்வதே ஆசிரியர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகின்ற பணியாகும். இந்த வகையில் ஆசிரியரின் வகிபாகம் புதிய அறிவுரைகள் மூலம் போசிக்கப்படுவது அவசியமாகும். இங்கு மாணவர் ஏராளமான விடயங்களைக் கண்டறிந்து பல்வேறு அம்சங்களையும் தெரிந்தவர்களாக மாறுகின்றனர். இத்தகைய செயற் பாட்டுக் கற்றற் சூழலானது மாணவர்களைப் பெரிதும் கவர்வதாக அமையும்.

இதற்காக இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலில் விதந்துரைக்கப்பட்ட மாதிரிச் செயற்பாடுகளைக் கையாண்டு, இன்னும் பல்வேறு செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வதற்கும் இந்நூலை ஒரு வழிகாட்டியாகக் கொள்ளுங்கள். இதனூடாகப், புத்தாக்கத் திறனுடைய ஓர் ஆசிரியராக இருந்து பல்வேறு புதிய செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வீர்களென எதிர்பார்க்கின்றோம்.

இந்தப் புதிய வகுப்பறைக் கற்றல் கற்பித்தற் செயலொழுங்கின் போது, மாணவர் எப்பொழுதும் செயற்படுபவர்களாகக் காணப்படுவர். அதனால், அவர்களது திறமைகள், ஆற்றல்கள் வெளிக்கொணரப்படும். அவற்றுக்கு நீங்கள் மதிப்பளியுங்கள். அவர்களை உற்சாகப்படுத்துங்கள். இன்னும் சில சந்தர்ப்பங்களில் மாணவர் எதிர்கொள்ளும் கஷ்டங்கள், இடையூறுகள் என்பவற்றை உங்களால் அவதானிக்க முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் நீங்கள் உதவி செய்யுங்கள். அயலிலுள்ள சகபாடிக்கு உதவி செய்ய மாணவரை வழிப்படுத் துங்கள். இவ்வாறு செயற்பாட்டின் போது இடம்பெறுகின்ற கணிப்பீட்டுச் செயலொழுங்கானது சிறந்ததொரு கற்றலுக்கு உதவியாக அமையும்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலில் குறிப்பிடப்பட்டுள்ள கற்றல்- கற்பித்தற் செயற்பாட்டினை நீடிப்பதற்கான உபகரணமானது ஒப்படையாக அல்லது பயிற்சியாக மாணவர் கற்றவற்றை மேலும் பலப்படுத்தக்கூடிய விதத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதனைச் செயற்படுத்துவதில் உங்களது அவதானத்தைச் செலுத்துங்கள். இதனை மாணவரை மதிப்பீடு செய்வதற்கான சந்தர்ப்பமாகவும் ஆக்கிக்கொள்ளுங்கள். இவ்வாறான கற்றல் கற்பித்தலை நீடிக்கும் உபகரணங்களைத் தயாரித்து, பல்வேறு பயிற்சிகளில் மாணவரை ஈடுபடுத்துவதில் உங்களது கவனத்தைச் செலுத்துங்கள்.

இதனூடாகப், புதிய உலகிற்குப் பொருத்தமான தேர்ச்சிகளுடன் கூடிய மாணவர் பரம்பரையொன்றை உருவாக்குவதும் அதற்குப் பொருத்தமான ஆசிரியர் வகிபாகம், வகுப்பறை புதிய கற்றல் கலாச்சாரத்திற்கு ஏற்ப உருவாக வேண்டுமென எதிர்பார்க்கின்றேன்.

கலாநிதி. விமல் சியம்பலாகொட
உதவிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மாணிடவியல், சமூக விஞ்ஞானப் பிரிவு
தேசிய கல்வி நிறுவகம்

## ஆலோசகர் குழுவும் எழுத்தாளர் குழுவும்

| | | |
|---|---|---|
| **ஆலோசனை** | : | பேராசிரியர் ஜே. டப்ளியூ. விக்ரமசிங்க<br>பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்<br><br>கலாநிதி. விமல் சியம்பலாகொட<br>உதவிப் பணிப்பாளர் நாயகம்<br>மொழிகள், மாணிடவியல், சமூக விஞ்ஞானப் பிரிவு<br>தேசிய கல்வி நிறுவகம் |
| **மேற்பார்வை** | : | திரு. சுதத் சமரசிங்க<br>பணிப்பாளர்,<br>அழகியல் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.<br>திரு. உ. நவரட்ணம்<br>தேசிய கல்வி நிறுவகம் |
| **ஒருங்கிணைப்பு** | : | திரு. எஸ். வர்ணசிங்ஹ<br>பிரதம செயற்றிட்ட அதிகாரி,<br>தேசிய கல்வி நிறுவகம்.<br><br>திருமதி. சுனேத்ரா ஜோன் ஜெஸ்லி<br>செயற்றிட்ட அதிகாரி,<br>தேசிய கல்வி நிறுவகம். |
| **எழுத்தாளர் குழு** | : | கலாபூஷனம் திருமதி லீலாம்பிகை செல்வராஜா<br>முன்னாள் ஆசிரிய ஆலோசகர்,<br>யாழ் கல்வித் திணைக்களம் - வலயம் -02.<br>திருமதி. வசந்தி நேரு<br>ஆசிரியை, சிசிலியா பெண்கள் பாடசாலை,<br>மட்டக்களப்பு.<br>திருமதி. சுமதி புவனேந்திரா<br>ஆசிரியை, கணபதி இந்து மகளிர் கல்லூரி,<br>கொழும்பு - 12.<br>திருமதி. மாதுமையாள் வரதராஜன்<br>ஆசிரியை, கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலை,<br>கல்முனை.<br>திருமதி. பாரதி சிவயோகநாதன்,<br>ஆசிரியை, இராமகிருஷ்னா வித்தியாலயம்,<br>கொழும்பு - 05. |
| **மொழி மேற்பார்வை** | : | திரு. து. இராஜேந்திரம்<br>ஓய்வுபெற்ற சிரேட்ட விரிவுரையாளர்,<br>கல்விப் பீடம், திறந்த பல்கலைக் கழகம். |

# உள்ளடக்கம்

**விடயம்** **பக்கம்**


**பகுதி I**

| | | | |
|---|---|---|---|
| 11.1.1 | : | அறிமுகம் | ....... 1 |
| 11.1.2 | : | பாடத்திட்டத்தின் நோக்கங்கள் | ....... 2 |
| 11.1.3 | : | வகுப்பிற்குரிய தேர்ச்சிகள் | ....... 3 |
| 11.1.4 | : | பாடசாலைக் கொள்கைகளும் நிகழ்ச்சித் திட்டங்களும் | ....... 4 |
| 11.1.5 | : | தர உள்ளீடு | ....... 6 |
| 11.1.6 | : | கற்றல் கற்பித்தலுக்கான நேர ஒதுக்கீடு | ....... 7 |
| 11.1.7 | : | பாடத்திட்டம் | ...... 15 |

- தேர்ச்சி
- தேர்ச்சி மட்டம்
- விடய உள்ளடக்கம்

**பகுதி - II**

| | | | |
|---|---|---|---|
| 11.2.0 | : | செயற்பாடுகளின் தொடரகம் | ....... 01 |
| 11.2.1 | : | கற்றல் - கற்பித்தல் முறை விளக்கம் | ....... 16-20 |
| 11.2.2 | : | செயற்பாடுகளின் தொடர் | ....... 20-230 |

**பகுதி - III**

| | | | |
|---|---|---|---|
| 11.3.0 | : | கணிப்பீடும் மதிப்பீடும். | ....... 231 |
| 11.3.1 | : | கணிப்பீடும் மதிப்பீடும் - விளக்கம் | .......232-234 |
| 11.3.2 | : | கற்றல் கற்பித்தலை மேலும் விரிவுபடுத்துவதற்கான கருவிகள் | .......235-236 |

# பகுதி - I

# விரிவான பாடத்திட்டம்

## 11.1.1. அறிமுகம்

நடனம் ஒரு தெய்வீக கலையாகும். இப்புதிய கலைத்திட்டம் இரசித்தல், ஆக்கத்திறன், செய்முறை, அறிமுறை. கலாச்சாரப்பின்னணி ஆகியவற்றின் அடிப்படையில் கற்றல் தேர்ச்சி, தேர்ச்சி மட்டம், தீர்மானிக்கப்பட்டு அவற்றிற்கமைய கலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்படுகின்றது.

நடன பாடத்தைக் கற்பதால் மாணவரிடையே இரசித்தல், ஆக்கத்திறன், விமர்சிக்கும் திறன் என்பன வெளிக்காட்டப்படுகிறது. இத்திறன்கள் மூலம் சமநிலை ஆளுமைப் பண்புகள் விருத்தி செய்து நற்பண்புகள் கொண்ட மாணவர்களை உருவாக்கலாம்.

இத்தேர்ச்சி மட்ட பாடத்திட்டமானது மாணவர்களை மையமாக்கப்பட்டுள்ளது. கற்றல்-கற்பித்தல் என்பவற்றைத் தெளிவாகப் புரிந்து தாமே விருப்பத்தோடு ஈடுபடுவதற்கு ஏற்ற வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை விளங்கி தற்கால கலைத்திட்டத்திற் கேற்ப மாணவரின் இயல்பான திறன்களை முன்னேற்றும் வகையில் தமது கற்பித்தல் திட்டங்களை வகுத்துக் கொள்ள வேண்டும்.

தேர்ச்சி, தேர்ச்சி மட்டம் இப்பாடத்தில் அடைவதற்குத் தேவையான அடிப்படைத் தகைமைகள் வகுப்பிற்குரிய தேர்ச்சிகள், கற்றல் கற்பித்தல் முறைகள், கணிப்பீட்டு மதிப்பீட்டு முறை நேரப் பகிர்வு என்பன உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 11.1.2 பாடத்திட்டத்தின் நோக்கங்கள்

1. பரத நாட்டியத்தின் அறிமுறை சார்ந்த அறிவினை விருத்தி செய்வதன் ஊடாக ஆடும் திறன், இரசிக்கும் ஆற்றல், விமர்சிக்கும் திறன் ஆகியவற்றை விருத்தி செய்தல்.

2. பரத நாட்டியத்தின் செய்ம்முறை சார்ந்த அறிவினை வழங்குவதன் மூலம் அறிமுறை சார்ந்த அறிவினை விருத்தி செய்தல்.

3. அறிமுறை சார்ந்த அறிவின் ஊடாக ஆடும் திறன், இரசிக்கும் திறன், விமர்சிக்கும் ஆற்றல் ஆகியவற்றை வளர்த்தல்.

4. i. ஆற்றுகைத் திறன்
   ii. உருப்படிக்கு ஏற்ப ஆடும் திறன்
   iii. வடிவமைக்கும் திறன்

5. பரத நாட்டியத்தை இரசித்து அனுபவிக்கும் திறனை விருத்தி செய்தலும் ஏனைய நடன வகைகளை இரசித்தலும் நயத்தலும்.

6. பரத நாட்டியத்தின் தோற்றம், வளர்ச்சி அதன் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தோர் என்பனவற்றை அறிந்து சமூகபண்பாட்டு விழுமியங்களைப் பேணவும் ஆய்வுகளை மேற்கொள்ளவும் ஊக்குவித்தல்.

7. அறிவு, திறன், மனப்பாங்கு விருத்தியின் ஊடாக சமநிலை ஆளுமையை அடைவதற்கு உதவுதல்.

8. பரத நாட்டியத்துக்கு ஊடாக தேசிய ஒருமைப்பாட்டையும் நல் இணக்கத்தையும் மேம்படுத்தல்.

## 11.1.3 வகுப்புக்குரிய தேர்ச்சி

1. பரத நாட்டிய நிகழ்ச்சிகளையும் கிராமிய நடன நிகழ்ச்சிகளையும் பார்த்து தாம் நயந்தவற்றை வெளிப்படுத்துவார்.

2. சூழலில் காணப்படுகின்ற இயற்கை அம்சங்களையும் கிராமிய நடனம் தொடர்பான ஆக்கச் செயற்பாடுகளையும் வெளிக்கொணர்வார்.

3. பரத நாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக்காட்டுவார்.

4. பரத நாட்டியம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக் கருக்களையும் விளக்குவார்.

5. பரத நாட்டியம், கிராமிய நடனம் என்பன பற்றியும், இலங்கையின் தேசிய கலாசார நடனங்களின் வரலாற்றுப் பின்னணி பற்றியும், இவற்றின் இசை பற்றியும் விபரிப்பார்.

## 11.1.4 பாடசாலைக் கொள்கைகளும் நிகழ்ச்சித்திட்டங்களும்

மாணவர்களது தேர்ச்சி, தேர்ச்சி மட்டம், தன் மனப்பாங்கு முதலியவற்றை விருத்தி செய்து கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகள் மாணவர் மையமாக்கப்பட்டு வகுப்பறைக் கற்பித்தல் தெளிவாக நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ளது. உத்தேச குறிக்கோள்களை அடையக் கூடியவாறு பாடசாலை மட்டத்தில் பல்வேறு வேலைத்திட்டங்களை திட்டமிட்டு அமுற்படுத்துவது பயனுடையதாகும். பரத நாட்டியப்பாடம் தொடர்பாகப் பிரதேசத்தில் காணப்படும் மனித பௌதீக வளங்களையும் பயன்படுத்திப் பாடசாலைப் பயன்பாட்டுக்கு அமைவான பின்வரும் வேலைத்திட்டங்களை அமுற்படுத்துவதனூடாக வகுப்பறைக் கற்றல்-கற்பித்தல் செய்ம்முறைக்கேற்ப மாணவர் தேர்ச்சி, தேர்ச்சி மட்டம் மென்மேலும் பயனுடையதாக ஆக்கிக்கொள்ளலாம்.

### நேரசூசி

பரத நாட்டியம் அறிமுறையும், செய்ம்முறையும் இணைந்த ஒரு பாடமாகும். அறிமுறை அறிவில் மட்டும் தேர்ச்சி பெறல் பயனளிக்காது. மாணவர் செய்ம்முறையில் உயர் தேர்ச்சி மட்டத்தை அடையவேண்டும் என்பதால் நேரசூசியில் அதிக பாடவேளைகள் செய்ம்முறைப் பயிற்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. பாடசாலையில் உள்ள வசதிக்கேற்ப செய்முறைப் பயிற்சிக்காக இரு பாடவேளைகள் தொடர்ச்சியாகவும் வழங்கப்படலாம்.

### ஆசிரியர் தகைமைகள்

பரத நாட்டியப் பாடத்தைக் கற்பிப்பதற்கு இத்துறையில் முறைப்படி பயிற்சி பெற்றவர்களே பொருத்தமானவர்களாவர். பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாத பட்சத்தில் இப்பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர், கர்நாடக சங்கீதத்துறையில் நிபுணத்துவம் பெற்ற மற்றுமொரு ஆசிரியரது உதவியைப் பெறல் இன்றியமையாததாகும்.

### அதிபரின் கற்பித்தல் தலைமைத்துவப்பங்கு

பாடசாலை அதிபர் ஒருவர் முகாமைத்துவத் தலைமைத்துவத்தோடு கற்பித்தல் தலைமைத்துவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும். எனவே கர்நாடக சங்கீதத்தினைக் கற்பிப்பதற்குப் பயிற்சிபெற்ற ஆசிரியர் ஒருவரைப் பெற்றுக்கொள்ளல், இப்பாடத்தைக் கற்பிப்பதற்கென தனியான ஓர் அறையை ஒழுங்கு செய்தல், தேவைப்படும் தரஉள்ளீடுகள், பாடத்திட்டம், வழிகாட்டி நூல்கள் முதலியவற்றைப் பெற்றுக் கொடுத்தல் அவருடைய கடமையாகும்.

## இணைப்பாட விதானச் செயற்பாடுகள்

01. பரத நாட்டியம் கற்பிக்கும்போது ஒன்றிணைந்த தன்மை பேணப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்படுவதனால் நடன ஆசிரியர்களுக்கும் ஏனைய ஆசிரியர்களுக்கும் இடையே தொடர்புபடுத்துவது இன்றியமையாதது ஆகும். இதற்கான ஏற்பாடுகள் அதிபரின் ஊடாகச் செய்யப்படுதல் வேண்டும். உதாரணம் தமிழ்மொழி தினம், பரிசளிப்பு விழா, கலை நிகழ்ச்சிகளுக்கு நடன ஆசிரியரின் உதவியைப் பெறலாம்.

02. வருடத் தொடக்கத்திலேயே இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்கான திட்டம் வகுக்கப் படல். இலக்கிய மன்றங்கள், வகுப்பறை மாணவர் மன்றங்கள், கலை மன்றங்கள் போன்றவற்றை உருவாக்கி நடன நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் வழங்குதல்.

03. இவை தவிர வருடாந்த பாடசாலை வைபவங்களாகக் கொண்டாடப்படும் பரிசளிப்பு விழா, கலை விழா, தமிழ்மொழித்தின விழா, இலக்கிய விழா, சமய விழாக்கள், நடன மன்றத்தின் நடனப் போட்டிகள் முதலானவற்றில் மாணவர் பங்குபற்றுவதற்கு மட்டுமன்றி தாமே சுயமாக நடன நிகழ்ச்சிகளை ஆக்கிக்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படுதல்.

04. சமுதாயத்தைப் பாடசாலைக்குள் கொண்டு வருவதற்கும் பாடசாலையை சமுதாயத் திற்குள் கொண்டு செல்வதற்கும் கலை, கலாச்சார நிகழ்ச்சிகள் ஊடகமாகக் கருதப்படு கின்றன. எனவே இத்தகைய நிகழ்ச்சிகளில் மாணவர் பங்களிப்புச் செய்வதற்கு வசதியும் வாய்ப்புகளும் வழங்கப்படுதல்.

05. கலை நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்படுதல் மாணவர்களுடைய ஆக்கத்திறன் விருத்திக்கும் நயக்கும் திறனுக்கும் துணைபுரியும்.

06. நடன விற்பனவர்களின் பிறந்ததினத்தைக் கொண்டாடுதல்.
(திருமதி. Dr. ருக்மணிதேவி அருண்டேல்)

07. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் மாணவர் பங்குபற்றக் களம் அமைத்துக் கொடுத்தல்.

08. பிரதேசத்தில் காணப்படும் கலையரங்கங்களைப் பார்வையிடல்.

## 05. தர உள்ளீடுகள் (கற்பித்தல் உபகரணங்கள்)

பரத நாட்டியப் பாடக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின் போது கீழ்க்காணப்படுகின்ற தர உள்ளீடுகளைப் பயன்படுத்துவது விரும்பத்தக்கதாகும்.

- தட்டுக்கழி
- தட்டுப்பலகை
- நட்டுவாங்கத்தாளம்
- சுருதிப்பெட்டி
- தம்புரா
- மிருதங்கம்
- உடுக்கை
- தவில்
- பிடில்
- வீணை
- பக்கவாத்திய இசைக்கருவிகள்
- இசைத்தட்டுக் கருவி (Gramaphone)
- இசைத்தட்டுக்கள்
- ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதி பெட்டிகைப் பதி கருவி
- ஒளிப்பதிவு நாடா
- வீடியோ பெட்டிகைப் பதி கருவி (Video Deck)
- தொலைக்காட்சிக் கருவி (Television)
- நடனம் தொடர்பான நூல்கள்
- மாணவரின் உபயோகத்திற்குத் தேவையான பாய், வெண்கட்டி, பல நிறக் கட்டிகள், கரும்பலகை, கோலாட்டக்கழிகள், செம்பு, பின்னல் கோலாட்டத்திற்குத் தேவையான கயிறுகள், நாட்டியம் சம்பந்தமான படங்கள், வேற்று நாட்டு நாட்டியப் படங்கள் (கிராமிய சாஸ்திரம்)
- கையேடுகள், ஒளிப்படங்கள் (Photographs) சஞ்சிகைகள், பத்திரிகை விளம்பரங்கள், வரைபடங்கள், விளக்கப்படங்கள், அட்டவணைகள்
- ஆடை, ஆபரணங்கள், ஒப்பனைப் பொருட்கள்
- அலுமாரி

## 06. கற்றல் - கற்பித்தலுக்கான நேர ஒதுக்கீடு

## தரம் - 11

## பாடத்திட்டம்

| பிரதான தேர்ச்சிகள் | | பாடவேளைகள் |
|---|---|---|
| 1.0 | நயத்தல் | 06 |
| 2.0 | ஆக்கத்திறன் | 08 |
| 3.0 | செய்ம்முறை | 49 |
| 4.0 | அறிமுறை | 23 |
| 5.0 | கலாசாரப்பின்னணி | 04 |
| | **மொத்தம்** | 90 |

## 11.1.7 பாடத்திட்டம் - தரம் 11

| தேர்ச்சி / தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாடவேளைகள் |
|---|---|---|
| 1.0<br>பரத நாட்டிய நிகழ்ச்சிகளையும் கிராமிய நடன நிகழ்ச்சிகளையும் பார்த்து நாம் நயந்தவற்றை வெளிப்படுத்துவார். | | |
| 1.1<br>வெகுசனத் தொடர்பு ஊடகங்கள் மூலம் வெளிக்கொணரப்படும் கலை நிகழ்ச்சி களில் தாம் நயந்தவற்றை வெளிப் படுத்துவார். | • பாவம்<br>• சாத்வீக பாவம் | 02 |
| 1.2<br>பரத நாட்டியம் மற்றும் கிராமிய நடன நிகழ்ச்சிகளையும், பாடசாலைக் கலை விழாக்களில் இடம்பெறும் நடன நிகழ்ச்சிகளையும் இனங்கண்டு இரசித்த வற்றை வெளிப்படுத்துவார். | • ஏனைய நடன வடிவங்கள் | 02 |
| 1.3<br>கலை நிறுவனங்களினால் நடாத்தப்படும் கலை நிகழ்ச்சிகளிலும் நடனப் போட்டி களில் இடம்பெறும் நிகழ்ச்சிகளிலும் தாம் நயந்தவற்றைக் கூறுவார். | • நிருத்திய உருப்படிகள்<br>• கீர்த்தனை<br>• பதவர்ணம் | 02 |
| 2.0<br>சூழலில் காணப்படுகின்ற இயற்கை அம்சங்களையும் கிராமிய நடனம் தொடர்பான ஆக்கச் செயற்பாடுகளை யும் வெளிக்கொணர்வார். | | |
| 2.1<br>இயற்கைச் சூழலிலுள்ள நிகழ்வுகளை யும் உயிரினங்களையும் இனங்கண்டு பாவனை செய்து காட்டுவார். | • சிலை வடித்தல்<br>• மரத்தில் தெய்வ உருவங் களைச் செதுக்குதல்<br>• கல்லில் மானிட உருவங்கள் வடித்தல். | 02 |

| தேர்ச்சி / தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாடவேளைகள் |
|---|---|---|
| 2.2<br>அபிநயப் பாடல்களுக்கும் கதைப் பாடல்களுக்கும் அமைவான அபிநயங் களைத் தாமே அமைத்து ஆடியும் பாடியும் காட்டுவார். | • தேவாரம்<br>• தோடுடைய செவியன்<br>• சொற்றுணை வேதியன் | 02 |
| 2.3<br>கிராமியப் பாடல்களுக்கு ஏற்ற எளிய பாத அசைவுகளைத் தாமாகவே அமைத்து ஆடற் கோலங்களை ஆற்று கைப்படுத்துவார். | • தொழில்சார் நடனங்கள்<br>• மீனவர் நடனம்<br>• அரிவி வெட்டும் நடனம்<br>• தேயிலைக் கொழுந்து பறிக்கும் நடனம் | 02 |
| 2.4<br>வருடாந்த கலை நிகழ்ச்சியை நடாத்து வார். | • தாம் கற்றுக்கொண்ட நடனங் களையும் தமது ஆக்கச் செயற்பாடுகளையும் அரங் கேற்றுவார். | 02 |
| 3.0<br>பரத நாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடு களையும் லயத்துடன் ஆடிக்காட்டுவார். | | |
| 3.1<br>இலகுவான சந்தங்களுக்கேற்ப லயத் துடன் அசைந்து காட்டுவார். | • நடைகள் சங்கீரணம் | 01 |
| 3.2<br>தேவ, ஜாதி, நவகிரக, தசாவதார, பாந்தவ்ய ஹஸ்தங்களை அவற்றிற் குரிய முத்திரைகளுடனும் பாத நிலை களுடனும் செய்து காட்டுவார். | • பாந்தவ்ய ஹஸ்தம்<br>• பாத நிலைகள்<br>பிரேங்கணம்<br>ஸ்வஸ்திகம்<br>ஆயதம்<br>சம ஸூசி<br>ஸ்தானகம்<br>ஆலீடம் | 02<br><br><br>01 |
| 3.3<br>பரத நாட்டியத்தின் அடிப்படை அடவு களில் சிலவற்றை ஆடிக்காட்டுவார். | • தெய் தெய் தத்தா (1-2)<br>• தத்தெய் தாஹா (3-4) | 07 |

| தேர்ச்சி / தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாடவேளைகள் |
|---|---|---|
| 3.4<br>நடன உருப்படிகளை ரஸ பாவத்துடன் ஆடிக்காட்டுவார். | • தேவாரம்<br>என்ன புண்ணியம் செய்தனை | 02 |
| | • ஜதீஸ்வரம்<br>- சாவேரி அல்லது வசந்தா இராகத்தில் அமைக்கப் பட்டது | 14 |
| | • சப்தம்<br>- ஆயர் சேரியர் அல்லது ஸரஸி ஜாஷுலு | 14 |
| 3.5<br>வெவ்வேறு வகையான கிராமிய நடனங் களை ஆடிக்காட்டுவார். | • ஏற்கனவே கற்ற கிராமிய நடன வகைகள் | |
| | - கும்மி, கோலாட்டம், கரகம் | 02 |
| | - காவடி, ஒயிலாட்டம், குறத்தி | 02 |
| | - தேயிலைக் கொழுந்து பறிக்கும் நடனம் | 02 |
| | - அரிவி வெட்டு நடனம் | 02 |
| 4.0<br>பரத நாட்டியம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார். | | |
| 4.1<br>இசைக் குறியீடுகளின் வகைகளையும், சூளாதி சப்த தாளங்களின் குறியீடு களையும் அறிந்து 5 ஜாதிகளினால் 35 தாளங்கள் ஆகும் முறையினைக் கூறுவார். | • 35 தாளச் சக்கரம் | 03 |
| 4.2<br>தேவ, நவக்ரக, ஜாதி, தசாவதாரம், பாந்தவ ஹஸ்தங்களுக்குரிய முத்திரை களையும் அவற்றின் பாத நிலைகளை யும் அறிந்து கூறுவார். | • பாந்தவ ஹஸ்தங்கள் | 03 |
| 4.3<br>புஷ்பாஞ்சலி, அரங்கதேவதாஸ்துதி நாட்டியக்கிரமம், பாத்திர அந்தப் பிராணன், கிங்கிணி ஆகியவற்றிற்குரிய ஸ்லோகங்களையும் கருத்துக்களையும் கூறுவார். | • பாத்திரப் பிராணன் | 01 |
| | • அந்தப் பிராணன் | 01 |
| | • பகிப் பிராணன் | 01 |

| தேர்ச்சி / தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாடவேளைகள் |
|---|---|---|
| 4.4<br>தாண்டவம், லாஸ்யம், அடவு, தீர்மானம், கோர்வை, சொற்கட்டு, எடுப்பு, பாத்திரம், அபாத்திரம், குரு, சிஷ்யன், சபாநாயகன், சபை, பஞ்சபாணங்கள், நாட்டிய தர்மி, லோகதர்மி ஆகியவற்றின் எண்ணக்கருக்களை விளக்குவார். | • பஞ்ச பாணங்கள்<br>• நாட்டிய தர்மி<br>• லோக தர்மி | 02<br>01 |
| 4.5<br>பரத நாட்டியக் கச்சேரி அமைப்பு முறையினையும், அணிசேர் இசைக் கருவிகளையும் விளக்கி வாக்கேயகார் களின் வாழ்க்கை வரலாற்றினையும் அவர் தம் கலைத்தொண்டினையும் அறிந்து மதிப்பிடுவார். | • பரத நாட்டிய சம்பிரதாய உருப்படிகளின் இலக்ஷணம்<br>• பரத நாட்டியக் கச்சேரிக்கு அணி செய்யும் இசைக்கருவி களின் பங்களிப்பு<br>• அருணாசலக் கவிராயர் | 04<br>05<br>02 |
| 5.0<br>பரத நாட்டியம் கிராமிய நடனம் என்பன பற்றியும் இலங்கையின் தேசிய கலாசார நடனங்களின் வரலாற்றுப் பின்னணி பற்றியும், இவற்றின் இசை பற்றியும் விபரிப்பார். | | |
| 5.1<br>இலங்கையின் பாரம்பரிய நடனங்களான பரத நாட்டியம், கண்டிய நடனம், ருஹுணு நடனம், சப்ரகமுவ நடனம் ஆகியவற்றின் கலாச்சார பின்னணியை அறிந்து விளக்குவார். | • சபரகமுவ நடனம்<br>• தோற்றம்<br>• ஆட்டமுறை<br>• ஆடை அணிகள்<br>• ஒப்பனை<br>• பக்க வாத்தியம் | 01 |
| 5.2<br>சமய விழாக்களிலும் சமூக விழாக் களிலும் இடம்பெறும் கிராமிய நடனங் களினதும் அவற்றின் இசையினதும் கலாச்சாரப் பின்னணியை அறிந்து விளக்குவார். | • திருப்பாவை<br>• ஒளி விழா | 01 |
| 5.3<br>சங்ககாலம் தொடக்கம் சோழர் காலம் வரையிலான நடனக் கலை வரலாற்றுப் பின்னணியை விளக்குவார். | • சோழர் காலம் | 01 |
| 5.4<br>இலங்கையிலுள்ள பிரதேசங்களுக்குரிய கூத்து வகைகளின் கலாச்சாரப் பின்னணியை விளக்குவார். | • மட்டக்களப்பு அண்ணாவி மரபுக் கூத்து<br>• தென்மோடி | 01 |

# தரம் - 11

| | 1 ஆந் தவணை | பாட வேளைகள் | 2 ஆந் தவணை | பாட வேளைகள் | 3 ஆந் தவணை | பாட வேளைகள் |
|---|---|---|---|---|---|---|
| நயத்தல் | 11.1.1<br>வெகுசனத் தொடர்பு ஊடகங்கள் மூலம் வெளிக்கொணரப்படும் பாவத்தை நயத்தல். | 02 | 11.1.2<br>பரத நாட்டியம், கிராமிய நடனம் தவிர்ந்த ஏனைய நடன வடிவங்களை நயத்தல். | 02 | 11.1.3<br>நிருத்திய உருப்படிகளான கீர்த்தனை, பதவர்ணம் ஆகியவற்றை நயத்தல். | 02 |
| ஆக்கத்திறன்களை வளர்த்தல் | 11.2.1<br>சிலை வடித்தல், மரத்தில் தெய்வ உருவங்களைச் செதுக்குதல், கல்லில் மானிட உருவங்களை வடித்தல் போன்றவற்றைப் பாவனை செய்தல். | 02 | 11.2.2<br>தேவாரங்களுக்கு அபிநயத்தோடு இணைந்த நடனத்தை தயாரித்தல்.<br>சொற்றுணை வேதியன் தோடுடைய செவியன் | 02 | 11.2.3<br>தொழில்சார் நடனங்களைத் தயாரித்தல்.<br>11.2.4<br>வருட இறுதியில் மாணவர் ஆக்கங்களைக் கொண்ட நிகழ்ச்சியைத் தயாரித்தல். | 02<br><br>02 |
| செய்முறை | 11.3.1<br>இலகுவான சந்தங்களுக்கேற்ப ஆடுதல்.<br>(நடை-சங்கீரணம்)<br>11.3.2<br>பாந்தவ்ய ஹஸ்தங்களைப் பாத நிலைகளுடன் அபிநயித்தல்.<br>11.3.3<br>அடிப்படை அடவுகளில் சிலவற்றை ஆடுதல்.<br>முதலாவது தெய்தெய் தத்தா<br>11.3.3<br>இரண்டாவது தெய்தெய் தத்தா அடவினை ஆடுதல்<br>11.3.3<br>மூன்றாவது தத்தெய் தாஹா அடவினை ஆடுதல் | 01<br><br>03<br><br>02<br><br>01<br><br>02 | 11.3.4<br>ஜதிஸ்வரத்தின் இரண்டாவது கோர்வையை ஆடுதல்.<br>11.3.4<br>ஜதிஸ்வரத்தின் மூன்றாவது கோர்வையை ஆடுதல்.<br>11.3.4<br>ஜதிஸ்வரத்தின் நான்காவது கோர்வையை ஆடுதல்.<br>11.3.4<br>ஜதிஸ்வரத்தின் நான்காவது கோர்வையை ஆடுதல்.<br>11.3.4<br>சப்தத்தின் முதலாவது ஜதியையும் முதலாவது கண்டிகைக்குரிய அபிநயங்களையும் ஆடுதல். | 02<br><br>02<br><br>03<br><br>03<br><br>06 | 11.3.4<br>சப்தத்தின் இரண்டாவது ஜதியையும் இரண்டாவது கண்டிகைக்குரிய அபிநயங்களையும் ஆடுதல்.<br>11.3.4<br>சப்தத்தின் மூன்றாவது ஜதியையும் மூன்றாவது கண்டிகைக்குரிய அபிநயங்களையும் ஆடுதல்.<br>11.3.4<br>சப்தத்தின் நான்காவது ஜதியையும் நான்காவது கண்டிகைக்குரிய அபிநயங்களையும் ஆடுதல்.<br>11.3.4<br>சப்தத்தின் ஐந்தாவது ஜதியை ஆடுதல். | 02<br><br>02<br><br>02<br><br>02 |

| | 1 ஆந் தவணை | பாட வேளைகள் | 2 ஆந் தவணை | பாட வேளைகள் | 3 ஆந் தவணை | பாட வேளைகள் |
|---|---|---|---|---|---|---|
| செய்முறை | 11.3.3<br>நான்காவது தத்தெய் தாஹா அடவினை ஆடுதல்.<br>11.3.4<br>ஜதிஸ்வரத்தின் தீர்மானத்தை ஆடுதல்.<br>11.3.4<br>ஜதிஸ்வரத்தின் முதலாவது கோர்வையை ஆடுதல். | 02<br><br>02<br><br>02 | 11.3.5<br>வெவ்வேறு வகையான கிராமிய நடனங்களை ஆடுதல்.<br>(கும்மி, கோலாட்டம்)<br>11.3.5<br>வெவ்வேறு வகையான கிராமிய நடனங்களை ஆடுதல்.<br>(கரகம், அரிவி வெட்டு நடனம்) | 02<br><br>02 | 11.3.4<br>'என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே' என்னும் தேவாரத்திற்கு அபிநயித்தல்.<br>11.3.5<br>வெவ்வேறு வகையான கிராமிய நடனங்களை ஆடுதல். (காவடி, ஒயிலாட்டம்<br>11.3.5<br>வெவ்வேறு வகையான கிராமிய நடனங்களை ஆடுதல்.<br>(குறத்தி, தேயிலைக் கொழுந்து கொய்யும் நடனம்) | 02<br><br>02<br><br>02 |
| அறிமுறை | 11.4.1<br>ஐந்து ஜாதிகளினால் சப்த தாளங்களும் 35 தாளங்களாகும் வகையை அறிதல்.<br>11.4.2<br>பாந்தவ்ய ஹஸ்தங்களையும் அவற்றிற்குரிய பாத நிலைகளையும் அறிதல்.<br>11.4.3<br>பாத்திரப் பிராணன், பகின் பிராணன்களுக்குரிய சுலோகங்களையும் கருத்துக்களையும் அறிதல். | 03<br><br>03<br><br>03 | 11.4.5<br>பரத நாட்டிய சம்பிரதாய உருப்படிகளின் இலட்சணங்களை அறிதல். | 04 | 11.4.4<br>பஞ்சபாணங்கள் பற்றி அறிதல்.<br>11.4.4.<br>நாட்டிய தர்மி, லோக தர்மி ஆகிய எண்ணக் கருக்களை அறிதல்.<br>11.4.5<br>பரத நாட்டிய கச்சேரிக்கு அணி செய்யும் இசைக்கருவிகளின் பங்களிப்பினை அறிதல்.<br>(தாளம், மிருதங்கம், புல்லாங்குழல், வயலின்)<br>11.4.5<br>அருணாசலக் கவிராயரின் வாழ்க்கை வரலாற்றினையும் கலைத் தொண்டினையும் அறிதல். | 02<br><br>01<br><br>05<br><br>02 |

| | 1 ஆந் தவணை | பாட வேளைகள் | 2 ஆந் தவணை | பாட வேளைகள் | 3 ஆந் தவணை | பாட வேளைகள் |
|---|---|---|---|---|---|---|
| கலாசாரப் பின்னணி | 11.5.1<br>இலங்கையின் பாரம்பரிய நடனங்களுள் ஒன்றான சபரகமுவ நடனம் பற்றிய கலாசாரப் பின்னணியை அறிதல். | 01 | 11.5.2<br>திருப்பாவை, ஒளிவிழா போன்ற சமய சம்பந்தமான விழாக்களின் கலாசாரப் பின்னணியை அறிதல்.<br>11.5.3<br>சோழர் காலத்தில் நடனக் கலையின் கலாசாரப் பின்னணியை அறிதல். | 01<br>01 | 11.5.4<br>மட்டக்களப்பு அண்ணாவி மரபுக் கூத்துக்களில் ஒன்றாகிய தென்மோடிக் கூத்தின் கலாசாரப் பின்னணியை அறிதல். | 01 |
| | | 29 | | 30 | | 31 |
| | மொத்தம் 90 பாடவேளைகள் | | | | | |

# பகுதி - II

# செயற்பாடுகளின் தொடரகம்

## 11.2.1. கற்றல் கற்பித்தல் முறைமை

இப்பாடத்திட்டத்திற்கு ஏற்ப கற்றல் - கற்பித்தல் முறைமைகளைத் தீர்மானிக்கும் போது ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டதாக மாணவர்களிடத்தில் தேர்ச்சிகளை உருவாக்குவதற்கு ஏற்ற வகையில் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளைத் திட்டமிடுவது தொடர்பாகக் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. தேர்ச்சிமட்டக் கல்விக்கு ஆயத்தமாகும் போது, ஆசிரியர் பங்கில் தெளிவான மாற்றம் எதிர்பார்க்கப்படுகிறது.

எமது வகுப்பறைகளில் கடந்த காலங்களில் பரவலாகச் செயற்படுத்தப்பட்டு வந்த 'ஊடு கடத்தும் பங்களிப்பு' (Transmission Role) பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட 'கொடுக்கல் வாங்கல் பங்களிப்பு' (Transaction Role) என்பன வகுப்பறையில் இப்போதும் காணப்படுகின்றன. பாடசாலையை விட்டு விலகிச் செல்லும் பிள்ளைகளிடத்தில் காணப்படும் சிந்தனைத் திறன்கள், தனியாள் திறன்கள், சமூகத் திறன்கள் போன்றவற்றிலுள்ள குறைபாடுகளை கருத்திற் கொள்வதன் மூலம் கற்றல் - கற்பித்தல் முறைமைகளில் செய்ய வேண்டிய அபிவிருத்தி மாற்றங்களையும், அவை எவ்வாறு செய்யப்படல் வேண்டுமென்பதையும் இனங் காண்பது கடினமன்று.

ஊடுகடத்தும் பங்களிப்பில், கற்பிக்கப்பட வேண்டிய விடயங்கள் யாவற்றையும் ஆசிரியர் தான் தெரிந்துள்ளதாக எடுத்துக் கொண்டு, மாணவர்கள் இவ்விடயங்கள் தொடர்பாக ஒன்றுமே அறிந்திராதவர் எனக் கருதிக் கொண்டு விடய அறிவை மாணவர்களுக்குச் செலுத்தும் ஒருவராகவே ஆசிரியர் மாறியுள்ளார். இம்முறையில் ஆசிரியர் விரிவுரையாளர் போலத் தொழிற்படுவதோடு, மாணவர்களின் சிந்தனையைத் தூண்டுவதற்கோ, மாணவர்களின் தனியாள் திறன்களை, சமூகத் திறன்களை விருத்தி செய்வதற்கோ செய்யும் பங்களிப்பு போதுமானதல்ல.

ஆசிரியர் வகுப்பறையில் மாணவர்களுடன் கலந்துரையாடுவது, கொடுக்கல் வாங்கல் பங்களிப்பின் ஆரம்பக் கட்டமாக அமைகிறது. இதன்போது ஆசிரியரிடமிருந்து மாணவர் களுக்கும், மாணவர்களிடமிருந்து ஆசிரியருக்கும் கருத்துக்கள் பரிமாறப்படுவதோடு, அதைத் தொடர்ந்து மாணவர்- மாணவர் இடைத்தொடர்பும் ஏற்படுத்தப்பட்டு அவர்களுக்கிடையிலும் கருத்துப் பரிமாறல் நடைபெறுவதோடு, அது தர்க்கரீதியான கலந்துரையாடலாக மாறும். தெரிந்ததிலிருந்து தெரியாததற்கும், எளியதிலிருந்து சிக்கலானதற்கும், தூல விடயத்திலிருந்து கேவல (கருத்துநிலை) விடயத்திற்கும் மாணவர்களைக் கொண்டு செல்லும் வகையில் ஆசிரியர் தொடர்ந்து வினாக்களைத் தொடுப்பதில் ஈடுபடல் வேண்டும்.

தேர்ச்சி மட்டக் கல்வியில் மாணவர் செயற்பாடுகள் வலுவான இடத்தைப் பெறுவதோடு, வகுப்பிலுள்ள ஒவ்வொரு பிள்ளையும் அந்தந்தத் தேர்ச்சி மட்டங்கள் தொடர்பாகக் குறைந்தது அண்மிய தேர்ச்சிமட்டங்களையாவது பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் ஒரு வளவாளராக (Resource Person) மாறுகிறார். கற்றலுக்குத் தேவையான உபகரணங்களும் மற்றும் வசதிகளும் கொண்ட கற்றற் சூழலொன்றைத் திட்டமிடுதல், மாணவர்கள் கற்கும் விதத்தை அருகிலிருந்து அவதானித்தல், மாணவர்களின் இயலும், இயலாமை என்பவற்றை இனங்காணுதல், தேவையான முன்னூட்டல், பின்னூட்டல் என்பவற்றை வழங்கல் மூலம் கற்றலை விருத்தி செய்வதோடு வகுப்பறைக்கு வெளியிலும் மாணவர்கள் கற்பதற்கும்,

கற்பதைத் தூண்டுவதற்கும் உரியவாறு கற்றல் உபகரணங் களைத் திட்டமிடுவதும் ஆசிரியரின் அடிப்படைக் கடமைகளாகும். இவ்வாறான ஆசிரியர் பங்களிப்பு 'உருமாற்றப் பங்களிப்பு' (Transformation Role) எனப்படும்.

ஆசிரியர் வழிகாட்டியின் முதற்பகுதியாக இங்கு அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள பாடத் திட்டமும், அதனை அமுல்படுத்தும் போது பயன்படுத்தக்கூடிய செயற்பாடுகளின் தொடரகம் இரண்டாம் பகுதியாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இச் செயற்பாடுகள் ஒவ்வொன்றும் குறைந்தது மூன்று படிகளைக் கொண்டதாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. செயற்பாட்டின் முதற்படியில் மாணவர்களைக் கற்றலுக்குத் தயார் செய்வதில் ஈடுபடுத்திக் கொள்வது எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு மாணவர்களைத் தயார் செய்து கொள்ளும்படி 'ஈடுபடுத்தும்படி' (Engagement Step) எனப்படும். இப்படியில் ஆரம்பத்தில் ஆசிரியர் கொடுக்கல் வாங்கல் பங்களிப்பின் மூலம் மாணவர்களுடன் கலந்துரையாடலை ஆரம்பிப்பார். பின்னர் மாணவர்கள் விடயங்களை நன்கு ஆராய்ந்து செயற்படுவதற்குத் தேவையான முன்னறிவை மீட்கும் வகையிலும், செயற்பாட்டுக்குத் தேவையான சாடைகளைக் கொடுக்கும் வகையிலும் கலந்துரையாடலை விரிவுபடுத்திக் கொள்க. இக்கலந்துரையாடலில் கருத்துப் பரிமாறலுக்குப் பயன்படுத்தக்கூடிய நுட்பங்கள் ஆசிரியரிடம் இருத்தல் வேண்டும். வினாக்களை முன்வைத்தல்/ படங்கள், பத்திரிகை விளம்பரங்கள், அறிவித்தல்கள், காட்சி அட்டைகள் (Flash Cards) போன்ற ஆர்வம் ஊட்டுவனவற்றைப் பயன்படுத்தல் / பிரசினங்கள், புதிர்கள், விடய ஆய்வுகள்/ கலந்துரையாடல், நடித்தல், கவிதைகள், பாடல்கள், செய்துகாட்டல்கள் (Demonstrations), கட்புல, செவிப்புல சாதனங்கள் போன்றன பயன்படுத்துவதும் இங்கு அடங்கும். முதலாம் படி பின்வரும் மூன்று நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்வதை அடிப்படையாகக் கொண்டதாகும்.

- வகுப்பு மாணவர்களின் கவனத்தை ஈர்த்துக் கொள்ளல்.
- தேவையான முன்னறிவை மீட்டிக் கொள்வதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் ஆய்வு முறையான கண்டுபிடிப்புகளுக்குத் தேவையான ஆரம்ப விடயங்களை வழங்குதல்.

செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்களுக்கு ஆய்வு ரீதியான பேறுகளைக் கண்டு பிடிப்பதற்குச் (Exploration) சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. மாணவர்கள் பேறுகளைக் கண்டு பிடிப்பது, அதற்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட அறிவுறுத்தல் படிவத்தினை அடிப் படையாகக் கொண்டதாகும். பிரசினத்தோடு தொடர்பான பல்வேறு விடயங்களையும் கூட்டாகச் செயற்பட்டு ஆராய்ந்து குழுவாகக் கற்பதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் செயற் பாட்டைத் திட்டமிடல் வேண்டும். வழங்கப்பட்டுள்ள உபகரணங்களையும், மற்றும் வளங்களையும் பயன்படுத்தித் தெளிவான விளக்கத்துடன், தர்க்க ரீதியான கலந்துரையாடலுடன் ஆராய்ந்து பேறுகளைக் கண்டுபிடிப்பது போன்றன இப்படிமுறையில் எதிர்பார்க்கப்படும் முக்கிய பண்புகள் சிலவாகும். இவ்வாறான செயற்பாடுகளில் மாணவர்கள் தொடர்ந்து ஈடுபடுவதால் சுயகட்டுப் பாடு, ஒழுக்கம், ஏனையோரின் கருத்துக்களுக்குச் செவிமடுத்தல், ஏனையோருடன் கூட்டாகச் செயற்படல், ஏனையோருக்கு உதவுதல், நேர முகாமைத்துவம், உயர் தரத்துடனான முடிவுப் பொருளைப் பெறல், நேர்மை போன்ற அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான முக்கிய பண்புகளை விருத்தி செய்து கொள்ளல் போன்றன மாணவர்களிடத்தில் விருத்தியாகும்.

மாணவர்கள் கண்டுபிடிப்புக்களில் ஈடுபடும்போது குழுத்தலைவர்களைத் தெரிவு செய்வதை ஆசிரியர் தவிர்த்துக் கொள்வதோடு தலைவர் குழுவிலிருந்து உருவாவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கக்கூடிய பின்னணியை மட்டும் ஆசிரியர் ஏற்படுத்த வேண்டும். மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

செயற்பாட்டின் மூன்றாம் படியில் குழுக்களின் கண்டுபிடிப்புக்களையும் பேறுகளையும் ஏனைய மாணவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் வகுப்பில் சமர்ப்பிப்பதற்கு ஒவ்வொரு குழுவிற்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு குழுவும் பேறுகளைச் சமர்ப்பிக்கும் போது அக்குழுவின் ஒவ்வொரு அங்கத்தவரும் அதில் பங்கெடுத்துக் கொள்ளும் வகையில் அவர்களுக்கு வேலைப் பகிர்வு இருப்பது பயனுடையதாகும். கண்டுபிடிப்புக்களுக்கான விளக்கமளித்தல் (Explanation) இப்படியின் முக்கிய எதிர்பார்ப்பு ஆகும். வகுப்பறையில் வழக்கமாக ஒலிக்கும் ஆசிரியர் குரலுக்கு மேலதிகமாக மாணவர்களின் குரல்களும் கருத்துள்ளவாறு ஒலிக்கத் தொடங்குகிறது. இது இப்படியில் உள்ள முக்கிய அம்சமாகும்.

செயற்பாட்டின் மூன்றாம் படியில் குழுக்களின் கண்டுபிடிப்புக்களையும் பேறுகளையும் மேலும் விருத்தி செய்து ஆழமாக விளங்கிக் கொள்வதற்கு (Elaboration) மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும். ஒவ்வொரு குழுவும் பேறுகளைச் சமர்ப்பித்த பின் அவற்றை மேலும் அபிவிருத்தி செய்யும் வகையிலான கருத்துக்களை வழங்குவதற்கு முதலில் அக்குறிப்பிட்ட குழுவின் அங்கத்தவர்களுக்கும், பின்னர் ஏனைய குழுக்களின் அங்கத்தவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குதல் மூலம், இது நிறைவேற்றப்படுகிறது. எவ்வாறாயினும், இறுதியில் பேறுகளைத் தொகுப்பது ஆசிரியரின் பொறுப்பாகும். இதன்போது மாணவர்கள் ஆராய்ந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்ட முக்கிய விடயங்கள், எண்ணக்கருக்கள், கோட்பாடுகள், விதிகள் போன்றவற்றை மாணவர்களிடையே உறுதிப் படுத்திக் கொள்வது எதிர்பார்க்கப்படுகிறது.

வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செய்கை எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் வெற்றிகரமாக நடைபெறுகிறதாவெனத் தொடர்ந்து தேடிப் பார்ப்பது இம்முறையின் கீழ் ஆசிரியரது பிரதான கடமையாகும். இதற்காகக் கணிப்பீட்டு முறையைப் பயன்படுத்த வேண்டியதோடு, இது கற்றல் - கற்பித்தற் செய்கையினுள் இடம்பெறுவதற்கு, திட்டமிட்ட செயற்பாடுகளைத் தயாரிப்பதற்குரிய சந்தர்ப்பத்தை ஆசிரியருக்கு வழங்குகிறது. செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்கள் விடயங்களை ஆராயும்போது கணிப்பீட்டையும் (Assessment), செயற்பாட்டின் மூன்றாம் படியில் மாணவர்கள் அவர்களது பேறுகளை விளக்கும் போது கணிப்பீட்டோடு சார்ந்த மதிப்பீட்டையும் (Evaluation) நிகழ்த்துவதற்கு ஆசிரியருக்கு வாய்ப்பு ஏற்படுகிறது. கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான விளக்கம் வேறாகத் தரப்பட்டுள்ளது.

இதுவரை விவரிக்கப்பட்ட கற்றல் - கற்பித்தல் முறைமை உருமாற்றப் பங்களிப்பைச் செய்வதற்கு ஆசிரியரை உட்படுத்துகின்றது. இங்கு குழு ஆய்வுக்கு முதலிடம் அளிக்கப்படுவதோடு கொடுக்கல் வாங்கல், தர்க்க ரீதியான கலந்துரையாடல் என்பவற் றோடு சிறிதளவாக ஆசிரியரின் விரிவுரைக்கும் இடமுண்டு. பாடப் பிரதேசத்தின்போது கொடுக்கல் வாங்கல், கலந்துரையாடல் முறை என்பன நடைபெறுவதோடு, இறுதிப் படியில், தொகுப்பின் கீழ் சிறிய விரிவுரைக்கும், அத்தோடு எண்ணக்கரு உருவாக்குவதற்கும் இடம் ஏற்படுகிறது.

புதிய ஆயிரமாம் ஆண்டின் முதலாவது பாடத்திட்ட மறுசீரமைப்பின் கீழ் தயாரிக்கப்பட்ட இப்பாடத்திட்டத்தோடு தொடர்பான கற்றல் - கற்பித்தல் முறைமைகளை அபிவிருத்தி செய்யும் போது உருமாற்றப் பங்களிப்புக்கு மேலதிகமாக ஊடுகடத்தும் பங்களிப்பிலும், கொடுக்கல் வாங்கல் பங்களிப்பிலும் காணப்படக்கூடிய முக்கிய இயல்புகளும் கவனத்திற் கொள்ளப் பட்டுள்ளமை இம்முறையின் விசேட தன்மையாகும்.

7.2 இப்புதிய பாடத்திட்டத்திற்கேற்ப பரத நாட்டிய பாடத்திற்கான கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும் போது பின்வரும் அணுகுமுறைகளையும் கையாள்வது விரும்பத்தக்கதாகும்.

- கற்றல் என்பது கட்டுருவாக்கச் செயன்முறையாக அமையவேண்டும் என்பதே இன்றைய கல்வி நிலைப்பாடாகும். எனவே தான் கற்பித்தலைப் பார்க்கிலும் கற்றலுக்கு முன்னுரிமை வழங்கப்படல்.

- கிடைக்கக்கூடிய வளங்களை கவனத்திற்கொண்டு அவற்றுக்கேற்ப மேலதிக செயற்பாடுகளை ஆசிரியர் மேற்கொள்ளல்.

- தேர்ச்சி மட்டத்தை நோக்கி மாணவர்கள் அடைந்துள்ள அடைவை இனங்கண்டு தேவையான இடங்களில் மீளவலியுறுத்தல்.

- மாணவர்களின் சுய ஆக்கங்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்தல்.

- குழுவாக இயங்குவதற்கு மாணவர்களுக்கு ஊக்கம் அளித்தல்.

- கற்றல் - கற்பித்தல் உபகரணங்களைப் பயன்படுத்துதல்.

- வெகுசனத்தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துதல்.

- மாணவர்களுடன் கலந்துரையாடி மாணவர்கள் சுயமாகச் செயற்படுவதற்கு நெறிப்படுத்துதல்.

- பாடத்திட்டம், ஆசிரியர் அறிவுரை வழிகாட்டி, துணைநூல் இம்மூன்றினையும் ஒன்றிணைத்து கற்பித்தல் - கற்றல் பணிகளில் ஆசிரியர் ஈடுபடல்.

**தேர்ச்சி 1.0** : பரத நாட்டிய நிகழ்ச்சிகளையும் கிராமிய நடன நிகழ்ச்சிகளையும் பார்த்துத் தாம் நயந்தவற்றை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 1.1** : வெகுசனத்தொடர்பு ஊடகங்கள் மூலம் வெளிக்கொணரப்படும் கலைநிகழ்ச்சிகளில் தாம் நயந்தவற்றை வெளிப்படுத்துவார்.

**செயற்பாடு 1.1** : கலை நிகழ்ச்சிகளில் வெளிக்கொணரப்படும் பாவத்தினை இரசிப்போம்.

**நேரம்** : 1 மணித்தியாலம் 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி
- ஒளிப்பதிவு நாடா
- வீடியோ பெட்டிகை பதிகருவி
- செயற்பத்திரம் 1.1.2

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

**படி 1.1.1**

- பரத நாட்டிய நிகழ்ச்சிகளையும், கிராமிய நடன நிகழ்ச்சிகளையும் தொலைக்காட்சியில் பார்த்தோ அல்லது நேரில் பார்த்தோ தாம் இரசித்த பாவத்தைக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

> - மாணவர்களின் அபிப்பிராயங்களை வெளிக்கொணரல்.
> - மாணவர்கள் நயந்தவற்றைக் கூறல்.
> - நடன நிகழ்ச்சிகளில் நயக்கக்கூடிய பொதுவான அம்சம் :- நடனத்தின் பொருத்தம், முகபாவனை, ஆடை ஆபரணம் ஒப்பனை ...
> - பாவம் என்றால் மனதில் உந்தும் உணர்ச்சியை முகத்தில் வெளிப்படுத்தல்.
> - மாணவர்களின் கலை ஆர்வத்தை ஆசிரியர் ஊட்டி விமர்சனங்களை பலரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் வழிநடத்தல்.

(20 நிமிடங்கள்)

**படி 1.1.2** :

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பத்திரத்தைக் கொடுத்து அதனைப் பூரணப்படுத்தும்படி செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.

- தேவையானவிடத்து போதுமான வழிகாட்டல்களை வழங்கி நேர்த்தியாகச் செய்ய இடமளியுங்கள்.
- குழுவில் உள்ள ஒவ்வொருவரும் செயற்பாட்டில் பங்குபற்றுவதை உறுதிப்படுத்துங்கள்.

(30 நிமிடங்கள்)

**படி 1.1.3** :

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளை முன்வைக்கச் சந்தர்ப்பத்தை வழங்குங்கள்.
- ஒரு குழு சமர்ப்பித்தவற்றை ஏனைய குழுவினரும் அவதானித்து தமது கருத்துக்களைக் கூற இடமளியுங்கள்.
- மாணவர்களின் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மீளவும் கலந்துரையாடுங்கள்.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீளவும் வலியுறுத்துங்கள்.

> - மாணவர்கள் தாம் பார்த்து நயந்த நடனங்களைக் குறிப்பிடச் செய்தல்.
> - அவற்றில் தாம் நயந்தவற்றைக் கூறச் செய்தல்.
> - இரசித்தமைக்கான காரணத்தைக் கூறல்.
> - அவற்றில் பாவங்கள் வெளிப்படுத்தப்பட்டதில் கண்ட சிறப்புக்களைக் கூறும்படி செய்தல்.
> - நடனங்களில் இரசித்த பகுதியை ஆடிக் காட்டச் செய்தல்.

(30 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. தொலைக்காட்சியில் கண்டுகளித்த அல்லது நேரடியாகக் கண்டுகளித்த நடனங்களை பட்டியற்படுத்துவர்.
2. அவற்றுள் தாம் கிரகித்தவற்றுள் முக்கியமாக பாவங்கள் பற்றிக் கூறுவார்.
3. தாம் ரசித்த பாவப் பகுதிகளை ஆடிக்காட்டுவர்.
4. தாம் பார்த்து ரசித்த குழு நடனங்களின் பாவ வெளிப்பாடு பற்றிக் கூறுவர்.
5. தாம் இரசித்தவற்றையும் இரசித்தமைக்கான காரணங்களையும் கூறுவர்.

## செயற்பத்திரம் 1.1.2

- சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குங்கள்.

| | |
|---|---|
| 1 | நிகழ்ச்சிகளைப் பார்க்க சந்தர்ப்பம் வழங்குக. |
| 2. | தொலைக்காட்சியிலோ அல்லது நேரிலோ பார்த்து இரசித்த நடனங்களைப் பட்டியற் படுத்துக. |
| 3. | இந்நடனங்களில் வெளிப்படுத்தப்பட்ட பாவங்கள், இந்த பாவங்கள் வெளிப்படுத்தப் பட்ட முறையில் உள்ள சிறப்புக்களைக் கூறுக. |
| 4. | சில சந்தர்ப்பங்களைக் கூறி அவற்றுக்குப் பொருத்தமான பாவங்களைச் செய்து காட்டுக. |
| 5. | இவற்றுள் நீர் இரசித்த பாவப் பகுதியை ஆடிக்காட்டுக. |
| 6. | இப்பகுதியை நீர் ரசித்தமைக்கான காரணத்தைக் குறிப்பிடுக. |

**தேர்ச்சி 2.0** : சூழலிற் காணப்படுகின்ற இயற்கை அம்சங்களையும், கிராமிய நடனம் தொடர்பான ஆக்கச் செயற்பாடு களையும் வெளிக்கொணர்வார்.

**தேர்ச்சி மட்டம் 2.1** : இயற்கைச் சூழலிலுள்ள நிகழ்வுகளையும், உயிரினங் களையும் இனங்கண்டு பாவனை செய்து காட்டுவார்.

**செயற்பாடு** : சிலை வடித்தல், மரத்தில் தெய்வ உருவங்களைச் செதுக்குதல், கல்லில் மானிட உருவங்கள் வடித்தல் ஆகிய செயற்பாடுகளைப் பாவனை செய்வோம்.

**நேரம்** : 1 மணித்தியாலம் 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- தட்டுக்கழி, தட்டுப்பலகை
- சிற்ப வடிவங்களின் படங்கள்
- முத்திரைகள் வரையப்பட்ட அட்டைகள்
- செயற்பத்திரம் 2.1.2

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**
**படி 2.1.1.**

- ஏற்கனவே பாவனை செய்தவற்றை நினைவுகூரல்.
- படங்களைக் காட்சிப்படுத்தல்.
- முத்திரைகள் வரையப்பட்ட அட்டையைக் காட்சிப் படுத்தல்.
- பார்வையிட்ட, நினைவு கூர்ந்த விடயங்கள் தொடர் பாகக் கலந்துரையாடுக.

- நமஸ்காரத்துடன் வகுப்பை ஆரம்பித்தல்
- செதுக்குதல் - வடித்தல் வேறுபாடுகள்
- சிலை வடிக்கும் செயன்முறை
- உபகரணப் பயன்பாடு
- கால்களின் அசைவுகள்
- முத்திரைகளின், கண்களின் பிரயோகம்
- தெய்வ உருவங்கள்
- செதுக்கும் செயன்முறை
- பாவனை செய்யும் பொழுது கண்களின், முத்திரைகளின் பிரயோகம்
- கால்களின் அசைவுகள்
- கல்லில் மானிட உருவங்கள் வடித்தல் செயன் முறை
- ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து பாவனை செய்தல்
- குழுவாகவும், எழுமாற்றாகவும் தெரிவுசெய்து தனியாகவும் பாவனை செய்யவிடுதல்.

(30 நிமிடங்கள்)

**படி 2.1.2** :

- மாணவர்களைச் சிறிய குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பத்திரத்தை வழங் குங்கள்.
- மாணவர்கள் செயற்பத்திரத்திற்கேற்பச் செயற் பாட்டில் ஈடுபடுகின்றனரா என உறுதி செய்து ஆலோசனை வழங்குங்கள்.

(30 நிமிடங்கள்)

**படி 2.1.3.** :

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழுவின் சமர்ப்பணம் தொடர்பாக ஏனைய குழுக்கள் தமது கருத்துக்களை முன்வைக்க இடமளிக்குக.
- பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்தும் வகை யிற் கலந்துரையாடலை நிகழ்த்துக.

| |
|---|
| • சிலை வடிக்கும் செயன்முறை<br>• மரங்களில் தெய்வ உருவங்கள் செதுக்கும் செயன்முறை<br>• கல்லில் மானிட உருவங்கள் செதுக்கும் செயன்முறை ஆகியவற்றை ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து பாவனை செய்தல். |

(20 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. சிலை வடிக்கும் செயன்முறையைப் பாவனை செய்வர்.
2. மரங்களில் தெய்வ உருவங்களைச் செதுக்கும் செயன்முறையினைப் பாவனை செய்வர்.
3. கல்லில் மானிட உருவங்களைச் செதுக்கும் செயன்முறையைப் பாவனை செய்வர்.
4. இவ்வாறு பாவனை செய்வதன் மூலம் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்துவர்.
5. இதுபோன்ற பாவனைகளைச் செய்வதில் ஆர்வத்தை வெளிப்படுத்துவர்.

## செயற்பத்திரம் 2.1.2

- சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

| |
|---|
| 1. சிலை வடிக்கும் செயன்முறையைப் பாவனை செய்க.<br>2. மரங்களில் தெய்வ உருவங்களைச் செதுக்கும் செயன்முறையினைப் பாவனை செய்க.<br>3. கல்லில் மானிட உருவங்களைச் செதுக்கும் செயன்முறையைப் பாவனை செய்க. |

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங் களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.1** : இலகுவான சந்தங்களுக்கேற்ப லயத்துடன் அசைந்து காட்டுவர்.

**செயற்பாடு 3.1** : ஐந்து நடைகளுள் இறுதியாக இடம்பெறும் சங்கீர்ண நடையினை ஆடிக் காட்டுவோம்.

**நேரம்** : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- தட்டுக்கழி, தட்டுப்பலகை, சங்கீர்ண நடை சொற்கட்டு எழுதப்பட்ட அட்டை
- ஒளி, ஒலி நாடாக்கள், பதிகருவி
- செயற்பத்திரம் 3.1.2

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

**படி 3.1.1**

- சங்கீர்ண நடையின் சொற்கட்டு எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்துங்கள்.
- சங்கீர்ண நடையைப் பிரதிபலிக்கும் ஒலி, ஒளி நாடாவை மாணவர் பார்வையிடச் செய்தல்.
- ஏனைய நடைகளோடு இந்நடையின் சொற் கட்டினை மாணவருடன் கலந்துரையாடல்.
- சங்கீர்ண நடை தொடர்பாகப் பின்வரும் விடயங் களை வலியுறுத்தும் வகையில் கலந்துரை யாடலை மேற்கொள்ளுங்கள்.

> - ஐந்து நடைகளுள் ஒன்றே சங்கீர்ணம்
> - இறுதியாக இடம்பெறும் நடையாகும்
> - இதன் எண்ணிக்கை - 09
> - தகதிமிதக தகிட என்பது சொற்கட்டு
> - ஆலீட மண்டல நிலையில் காலங்களை வைத்து ஆடல்.
> - ஆடும் போது கால்களைத் தட்டி மெட்டல்.

(10 நிமிடங்கள்)

**படி 3.1.2** :
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப சிறிய குழுக்களாக பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் செயற்பத்திரத்தை வழங்கி மாணவர்களை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.

(20 நிமிடங்கள்)

**படி 3.1.3** :

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளை முன்வைக்க சந்தர்ப்பத்தை வழங்குங்கள்.
- ஏனைய குழுக்கள் அதனை அவதானித்து கருத்துக்களைக் கூற இடமளியுங்கள்.
- குழுக்களின் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மீளவும் கலந்துரையாடுங்கள்.

> - ஐந்து நடைகளுள் ஒன்று
> - தட்டி மெட்டுவது தட்டி மெட்டடவு
> - இது இறுதியான நடை
> - இதன் சொற்கட்டு தகதிமிதகதகிட
> - ஆடும் போது கால்களை வைத்து லயத்துடன் ஆடுதல்.
> - இறுதியாக இடம்பெறும் நடையின் மொத்த எண்ணிக்கை ஒன்பது

(10 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. தட்டி மெட்டடவு என்றால் என்ன என்று கூறுவர்.
2. இதன் சொற்கட்டு தகதிமிதக தகிட என்பார்.
3. ஆலீட மண்டல நிலையில் கால்களை வைத்து லயத்துடன் ஆடுவார்.

## செயற்பத்திரம் 3.1.2

- சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குங்கள்.

> 1. நடைகள் எத்தனை வகைப்படும்?
> 2. இறுதியாக இடம்பெறும் நடையின் எண்ணிக்கை என்ன?
> 3. அதன் சொற்கட்டு என்ன?
> 4. இவ்வடவினை ஆடிக்காட்டுக.

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.2** : தேவ, ஜாதி, நவகிரக, தஷாவதார, பாந்தவ்ய ஹஸ்தங்களை அவற்றிற்குரிய முத்திரைகளுடனும் பாத நிலைகளுடனும் செய்து காட்டுவார்.

**செயற்பாடு 3.2** : பாந்தவ்ய ஹஸ்தங்களைப் பாதநிலைகளுடன் அபிநயித்துக் காட்டுவோம்.

**நேரம்** : 02 மணித்தியாலம் (03 பாடவேளைகள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- பாந்தவ்ய ஹஸ்தங்களைக் காட்டும் படங்கள்
- பிரேங்கணம், ஸ்வஸ்திகம், ஆயதம், ஸ்தானகம் ஆகிய பாத் நிலைகளின் படங்கள்
- செயற்பத்திரம் 3.2.2 4.3 இல் உள்ள பின்னிணைப்பைப் பயன்படுத்தவும்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

**படி 3.2.1**

- பாந்தவ்ய ஹஸ்தங்களுடன் இணைந்து செய்யக்கூடிய பாதநிலைகளின் படங்களைக் காட்சிப்படுத்துங்கள்.
- பிரேங்கணத்துடன் அபிநயிக்கக் கூடிய பாந்தவ்ய ஹஸ்தங்களைக் கூறிக் கலந்துரையாடலை மேற்கொள்வதன் மூலம் பின்வரும் விடயங்களை வலியுறுத்தல்.

| |
|---|
| • குறிப்பிட்ட பாத பேதங்களின் விளக்கம்<br>• பாந்தவ்யம் என்பது உறவு முறைகளாகும்.<br>• பாந்தவ்ய ஹஸ்தங்களை பாத பேதங்களுடன் அபிநயித்தல் பற்றிய விளக்கம் (பின்னிணைப்பை பயன்படுத்துக)<br>• பாந்தவ்ய ஹஸ்தங்களை ஒவ்வொன்றாகக் கூறி அபிநயித்தலுக்கான விளக்கம் (பின்னிணைப்பை பயன்படுத்துக) |

(20 நிமிடங்கள்)

**படி 3.2.2** :

- மாணவர்களை அவர்களுடைய எண்ணிக்கைக் கேற்ப குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- செயற்பத்திரத்திற்கமைவாக செயற்படுகின்றனரா என அவதானித்து உறுதி செய்து கொள்ளுங்கள்.

(40 நிமிடங்கள்)

**படி 3.2.3** :

- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தினை முன் வைக்கச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- குழு முன்வைத்த விடயத்தை ஏனைய குழுக்கள் அவதானித்து கருத்துக்களைக் கூற இடமளியுங்கள்.
- மாணவர் முன்வைத்தவற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை மீள வலியுறுத் துங்கள்.

| |
|---|
| • பாந்தவ்ய ஹஸ்தங்கள் தாய், தந்தை தம்பதிகள், கணவன், மனைவி, மாமனார், மாமியார், மைத்துனன், நாத்தனார், அண்ணன் தம்பி, மருமகள், சக்களத்தி போன்றவை<br>• இவற்றினை அபிநயிக்கப் பிரயோகிக்கும் பாத பேதங்களாவன:- பிரேங்கணம், ஸ்வஸ்திகம், ஆயதம், சமஸூசி, ஸ்தானகம், ஆலீடம்<br>• பாந்தவ்யம் என்பது உறவு முறைகளாகும். |

(20 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. பாந்தவ்ய ஹஸ்தங்களை வரிசைப்படுத்துவார்.
2. "கணவன்" இதனை பாத பேதத்துடன் அபிநயித்துக் காட்டுவார்.
3. மாமியாருக்குரிய ஹஸ்தத்தினை பிரேங்கணத்தில் அபிநயித்துக் காட்டுவார்.
4. பாந்தவ்ய ஹஸ்தங்களை வரிசையாகக் கூறி பாதபேதங்களுடன் அபிநயித்துக் காட்டுவார்.

## செயற்பத்திரம் 3.2.2

- சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குங்கள்.

| |
|---|
| 1. பாந்தவ்ய ஹஸ்தங்களைக் கூறுக?<br>2. இவற்றிற்குரிய ஹஸ்தங்களை அபிநயித்துக் காட்டுக?<br>3. மாமனாருக்குரிய ஹஸ்தங்களை பாத பேதத்துடன் அபிநயித்துக் காட்டுக?<br>4. தம்பதியினரை குறிக்க உபயோகிக்கும் முத்திரைகளை அபிநயித்துக் காட்டுக. |

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங் களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.3.1** : பரத நாட்டியத்தின் அடிப்படை அடவுகளில் சிலவற்றை ஆடிக் காட்டுவார்.

**செயற்பாடு 3.3.1** : அடவுகளில் ஒன்றான முதலாவது தெய்தெய்தத்தா அடவினை ஆடுவோம்.

**நேரம்** : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- அடவின் தாளாங்கம் எழுதப்பட்ட அட்டை
- அடவின் வரைபடங்கள்
- ஒளிப்படங்கள்
- தட்டுக்கழி, தட்டுப்பலகை
- செயற்பத்திரம் 3.3.2 பின்னிணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

**படி 3.3.1.1**

- முதலாவது தெய் தெய் தத்தா அடவு வரையப் பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்
- முதலாவது தெய் தெய் தத்தா அடவின் காற் செய்கையை ஆசிரியர் செய்து காட்டுதல்
- காற் செய்கையில் தாம் அவதானித்தவற்றை மாணவர் கூறச் சந்தர்ப்பம் அளித்தல்
- அதன் சொற்கட்டினை ஆசிரியர் கூறுதல்.
- ஆசிரியரைப் பின்பற்றி மாணவர்கள் கொலுப் பித்தல்.
- இந்த அடவின் கைச் செய்கையை ஆசிரியர் செய்து காட்டுதல்.
- ஆசிரியரைப் பின்பற்றி மாணவர்களும் செய்தல்
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகை யில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

> - அடவுச் சொற்கட்டாகிய தெய் தெய் தத்தா என்பதன் விளக்கமும் செய்முறை யும்
> - அரை மண்டி கவனிக்கப்படல் வேண்டும்
> - ஆசிரியர் ஆடிக் காட்டல்.
> - மாணவர்கள் ஆசிரியரைப் பின்பற்றி ஆடுதல்.
> - மூன்று காலங்களிலும் பயிற்சி செய்தல்.
> - ஆசிரியர் கைச் செய்கையை ஆடிக் காண்பித்தல்.

- மாணவர்கள் ஆசிரியரைப் பின்பற்றுதல்
- கடகா முகம், அலபத்மம் ஆகிய முத்திரைகள் பயன்படுத்தப்படுகின்றன.
- கையில் தாளம் போட்டவாறு அடவுச் சொற்கட்டினைத் திரிகாலங்களிலும் கொலுப்பித்தல்.
- ஆசிரியரும் மாணவரும் இணைந்து சொற்கட்டைக் கொலுப்பித்தல்.

(20 நிமிடங்கள்)

**படி 3.3.1.2** :

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப சிறிய குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்திலுள்ள அறிவுறுத்தல்களுக்கமையச் செயற்படுகின்றனரா என அவதானித்து ஆலோசனை வழங்குங்கள்.

(10 நிமிடங்கள்)

**படி 3.3.1.3** :

- குழுக்களின் பெறுபேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள் ளுங்கள்.
- ஒரு குழு ஆடிக் காட்டும் பொழுது மற்றைய குழு அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- மாணவர்களின் செய்முறையினைப் பற்றிய கலந் துரையாடல் ஒன்றை மேற்கொள்ளுங்கள்.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்துங்கள்.

- முதலாவது தெய் தெய் தத்தா என்னும் அடவு அமைந்துள்ள தாளம் - ஆதி
- இந்த அடவின் வகைகள் - மூன்று
- அங்க சுத்தம், முத்திரை, அரைமண்டி என்பவற்றைக் கருத்திற் கொண்டு ஆடுதல்.
- கையில் தாளம் போட்டவாறு சொற்கட்டி னைக் கொலுப்பித்தல்.
- திரிகாலங்களிலும் ஆடிப் பயிற்சி செய்தல்.
- சொற்கட்டினைக் கொலுப்பித்தவாறு அட வினை ஆடுதல்.
- முழுமையாகப் பயிற்சி செய்தல்.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. முதலாவது தெய்தெய் தத்தா என்னும் அடவின் காற் செய்கையை அரைமண்டியில் அமர்ந்து ஆடுவார்.
2. குறித்த அடவின் கைச்செய்கையைச் செய்து காட்டுவார்.
3. காற்செய்கையுடன் கைச்செய்கையையும் இணைத்து ஆடுவார்.
4. இந்த அடவின் தாளத்தைக் கூறுவார்.
5. திரிகாலங்களிலும் அடவினைத் தாளத்துடன் கொலுப்பிப்பார்.
6. இந்த அடவில் பயன்படுத்தப்படும் முத்திரைகளின் பெயர்களைக் குறிப்பிடுவார்.

## செயற்பத்திரம் 3.3.1.2

- சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தையும், பின்னிணைப்பையும் வழங்குங்கள்.

1. முதலாவது தெய் தெய் தத்தா என்னும் அடவு அமைந்துள்ள தாளத்தைக் கூறுக?
2. இந்த அடவின் சொற்கட்டினைத் தாளம் போட்டவாறு திரிகாலங்களிலும் கொலுப் பிக்குக.
3. இவ் அடவினைத் திரிகாலங்களிலும் ஆடிக் காட்டுக.
4. இதில் பயன்படுத்தப்பட்ட முத்திரைகளின் பெயர்களை எழுதுக.
5. இந்த அடவின் சொற்கட்டினைத் தாளாங்கக் குறியீட்டுடன் எழுதுக.
6. தெய் தெய் தத்தா என்னும் அடவின் வகைகளைக் குறிப்பிடுக.

அடவு :- தெய், தெய், தத், தா

அடவுச் சொற்கட்டு :- தெய், தெய், தத், தா தித், தெய், தத், தா/
தெய், தெய், தத், தா/ தித், தெய், தத், தா//

தாளம் :- ஆதி
ஒரு களை

| /4 | $0_2$ | $0_2$ |
|---|---|---|
| 1ஆம் காலம் | | |
| தெய்,தெய்,தத்,தாதித்,தெய்,தத்,தா | தெய்,தெய்,தத்,தா | தித்,தெய்,தத்,தா// |
| 2ஆம் காலம் | | |
| தெய்,தெய்,தத்,தாதித்,தெய்,தத்,தா | தெய்,தெய்,தத்,தா | தெய்,தெய்,தத்,தா |
| தெய்,தெய்,தத்,தாதித்,தெய்,தத்,தா | தித்,தெய்,தத்,தா | தித்,தெய்,தத்,தா// |
| 3ஆம் காலம் | | |
| தெய்,தெய்,தத்,தாதித்,தெய்,தத்,தா | தெய்,தெய்,தத்,தா | தெய்,தெய்,தத்,தா |
| தெய்,தெய்,தத்,தாதித்,தெய்,தத்,தா | தித்,தெய்,தத்,தா | தித்,தெய்,தத்,தா// |
| தெய்,தெய்,தத்,தாதித்,தெய்,தத்,தா | தெய்,தெய்,தத்,தா | தெய்,தெய்,தத்,தா |
| தெய்,தெய்,தத்,தாதித்,தெய்,தத்,தா | தித்,தெய்,தத்,தா | தித்,தெய்,தத்,தா// |

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங் களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.3.2** : பரத நாட்டியத்தின் அடிப்படை அடவுகளில் சிலவற்றை ஆடிக் காட்டுவார்.

**செயற்பாடு 3.3.2** : அடவுகளில் ஒன்றான இரண்டாவது தெய் தெய்தத்தா அடவினை ஆடுவோம்.

**நேரம்** : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- அடவின் தாளாங்கம் எழுதப்பட்ட அட்டை
- அடவின் வரைபடங்கள்
- ஒளிப்படங்கள்
- தட்டுக்கழி, தட்டுப்பலகை
- செயற்பத்திரம் 3.3.2

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

**படி 3.3.2.1**

- இரண்டாவது தெய் தெய் தத்தா அடவு வரையப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- முதலாவது, இரண்டாவது தெய் தெய் தத்தா அடவுகளில் காணப்படும் வேறுபாட்டினை ஆசிரியர் விளக்குதல்.
- இரண்டாவது தெய் தெய் தத்தா அடவின் காற் செய்கையை ஆசிரியர் செய்து காட்டுதல்.
- மாணவர் ஆசிரியரைப் பின்பற்றி ஆடுதல்.
- இந்த அடவின் கைச் செய்கையை ஆசிரியர் ஆடிக் காட்டுதல்.
- இவ் அடவின் சொற்கட்டினைக் திரிகாலங் களிலும் கொலுப்படுத்தல்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகை யில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

- தெய் தெய் தத்தா எனும் சொற்கட்டி னைக் கொலுப்பித்தல்.
- இரண்டாவது தெய் தெய் தத்தா அடவில் பிரேங்கண மண்டலத்தைக் கவனித்தல்.
- ஆசிரியர் அடவினைக் ஆடிக் காட்டுதல்.
- மாணவர்கள் ஆசிரியரைப் பின்பற்றி ஆடுதல்.
- திரிகாலங்களிலும் பயிற்சி செய்தல்.

- ஆசிரியர் கைச் செய்கையை ஆடிக் காண்பித்தல்.
- பயன்படுத்தப்படும் முத்திரைகள் திரிபதாகம்
- கண் அசைவுகள் கவனிக்கப்பட வேண்டும்.
- ஆசிரியரும் மாணவரும் இணைந்து செயற் படுதல்.

(10 நிமிடங்கள்)

**படி 3.3.2.2** :

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப சிறிய குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்திலுள்ள அறிவுறுத்தல்களுக்கமையச் செயற்படுகின்றனரா என அவதானித்து ஆலோசனை வழங்குங்கள்.

(20 நிமிடங்கள்)

**படி 3.3.2.3** :

- ஒவ்வொரு குழுவும் சமர்ப்பித்தவற்றைக் கருத்திற் கொண்டு கலந்துரையாடல் ஒன்றை மேற் கொள்ளுங்கள்.
- ஒரு குழு ஆடிக் காட்டும் பொழுது மற்றைய குழு அதனை அவதானித்து விமர்சிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு ஆடிக் காட்டும் பொழுது மற்றைய குழு அடவின் சொற்கட்டினைக் கொலுப்பித்தல்.
- பின்வரும் விடயங்கள் மீளவலியுறுத்தும் வண்ணம் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

- இரண்டாவது தெய் தெய் தத்தா அடவு அமைந்துள்ள தாளத்தின் பெயரைக் குறிப் பிடுதல்.
- தெய் தெய் தத்தா அடவு வகைகள் மொத்தம் எத்தனை எனக் குறிப்பிடுதல்.
- கையில் தாளம் போட்டவாறு சொற்கட்டி னைக் கொலுப்பித்தல்.
- குறித்த அடவினைத் திரிகாலங்களிலும் பயிற்சி செய்து ஆடிக் காட்டுதல்.
- இரண்டாவது தெய் தெய் தத்தா அடவில் பயன்படுத்தப்படும் கை முத்திரைகள் கடகாமுகம், அலபதுமம் எனல்.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. இரண்டாவது தெய்தெய் தத்தா அடவின் காற் செய்கையை அரைமண்டியில் அமர்ந்து ஆடுவார்.
2. குறித்த அடவின் கைச்செய்கையைச் செய்து காட்டுவார்.
3. இவ் அடவின் கைச்செய்கையைச் செய்து காட்டுவார்.
4. இந்த அடவின் தாளத்தைக் கூறுவார்.
5. இந்த அடவில் பயன்படுத்தப்படும் முத்திரைகளையும், பாத பேதங்களையும் குறிப்பிடுவார்.
6. திரிகாலங்களிலும் இவ் அடவின் சொற்கட்டினைக் கொலுப்பிப்பார்.
7. திரிகாலங்களிலும் இவ் அடவினை ஆடிக்காட்டுவார்.

### செயற்பத்திரம் 3.3.2.2

- சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குங்கள்.

1. இரண்டாவது தெய் தெய் தத்தா என்னும் அடவு அமைந்துள்ள தாளத்தின் பெயரைக் குறிப்பிடுக.
2. தாளம் போட்டு இவ் அடவின் சொற்கட்டினைத் திரிகாலங்களிலும் கொலுப்பிக்குக.
3. பயன்படுத்தப்படும் முத்திரையைப் பிடித்துக் காட்டுக.
4. முத்திரைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
5. இரண்டாவது தெய் தெய் தத்தா அடவின் சொற்கட்டினைத் தாளங்கக் குறியீட்டுடன் எழுதுக.
6. இவ் அடவினைத் திரகாலங்களிலும் ஆடிக் காட்டுக.

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும் . கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங் களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.3.3** : பரத நாட்டியத்தின் அடிப்படை அடவுகளில் சிலவற்றை ஆடிக் காட்டுவார்.

**செயற்பாடு 3.3.3** : அடவுகளில் ஒன்றான மூன்றாவது தத் தெய் தாஹா அடவினை ஆடுவோம்.

**நேரம்** : 01 மணித்தியாலம் 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- அடவின் தாளாங்கம் எழுதப்பட்ட அட்டை
- அடவின் வரைபடங்கள்
- ஒளிப்படங்கள்
- தட்டுக்கழி, தட்டுப்பலகை
- செயற்பத்திரம் 3.3.2 பின்னிணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

**படி 3.3.3.1**

- தத் தெய் தாஹா (3-4வது) அடவுகள் வரையப் பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- காட்சிப்படுத்தப்பட்ட படங்களில் மூன்றாவது தத் தெய் தாஹா அடவு எது என இனங் காணல்.
- ஆசிரியர் மூன்றாவது தத் தெய் தாஹா அடவின் கால் செய்கையை செய்து காட்டுதல்.
- மாணவர் ஆசிரியரைப் பின்பற்றி ஆடுதல்.
- ஆசிரியர் இவ் அடவின் கைச் செய்கையை செய்து காட்டுதல்.
- மாணவர் பின்பற்றுதல்.
- திரிகாலங்களிலும் பயிற்சியை மேற்கொள்ளல்.
- கையில் தாளம் போட்டவாறு அடவின் சொற் கட்டைக் கொலுப்பித்தல்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகை யில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

> - மூன்றாவது தத் தெய் தாஹா அடவின் விளக்கமும் செய்முறையும்.
> - பயன்படுத்தப்படும் முத்திரை.
> - இந்த அடவின் பெயர்.
> - அமைந்துள்ள தாளம்.

- தாளத்துடன் சொற்கட்டினைக் கொலுப் பித்தல்.
- மூன்று காலங்களிலும் கொலுப்பித்தல்.
- மூன்று காலங்களிலும் காற்செய்கையைப் பயிற்சி செய்தல்.
- கை அசைவுகளைச் செய்தல்.
- காற் செய்கையுடன் கைச் செய்கையையும் இணைத்து ஆடுதல்.
- சொற்கட்டினைக் கொலுப்பித்தவாறு தத் தெய் தா ஹா மூன்றாவது அடவினை ஆடுதல்.

(20 நிமிடங்கள்)

**படி 3.3.3.2** :

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப சிறிய குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்திலுள்ள அறிவுறுத்தல்களுக்கமையச் செயற்படுகின்றனரா என அவதானித்து ஆலோசனை வழங்குங்கள்.

(40 நிமிடங்கள்)

**படி 3.3.3.3** :

- குழுக்களின் பெறுபேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.
- ஒரு குழு ஆடிக் காட்டும் பொழுது மற்றைய குழு அதனை அவதானித்துக் கருத்துக் கூற சந்தர்ப்பமளியுங்கள்.
- ஒரு குழு செயல்முறையில் ஈடுபடும் பொழுது மற்றைய குழு கையில் தாளம் போட்டு அடவுச் சொற்கட்டினைக் கொலுப்பித்தல்.
- மாணவர்கள் செய்முறை பற்றிய கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளுங்கள்.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்துங்கள்.

- மூன்றாவது தத் தெய் தாஹா அடவு அமைந்துள்ள தாளம் - ஆதி
- தத் தெய் தாஹா அடவுகளின் மொத்த எண்ணிக்கை நான்கு
- இந்த அடவுகளுக்கு குத்தடவு எனும் பெயர் உண்டு.
- சௌஷ்டவம் (அடவு சுத்தம்) முத்திரை, அரை மண்டி நிலை ஆகியவற்றை கருத்திற் கொண்டு ஆடுதல்.

- கையில் தாளம் போட்டவாறு சொற்கட்டினைக் கொலுப்பித்தல்.
- திரிகாலங்களிலும் இவ் அடவினை ஆடிப் பயிற்சி செய்தல்.
- சொற்கட்டினைக் கொலுப்பித்தவாறு அடவினை ஆடுதல்.

(20 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. மூன்றாவது தத் தெய் தாஹா அடவின் காற்செய்கையை அரைமண்டியில் அமர்ந்து ஆடுவார்.
2. காற் செய்கையுடன் கைச் செய்கையையும் இணைத்து ஆடுவார்.
3. இந்த அடவு அமைந்துள்ள தாளத்தைக் குறிப்பிடுவார்.
4. திரிகாலங்களிலும் பயிற்சி செய்வார்.
5. அடவின் சொற்கட்டினைக் கையில் தாளம் போட்டவாறு கொலுப்பிப்பார்.
6. திரிகாலங்களிலும் சொற்கட்டினைக் கொலுப்பிப்பார்.
7. இந்த அடவில் பயன்படுத்தப்படும் முத்திரைகளின் பெயர்களையும் பாத பேதங்களையும் குறிப்பிடுவார்.

## செயற்பத்திரம் 3.3.3.2

- சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குங்கள்.

1. மூன்றாவது தத் தெய் தாஹா அடவு அமைந்துள்ள தாளத்தைக் கூறுக.
2. இந்த வகை அடவுகளின் பெயரைக் குறிப்பிடுக.
3. இந்த அடவின் சொற்கட்டினைத் தாளாங்கக் குறியீட்டுக்கமைய எழுதுக.
4. மேற்குறித்த அடவினைத் திரிகாலங்களிலும் ஆடிக் காட்டுக.
5. இந்த அடவில் பயன்படுத்தப்படும் முத்திரைகளைக் கூறுக.
6. இந்த அடவின் சொற்கட்டினைத் திரிகாலங்களிலும் கொலுப்பிக்குக.
7. தத் தெய் தாஹா எனும் அடவுச் சொற்கட்டினைக் கொண்ட அடவுகள் மொத்தம் எத்தனை என்று எழுதுக.

## குத்தடவு

தாளம் :- ஆதி

சொற்கட்டு :- தத்,; தெய்,; தா; ஹா; / தித்,; தெய்,; தா; ஹா; //

| /4 | $0_2$ | $0_2$ |
|---|---|---|
| **1ஆம் காலம்**<br>தத்,; தெய்,; தா; ஹா; | தித்,; தெய்,; | தா; ஹா; // |
| **2ஆம் காலம்**<br>தத்,; தெய்,; தா; ஹா;<br>தித்,; தெய்,; தா; ஹா; | தத்,; தெய்,;<br>தா; ஹா; | தித்,; தெய்,;<br>தா; ஹா; // |
| **3ஆம் காலம்**<br>தத்,; தெய்,; தா; ஹா;<br>தித்,; தெய்,; தா; ஹா;<br>தத்,; தெய்.; தா; ஹா;<br>தித்,; தெய்,; தா; ஹா; | தத்,; தெய்,;<br>தா; ஹா;<br>தித்,; தெய்,;<br>தா; ஹா; | தத்,; தெய்,;<br>தா; ஹா;<br>தித்,; தெய்,;<br>தா; ஹா; // |

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங் களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.3.4** : பரத நாட்டியத்தின் அடிப்படை அடவுகளில் சிலவற்றை ஆடிக் காட்டுவார்.

**செயற்பாடு 3.3.4** : அடவுகளில் ஒன்றான நான்காவது தத் தெய் தாஹா அடவினை ஆடுவோம்.

**நேரம்** : 01 மணித்தியாலம் 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- அடவின் தாளாங்கம் எழுதப்பட்ட அட்டை
- அடவின் வரைபடங்கள்
- ஒளிப்படங்கள்
- தட்டுக்கழி, தட்டுப்பலகை
- செயற்பத்திரம் 3.3.2

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

**படி 3.3.4.1**

- நான்காவது தத்தெய்தாஹா அடவு வரையப் பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- காட்சிப்படுத்திய அட்டையில் இருக்கும் அடவை இனங்காணல்.
- ஆசிரியர் நான்காவது தத் தெய் தாஹா அடவின் காற் செய்கையை செய்து காட்டுதல்.
- குறித்த அடவுக்கும் மற்றைய குத்தடவு வகை களுக்கும் இடையே காணப்படும் ஒற்றுமை வேற்றுமையைக் குறிப்பிடல்.
- மாணவர்கள் ஆசிரியரைப் பின்பற்றிக் காற்செய்கையில் ஈடுபடல்.
- ஆசிரியர் இவ் அடவின் கைச்செய்கையைச் செய்துகாட்டல்.
- மாணவர்கள் ஆசிரியரைப் பின்பற்றி ஆடுதல்.
- திரிகாலங்களிலும் பயிற்சியை மேற்கொள்ளல்.
- அடவுச் சொற்கட்டைக் கையில் தாளம் போட்டவாறு கொலுப்பித்தல்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகை யில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

- நான்காவது தத் தெய் தாஹா அடவின் விளக்கமும் செய்முறையும்.
- குறிப்பிட்ட அடவின் தாளம்
- அங்க சுத்தம், முத்திரை, கண் அசைவுகள்
- ஆயத நிலையும், பிரேங்கண மண்டல நிலையும்.
- இந்த அடவுக்கும் ஏனைய குத்தடவு களுக்கும் இடையே உள்ள வேறுபாடு.
- ஆசிரியர் கையில் தாளம் போட்டு அடவுச் சொற்கட்டினைக் கொலுப்பித்தல்.
- மாணவர் ஆசிரியரைப் பின்பற்றுதல்.
- சொற்கட்டினைத் தெளிவாக உச்சரித்தல்.
- திரிகாலங்களிலும் தத்தெய்தாஹா அடவுச் சொற்கட்டைக் கொலுப்பித்தல்.
- திரிகாலங்களிலும் இவ் அடவினை ஆடுதல்.
- அடவுச் சொற்கட்டிலுள்ள கார்வைகளைக் கணக்கிடல்.
- சொற்கட்டின் மொத்த எண்ணிக்கையைக் கணக்கிடல்.

(20 நிமிடங்கள்)

**படி 3.3.4.2** :

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப சிறிய குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்திலுள்ள அறிவுறுத்தல்களுக்கமையச் செயற்படுகின்றனரா என அவதானித்து ஆலோசனை வழங்குங்கள்.

(40 நிமிடங்கள்)

**படி 3.3.4.3** :

- குழுக்களின் பெறுபேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.
- ஒரு குழு ஆடிக் காட்டும் பொழுது மற்றைய குழு அதனை அவதானித்து விமர்ச்சிப்பதற்கு சந்தர்ப்பத்தை வழகுங்கள்.
- ஒரு குழு செயல்முறையில் ஈடுபடும் பொழுது மற்றைய குழு கையில் தாளம் போட்டு அடவுச் சொற்கட்டினைக் கொலுப்பித்தல்.
- மாணவர்களின் செய்முறை பற்றிய கலந்துரை யாடல் ஒன்றை மேற்கொள்ளுங்கள்.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்துங்கள்.

- நான்காவது தத் தெய் தாஹா அடவு அமைந்துள்ள தாளத்தின் பெயர்
- குறித்த அடவுக்கும் ஏனைய குத்தடவுகளுக் கும் உள்ள ஒற்றுமை வேற்றுமையைக் குறிப்பிடுதல்.
- இந்த அடவினை முதலில் இடப்பக்கம் ஆயத நிலையில் சிறிதாகப் பாய்ந்து ஆடுதல்.
- பாய்ந்தபின் இடது காலைப் பின்னோக்கிச் சறுக்கிய பின் வலது காலைப் பக்கத்தில் தட்டுதல்.
- பின் இருமுறை குதித்துத் தட்டுதல்.
- தட்டும் பொழுது முதலில் வலது காலை இருமுறையும் தட்டுதல்.
- இவ் அடவிற்கும் குத்தடவு எனும் பெயர் உண்டு என்பார்.
- இரு கைகளிலும் திரிபதாக முத்திரையைப் பிடித்தல்.
- அரைமண்டி, முத்திரை, அங்க சுத்தம், நாட்டியாரம்பம் என்பவற்றைக் கவனித்து ஆடுதல்.
- கையில் தாளம் போட்ட வண்ணம் இந்த அடவின் சொற்கட்டினைக் கொலுப்பித்தல்.
- திரிகாலங்களிலும் அடவுச் சொற்கட்டைக் கொலுப்பித்தல்.
- திரிகாலங்களிலும் அடவினை ஆடுதல்.
- சொற்கட்டினைக் கொலுப்பித்தவாறு நான்கா வது தத்தெய் தாஹா அடவினை ஆடுதல்.

(20 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. நான்காவது தத் தெய் தாஹாவின் காற்செய்கையை ஆடிக் காட்டுவார்.
2. குறித்த அடவின் கைச் செய்கையைச் செய்து காட்டுவார்.
3. இவ் அடவு அமைந்துள்ள தாளத்தின் பெயரைக் குறிப்பிடுவார்.
4. இவ் அடவின் காற்செய்கையையும் கைச் செய்கையையும் இணைத்து ஆடுவார்.
5. அடவுச் சொற்கட்டினைக் கையில் தாளம் போட்டவாறு கொலுப்பிப்பார்.
6. திரிகாலங்களிலும் சொற்கட்டினைக் கொலுப்பிப்பார்.
7. இந்த அடவில் பயன்படுத்தப்படும் முத்திரைகளின் பெயரைக் கூறுவார்.
8. திரிகாலங்களிலும் இவ் அடவினைப் பயிற்சி செய்வார்

## செயற்பத்திரம் 3.3.4.2

- சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குங்கள்.

1. நான்காவது தத்தெய்தாஹா அடவு அமைந்துள்ள தாளத்தைக் குறிப்பிடுக.
2. நான்காவது தத்தெய் தாஹா அடவினை ஆடிக் காட்டுக.
3. குறித்த அடவின் சொற்கட்டினைத் தாளத்துடன் கொலுப்பிக்குக.
4. இவ் அடவின் சொற்கட்டினை தாளாங்கக் குறியீட்டுக்கமைய எழுதுக.
5. அடவுச் சொற்கட்டைக் கொலுப்பித்தவாறு நான்காவது தத்தெய் தாஹா அடவினை ஆடிக் காட்டுக.
6. அடவினை வரைந்து காட்டுக.

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.3.4** : நடன உருப்படிகளை ரஸபாவத்துடன் ஆடிக் காட்டுவார்.

**செயற்பாடு 3.4.1** : வஸந்தா அல்லது சாவேரி இராகத்தில் அமைந்த ஜதிஸ்வரத்தின் தீர்மானத்தினை ஆடுவோம்.

**நேரம்** : 01 மணித்தியாலம் 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- வசந்தா அல்லது சாவேரி இராகத்தில் அமைந்த ஜதிஸ்வரப் பாடல்கள் அடங்கிய ஒலி நாடா.
- ஒளி நாடாக்கள்
- எடுத்துக்கொண்ட ஜதிஸ்வரத்தின் தீர்மானம் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதப்பட்டஅட்டை.
- ஜதிஸ்வரத்தின் பாடல் எழுதப்பட்ட அட்டை.
- அடவுகளின் வரைபடங்கள்
- தட்டுக்கழி, தட்டுப்பலகை
- செயற்பத்திரம் 3.4.2 பின்னிணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

**படி 3.4.1**

- முதலாவது ஜதிஸ்வரத்தின் இராகம் :- வசந்தா
  தாளம் :- ரூபகம்
- இரண்டாவது ஜதிஸ்வரத்தின் இராகம்:- சாவேரி
  தாளம் :- ரூபகம்
- எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் பாடல் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தி ஒலி நாடா மூலம் பாடலை ஒலிக்கச் செய்து மாணவர்கள் அதனை செவிமடுக்கச் செய்தல்.
- எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் தீர்மானத்தின் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தி தாளத்தில் கொலுப்பித்துக் காட்டல்.
- வசந்தாஅல்லது சாவேரி ஜதிஸ்வரத்தின் தீர்மானத்தினை ஆசிரியர் முழுமையாக ஆடிக்காட்டல்.
- எடுத்துக்கொண்ட ஜதிஸ்வரத்தின் தீர்மானம் தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

- நமஸ்காரத்துடன் பயிற்சியை ஆரம்பித்தல்.
- எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் தீர்மானத் தினை ஆசிரியர் ஆடிக் காண்பித்தல்.
- எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் தீர்மானத்தினை தாளாங்கக் குறியீட்டுடன் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தி (பின்னிணைப்பு) மாணவர்கள் கொலுப்பித்துக் காட்ட வழிப்படுத்தல்.
- மாணவர்கள் தீர்மானத்தில் இடம்பெறும் அடவுகளை இனங்கண்டு கூற வழிப்படுத்தல்.
- எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் தீர்மானத்தில் இடம்பெறும் அடவுகளைத் திரிகாலங்களிலும் பயிற்சி அளித்தல்.
- எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் தீர்மானத் தினைப் பகுதி பகுதியாக ஆசிரியர் ஆடிக் காட்ட மாணவர்கள் அவரைப் பின்பற்றி ஆடச் செய்தல்.
- மாணவர்கள் தாம் கற்ற ஜதிஸ்வரத்தின் தீர்மானத்தினை முழுமையாக ஆடிக்காட்டு வதற்கு வழிப்படுத்தல்.
- மாணவர்களைக் குழுக்களாகவும் தனி யாகவும் ஆடச் செய்தல்.

(40 நிமிடங்கள்)

**படி 3.4.2** :

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப சிறிய குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்திலுள்ள அறிவுறுத்தல்களுக்கமையச் செயற்படுகின்றனரா என அவதானித்து ஆலோசனை வழங்குங்கள்.
- பயிற்சியில் ஈடுபடும் போது ஆசிரியர் அவதானித்து ஆலோசனை வழங்குதல்.

(20 நிமிடங்கள்)

**படி 3.4.4.2** :

- ஒவ்வொரு குழுவும் தமது செயற்பத்திரத்தை சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது செயற்பாட்டினைச் சமர்ப்பிக்கும் போது மறு குழு அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- குழுக்களின் செயற்பாடுகளின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றினை மீளவும் மேற்கொள்ளுங்கள்.

- வசந்தா, சாவேரி ஆகிய இராகங்களில் அமைந்த ஜதிஸ்வரங்களின் தாளம் ரூபகம்.
- இத்தாளத்திற்குரிய அங்கம் $\cup O_2$
- மேற்குறிப்பிட்ட இராகங்களில் அமைந்த ஜதிஸ்வரம் ஒன்றின் தீர்மானத்தைக் கொலுப் பித்தல்.
- பின்பு, தீர்மானத்தைக் கையில் தாளம் போட்ட வாறு கொலுப்பித்தல்.
- அடவுச் சொற்கட்டுகளுடன் கொலுப்பித்தல்.
- அடவுச் சொற்கட்டுகளைத் தாளத்துடன் கொலுப்பித்தல்.
- அரைமண்டி நிலை, அங்க சுத்தம், முத்திரை சுத்தம் ஆகியனவற்றைக் கவனித்து ஆடுதல்.
- அடவுச் சொற்கட்டுகளுக்கமைய ஆடுதல்.
- முழுமையாகவும், தொடர்ச்சியாகவும் ஆடப் பயிற்சி செய்தல்.
- ஜதிஸ்வரமானது, பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகிய அங்கங்களைக் கொண்டுள்ளமை
- கற்ற ஜதிஸ்வரத்தின் தீர்மானத்தை முழுமை யாக ஆடப் பயிற்சி செய்தல்.

(20 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. கற்ற ஜதிஸ்வரத்தின் இராக, தாளத்தைக் கூறுவார்.
2. கற்ற ஜதிஸ்வரத்தின் தீர்மானத்தை தாளத்துடன் கொலுப்பித்துக் காட்டுவார்.
3. கற்ற ஜதிஸ்வரத்தின் தீர்மானத்தை அங்க சுத்தத்துடனும் லயப் பிடிப்புடனும் ஆடுவார்.

## செயற்பத்திரம் 3.4.2

- சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை பின்னிணைப்புடன் சேர்த்து வழங்குங்கள்.

எடுத்துக்கொண்ட ஜதிஸ்வரத்தின் பல்லவிப் பகுதியை ராக தாளத்துடன் பாடித் தீர்மானத்தினைக் கொலுப்பித்துக் காட்டி, அங்க சுத்தத்துடன் ஆடிக் காட்டுக.

## ஜதிஸ்வரம்

இராகம் :- வசந்தா　ஆ : ஸமகமதநிஸ்　17வது மேளத்தின் ஜன்யம்
தாளம் : ரூபகம்　அ : ஸ்நிதபமகரிஸ　சாஹித்யகர்த்தா : சு. பொன்னையா

### பல்லவி

ஸா; ; ; ஸ்ாநீ // தாமா கா; ரீநீ // ஸா ; ; ; நீஸா // கா; மாதாநீதா //
( ஸ்ா)

### அனுபல்லவி

ஸ்ரிஸ்நி தநிதம கா ; // மநிதம கமகரிஸா, நி // தநிஸகமத ஸகமததநி //
ஸ்ரிநிஸ் தநிமத கமதநி // ( ஸ்ா)

### சரணம்

1. தா; நீதா மாதா // நீ; தாமா காமா // தா ; ; ரீ, ஸா, //
மா, கா, ஸாகாமா //
தா; நீதா மாதா நீ; தாமா காமா // தா ; ; ரீ, ஸா, மா, கா, ஸாகாமா//
தாநித தமகம கரிகம // தா நி ரி க ரி மகநிதகம // தாஸ்நிநிததம கமதநி//
தாக்ரி ஸ்நிதநி தமதநி // ( ஸ்ா)

2. ஸ்ா ; ; ; ஸ்நிதநி // ஸ்ரி நித தநிதம கமகரி //
ஸா ; ; ; தநிஸரி // நீஸகம தகாம தநிஸ் //
மாதநி ஸ்ரிஸ்ா நிதக்ரி // காமத நிரிஸ்ா கமதநி //
ஸ்ஸ்ாநி தநித மதா; // நிநீத மநிதம கா; //
ததாம கமகரி ஸா, நி // ஸகாம கமாத மதாநி //
ஸ்ரிஸ்நி ஸ்நிதநி தமதநி // ஸ்ாஸ்நி நிதமகா; நி //
தமகரிஸா, ஸகமதநி // (ஸ்ா)

### தீர்மானம்

| | | |
|---|---|---|
| ; ; | ; ; | ; ; |
| ஸ்ா ; | ; ; | ஸ்ாநீ // |
| தாமா | கா ; | ரீநீ // |
| ஸா ; | ; ; | நீஸா // |
| கா ; | தளாங்குதகதிகு | தகததிங்கிணதொம், // |
| தாஹததஜம்,தரி | தா ; ஜம்,தரி | ஜகதரி தெய்,; // |
| தஜம்,ததரும்,த | கதிம்,த தக், கிடதக | தக்,கிடதகதரிகிடதொம், // |
| ; கிடதகதக்,கிடதக | தரிகிடதொம்,; கிடதக | தக்,கிடதகதரிகிடதொம், // |
| | | (ஸ்ா) |

## ஜதிஸ்வரம்

இராகம் :- சாவேரி
தாளம் : ரூபகம்

ஆ : ஸரிமபதஸ்
அ : ஸ்நிதபமகரிஸ
சாஹித்யகர்த்தா : சு. பொன்னையா

### பல்லவி

ஸா; ; ; ரீஸ், // தா; பாமாகாரீ // ஸா ; ; ; நீதா // ஸாரீமாபாதாரீ // ( ஸ்ா)

### அனுபல்லவி

ஸ்ாரிக் ஸ்க்ரிஸ் நிதபம // பாதஸ் நிதபம கரிஸரி //
ஸதாரி ஸாபம ாதபா // நிதாரி ஸ்ாநித பமபத // ( ஸ்ா)

### சரணம்

1. தா; ; ; நீதா // பாமா காரீ ,மாப // தா ; ; ; ரீஸ்ா // க்ாரீ ஸ்தா; ரீஸ் //
தா; ; ; பாமா // காரீ ஸாரீ, மாப //
தாநித பமகரி மபதநி // தாரிஸ் க்ரிஸ்த நிதக்ரி //
ஸ்தாப மாகரி ஸரிமப // தநிதக் ரிஸ்நித பமபத // (ஸ்ா)

2. ஸ்ா ; ; ; ; ; // ரிரீஸ் நிதஸ்ஸ் ாநிதப // ததாநி தமகரி, கஸரி //
ஸ்ா ; ; ; ; ; // ரிஸாம ரீபம ாதபா // நிதாரி ஸ்ாநித பமபத //
ஸ்ரிக்ரி க்ஸ்ாரி ரிஸ்நித // பதரித ரிதாஸ் நிதபம //
கரீம பதக்ரி, ஸ்நித // ரிஸ்ாநி தபமக ரிமபத // (ஸ்ா)

### தீர்மானம்

| ; ; | ; ; | ; ; |
|---|---|---|
| ஸ்ா ; | ; ; | ,ரீஸ் // |
| தா ; | பாமா | காரீ // |
| ஸா ; | ; ; | நீதா // |
| ஸாரீ | மதளங்கு | தகதிகுதகததிங் // |
| கிணதொம்தக்கதி | கதிஜம்,தா ; | ததகதிகதிஜம், // |
| தெய்,; தக்கதி | ஜம் தா; தத | கதிஜம், தெய் , ; // |
| தக்,கதிஜம்,கிடதக | { தரிகிடதொம் ,கிடதக<br>தரிகிட } | தொம்,கிடதகதரிகிடதொம், //(ஸ்ா) |

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங் களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.4** : நடன உருப்படிகளை ரஸபாவத்துடன் ஆடிக் காட்டுவார்.

**செயற்பாடு 3.4.1** : வஸந்தா அல்லது சாவேரி இராகத்தில் அமைந்த ஜதிஸ்வரத்தின் முதலாவது கோர்வையை ஆடுவோம்.

**நேரம்** : 1 மணித்தியாலம் 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- வசந்தா அல்லது சாவேரி ஜதிஸ்வரப் பாடல் கள் அடங்கிய ஒலி, ஒளி நாடாக்கள்.
- எடுத்துக்கொண்ட ஜதிஸ்வரத்தின் முதலாவது கோர்வை தாள அங்கக் குறியீட்டுடன் எழுதப் பட்ட அட்டை.
- கற்ற முதலாவது கோர்வையில் இடம்பெறும் அடவுகளின் வரைபடங்கள்
- தட்டுக்கழி, தட்டுப்பலகை
- செயற்பத்திரம் 3.4.2 பின்னிணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

**படி 3.4.1**

- எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் பல்லவி யினை முழுமையாகப் பாடியோ, ஒலிப்பதிவு நாடா மூலம் ஒலிக்கச் செய்தோ மாணவரைச் செவிமடுக்கச் செய்தல்.
- எடுத்துக்கொண்ட ஜதிஸ்வரத்தின் 1ஆவது கோர்வை தாள அங்கக் குறியீட்டுடன் எழுதப் பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தி தாளத்தில் கொலுப்பித்துக் காட்டல்.
- வசந்தா அல்லது சாவேரி ஜதிஸ்வரத்தின் 1ஆவது கோர்வையை ஆசிரியர் முழுமையாக ஆடிக்காட்டல்.
- எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் அமைப் பிலே கற்ற தீர்மானத்தினைத் தொடர்ந்து மெய்யடவுகளைச் செய்தபின் 1ஆவது கோர் வையை சொல்லி ஆட வேண்டும் என்பதை வலியுறுத்துக.
- பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொண்டு ஆடலை மேற்கொள்ளுங்கள்.

- நமஸ்காரத்துடன் வகுப்பை ஆரம்பித்தல்.
- வசந்தா அல்லது சாவேரி இராகங்களில் அமைந்த ஜதிஸ்வரங்களின் தீரமானத்தினைத் தொடர்ந்து ஐந்து கோர்வைகள் ஆடப்படு கின்றன.
- எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் தீரமானத் தினை மாணவர்கள் ஆடிக்காட்டச் செய்க.
- எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் 1ஆவது கோர்வையை ஆசிரியர் முழுமையாக ஆடிக் காண்பித்தல்.
- எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் 1ஆவது கோர்வையினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தி (பின்னிணைப்பு -1) மாணவர்கள் கொலுப் பித்துக் காட்டப் பயிற்சி அளித்தல்.
- மாணவர்கள் 1 ஆவது கோர்வையில் இடம் பெறும் அடவுகளை இனங்கண்டு கூற வழிப் படுத்துதல்.
- எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் 1ஆவது கோர்வையில் இடம்பெறும் அடவுகளை திரிகாலப்பயிற்சி அளிக்கவும்.
- எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் 1ஆவது கோர்வையைப் பகுதி பகுதியாக ஆடிக்காட்ட மாணவர்கள் அவரைப் பின்பற்றி ஆடச் செய்தல்.
- மாணவர்கள் 1ஆவது கோர்வையை முழுமை யாக ஆடிக்காட்டுவதற்கு வழிப்படுத்துதல்.
- ஜதி முடிவடைந்ததும் மெய்யடவுகளை ஆடுவதற்கு நெறிப்படுத்துக.
- மாணவர்களை எழுமாற்றாகவும் குழுக்களாக வும், தனியாகவும் ஆடச் செய்தல்.

(15 நிமிடங்கள்)

**படி 3.4.2** :

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக் கேற்ப மாணவரைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்துடன் பின்னிணைப்பினையும் கொடுத்து 1ஆம் கோர்வையைப் பயிற்சி பெற வழிப்படுத்துக.
- ஒவ்வொரு குழுவும், எடுத்துக்கொண்ட ஜதிஸ் வரத்தின் 1ஆவது கோர்வையை சரியான முறையில் பயிற்சியில் ஈடுபடுகின்றனரா என்பதை உறுதிப்படுத்துக.

(40 நிமிடங்கள்)

**படி 3.4.3** :

- ஒவ்வொரு குழுவும், குழுவாகவும், தனியாகவும் எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் 1ஆவது கோர்வையை ஆடச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது செயற்பாட்டினைச் சமர்ப்பிக்கும் போது மறு குழு அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- குழுக்களின் செயற்பாட்டில் பெற்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களை மீளவும் ஆடச் செய்து நெறிப்படுத்துக.

> - ஜதிஸ்வரத்தின் தாளம் ரூபகம்
> - ஜதிஸ்வரம் அமைந்த இராகம் வசந்தா அல்லது சாவேரி.
> - முதலாவது கோர்வையைக் கையில் தாளம் போட்டவாறு கொலுப்பித்தல்.
> - இக்கோர்வையில் இடம்பெறும் அடவுகள் 1ஆவது தத்தெய்தாஹா வின் பிற்பகுதியும் தெய் தெய் தாம் அடவும், திஸ்ர ஜாதி ததிங்கிண தொம் அடவுகளாகும்
> - கோர்வையின் ஆரம்பத்தில் கைகள் நாட்டியா ரம்ப நிலையிலும், கால்கள் ஆயத மண்டலத் திலும் வைக்கப்படும், நடை சதுஸ்ரத்தில் ஆடுதல்.
> - தத் தெய் தாஹா என இரண்டாம் காலத்தில் ஆடிய பின்னர் கோர்வையின் ஆரம்பத்தில் செய்தது போல் செய்ய வேண்டும். ஆனால் இங்கு திஸ்ர நடையில் ஆடுதல்.
> - முடிவடவாக இடம்பெறும் ததிங்கிணதொம் அடவினை மும்முறை ஆடுதல்.
> - வசந்தா, சாவேரி ஆகிய இராகங்களில் அமைந்த ஜதிஸ்வரங்களில் ஆடப்படும் முதலா வது கோர்வை இரண்டிற்கும் பொதுவானதாக அமைந்துள்ளமை.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரம் அமைந்துள்ள இராகம், தாளம் இரண்டினையும் குறிப்பிடுவார்.
2. எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் 1ஆவது கோர்வையில் இடம்பெறும் அடவுகளைக் கூறுவார்.
3. எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் முதலாவது கோர்வையினை முழுமையாகத் தாளத்தில் கொலுப்பித்துக் காட்டுவார்.
4. கற்ற ஜதிஸ்வரத்தின் முதலாவது கோர்வையை ஸ்வரத்துடன் இணைந்து அங்கசுத்தத்துடனும் லயப்பிடிப்புடனும் ஆடுவர்.

## செயற்பத்திரம் 3.4.2

- சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குங்கள்.

| | |
|---|---|
| 1. | எடுத்துக்கொண்ட ஜதிஸ்வரத்தின் முதலாவது கோர்வையைத் தாளத்துடன் கொலுப்பித்து ஆடிக்காட்டுக. |

**இணைப்பு**

இராகம் :- வசந்தா, சாவேரி ஆகிய இராகங்களிலமைந்த ஜதிஸ்வரங்களுக்கு இந்த முதலாவது கோர்வை பொதுவானது.

| ; ; | ; ; | ; ; |
|---|---|---|
| த, க. | தி, மி, | தெய், தெய். // |
| தாம்; | தத், தெய், | தா ஹா // |
| த, கி, | டததீ | ,ங்கிணதொம் // |
| ததீங்கி | ணதொம்ததி | ,ங்கிணதொம் // |

**தேர்ச்சி 4.0** : பரத நாட்டியம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.1** : இசைக் குறியீடுகளின் வகைகளையும் சூளாதி சப்த தாளங்களின் குறியீடுகளையும் அறிந்து 5 ஜாதிகளினால் 35 தாளங்கள் ஆகும் முறையினைக் கூறுவார்.

**செயற்பாடு 4.1** : பஞ்ச ஜாதிகளினால் ஏழு தாளங்களும் 35 தாளங்களாகும் முறையினைக் கற்றுக் கொள்வோம்.

**நேரம்** : 02 மணித்தியாலங்கள் (03 பாடவேளைகள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- பஞ்ச ஜாதிகளினால் 35 தாளங்களாகும் முறை எழுதப்பட்ட அட்டவணை அட்டை.
- செயற்பத்திரம் 4.1.2 இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

**படி 4.1.1**

- பஞ்ச ஜாதிகளினால் சப்த தாளங்களும் 35 தாளங்களாகும் முறை எழுதப்பட்ட அட்டையினைக் காட்சிப்படுத்தல்.
- எடுத்துக்காட்டாக திஸ்ரஜாதி ரூபக தாளத்திற்குரிய மொத்த எண்ணிக்கை மொத்தம் ஐந்து எனக் கூறி இந்த ஐந்து எவ்வாறு கணிப்பிடப்படுகின்றது என்பது பற்றிய வினாக்களை எழுப்பிக் கலந்துரையாடலை மேற்கொள்ளுதல்.
- கலந்துரையாடலில் கீழ்வரும் விடயங்களை வலியுறுத்துதல்.

> - லகு, த்ருதம், அனுத்ருதம் ஆகியன திரியாங்கங்கள்
> - இத் திரியாங்கங்களுள் ஜாதி பேதமடையும் அங்கம் லகு.
> - லகுவானது திஸ்ர ஜாதி, சதுஸ்ர ஜாதி, கண்ட ஜாதி, மிஸ்ர ஜாதி, சங்கீரண ஜாதி என்னும் ஐந்து ஜாதிகளை உடையது.
> - துருவம், மட்யம், ரூபகம், ஜம்பை, திரிபுடை, அட, ஏக என்பன சப்த தாளங்கள்.
> - சப்த தாளங்கள் ஏழும் லகுவின் 5 ஜாதி பேதங்களினால் 7 X 5 = 35 தாளங்கள் ஆகின்றன.

(35 நிமிடங்கள்)

**படி 4.1.2** :

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற் பாட்டுப்படிவத்தை வழங்குங்கள்.
- செயற்பாட்டுப்படிவத்திலுள்ள அறிவுரைகளுக் கமைய செயற்படுகின்றனரா என உறுதிப்படுத் துங்கள்.

(50 நிமிடங்கள்)

**படி 4.1.3** :

- ஒவ்வொரு குழுவினரும் தமக்கு வழங்கப்பட்ட செயற்பாட்டுப்படிவத்தை முன்வைக்கச் சந்தர்ப் பத்தை வழங்குங்கள்.
- ஒரு குழு முன்வைத்த விடயங்களை ஏனைய குழுக்களும் அவதானிக்கச் செய்யுங்கள்.
- மாணவர்கள் அவதானித்தவற்றை விமர்சிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர் தாம் முன்வைத்தவற்றை அடிப்படை யாகக் கொண்டு பின்வரும் விடயங்கள் மீளவலி யுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடுங்கள்.

> - லகுவின் ஐந்து ஜாதிகள் திஸ்ரம், சதுஸ்ரம், கண்டம், மிஸ்ரம், சங்கீர்ணம் இவை ஒவ்வொன்றும் முறையே 03, 04, 05, 07, 09 ஆகிய எண்ணிக்கைகளையும் தகிட, தகதிமி, தகதகிட, தகிடதகதமி, தகதிமிதகதகிட என்னும் சொற்கட்டுகளையும் கொண்டவை.
> - துருவம் மட்யம் ஜம்பை, திரிபுடை, அட, ஏக ஆகிய ஏழும் சூளாதி சப்த தாளங்கள். இவை ஒவ்வொன்றினதும் குறியீடுகள் முறையே 1011, 101, 01, 1 ◡ 0, 100, 1100, 1
> - சூளாதி சப்த தாளங்கள் ஏழும் லகுவின் 5 ஜாதி பேதங்களினால் $7 X 5 = 35$ தாளங்கள் ஆகின்றன.
> - மேற்கூறியதற்கு உதாரணமாக துருவ தாளத்தை எடுத்துக் கொண்டோமானால். $1_3 0 1_3 1_3$, $1_4 0 1_4 1_4$, $1_5 0 1_5 1_5$, $1_7 0 1_7 1_7$, $1_9 0 1_9 1_9$ ஆகிய அங்கங்கள் காணப்படுகின்றன.

(35 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. திஸ்ரம், சதுஸ்ரம், கண்டம், மிஸ்ரம், சங்கீர்ணம் ஆகிய ஜாதிகளையும் அவற்றின் எண்ணிக்கையையும் குறிப்பிடுவார்.
2. துருவம், மட்யம், ருபகம், ஜம்பை, திரிபுடை, அட, ஏக ஆகிய ஏழு தாளங்களையும் குறிப்பிடுவார்.
3. சப்த தாளங்களில் இடம்பெறும் அங்கங்கள் லகு, துருதம், அனுதுருதம், என்பதனைக் கூறுவார்.
4. கண்ட ஜாதி மட்ய தாளத்திற்குரிய குறியீடுகளையும் எண்ணிக்கைகளையும் கூறுவார்.

## செயற்பத்திரம் 4.1.2

- சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குங்கள்.

1. லகுவின் ஐந்து ஜாதிகளையும் குறிப்பிட்டு, ஒவ்வொன்றினதும் சொற்கட்டையும் அவை எடுத்துக் கொள்ளும் எண்ணிக்கைகளையும் கூறுக.
2. சூளாதி சப்த தாளங்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றிற்குமுரிய குறியீடுகளையும் எழுதுக.
3. சப்த தாளங்கள் ஏழும் எவ்வாறு 35 தாளங்கள் ஆகின்றன என்பதைக் கூறி, எடுத்துக்காட்டாக ஏதாவதொரு தாளத்தை எடுத்து விளக்குக.

## 35 தாள சக்கரம்

| தாளம் | ஜாதி | அங்கங்கள் | அட்சரங்கள் |
|---|---|---|---|
| 1. துருவ தாளம் | திஸ்ர ஜாதி | $1_3\,0\,1_3\,1_3$ | 3 + 2 + 3 + 3 = 11 |
| | சதுஸ்ர ஜாதி | $1_4\,0\,1_4\,1_4$ | 4+ 2 + 4 + 4 = 14 |
| | கண்ட ஜாதி | $1_5\,0\,1_5\,1_5$ | 5 + 2 + 5 + 5 = 17 |
| | மிஸ்ர ஜாதி | $1_7\,0\,1_7\,1_7$ | 7 + 2 + 7 + 7 = 23 |
| | சங்கீரண ஜாதி | $1_9\,0\,1_9\,1_9$ | 9 + 2 + 9 + 9 = 29 |
| 2. மட்ய தாளம் | திஸ்ர ஜாதி | $1_3\,0\,1_3$ | 3 + 2 + 3 = 08 |
| | சதுஸ்ர ஜாதி | $1_4\,0\,1_4$ | 4+ 2 + 4 = 10 |
| | கண்ட ஜாதி | $1_5\,0\,1_5$ | 5 + 2 + 5 = 12 |
| | மிஸ்ர ஜாதி | $1_7\,0\,1_7$ | 7 + 2 + 7 = 16 |
| | சங்கீரண ஜாதி | $1_9\,0\,1_9$ | 9 + 2 + 9 = 20 |
| 3. ரூபக தாளம் | திஸ்ர ஜாதி | $0\,1_3$ | 2 + 3 = 05 |
| | சதுஸ்ர ஜாதி | $0\,1_4$ | 2 + 4 = 06 |
| | கண்ட ஜாதி | $0\,1_5$ | 2 + 5 = 07 |
| | மிஸ்ர ஜாதி | $0\,1_7$ | 2 + 7 = 09 |
| | சங்கீரண ஜாதி | $0\,1_9$ | 2 + 9 = 11 |
| 4. ஜம்பை தாளம் | திஸ்ர ஜாதி | $1_3\cup 0$ | 3 +1 + 2 = 06 |
| | சதுஸ்ர ஜாதி | $1_4\cup 0$ | 4+ 1 + 2 = 07 |
| | கண்ட ஜாதி | $1_5\cup 0$ | 5 + 1 + 2 = 08 |
| | மிஸ்ர ஜாதி | $1_7\cup 0$ | 7 + 1+ 2 = 10 |
| | சங்கீரண ஜாதி | $1_9\cup 0$ | 9 + 1 + 2 = 12 |
| 5. திரிபுடை தாளம் | திஸ்ர ஜாதி | $1_3\,0\,0$ | 3 + 2 + 2 = 07 |
| | சதுஸ்ர ஜாதி | $1_4\,0\,0$ | 4+ 2 + 2 = 08 |
| | கண்ட ஜாதி | $1_5\,0\,0$ | 5 + 2 +2 = 09 |
| | மிஸ்ர ஜாதி | $1_7\,0\,0$ | 7 + 2 + 2 = 11 |
| | சங்கீரண ஜாதி | $1_9\,0\,0$ | 9 + 2 + 2 = 13 |
| 6. துருவ தாளம் | திஸ்ர ஜாதி | $1_3\,1_3\,0\,0$ | 3 + 3 + 2 + 2 = 10 |
| | சதுஸ்ர ஜாதி | $1_4\,1_4\,0\,0$ | 4+ 4 + 2 + 2 = 12 |
| | கண்ட ஜாதி | $1_5\,1_5\,0\,0$ | 5 + 5 + 2 + 2 = 14 |
| | மிஸ்ர ஜாதி | $1_7\,1_7\,0\,0$ | 7 + 7 + 2 + 2 = 18 |
| | சங்கீரண ஜாதி | $1_9\,1_9\,0\,0$ | 9 + 9 + 2 + 2 = 22 |
| 7. ஏக தாளம் | திஸ்ர ஜாதி | $1_3$ | 03 |
| | சதுஸ்ர ஜாதி | $1_4$ | 04 |
| | கண்ட ஜாதி | $1_5$ | 05 |
| | மிஸ்ர ஜாதி | $1_7$ | 07 |
| | சங்கீரண ஜாதி | $1_9$ | 09 |

**தேர்ச்சி 4.0** : பரத நாட்டியம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2** : தேவ நவக்ரக, ஜாதி, தஸாவதார, பாந்தவ்ய ஹஸ்தங்களுக்குரிய முத்திரைகளையும் அவற்றின் பாத நிலையையும் அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 4.2** : பாந்தவ்ய ஹஸ்தங்களையும் அவற்றிற்குரிய, கை முத்திரைகளையும் பாத நிலைகளையும் அறிந்து கூறுவோம்.

**நேரம்** : 02 மணித்தியாலங்கள் (03 பாடவேளைகள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- ஒளிப்பதிவு நாடாக்கள், பாந்தவ்ய (உறவினர்) ஹஸ்தங்கள் எழுதப்பட்ட அட்டவணை.
- பாந்தவ்ய ஹஸ்தங்களின் வரைபடங்கள்.
- செயற்பாட்டுப்படிவம் 4.2.2 பின்னிணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

**படி 4.2.1**

- பாந்தவ்ய ஹஸ்தங்களின் வரைபடங்கள் அவற்றின் ஹஸ்தங்கள் எழுதப்பட்ட அட்டவணை என்பவற்றினைக் காட்சிப்படுத்தல்.
- காட்சிப்படுத்திய படங்களில் உள்ள பாந்தவ்ய ஹஸ்தங்கள் (உறவுகள்) அபிநயிக்கப் பிரயோகிக்கும் ஹஸ்தங்களைக் கூறி கலந்துரையாடலை மேற்கொள்ளல்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளல்.

> - பாந்தவ்ய ஹஸ்தங்கள் உறவு முறைகளைக் குறிப்பன.
> - பாந்தவ்ய ஹஸ்தங்களின் வகைகள்.
> - இவை ஒவ்வொன்றிற்கும் பிரயோகிக்கப்படும் வலது இடது கைகளுக்குரிய முத்திரைகளின் விளக்கம். (பின்னிணைப்பு)

(30 நிமிடங்கள்)

**படி 4.2.2** :

- வகுப்பிலுள்ள மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை வழங்குங்கள்.
- செயற்பத்திரத்திலுள்ள அறிவுரைகளுக்கமைய செயற்படுகின்றனரா என உறுதிப்படுத்துங்கள்.

(50 நிமிடங்கள்)

**படி 4.2.3** :

- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்திற்கு அளித்த பதில்களை முன்வைக்கச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- ஒரு குழு முன்வைத்த விடயத்தை ஏனைய குழுவினரும் அவதானித்து கருத்துக்களைக் கூற இடமளியுங்கள்.
- மாணவர் முன்வைத்தவற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை மீளவலியுறுத் துங்கள்.

> - பாந்தவ்யம் என்பது தாய், தந்தை, தம்பதிகள், மாமன், மாமி போன்ற உறவு முறைகளாகும்.
> - இவ்வுறவு முறைகளை அபிநயிக்க ஹஸ்தங்கள் பயன்படுகின்றன.
> - பாந்தவ்ய ஹஸ்தங்கள் உறவுகளையொட்டி வகைப்படுத்தப்பட்டுள்ளன.

(40 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. பாந்தவ்ய ஹஸ்தம் என்றால் என்ன என்பதனைக் குறிப்பிடுவார்.
2. உறவு முறைகளை அறிந்து கூறுவார்.
3. ஒவ்வொரு உறவு முறைகளுக்குரிய ஹஸ்தங்களைக் குறிப்பிடுவார்.

### செயற்பத்திரம் 4.2.2

- சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குங்கள்.

> 1. பாந்தவ்ய ஹஸ்தங்கள் எவற்றிற்குரிய ஹஸ்தங்கள் எனக் குறிப்பிடுக.
> 2. பாந்தவ்ய ஹஸ்தங்கள் மொத்தம் எத்தனை?
> 3. தம்பதியினரை அபிநயிக்கும் வலது, இடது ஹஸ்தங்களைத் தருக.
> 4. மைத்துணனுக்குரிய ஹஸ்தங்களைத் தருக.
> 5. சக்களத்தியினை அபிநயிக்கும் ஹஸ்தங்களைத் தருக.

## பாந்தவ்ய ஹஸ்தங்கள்

01. தம்பதி :- வலக்கையில் மிருகஷீர்ச முத்திரையையும் இடக்கையில் ஷிகர முத்திரையையும் மார்புக்கு முன்னால் பிடித்தல்.

02. கணவன் :- இருகைகளிலும் ஹம்ஸாஸ்யம் பிடித்து மாங்கல்யம் கட்டுவது போல் அபிநயித்து வலது கையில் சிகரம் மார்பின் முன் பிடித்தல்.

03. மனைவி :- இரு கைகளிலும் ஹம்ஸாஸ்யம் பிடித்து மாங்கல்யம் கட்டுவது போல் காட்டி இடது கையில் மிருகஷீசம் நாட்டியாரம்பத்தில் பிடித்தல் வலது கை இடுப்பில்.

04. தாயார் :- இடக்கையில் அர்த்தசந்திர ஹஸ்தம் பிடித்து உள்ளங்கை ஆகாயத்தைப் பார்க்க தொப்புளுக்கு சமீபமாக வைத்துக் கொண்ட வலக்கையில் முகுளம் பிடித்து இடது உள்ளங்கையில் வைத்து அலப்தமமாக்கி பின்பு இடது கையில் மிருகஷீர்ஷ ஹஸ்தத்தை நாட்டியாரம்பத்தில் பிடித்தல்.

05. தந்தை :- இடக்கை அர்த்த சந்திரனால் வயிற்றைத் தடவிக்காட்டி, இடக்கை அர்த்த சந்திரனுக்கு மேல் முகுளம் வைத்து அலபத்மமாக்கி வலது சிகரத்தை மார்புக்கு நேராக பிடித்தல்.

06. மாமி :- இருகைகளிலும் ஹம்ஸாஸ்யம் பிடித்து மாங்கல்யம் கட்டுவது போல் காட்டி வலது கையில் முகுளம் வைத்து (தொப்புள் அருகில்) அலபத்மமாக்கி பின் இடது கையில் மிருகஷீர்ஷத்தை நாட்டி யாரம்பத்தில் பிடித்தல்.

07. மாமன் :- இரண்டு கைகளாலும் ஹம்ஸாசியம் பிடித்து மாங்கல்யம் கட்டுவது போல் காட்டி வலது முகுளத்தை, தொப்புளுக்கு அருகில் பிடித்து அலபத்மமாக விரித்து வலது கை சிகரத்தை மார்புக்கு நேரே பிடித்தல்.

08. மைத்துனர் :- இடது கையில் சிகரம் பிடித்து அதன் பக்கத்தில் வலக்கை கர்தரீமுகம் பிடித்து சிறிது அசைத்தல்.

09. நாத்தனார் :- மைத்துனனுக்கு அபிநயிப்பது போல் செய்துகாட்டி வலது கையில் மிருகஷீர்ஷம் பிடித்தல்.

10. அண்ணன் தம்பி:- இரண்டு கைகளிலும் மயூரம் பிடித்து வலது கை மார்புக்கு முன்னால் மேல் நோக்கியும் இடதுகை கீழேயும் பிடித்தல். (கீழ்நோக்கியபடி)

11. மருமகள் :- அண்ணன் தம்பிக்குரிய அபிநய ஹஸ்தங்களைப் பிடித்து பின் இடது கையால் மிருகஷீர்ஷம் பிடித்தல்.

12. சக்களத்தி :- பாசக்கைகளை மார்புக்கு நேரே பிடித்துப் பின் இரு கைகளிலும் மிருகஷீர்ஷ முத்திரையை நாட்டியாரம்பத்தில் பிடித்தல்.

**தேர்ச்சி 4.0** : பரத நாட்டியம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.3** : புஷ்பாஞ்சலி அரங்க தேவதா ஸ்துதி நாட்டியக் கிரமம், பாத்திர அந்தப் பிராணன், கிங்கிணி ஆகிய வற்றிற்குரிய சுலோகங்களையும் கருத்துக்களையும் கூறுவார்.

**செயற்பாடு 4.3** : பாத்திர அந்தப் பிராணன். பகிப் பிராணன் ஆகிய வற்றிற்குரிய இலட்சணங்களை அறியும் பொருட்டு அவற்றின் சுலோகங்களையும் கருத்துக்களையும் கற்றுக் கொள்வோம்.

**நேரம்** : 02 மணித்தியாலங்கள் (03 பாடவேளைகள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- சுலோகங்கள் எழுதப்பட்ட அட்டை.
- சுலோகங்கள் பதியப்பட்ட ஒலி நாடா, ஒலிப் பதிவுக் கருவி.
- செயற்பத்திரம் 4.3.2 பின்னிணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

**படி 4.3.1**

- சுலோகங்கள் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- பாத்திரப் பிராணன்கள் பற்றிய சுலோகங்களை ஆசிரியர் கூறுதல்.
- அவற்றின் முக்கியத்துவத்தை மாணவர்களுக்கு எடுத்துரைத்தல்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

- பாத்திரப் பிராணன் என்பதன் விளக்கம்.
- பாத்திரப் பகிப் பிராணன் என்பதன் விளக்கம்.
- பாத்திரப் பிராணன் பத்து என்பதைக் குறிப்பிடல்.
- மேற்கூறிய இரு சுலோகங்களின் கருத்துக்களை விளக்குதல்.
- பாத்திரப் பிராணன் சுலோகத்தினை ஆசிரியர் சரியாக உச்சரித்துக் கூற மாணவர்கள் தொடர்ந்து கூறல்.
- பாத்திரப் பகிப் பிராணன் சுலோகத்தை உச்சரிப்புப் பிழையின்றி ஆசிரியர் கூற மாணவர்கள் பின்பற்றிக் கூறல்.

(30 நிமிடங்கள்)

**படி 4.3.2** :
- வகுப்பிலுள்ள மாணவர்களை எண்ணிக்கைக்கேற்ப இரு குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தை வழங்குங்கள்.
- ஒரு குழு முன்வைத்த விடயத்தை மற்றைய குழுவும் அவதானித்து அவ்வாறே செயற்படு கின்றனரா என உறுதிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்திலுள்ள அறிவுறுத்தல்களுக்கமையச் செயற்பாட்டில் ஈடுபடுகின்றனரா என உறுதிப்படுத்துங்கள்.

(50 நிமிடங்கள்)

**படி 4.3.3** :
- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப் பிக்கும் போது மற்றைய குழு அதனை அவதானித் துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- குழுக்களின் பெறுபேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள் ளுங்கள்.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்துங்கள்.

- பாத்திரப் பிராணன் என்பது நடனமாடும் பெண்ணுக்கு இருக்க வேண்டிய முக்கிய குணங்கள் ஆகும்.
- பாத்திர பகிப் பிராணன் என்பது பக்க வாத்தியத்தைக் குறிக்கின்றது.
- பாத்திர பிராணன்கள் பத்து வகைப்படும்.
- விரைவு, உறுதி, வடிவம், சுற்றுதல், கண் பார்வை. களைப்பின்மை, புத்திக்கூர்மை, ஆர்வம், துல்லியமான பேச்சு, பாடும் ஆற்றல் ஆகிய பத்தும் பாத்திரப் பிராணன்களாகும்.
- பாத்திரத்தின் பகிப் பிராணன் ஒன்பது வகைப்படும்.
- நாதமுடைய மத்தளம், தாளம், குழல், கானம், வீணை, சுருதி, கிண்கிணி, நட்டுவனார் ஆகியன பாத்திரத்தின் பகிப் பிராணன் களாகும்.

(40 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. பாத்திரப் பிராணன்களின் வகைகளைக் குறிப்பிடுவார்.
2. பாத்திரப் பிராணன்களின் பெயர்களைக் கூறுவார்.
3. பாத்திரப் பிராணன்கள் எவை எனக் குறிப்பிடுவார்.
4. பாத்திரப் பிராணன்களைக் கூறுவார்.
5. பாத்திர பகிப் பிராணன்களின் பெயர்களைக் கூறுவார்.

## செயற்பத்திரம் 4.3.2 (I)

- சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை பின்னிணைப்புடன் வழங்குங்கள்.

| | |
|---|---|
| 1. | பாத்திர பிராணன்கள் எத்தனை வகைப்படும்? |
| 2. | பாத்திரப் பிராணன்களைப் பட்டியல்படுத்துக. |
| 3. | பாத்திரப் பிராணன்களுக்குரிய சுலோகத்தை உச்சரிப்பு பிழையின்றிக் கூறுக. |
| 4. | பாத்திர பகிப் பிராணன்களை எழுத்துப் பிழையின்றி எழுதுக. |

## செயற்பத்திரம் 4.3.2 (II)

| | |
|---|---|
| 1. | பாத்திர பகிப் பிராணன்கள் எவை? |
| 2. | இதற்குரிய பாடலைக் கூறுக. |
| 3. | பாடலை எழுத்துப் பிழையின்றி எழுதுக. |
| 4. | பாத்திர பகிப் பிராணன்கள் எதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. |

**பின்னிணைப்பு 4.3.2**

## பாத்திரப் பிராணன்

சுலோகம் :-

ஜவஹ் ஸ்திரத்வம் ரேகாச பிரமரீ திருஷ்டிர் அஷ்ரமஹ/
மேதா சிரத்தா வசோ கீதம் பாத்ரப் பிராணா தஷஸ் ஸ்ம்ருதாஹ//

கருத்து :-

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (01) | ஜவஹ | :- | வேகம் | (06) | அஷ்ரமஹ | :- | களைப்பின்மை |
| (02) | ஸ்திரத்வம் | :- | உறுதி | (07) | மேதா | :- | புத்திக்கூர்மை |
| (03) | ரேகா | :- | வடிவமைப்பு | (08) | சிரத்தா | :- | ஆர்வம் |
| (04) | பிரமரீ | :- | சுற்றி ஆடுதல் | (09) | வசோ | :- | துல்லியமான உச்சரிப்பு |
| (05) | திருஷ்டி | :- | கண் பார்வை | (10) | கீதம் | :- | பாடும் ஆற்றல் |

மேற்கூறிய பத்து குணங்களும் ஆடல் மகளுக்கு இருக்க வேண்டிய பிராணன்களாகும். (இப் பத்தும் 'மகாபாரத சூடாமணி' என்னும் நாட்டிய நூலில் தமிழ் மொழியில் தரப்பட்டுள்ளன)

## பாத்திர பகிப் பிராணன்

**பாடல்**

நாதமுள மத்தளம், தாளம், சீரங்
குழல், கானம் நவிலும் வீணை
பேதமிலாச் சுதியுடனே கிண்கிணியும்
கீதமிகப் பெரிதாய் வாழும்
சாதுவாம் நட்டுவனும், நிருத்தம் செய்
மாதருக்குத் தகைமை யாக
ஓதுபகிப் பிராணனென்னும் மருப்பினைத்
திகழ்ந்தன முடைய மாதே

- (மகாபரத சூடாமணி) -

மத்தளம், தாளம், குழல், வீணை, சுருதி, கிண்கிணி, கீதம் நட்டுவன் ஆகிய ஆகிய எட்டும் நர்த்தகியின் பகிப்பிராணன்களாம்.

**தேர்ச்சி 5.0** : பரத நாட்டியம், கிராமிய நடனம் என்பன பற்றியும் இலங்கையின் தேசிய கலாசார நடனங்களின் வரலாற்றுப் பின்னணி பற்றியும், இவற்றின் இசை பற்றிய விளக்கங்களையும் அறிந்து வெளிப் படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 5.1** : இலங்கையின் பாரம்பரிய நடனங்களான பரத நாட்டியம், கண்டிய நடனம், றுஹூ"ணு நடனம், சபரகமுவ நடனம் ஆகியவற்றின் கலாசார பின்னணியை அறிந்து விளக்குவார்.

**செயற்பாடு 5.1** : இலங்கையின் பாரம்பரிய நடனங்களில் ஒன்றான சபரகமுவ நடனத்தின் தோற்றம், ஆட்ட முறை, ஆடை அணிகள், ஒப்பனை, பக்கவாத்தியம் என்பன பற்றிக் கற்போம்.

**நேரம்** : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- சபரகமுவ நடனம் சம்பந்தமான படங்கள்.
- இதற்கு வாசிக்கப்படும் பக்கவாத்தியங்களின் படங்கள்.
- ஒலி, ஒளிநாடா, தொலைக்காட்சிக் கருவி, வீடியோ பதிகருவி.
- செயற்பத்திரம் 5.1.2 பின்னிணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

**படி 5.1.1**

- சபரகமுவ நடனம் பற்றிய படங்களைக் காட்சிப் படுத்தல்.
- சிங்கள மக்களின் நடனங்களைப் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடல்.
- சபரகமுவ நடனம் பற்றி மாணவர்கள் அறிந்த வற்றைக் கேட்டறிதல்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகை யில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

> - சபரகமுவ நடனத்தின் தோற்றமும், வளர்ச்சியும்.
> - இரத்தினபுரி பிரதேசத்தைச் சூழ உள்ள இடங்களில் இந்நடனம் காணப்படுகிறது.
> - இந்நடனத்தின் அமைப்பு முறை.
> - முன்பு இதற்கிருந்த பெயர் டிக்டீ நட்டும்.
> - இந்நடனத்திற்குரிய இசை, பக்க வாத்தியங்கள்.
> - ஒப்பனை, ஆடை, அலங்காரம்
> - ஆடப்படும் சந்தர்ப்பங்கள்.

(10 நிமிடங்கள்)

**படி 5.1.2** :

- சபரகமுவ நடனம் பற்றிய விவரணத்தை மாணவர்களுக்கு வழங்குங்கள்.
- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பத்திரத்தைக் கொடுங்கள்.
- மாணவர்கள் செயற்பாட்டில் ஈடுபடுகின்றார்களா என அவதானித்து, ஆலோசனை வழங்குங்கள்.
- ஒரு குழு முன்வைத்தவற்றை மற்றைய குழுவினரும் அவதானித்து, செயற்பாட்டில் ஈடுபடுகின்றனரா என உறுதிப்படுத்துங்கள்.

(20 நிமிடங்கள்)

**படி 5.1.3** :

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- ஒரு குழு முன்வைத்ததை ஏனைய குழுவினரும் அவதானித்துக் கூற இடமளியுங்கள்.
- மாணவர்கள் முன்வைத்ததை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுங்கள்.

> - சபரகமுவ நடனத்தில் முதலில் ஆடப்படும் நிகழ்ச்சி 'ஆரத்தி அம்மா'
> - இலங்கையில் வாழும் சிங்கள மக்களின் மூவகை சாஸ்திரிய நடனங்களில் இதுவும் ஒன்றாகும்.
> - சபரகமுவ நடனம் பிரசித்தி பெற்ற இடங்கள். பதுளை, கதிர்காமம், பலாங்கொட, அழுத்நுவர தேவாலயம், அம்பெக தேவாலயம், சமன் தேவாலயம்
> - நாட்டிய நிலை
>   ஆயதம் எனும் பாத நிலை, கைகளில் அர்த்த சந்திர முத்திரை பாவிக்கப்படும்.
> - நாட்டிய உருப்படிகள்
>   அலங்கார மாத்திராபத, கலாசம், சுறல், தேடுவாய், கொடு பசின, அசுர யக்கம.
> - இந்நடனத்திற்கு வாசிக்கப்படும் தோற்கருவி தவுல, இதில் 'மகுள் பெரய' வாசிக்கப்படும்.
> - ஆடை அணிகலன்கள்
> - இதன் சிறப்பம்சங்கள் 'சுறள்'என்னும் நிகழ்ச்சியும், ஸ்வஸ்திக நிலையில் கால்களை வைத்து ஊஞ்சல் ஆடுவது போல் மாறி மாறி அசைத்தல்.

- இந் நடனத்தில் பிரசித்தி பெற்ற கலைஞர்கள் கிரிம்பொஹாமி நிலமே, பொடி மஹத்தயா, குணசேன ராஜபக்ஷ விக்ரமசிங்க பண்டார, வி. தனவர்த்தன.
- இந் நடனத்தில் காணப்படும் நிருத்திய அம்சங்கள் தேவொல் கொடுபசின, அசுர யக்கம.
- இந் நடனம் பேய் பிசாசுகளுக்கும் தெய்வங் களுக்கும் என இரு பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது.
- இதற்குரிய பாடல்களும் இரு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
- இந் நடனத்தில் காணப்படும் முக்கிய நிகழ்ச்சிகள் அலங்கார மாத்திராபத கலாசாரம் என்பன.
- இந் நடனத்தில் முதலில் ஆடப்படும் நிகழ்ச்சி 'ஆரத்தி அம்மா'

(10 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. சிங்கள மக்களின் பாரம்பரிய கலாசாரங்களை வெளிப்படுத்தும் சாஸ்திரிய நடனங்களில் சபரகமுவ நடனமும் ஒன்றாகும் என்பதை விளக்குவார்.
2. சபரகமுவ நடனம் இலங்கையில் பிரசித்தி பெற்று விளங்கும் இடங்களைக் குறிப்பிடுவார்.
3. சபரகமுவ நடனத்தின் நாட்டிய அமைப்பு, இசை, ஒப்பனை, பக்கவாத்தியங்கள் பற்றி அறிந்து குறிப்பிடுவார்.
4. சபரகமுவ நடனம் பற்றிய தகவல்களைத் தரும் குறிப்புகள், படங்கள் என்பனவற்றைச் சேகரிப்பார்.
5. சபரகமுவ நடனமானது எப்பிரதேசத்திற்குரிய நடனம் என்பதைக் கூறுவார்.
6. சபரகமுவ நடனத்தைப் பார்த்து நயந்தவற்றை வெளிப்படுத்துவார்.

## செயற்பத்திரம் 5.1.2 (I)

- சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குங்கள்.

1. சபரகமுவ நடனம் எவ்வின மக்களின் சாஸ்திரிய நடனமாகக் கருதப்படுகிறது?
2. சபரகமுவ நடனத்தில் முதலில் ஆடப்படும் நடனம் யாது?
3. இந் நடனத்தின் சிறப்பம்சங்கள் யாவை?
4. இதில் பயன்படுத்தப்படும் முத்திரை யாது?

## செயற்பத்திரம் 5.1.2 (II)

- சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குங்கள்.

1. சபரகமுவ நடனத்தில் பிரசித்தி பெற்ற கலைஞர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
2. இந் நடனத்திற்குப் பயன்படுத்தும் தோற்கருவி யாது?
3. சிங்கள மக்களின் பாரம்பரிய நடனங்களில் ஒன்றினைக் கூறுக.
4. சபரகமுவ நடனத்தில் காணப்படும் முக்கிய நிகழ்ச்சிகள் சிலவற்றைத் தருக.

**இணைப்பு**

## சபரகமுவ நட்டும் சம்பிரதாய
## (சபரகமுவ நடன சம்பிரதாயம்)

சபரகமுவ மாவட்டத்தில் ஆதிவாசிகளால் ஆடப்பட்ட இந்நடன வகையானது, இரத்தினபுரி பிரதேசத்தைச் சூழக் காணப்படுகிறது. இப்பிரதேசத்தில் அமைந்துள்ள சமன் தேவாலயத்தில் "மாணிக்க மகா கெல்ல" என்றழைக்கப்படும் பெண்களால் "டிக்டீ நட்டும" என்னும் நடனம் கோவிலின் உள் மண்டபத்தில் ஆடப்பட்டு வந்தது. தமிழ் நாட்டு இந்துக் கோவில்களில் இறைவனுக்கு நிருத்யோபசாரம் செய்வதற்கென "மாணிக்கத்தார்" என்றழைக்கப்பட்ட தேவதாசிகள் அமர்த்தப்பட்டிருந்ததைப் போல் சமன் தேவாலயத்தில் அன்றும் இன்றும் "மாணிக்கத்தார்" என்றழைக்கப்படும் பெண்களால் இந்நடனம் ஆடப்பட்டு வருகிறது.

சபரகமுவ நடனத்திற்கு முன்பு இருந்த பெயர் "டிக்டீ நட்டும" என்பதாகும். இந் நடனமானது கோட்டே அரசனான பரகும்ப ராஜாவின் காலத்தில் வழக்கிலிருந்தது. இதன் ஆட்டமுறை கண்டிய நடனத்திலும் பார்க்கக் கூடுதலாகக் கால்களை அகட்டி வைத்த நிலையிலே ஆடப்படுகிறது.

இந்நடனத்தில் கைகள் சற்று ஒடுங்கிய நிலையில் வைக்கப்படும். கைகளில் அர்த்த சந்திர முத்திரையில் ஒரு கை உள்நோக்கியும், மறு கை வெளிநோக்கியும், ஆயத நிலையில் கைகளை மாறி மாறி அசைத்து ஆடுவதாகும். இதில் காணப்படும் முக்கிய நிகழ்ச்சிகள் அலங்கார மாத்திராபத, கலாசம் என்பன. 'சுறல்' என்னும் நிகழ்ச்சியும் சிறந்த பயிற்சி பெற்றவர்களால் மட்டுமே ஆடப்படும். இதில் காணப்படும் மற்றுமோர் சிறப்பம்சம் என்னவெனில் கால்களை ஸ்வஸ்திக நிலையில் வைத்து ஊஞ்சல் ஆடுவது போல் மாறி மாறி அசைத்தலாகும்.


இந் நடனத்தில் நிருத்திய அம்சங்களும் உண்டு. எடுத்துக்காட்டாக தேவொல் கொடுபசின, அசுர யக்கம ஆகிய நடனங்கள் பகன் மடுவ தேவாலயத்தின் மூலம் வந்துள்ளன. இந்நடனம் பேய் பிசாசுகளுக்கும், தெய்வங்களுக்கும் என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பாடல்களும் இரு பிரிவினருக்கும் வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

இந் நடனத்திற்கு வாசிக்கப்படும் பிரதான தோற்கருவி 'தவுல' என்னும் வாத்தியமாகும். இத்தாள வாத்தியம் சாந்தி கர்ம, பலி ஆகியவற்றிற்கு வாசிக்கப்படுகிறது. இவ்வாத்தியத்தில் "மங்கல தவுல வாதனய" என்று கூறப்படும் மகுள் பெர (Magul Bera) வாசிக்கப்படும். "மங்கல பெர வாதனய" என்பது திருமண வீடு, மற்றும் சுப காரியங்கள் நடக்கும் போதும் வாசிக்கப்படும்.

இப்படி இதனை வாசிக்கும் போது "மகுள் பெர" (Magul Bera) என்று கூறுவார்கள். கித்துள் மரத்தினாற் செய்யப்பட்டு, தடித்த நூலினால் இறுக்கப்பட்டுள்ளது. இவ்வாத்தியத்தில் வாருக்குப் பதிலாக நூல் பாவிக்கப்படுகிறது. 12 அங்குல நீளமும் 45 அங்குல சுற்றளவும் உடையதாக உள்ள இவ்வாத்தியத்தை வாசிப்பது சற்றுக் கடினமானது.

சபரகமுவ நடனம், பதுளை, கதிர்காமம், பலாங்கொட, அமுத்துவர, தேவாலயம் ஆகிய இடங்களில் பெரஹர காலத்தில் மட்டுமே ஆடப்படும். இந் நடனத்தைப் பெண்கள் மட்டுமே ஆடினர். அம்பெக தேவாலயத்தில் இந்நடனம் இன்றும் ஆடப்பட்டு வருகிறது. முதலில் 'ஆரத்தி அம்மா' என்னும் நிகழ்ச்சியுடன் இது ஆரம்பமாகிறது.

## சபரகமுவ நட்டும் சம்பிரதாயத்திற்கு வாசிக்கப்படும் முக்கிய லய வாத்தியம் - தவுல




வாத்தியத்தின் பாகங்கள்

1. தவுல கத :- தவுல வாத்தியத்தின் உடற்பாகம்
2. தவுல் வரய (தவுல் லணுவ) :- தவுலவின் கயிறு
3. இல்லம் :- பித்தளை வளையம்
4. கட்ய (Gataya) :- வளையம்
5. தவுல் தட்டுவ :- தொப்பி
6. லணுவ :- கயிறு
7. கைபுடு வளல்ல :- தொப்பியையும் உடற்பாகத்தையும் இணைக்கும் வளையம்
8. கடுப்புவ :- தடி

சபரகமுவ நட்டும் (நடன) சம்பிரதாயக் கலைஞர்களுள், கிரிம் பொஹாமி நிலமே, பொடி மஹத்தயா, குணசேன ராஜபக்ஷ, விக்ரமசிங்க பண்டார, வி. தனவர்த்தன என்பவரும் குறிப்பிடற்படுவர். நடன பாட செயற்றிட்ட அதிகாரியாக மகரகம, தேசிய கல்வி நிறுவகத்தைச் சார்ந்த அழகியல் கல்வித்துறையில் பணியாற்றி வருகிறார்.

## சபரகமுவ வண்ணம்

உடறட்ட சபரகமுவ "வண்ணம்" நடனங்களில் ஒருமைப்பாட்டினைக் காண முடிகிறது. பெயரளவிலும் கூட பத்து வகை "வண்ணம்" நடனங்களில் ஒற்றுமை காணப்படுகிறது. சபரகமுவ "வண்ணம்" நடனங்களில் பெயரளவில் இருபத்து நான்கு வகைகளைக் கொண்டதாய் இருந்தது. இருப்பினும் இவற்றில் பதினெட்டு வகைகளுக்கு மட்டுமே கவிதைகள் இயற்றப்பட்டிருக்கின்றன என்பது தெரிய வருகிறது.

தவுள் பதய, தானம கவிய, மாத்ரய, கலாசம, தீருமானம், அடவ்வ ஆகியவற்றில் சபரகமுவ வண்ணம் நடனங்கள் சம்பூர்ணமானவையாகக் காணப்படுகின்றன. உடறட்ட (நடனத்தில்) நட்டுமவில் உள்ளது போல இந்நடன வகையிலும் பதினென் வகையான வண்ணம் நடனங்கள் காணப்படுகின்றன. அவை அணிலா வண்ணம் அணியின் அசைவுகளைக் குறிப்பது "கதம்ப பக்ஷ " வண்ணம் காட்டுக் கோழியின் அசைவுகளைப் பிரதிபலிப்பது. "குதிரடி வண்ணம்" "கிந்துரா வண்ணம்", "கிரளா வண்ணம்", "ஆனந்த வண்ணம்", "முசலடி வண்ணம்", "காஹுக வண்ணம்", "நாக வண்ணம்", "உதார வண்ணம்", "விராடி வண்ணம்", "மேக வண்ணம்", "உக்குஸா வண்ணம்", "கிரளா வண்ணம்", "கொஹூவா வண்ணம்", "ஸேரம வண்ணம்" "திஸர வண்ணம்", "மண்டுக வண்ணம்" என்பனவாம். இவை முறையே அணில், காட்டுக் கோழி, குதிரை, பெண்முகமும் மீன் வாலும் கொண்ட கின்னரா, பாம்பு போன்ற மீன், முயல் சங்கு, நாக பாம்பு, மயில், பெருமிதம் கொண்ட அரசன், பட்டாளம், சுழல் காற்று, கழுகு, பறவை, குயில், கறுப்பு நிற அன்னம் (சிறியது), அன்னம் தவளை ஆகியவற்றின் அசைவுகளை நடனம் மூலம் பிரதிபலிக்கும் நிகழ்ச்சிகளாகும்.

**தேர்ச்சி 1.0** : பரத நாட்டிய நிகழ்ச்சிகளையும் கிராமிய நடன நிகழ்ச்சிகளையும் பார்த்து தாம் நயந்தவற்றை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 1.2** : பரத நாட்டியம் மற்றும் கிராமிய நடன நிகழ்ச்சிகளையும், பாடசாலை கலைவிழாக்களில் இடம்பெறும் நடன நிகழ்ச்சிகளையும் இனங்கண்டு இரசித்தவற்றை வெளிப்படுத்துவார்.

**செயற்பாடு 1.2** : ஏனைய கலைவடிவங்களை இரசிப்போம்.

**நேரம்** : 1 மணித்தியாலம் 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- நாட்டியப் படங்கள் ஒட்டிய அட்டைகள்
- ஒலிப்பதிவு நாடா, ஒளிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி
- வீடியோ பெட்டிகை பதிகருவி
- செயற்பத்திரம் 1.2.2

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

**படி 1.2.1**

- பரத நாட்டியம், மற்றும் கிராமிய நடன நிகழ்ச்சிகளையும், பாடசாலைக் கலைவிழாக்களில் இடம் பெறும் நடன நிகழ்ச்சிகளையும் தொலைக் காட்சியில் பார்த்தோ அல்லது நேரில் பார்த்தோ தாம் இரசித்த வற்றைக் கூற வழிப்படுத்துங்கள்.
- பின்வரும் விடயங்கள் வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

> - நிகழ்ச்சிகள் தொடர்பான மாணவர்களின் சுய அபிப்பிராயங்களை வெளிக்கொணர்தல்.
> - மாணவர்கள் நயந்தவற்றைக் கூறல்.
> - நடன நிகழ்ச்சிகளில் நயக்கக்கூடிய அம்சங்கள் முகபாவனை, ஆடை அணிகலன்கள், நடனத்தின் பொருத்தம், பாத்திர ஒப்பனை, பக்கவாத்தியமும் அதன் ஒத்திசைவும் பற்றிக் கூறுதல்.
> - ஆசிரியர் மாணவர்களின் கலை ஆர்வத்தை ஊட்டி விமர்சனங்களைப் பலரும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் வழிநடத்தல்.

(20 நிமிடங்கள்)

**படி 1.2.2** :

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பத்திரத்தைக் கொடுத்து அதனைப் பூரணப்படுத்தும்படி செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.

- தேவையானவிடத்து போதுமான வழிகாட்டல்களை வழங்கி நேர்த்தியாகச் செய்ய இடமளியுங்கள்.
- குழுவில் உள்ள ஒவ்வொருவரும் செயற்பாட்டில் பங்குபற்றுவதை உறுதிப்படுத்துங்கள்.

(30 நிமிடங்கள்)

**படி 1.2.3** :

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளை முன்வைக்கச் சந்தர்ப்பத்தை வழங்குங்கள்.
- ஒரு குழு சமர்ப்பித்தவற்றை ஏனைய குழுவினரும் அவதானித்து தமது கருத்துக்களைக் கூற இடமளியுங்கள்.
- மாணவர்களின் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மீளவும் கலந்துரையாடுங்கள்.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீளவும் வலியுறுத்துங்கள்.

> - மாணவர்கள் பரத நாட்டிய நிகழ்ச்சிகளையும் கிராமிய நடன நிகழ்ச்சிகளையும் ஏனைய கலைவடிவங்களையும் இனங்காண்பர்.
> - கிராமிய நடனங்களில் இடம்பெற்ற ஆடல், பாடல், ஒப்பனை, ஆடை அணிகலன்கள், பாவனை, பாத்திரப் பொருத்தம்.
> - பரத நாட்டிய நிகழ்ச்சிகளில் இடம்பெற்ற ஆடல், பாடல், ஒப்பனை, ஆடை அணிகலன் கள், பாவனை, பாத்திரப் பொருத்தம்.
> - இவற்றுக்குப் பயன்படுத்தப்பட்ட வெவ்வேறு பக்கவாத்தியங்கள்.
> - நயத்தற்குரிய அம்சங்கள்.

(30 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. தாம் கண்டுகளித்த பரத நாட்டியம் மற்றும் கிராமிய நடனங்களையும் ஏனைய கலை வடிவங்களையும் பட்டியற்படுத்துவார்.
2. அவற்றுள் ஒப்பனை பற்றி நயந்தவற்றைக் கூறுவார்.
3. ஆடல், பாடல், பாத்திரம், உடை, அணிகலன்கள், பக்கவாத்தியம் பற்றிக் கூறுவார்.
4. தாம் நயந்தவற்றை ஆடிக் காட்டுவார்.
5. தாம் இரசித்தமைக்கான காரணங்களையும் குறிப்பிடுவார்.

## செயற்பத்திரம் 1.2.2

- சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

1. பரத நாட்டிய நிகழ்ச்சிகளையும், கிராமிய நடன நிகழ்ச்சிகளையும், ஏனைய கலை வடிவங்களையும் பட்டியற்படுத்துக.
2. நீங்கள் அவதானித்து இரசித்த பாடல், ஒப்பனை, ஆடை பற்றிக் கூறுக.
3. வேறுபட்ட வாத்தியங்கள் பயன்படுத்தப்பட்ட விதத்தில் நீங்கள் அவதானித்த சிறப்புக்களைக் கூறுக.
4. குறித்த பகுதியை நீங்கள் இரசித்தமைக்கான காரணங்களைக் குறிப்பிடுக.

**தேர்ச்சி 2.0** : சூழலிற் காணப்படுகின்ற இயற்கை அம்சங்களையும், கிராமிய நடனம் தொடர்பான ஆக்கச் செயற்பாடு களையும் வெளிக்கொணர்வார்.

**தேர்ச்சி மட்டம் 2.2** : அபிநயப்பாடல்களுக்கு ஏற்ற எளிய பாத அசைவு களைத் தாமாகவே அமைத்து ஆடற் கோலங்களை ஆற்றுகைப்படுத்துவர்.

**செயற்பாடு 2.2** : தேவாரம்

தோடுடைய செவியன், சொற்றுணை வேதியன் ஆகிய தேவாரங்களைப் பாடி ஆடுவோம்.

**நேரம்** : 1 மணித்தியாலம் 20 நிமிடங்கள்

(02 பாடவேளைகள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- பாடல் எழுதப்பட்ட அட்டை
- ஒலி, ஒளிப்பதிவு நாடாக்கள்
- தொலைக்காட்சிக் கருவி, வீடியோ பதிகருவி பாடல்.
- பதிவு செய்யப்பட்ட இறுவட்டு
- செயற்பத்திரம் 2.2.2. பின்னிணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**
**படி 2.2.1**

- தோடுடைய செவியன், சொற்றுணை வேதியன் ஆகிய தேவாரங்களை ஆசிரியர் பாடிக் காட்டியோ அல்லது ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ மாணவர்கள் பாடலைச் செவிமடுக்க இடமளிக்க.
- மேற்கூறிய தேவாரங்களைக் காட்சிப்பலகையில் காட்சிப்படுத்துக.
- மேற்குறித்த தேவாரங்களை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

- தோடுடைய செவியன், சொற்றுணை வேதியன் ஆகிய தேவாரங்களின் பண் காந்தார பஞ்சமம். தாளங்கள் முறையே ரூபகம், ஆதி ஆகிய தாளங்களிலும் அமைந்துள்ளமை.
- தேவாரத்தின் சாகித்தியத்தைக் காட்சிப்படுத்தி ஆசிரியர் பாடலைப் பகுதி பகுதியாகப் பாட மாணவர் அதனைத் தொடர்ந்து பாட இடமளிக்க.
- மாணவர்கள் குழுவாக, அல்லது தனியாக தேவாரத்தைத் தாளம் போட்டுப் பாடுதல்.

- தேவாரத்தின் கருத்திற்கேற்ப அபிநயஹஸ்தங் களை அறிமுகப்படுத்தல்.
- எடுத்துக்கொண்ட தேவாரத்துக்கமைய பாத அசைவுகளைத் தாமே உருவாக்கி ஆடல்.
- தேவாரத்தின் கருத்தினை உணர்ந்து பாவத் துடன் தாமே அபிநயங்களைச் செய்தல்.
- தேவாரங்களுக்குரிய நடனத்தைப் பூரணப் படுத்தி ஆசிரியர் முன் ஆடிக் காட்டல்.

(20 நிமிடங்கள்)

**படி 2.2.2** :

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பத்திரத்தைக் வழங்குங்கள்.
- ஒரு குழு செய்ததை மற்றைய குழுவினரும் அவதானித்து விமர்சிக்க இடமளியுங்கள்.
- முதலில் ஆட முன்வரும் மாணவனை ஊக்குவித்து ஆலோசனை வழங்கி ஆடச் சந்தர்ப்பத்தை வழங்குங்கள்.
- சகல குழுவினரும் தேவாரங்களைச் சரியாகப் பாடி ஆடுகின்றனரா என உறுதிப்படுத்துங்கள்.

(30 நிமிடங்கள்)

**படி 2.2.3** :

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு சமர்ப்பித்தவற்றை ஏனைய குழுக்களும் அவதானித்து தமது கருத்துக்களைக் கூற இடமளியுங்கள்.
- இவற்றை அடிப்படையாகக் கொண்டு மீளவும் கலந்துரையாடுங்கள்.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீளவும் வலியுறுத்துங்கள்.

- சொற்றுணை வேதியன், தோடுடைய செவியன் முதலிய தேவாரங்களைப் பண்ணுடன் பாடுவர்.
- இவற்றைத் தனியாகவும், குழுவாகவும் தாமே ஆடற் கோலங்களை உருவாக்கி ஆடுவர்.
- இத் தேவாரங்களில் குறிப்பிடப்படும் சிவனது நிலைகளைத் தாமே செய்து காட்டுவர்.

(30 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. சொற்றுணை வேதியன், தோடுடைய செவியன் முதலிய தேவாரங்களைப் பண்ணோடு பாடிக்காட்டுவார்.
2. இவற்றிற்குத் தாங்கள் உருவாக்கிய ஆடற் கோலங்களை ஒவ்வொரு குழுவாக ஆடிக் காட்டுவார்.
3. இதில் குறிப்பிடப்பட்ட சிவனது ஆடல் நிலைகளைச் செய்து காட்டுவார்.

### செயற்பத்திரம் 2.2.2

- சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

| |
|---|
| 1. சொற்றுணை வேதியன், தோடுடைய செவியன் ஆகிய தேவாரங்களைப் பண்ணுடன் பாடிக்காட்டுக.<br>2. இவற்றிற்குப் பொருத்தமான ஆடற்கோலங்களை ஆடிக்காட்டுக.<br>3. நீங்களே உருவாக்கிய சிவனது ஆடல் நிலைகள் சிலவற்றைச் செய்து காட்டுக. |

**இணைப்பு 2.2.2**

### தேவாரம்

### சொற்றுணை வேதியன்

பண் - காந்தார பஞ்சமம் தாளம் :- ஆதி
இராகம் - கேதாரகௌளை பாடியவர்:- திருநாவுக்கரசு நாயனார்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழ
கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே

### தேவாரம்
### தோடுடைய செவியன்

பண் - காந்தார பஞ்சமம் தாளம் :- ருபகம்
இராகம் - கேதாரகௌளை பாடியவர்:- திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

தோடுடைய செவியன்வி டையேறியோர்
தூவெண் மதி சூடி
காடுடைய சுட லைப் பொடி பூசி
யென் உள்ளங் கவர் கள்வன்
ஏடுடைய மலரானுனை நாட் பணிந்
தேத்த அருள் செய்த
பீடுடைய பிரமா புரமேவிய
பெம்மானி வனன்றே

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.4.4** : நடன உருப்படிகளை ரஸ பாவத்துடன் ஆடிக் காட்டுவர்.

**செயற்பாடு 3.4.4** : எடுத்துக்கொண்ட ஜதிஸ்வரத்தின் 2ஆவது கோர்வையை ஆடுவோம். (சாவேரி/ வசந்தா)

**நேரம்** : 1 மணித்தியாலம் 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- வசந்தா/சாவேரி ஆகிய இராகங்களில் அமைந்த ஜதிஸ்வரப் பாடல்கள் அடங்கிய ஒலி, ஒளி நாடாக்கள்.
- 2 ஆவது கோர்வை தாளாங்கக் குறியீட்டுடன் எழுதப்பட்ட அட்டை.
- வசந்தா அல்லது சாவேரி ஜதிஸ்வரத்தின் பாடல் எழுதப்பட்ட அட்டை.
- 2 ஆவது கோர்வையில் இடம்பெறும் அடவுகளின் வரைபடங்கள்.
- தட்டுக்கழி, தட்டுப்பலகை
- செயற்பத்திரம் 3.4.2 பின்னிணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**
**படி 3.4.1**

- ஜதிஸ்வரத்தின் இராகம்:- வசந்தா/ சாவேரி
- எடுத்துக்கொண்ட ஜதிஸ்வரத்தின் பாடலை ஒலி நாடா மூலம் ஒலிக்கச் செய்து மாணவர் அதைச் செவிமடுத்தல்.
- 2 ஆவது கோர்வையை தாளாங்கக் குறியீட்டுடன் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தி தாளத்தில் கொலுப்பித்துக் காட்டல்.
- வசந்தா அல்லது சாவேரி ஜதிஸ்வரத்தின் 2 ஆவது கோர்வையை முழுமையாக ஆடிக்காட்டல்.
- எடுத்துக்கொண்ட ஜதிஸ்வரத்தின் 2ஆவது கோர்வை தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

- நமஸ்காரத்துடன் வகுப்பை ஆரம்பித்தல்.
- எடுத்துக்கொண்ட ஜதிஸ்வரத்தின் தீர்மானம், 1ஆவது கோர்வை ஆகியவற்றை மாணவர்கள் ஆடிக்காட்டச் செய்க.
- எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் 2 ஆவது கோர்வையை ஆசிரியர் முழுமையாக ஆடிக் காண்பித்தல்.
- எடுத்துக்கொண்ட ஜதிஸ்வரத்தின் 2 ஆவது கோர்வையின் தாளாங்கக் குறியீட்டுடன் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தி மாணவர்கள் கொலுப்பித்துக் காட்டப் பயிற்சி அளித்தல்.
- மாணவர்கள் 2 ஆவது கோர்வையில் இடம் பெறும் அடவுகளை இனங்கண்டு கூற வழிப் படுத்துக.
- எடுத்துக்கொண்ட ஜதிஸ்வரத்தினை 2 ஆவது கோர்வையில் இடம்பெறும் அடவுகளைத் திரிகாலங்களிலும் பயிற்சி அளித்தல்.
- எடுத்துக்கொண்ட ஜதிஸ்வரத்தின் 2 ஆவது கோர்வையைப் பகுதி பகுதியாக ஆசிரியர் ஆடிக்காட்ட மாணவர்கள் அவரைப் பின்பற்றி ஆடச் செய்க.
- மாணவர்கள் 2 ஆவது கோர்வையை முழுமை யாக ஆடிக்காட்டுவதற்கு வழிப்படுத்துக.
- மாணவர்களைக் குழுக்களாகவும், எழுமாற்றாக வும் தெரிந்து தனியாகவும் ஆடச் செய்க.

(20 நிமிடங்கள்)

**படி 3.4.2** :

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப சிறு குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத் துடன் பின்னிணைப்பையும் சேர்த்து வழங்குக.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தின் அறிவுறுத் தலுக்கு ஏற்ப செயன்முறைப் பயிற்சியில் ஈடுபடு கின்றனரா என அவதானித்தல்.
- பயிற்சியில் ஈடுபடும் போது ஆசிரியர் அவதானித்து பொருத்தமான ஆலோசனை வழங்குதல்.

(30 நிமிடங்கள்)

**படி 3.4.3** :

- ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாட்டினைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது செயற்பாட்டினைச் சமர்ப்பிக்கும் போது மறு குழு அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- குழுக்களின் செயற்பாடுகளின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றினை மீளவும் மேற்கொள்ளுங்கள்.

---

- சாவேரி, வசந்தா ஆகிய இராகங்களில் அமைந்த ஜதிஸ்வரங்களின் தாளம் ரூபகம்.
- கற்ற ஜதிஸ்வரத்தின் இரண்டாவது கோர்வையைத் தாளம் போட்டவாறு கொலுப் பித்தல்.
- அடவுச் சொற்கட்டுகளைத் துல்லியமான உச்சரிப்புடன் கூறித் தாளத்தோடு கொலுப் பித்தல்.
- வசந்தா ஜதிஸ்வரத்தின் இரண்டாவது கோர்வையில், முதலாவது தத்தெய்தாஹா, முதலாவது தெய்யா தெய்யி, ஐந்தாவது நாட்டடவின் குதி கால் பகுதியுடன் தெய், தெய், திதிதெய் (பக்கவாட்டில் ஆடுவது) அடவுகளையும் ஆடிய பின், தத்தெய் தாஹா அடவின் முற் கால் பகுதியை ஆடி முடிவான கிடதகதரிகிடதொம் அடவினைச் சோடி சோடியாக மும்முறை ஆடுதல்.
- சாவேரி ஜதிஸ்வரத்தின் இரண்டாவது கோர்வையைத் தாளம் போட்டவாறு கொலுப் பித்தல்.
- இக்கோர்வையில் இடம்பெறும் அடவுகளை இனங்காணுதல்.
- இதில் அரைமண்டியில் அமர்ந்து கைகள் நாட்டியாரம்ப நிலையில் வைத்து, தெய்ஹத் தெய்ஹி என ஆடி கர்த்தரி அடவினை ஆடுதல். பின் ஐந்தாவது நாட்டடவின் பிற் கால் பகுதியை ஆடித் தெய் தெய் தா என்னும் அடவுடன் மகுட அடவான கிடதக தரிகிட தொம் அடவினைக் கார்வையின்றிச் சதுஸ்ர நடையில் ஆடுதல்.
- எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் 2 ஆவது கோர்வையை ஆசிரியரும், மாணவரும் சேர்ந்து தாளத்தில் கொலுப்பித்துக் காட்டி, ஸ்வரத் துடன் ஆடி நிறைவு செய்தல்.

(30 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரம் அமைந்துள்ள இராகம், தாளம் இரண்டினையும் கூறுவார்.
2. எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் 2 ஆவது கோர்வையில் இடம்பெறும் அடவுகளைக் குறிப்பிடுவார்.
3. எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் கோர்வையினை முழுமையாகத் தாளத்தில் கொலுப் பித்துக் காட்டுவார்.
4. கற்ற ஜதிஸ்வரத்தின் 2ஆவது கோர்வையை ஸ்வரத்துடன் இணைந்து அங்க சுத்தத் துடனும், லயப் பிடிப்புடனும் ஆடுவார்.

## செயற்பத்திரம் 3.4.2

- சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.

1. கற்ற ஜதிஸ்வரம் அமைந்துள்ள இராகம், தாளம் என்ன?
2. எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் 2 ஆவது கோர்வையை தாளத்தில் கொலுப் பித்துக் காட்டுக.
3. எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் 2 ஆவது கோர்வையை ஆடிக்காட்டுக.

**இணைப்பு**

## ஜதிஸ்வரம்

இராகம் - வசந்தா
தாளம் - ரூபகம்

### இரண்டாவது கோர்வை

| | | |
|---|---|---|
| ; ; | ; ; | ; ; |
| தெய் , ;<br>தெய் , ;<br>தெய், யா<br>தத், தத்,<br>தெய், யும்,<br>திதி தெய்,<br>தகதிமி<br>தரிகிடதொம் கிடதகதரிகிட | தத், தெய்,<br>தித், தெய்,<br>தெய், யீ<br>தெய், தெய்,<br>தத், தத்,<br>தத், தெய்,<br>கிடதகதரிகிடதொம், கிடதக<br>தொம்,; கிடதகதரிகிட | தாஹா //<br>தா ஹா //<br>தெய், யும், //<br>திதிதெய், //<br>தெய், தெய், //<br>தாஹா //<br>தரிகிடதொம்,: கிடதக //<br>தொம் கிடதகதரிகிடதொம்; //<br>(ஸா) |

சாவேரி ஜதிஸ்வரம் :- இரண்டாவது கோர்வை

| | | |
|---|---|---|
| ; ; | ; ; | ; ; |
| தெய் , ;<br>த, கி,<br>தெய் , ;<br>த, கி,<br>தெய், யும் ,<br>திதி தெய்,<br>தெய், தெய்,<br>தக் கிடதகதரிகிட தொம் | தெய், ஹத்,<br>ட, த,<br>தெய், ஹத்,<br>ட, த,<br>தத், தத்,<br>தெய், யும்,<br>திதி, தெய்,<br>தக் கிடதகதரிகிட தொம் | தெய், யி, //<br>கி, ட, //<br>தெய், யி, //<br>கி, ட, //<br>தெய், தெய், //<br>தத், தத், //<br>தெய், தெய், தாம்; //<br>தக் கிடதகதரிகிட தொம் // |

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரை களின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.4.4** : நடன உருப்படிகளை ரஸ பாவத்துடன் ஆடிக் காட்டுவர்.

**செயற்பாடு 3.4.4** : எடுத்துக்கொண்ட ஜதிஸ்வரத்தின் 3ஆவது கோர்வையை ஆடுவோம். (சாவேரி/ வசந்தா)

**நேரம்** : 01 மணித்தியாலம் 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- வசந்தா அல்லது சாவேரி ஜதிஸ்வரத்தின் 3ஆவது கோர்வை தாள அங்கக் குறியீட்டுடன் எழுதப்பட்ட அட்டை, எடுக்கப்பட்ட ஜதிஸ்வரத்தின் பாடல்கள் அடங்கிய ஒலி, ஒளி நாடாக்கள், எடுக்கப்பட்ட ஜதிஸ்வரத்தின் பாடல் எழுதப்பட்ட அட்டை.
- 3 ஆவது கோர்வையில் இடம்பெறும் அடவுகளின் வரைபடங்கள்.
- தட்டுக்கழி, தட்டுப்பலகை
- செயற்பத்திரம் 3.4.2 பின்னிணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**
**படி 3.4.1**

- எடுத்துக்கொண்ட ஜதிஸ்வரத்தின் பாடலை ஒலி நாடா மூலம் ஒலிக்கச் செய்து மாணவர் அதைச் செவிமடுத்தல்.
- 3 ஆவது கோர்வையை தாளாங்கக் குறியீட்டுடன் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தித் தாளத் தினைக் கொலுப்பித்துக் காட்டல்.
- வசந்தா அல்லது சாவேரி ஜதிஸ்வரத்தின் 3 ஆவது கோர்வையை முழுமையாக ஆடிக்காட்டல்.
- எடுத்துக்கொண்ட ஜதிஸ்வரத்தின் 3ஆவது கோர்வை தொடர்பாக பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

> - நமஸ்காரத்துடன் வகுப்பை ஆரம்பித்தல்.
> - எடுத்துக்கொண்ட ஜதீஸ்வரத்தின் தீர்மானம், 1ஆவது, 2ஆவது கோர்வை ஆகியவற்றை மாணவர்கள் ஆடிக்காட்டச் செய்தல்.
> - எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் 3 ஆவது கோர்வையை ஆசிரியர் முழுமையாக ஆடிக் காண்பித்தல்.

- எடுத்துக்கொண்ட ஜதிஸ்வரத்தின் 3 ஆவது கோர்வையின் தாளாங்கங் குறியீட்டுடன் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தி மாணவர்கள் கொலுப்பித்துக் காட்டப் பயிற்சி அளித்தல்.
- மாணவர்கள் 3ஆவது கோர்வையில் இடம் பெறும் அடவுகளை இனங்கண்டு கூற வழிப் படுத்துக.
- எடுத்துக்கொண்ட ஜதிஸ்வரத்தில் இடம்பெறும் அடவுகளை திரிகாலங்களிலும் பயிற்சி அளித்தல்.
- எடுத்துக்கொண்ட ஜதிஸ்வரத்தின் 2 ஆவது கோர்வையைப் பகுதி பகுதியாக ஆசிரியர் ஆடிக்காட்ட மாணவர்கள் அவரைப் பின்பற்றி ஆடச் செய்தல்.
- மாணவர்கள் 3 ஆவது கோர்வையை முழுமை யாக ஆடிக்காட்டுவதற்கு வழிப்படுத்துதல்.
- மாணவர்களைக் குழுக்களாகவும், எழுமாற்றாக வும் தெரிந்து தனியாகவும் ஆடச் செய்தல்.

(40 நிமிடங்கள்)

**படி 3.4.2** :

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப சிறு குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத் துடன் பின்னிணைப்புடன் (1, 2) சேர்த்து வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் எடுத்துக்கொண்ட ஜதிஸ் வரத்தின் 3 ஆவது கோர்வையைச் சரியான முறை யில் பயிற்சி செய்கின்றனரா என்பதை உறுதிப் படுத்துக.

(40 நிமிடங்கள்)

**படி 3.4.3** :

- ஒவ்வொரு குழுவும் குழுவாகவும், தனியாகவும் எடுத்துக்கொண்ட ஜதிஸ்வரத்தின் 3ஆவது கோர்வையை ஆடச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது செயற்பாட்டினைச் சமர்ப்பிக்கும் போது மறு குழு அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- குழுக்களின் செயற்பாட்டில் பெற்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களை மீளவும் ஆடச் செய்து நெறிப்படுத்துக.

- கற்ற ஜதிஸ்வரத்தின் மூன்றாவது கோர்வையைக் கொலுப்பித்தல்.
- கற்ற ஜதிஸ்வரத்தின் மூன்றாவது கோர்வையில் இடம்பெறும் அடவுகளை இனங்காணுதல்.
- கற்ற ஜதிஸ்வரத்தின் மூன்றாவது கோர்வையில் ஆரம்பித்தல் மிஸ்ர நடையில் தத்தெய் தாம் அடவின் ஒரு பகுதியை ஆடப் பயிற்சி செய்தல்.
- இதில் மூன்றாம் காலத்தில் குதித்து மெட்டடவைத் (தாம்) என்னும் சொற்கட்டுடன் ஆடுதல்.
- இங்கு இரண்டாவது தெய்யா தெய்யி அடவை 3ஆம் காலத்தில் ஆடுதல்.
- முடிவடவான கிடதக தரிகிடதொம் மும்முறை கார்வையின்றிச் சதுஸ்ர நடையில் ஆடிப் பயிற்சி செய்தல்.
- முழுமையாகவும் தொடர்ச்சியாகவும் ஆடப் பயிற்சி செய்தல்.
- மேற்கூறியவை வசந்தா இராகத்திலமைந்த மூன்றாவது கோர்வை.
- சாவேரி இராகத்திலமைந்த ஜதிஸ்வரத்தின் மூன்றாவது கோர்வையும், வசந்தா இராகத்திலமைந்த ஜதிஸ்வரத்தின் மூன்றாவது கோர்வையின் துவக்கமும் ஒரேமாதிரியான அடவுகளுடன் மிச்ர நடையில் ஆடுதல்.
- இரு ஜதிஸ்வரங்களிலும் தத்தெய்தாம் அடவின் பின்னர் முதலாவது தெய்தெய்தத்தா அடவினை மிச்ர நடையில் ஆடுதல்.
- தெய் தெய் தத்தா அடவினை ஒருமுறை முழுதாக ஆடியதும் 'தித்தெய்' என்னும் அடவு திஸ்ர நடையில் ஆடப்படுதல்.
- இதில் கடகாமுகம், அலபதுமம் ஆகிய முத்திரைகள் பயன்படுத்தப்படுதல்.
- தெய்தெய் தாம் அடவுடன் இடம்பெறும் முடிவடவை மிச்ர நடை ததிங்கிணதொம் அடவை ஆடுதல்.

(40 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

1. எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரம் அமைந்துள்ள இராகம், தாளம் இரண்டினையும் குறிப்பிடுவார்.
2. எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் 3 ஆவது கோர்வையில் இடம்பெறும் அடவுகளைக் கூறுவார்.
3. எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் கோர்வையினை முழுமையாகத் தாளத்தில் கொலுப் பித்துக் காட்டுவார்.
4. கற்ற ஜதிஸ்வரத்தின் 3ஆவது கோர்வையை ஸ்வரத்துடன் இணைந்து அங்க சுத்தத் துடனும், லயப் பிடிப்புடனும் ஆடிக் காட்டுவார்.

**இணைப்பு**

## ஜதிஸ்வரம்

இராகம் - வசந்தா
தாளம் - ரூபகம்
மூன்றாவது கோர்வை

| | | |
|---|---|---|
| ; ; | ; ; | ; ; |
| த, க, | தி, மி, | த, கி, // |
| ட, த, | க, தி, | மி, த, // |
| கி, ட, | த, க, | தி, மி, // |
| த, கி, | ட, த, | க, தி, // |
| மி, த, | கி, ட, | த, க,// |
| தி, மி, | த, கி, | ட, த, // |
| க, தி, | மி, த, | கி, ட, // |
| த, கி, | ட, த, | கி, ட, // |
| தெய், ஹத், தெய், ஹி, | தெய், ஹத், தெய், ஹி, | தெய், ; // |
| தெய், ஹத், தெய், ஹி, | தெய், ஹத், தெய், ஹி, | தெய், ; // |
| தெய், யாதெய், யா | தெய், யி, தெய், யா | தெய், யாதெய், யி, // |
| தக், கிடதகதரிகிட தொம், | தக், கிடதகதரிகிட தொம், | தக், கிடதகதரிகிட தொம், // |

(ஸ்ா)

# ஜதிஸ்வரம்

இராகம் - சாவேரி
தாளம் - ரூபகம்
மூன்றாவது கோர்வை

| | | |
|---|---|---|
| ; ; | ; ; | ; ; |
| த, க,<br>ட, த,<br>கி, ட,<br>த, கி,<br>மி, த<br>தி, மி,<br>க, தி,<br>த, கி,<br>தெய், ஹத், தெய், ஹி,<br>தெய், ஹத், தெய், ஹி,<br>தெய், தெய், தத், த,<br>ததிங் கிண | தி, மி,<br>க, தி,<br>த, க,<br>ட, த,<br>கி, ட,<br>த, கி,<br>மி, த,<br>ட, த,<br>தெய், ஹத், தெய், ஹி,<br>தெய், ஹத், தெய், ஹி,<br>கததிங்கி<br>தொம் தகத | த, கி, //<br>மி, த, //<br>தி, மி, //<br>க, தி, //<br>த, க,//<br>ட, த, //<br>கி, ட, //<br>கி, ட, //<br>தெய், தெய், திதிதெய், //<br>தெய், தெய், திதிதெய், //<br>ண தொம் தக //<br>திங்கிண தொம் //<br>(ஸ்ா) |

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரை களின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.4.4** : நடன உருப்படிகளை ரஸ பாவத்துடன் ஆடிக் காட்டுவார்.

**செயற்பாடு 3.4.4** : வசந்தா அல்லது சாவேரி இராகத்தில் அமைந்த ஜதிஸ்வரத்தின் 4ஆவது கோர்வையை ஆடுவோம்.

**நேரம்** : 02 மணித்தியாலம் (03 பாடவேளைகள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- வசந்தா அல்லது சாவேரி ஜதிஸ்வரப் பாடல்கள் அடங்கிய ஒலி, ஒளி நாடாக்கள்,
- 4 ஆவது கோர்வை தாள அங்கக் குறியீட்டுடன் எழுதப்பட்ட அட்டை
- வசந்தா அல்லது சாவேரி ஜதிஸ்வரத்தின் பாடல் எழுதப்பட்ட அட்டை.
- 4 ஆவது கோர்வையில் இடம்பெறும் அடவுகளின் வரைபடங்கள்.
- தட்டுக்கழி, தட்டுப்பலகை
- செயற்பத்திரம் 3.4.2, பின்னிணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**
**படி 3.4.1**

- எடுத்துக்கொண்ட ஜதிஸ்வரத்தின் சரணப் பகுதியை முழுமையாகப் பாடியோ அல்லது ஒலிப்பதிவுக்கருவி மூலம் ஒலிக்கச் செய்தோ மாணவரைச் செவிமடுக்கச் செய்தல்.
- எடுத்துக்கொண்ட ஜதிஸ்வரத்தின் 4ஆவது கோர்வையை தாள அங்கக் குறியீட்டுடன் எழுதப் பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தி தாளத்தில் கொலுப்பித்துக் காட்டல்.
- வசந்தா அல்லது சாவேரி ஜதிஸ்வரத்தின் 4 ஆவது கோர்வையை ஆசிரியர் முழுமையாக ஆடிக் காட்டல்.
- எடுத்துக்கொண்ட ஜதிஸ்வரத்தின் பல்லவி, அனுபல்லவி பகுதிக்குரிய கோர்வைகளை ஆடி 1 ஆவது சரணப்பகுதிக்குரிய 4ஆவது கோர் வையை ஆட வேண்டும் என்பதை வலியுறுத்துக.

- நமஸ்காரத்துடன் வகுப்பை ஆரம்பித்தல்.
- எடுத்துக்கொண்ட ஜதீஸ்வரத்தின் பல்லவி, அனுபல்லவிக் கோர்வைகளை மாணவர்கள் ஆடிக்காட்டச் செய்தல்.
- எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் 4 ஆவது கோர்வையினை ஆசிரியர் முழுமையாக ஆடிக் காண்பித்தல்.
- எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் 4 ஆவது கோர்வையின் தாளாங்கக் குறியீட்டுடன் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தி மாணவர்கள் கொலுப்பித்துக்காட்டப் பயிற்சி அளித்தல்.
- 1ஆவது சரணப் பகுதியை பாடிக் காண்பித்தல்.
- மாணவர்கள் 4வது கோர்வையில் இடம்பெறும் அடவுகளை இனங்கண்டு கூற வழிப்படுத்துதல்.
- எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் 4 ஆவது கோர்வையில் இடம்பெறும் அடவுகளை திரிகாலங்களிலும் பயிற்சி அளித்தல்.
- எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் 4 ஆவது கோர்வையைப் பகுதி பகுதியாக ஆசிரியர் ஆடிக்காட்ட மாணவர்கள் அவரைப் பின்பற்றி ஆடச் செயதல்.
- மாணவரகள் 4 ஆவது கோர்வையை முழுமை யாக ஆடிக் காட்டுவதற்கு வழிப்படுத்துதல்.
- மாணவர்களை எழுமாற்றாகவும் குழுவாகவும் தனியாகவும் ஆடச் செய்தல்.

(40 நிமிடங்கள்)

**படி 3.4.2** :

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப சிறு குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத் துடன் பின்னிணைப்பு 1, 2 ஐயும் கொடுத்து 4 ஆவது கோர்வையை பயிற்சி பெற வழிப்படுத்துக.
- ஒவ்வொரு குழுவும் எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத் தின் 4 ஆவது கோர்வையை ஆடுவதற்கு சரியான முறையில் பயிற்சியில் ஈடுபடுகின்றனரா என்பதை உறுதிப்படுத்துக.

(40 நிமிடங்கள்)

- கற்ற ஜதிஸ்வரத்தின் நான்காவது கோர்வை ஜதிஸ்வரத்தின் முதலாவது சரணமாக அமைந்துள்ளமை.
- அனுபல்லவி ஆடி முடிந்ததும் மெய்யடவுகளை ஆடிய பின் முதலாவது சரண ஸ்வரங்களுக்கு நான்காவது கோர்வையை ஆடுதல்.
- இதில் இடம்பெறும் அடவு வகைகளை மாணவர் இனங்காணுதல்.
- கற்ற ஜதிஸ்வரத்தின் நான்காவது கோர்வையைத் தாளம் போட்டுக் கொலுப்பித்தல்.
- கற்ற ஜதிஸ்வரத்தின் நான்காவது கோர்வையை ஆடுதல்.
- ஆசிரியர் பாட மாணவர்கள் ஆடுதல்.
- அரைமண்டி, அங்க சுத்தம், முத்திரை சுத்தம் ஆகியனவற்றை அவதானித்து ஆடுதல்.
- தொடர்ச்சியாகவும், முழுமையாகவும் ஆடப் பயிற்சி செய்தல்.
- பல்லவி, அனுபல்லவிமுதலாவது சரணமாகிய நான்காவது கோர்வை வரையில் தொடர்ச்சியாக ஆடுதல்.

(40 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் 4 ஆவது கோர்வையில் இடம்பெறும் அடவுகளைக் கூறுவார்.
2. எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் 1 ஆவது சரணப் பகுதியை பாடிக் காட்டி கோர்வையினைத் தாளத்தில் கொலுப்பித்துக் காட்டுவார்.
3. எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் கோர்வையினை முழுமையாகத் தாளத்தில் கொலுப்பித்துக் காட்டுவார்.
4. கற்ற ஜதிஸ்வரத்தின் 4ஆவது கோர்வையை ஸ்வரத்துடன் இணைந்து அங்க சுத்தத்துடனும், லயப் பிடிப்புடனும் ஆடிக் காட்டுவார்.

## செயற்பத்திரம் 3.4.2

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை பின்னிணைப்புடன் சேர்த்து வழங்குங்கள்.

1. எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் 4 ஆவது கோர்வையைத் தாளத்துடன் கொலுப்பித்துக் காட்டி ஆடிக் காட்டுக.

## ஜதிஸ்வரம்

இராகம் - வசந்தா
தாளம் - ரூபகம்
நான்காவது கோர்வை

### முதலாவது சரணத்திற்குரிய கோர்வை

| | | |
|---|---|---|
| ; ; | ; ; | ; ; |
| தெய் , ;<br>தெய் , ;<br>த, கி,<br>தாஹா<br>தெய், ; தத், தெய்,<br>த, கி, ட, தத்,<br>தெய்,யும், தத்,தத்,தெய்,யும்,தாஹா<br>தெய்,யும், தத்,தத்,தெய்,யும்,தாஹா<br>தெய்,தெய்,தாம்;<br>தகததிங்கிண தொம், | தத், தெய்,<br>தித், தெய்,<br>ட, தத்,<br>; தெய்,<br>தாஹா தெய், ;<br>தெய், ; தாஹா<br>தெய்,யும், தத்,தத,தெய்,யும்,தாஹா<br>தெய்,யும், தத்,தத்,தெய்,யும்,தாஹா<br>தகததிங்கிண தொம்,<br>தெய், தெய், தாம்; | தாஹா //<br>தா ஹா //<br>தெய், ; // } 2<br>தெய், தாம் //<br>தித், தெய், தாஹா // } 2<br>; தெய், தெய், தாம் //<br>தெய்,தெய்,திதிதெய்,//<br>தெய்,தெய்,திதிதெய்,//<br>தெய்,தெய்,தாம்; //<br>தகததிங்கிண தொம், //<br>(ஸ்ா) |



## ஜதிஸ்வரம்

இராகம் - சாவேரி
தாளம் - ரூபகம்
நான்காவது கோர்வை

### முதலாவது சரணத்திற்குரிய கோர்வை

| | | |
|---|---|---|
| ; ; | ; ; | ; ; |
| த, க,<br>தின்,ன, தாங்கிடு<br>த, க,<br>தெய், யி,<br>தெய்,யும், தத்,தத,தெய்,யும்,தாஹா<br>தெய்,யும், தத்,தத,தெய்,யும்,தாஹா<br>தித், தா; தா<br>; ததிங்கிண தொம், | தி, மி,<br>தெய், தெய்,<br>தி, மி,<br>தெய், யா<br>தெய்,யும், தத்,தத்,தெய்,யும்,தாஹா<br>தெய்,யும், தத்,தத்,தெய்,யும்,தாஹா<br>; ததிங்கிண தொம்,<br>தித், தா; தா | தாங்கிடு தத், தத், //<br>திதி தெய், //<br>தெய், யா //<br>தெய், யி, // } 2<br>தெய்,தெய்,திதிதெய்,//<br>தெய்,தெய்,திதிதெய்,//<br>தித், தா; தா //<br>; ததிங்கிணதொம், // |

(ஸ்ா)

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரை களின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.5** : நடன உருப்படிகளை ரஸ பாவத்துடன் ஆடிக் காட்டுவார்.

**செயற்பாடு 3.5.1** : வசந்தா அல்லது சாவேரி இராகத்தில் அமைந்த ஜதிஸ்வரத்தின் ஐந்தாவது கோர்வையை ஆடுவோம்.

**நேரம்** : 02 மணித்தியாலம் (03 பாடவேளைகள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- வசந்தா அல்லது சாவேரி ஜதிஸ்வரப் பாடல்கள் அடங்கிய ஒலி, ஒளி நாடாக்கள்,
- தாளாங்கக் குறியீட்டுக்கமைய எழுதப்பட்ட ஐந்தாவது கோர்வை, வசந்தா /சாவேரி
- ஜதிஸ்வரங்களின் பாடல் எழுதப்பட்ட அட்டை
- 5 ஆவது கோர்வையில் இடம்பெறும் அடவுகளின் வரைபடங்கள்
- தட்டுக்கழி, தட்டுப்பலகை
- செயற்பத்திரம் 3.5.2 பின்னிணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**
**படி 3.4.1**

- எடுத்துக்கொண்ட ஜதிஸ்வரத்தின் சரணப் பகுதிகளை முழுமையாகப் பாடியோ அல்லது ஒலிப்பதிவுக் கருவி மூலம் ஒலிக்கச் செய்தோ, மாணவரைச் செவிமடுக்கச் செய்தல்.
- எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் 5ஆவது கோர்வையை தாள அங்கக் குறியீட்டுடன் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தித் தாளத்தில் கொலுப்பித்துக்காட்டல்.
- வசந்தா அல்லது சாவேரி ஜதிஸ்வரத்தின் ஐந்தாவது கோர்வையை ஆசிரியர் முழுமையாக ஆடிக்காட்டல்.
- எடுத்துக்கொண்ட ஜதிஸ்வரத்தின் அனுபல்லவி, பகுதிக்குரிய கோர்வைகளையும் மெய்யடவுகளை யும் ஆடி இரண்டாவது சரணப் பகுதிக்குரிய ஐந்தாவது கோர்வையை ஆட வேண்டும் என்பதை வலியுறுத்துக.

- நமஸ்காரத்துடன் வகுப்பை ஆரம்பித்தல்.
- எடுத்துக்கொண்ட ஜதீஸ்வரத்தின் பல்லவி, அனுபல்லவி கோர்வைகளை மாணவர்கள் ஆடிக்காட்டச் செய்தல்.
- எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் ஐந்தாவது கோர்வையினை ஆசிரியர் முழுமையாக ஆடிக் காண்பித்தல்.
- எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் ஐந்தாவது கோர்வை தாளாங்கக் குறியீட்டுடன் எழுதப் பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தி மாணவர் கள் அதனைக் கொலுப்பித்துக் காட்டப் பயிற்சி அளித்தல்.
- இரண்டாவது சரணப் பகுதியைப் பாடிக் காண்பித்தல்.
- மாணவர்கள் ஐந்தாவது கோர்வையில் இடம்பெறும் அடவுகளை இனங்கண்டு கூற வழிப்படுத்துங்கள்.
- எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் ஐந்தாவது கோர்வையில் இடம்பெறும் அடவுகளை திரிகாலங்களிலும் பயிற்சி அளித்தல்.
- எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத்தின் ஐந்தாவது கோர்வையைப் பகுதி பகுதியாக ஆசிரியர் ஆடிக்காட்ட மாணவர்கள் அவரைப் பின்பற்றி ஆடச் செய்தல்.
- மாணவர்கள் ஐந்தாவது கோர்வையை முழுமையாக ஆடிக் காட்டுவதற்கு வழிப் படுத்துதல்.
- மாணவர்கள் எழுமாற்றாகவும், குழுவாகவும், தனியாகவும் தெரிவு செய்து ஆடச் செய்தல்.

(50 நிமிடங்கள்)

**படி 3.5.2** :
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப சிறு குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத் துடன் பின்னிணைப்பையும் கொடுத்து 5 ஆவது கோர்வையைப் பயிற்சி செய்ய வழிவகுக்குக.
- ஒவ்வொரு குழுவும் எடுத்துக் கொண்ட ஜதிஸ்வரத் தின் 5 ஆவது கோர்வையை ஆடுவதற்குச் சரியான முறையில் பயிற்சியில் ஈடுபடுகின்றனரா என்பதை உறுதிப்படுத்துக.
- பயிற்சியில் ஈடுபடும் போது ஆசிரியர் அவதானித்து ஆலோசனை வழங்குங்கள்.

(40 நிமிடங்கள்)

**படி 3.5.3** :
- ஒவ்வொரு குழுவும் குழுவாகவும், தனியாகவும் எடுத்துக்கொண்ட ஜதிஸ்வரத்தின் 5ஆவது கோர்வையை ஆடச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது செயற்பாட்டினைச் சமர்ப்பிக்கும் போது மறு குழு அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- குழுக்களின் செயற்பாட்டின் மூலம் பெற்ற விடயங் களை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களை மீளவும் ஆடச் செய்து நெறிப்படுத்துக.

- கற்ற ஜதிஸ்வரத்தின் ஐந்தாவது கோர்வை ஜதிஸ்வரத்தின் இரண்டாவது சரணமாக அமைந்துள்ளமை.
- இரண்டாவது சரணமானது ஜதிஸ்வரத்தின் இறுதிக் கோர்வையாக ஆடுதல்.
- இதில் இடம்பெறும் அடவுகளின் வகைகளை மாணவர்கள் இனங்காணுதல்.
- கற்ற ஐந்தாவது கோர்வையைத் தாளம் போட்டுக் கொலுப்பித்தல்.
- கற்ற ஜதிஸ்வரத்தின் ஐந்தாவது கோர்வையை ஆடுதல்.
- ஆசிரியர் பாட மாணவர்கள் ஆடுதல்.
- முழுமையாகவும் தொடர்ச்சியாகவும் ஆடப் பயிற்சி செய்தல்.
- அரை மண்டி நிலை, அங்க சுத்தம், முத்திரை சுத்தம் ஆகியவற்றைக் கவனித்து ஆடுதல்.
- கற்ற ஜதிஸ்வரத்தை முழுமையாக ஆடுதல்.

(30 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. கற்ற ஜதிஸ்வரத்தின் 5 ஆவது கோர்வைக்குரிய ஸ்வரங்களைப் பாடி கோர்வையில் இடம்பெறும் அடவுகளைக் இனங்கண்டு கூறுவார்.
2. 5 ஆவது கோர்வையைத் தாளத்துடன் கொலுப்பித்துக் காட்டுவார்.
3. 5 ஆவது கோர்வையை லயப்பிடிப்புடன் ஆடிக்காட்டுவார்.
4. 5ஆவது கோர்வை ஜதிஸ்வரத்தின் இரண்டாவது சரண ஸ்வரங்களுக்கு ஆடப்படுகிறது என்பதைக் குறிப்பிடுவார்.
5. பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகிய ஜதிஸ்வரத்தின் அங்கங்களுக்குரிய ஸ்வரங்களுக்கு அடவுக் கோர்வைகளை ஆடி ஜதிஸ்வரத்தை நிறைவு செய்வார்.

## செயற்பத்திரம் 3.5.2

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை இணைப்புடன் சேர்த்து வழங்குங்கள்.

1. நீர் கற்ற ஜதிஸ்வரத்தின் ஐந்தாவது கோர்வையைத் தாளத்துடன் கொலுப்பித்துக் காட்டி, அதனை ஆடிக்காட்டுக.
2. கற்ற ஜதிஸ்வரத்தில் இடம்பெறும் மெய்யடவுகளை ஆடிக் காட்டுக.
3. கற்ற ஜதிஸ்வரத்தை முழுமையாக ஆடிக் காட்டுக.

**இணைப்பு**

### ஜதிஸ்வரம்

இராகம் - வசந்தா
தாளம் - ரூபகம்
ஐந்தாவது கோர்வை **இரண்டாவது சரணத்திற்குரிய கோர்வை**

| | | |
|---|---|---|
| ; ; | ; ; | ; ; |
| த, க, | தி, மி, | தெய்,ஹத்,தெய்,ஹி, // |
| தெய்,ஹத்,தெய்,ஹி, | தெய், ஹத்,தெய்,ஹி, | தெய்,ஹத்,தெய்,ஹி, // |
| த, க, | தி, மி, | தத்,தெய்,தாஹா // |
| தெய்,;தித்,தெய், | தாஹாதெய்,; | தத்,தெய்,தாஹா // |
| தெய்,; தித், தெய், | தாஹாதெய்,; | தத்,தெய்,தாஹா// |
| தளங்குதக்கிடதக | தரிகிடதொம், கிடதகதரிகிட | தொம், கிடதகதரிகிடதொம்,// |
| தாங்கிடு | தத்,தத், | தின்,ன, // |
| தாங்கிடு | தத்,தத், | தின்,ன, // |
| தாங்கிடு | தத்,தத், | தின்,ன, // |
| தாங்கிடு | தத்,தத், | தின்,ன, // |
| தகிடத | கிடதகி | டதகிட // |
| தகிடதக | திகுகிடதகதரிகிடதொம், | தகிடதக // |
| திகுகிடதகதரிகிடதொம், | தகிடதக | திகுகிடதகதரிகிடதொம், // (ஸ்ா) |

## ஜதிஸ்வரம்

இராகம் - சாவேரி
தாளம் - ரூபகம்
ஐந்தாவது கோர்வை

## இரண்டாவது சரணத்திற்குரிய கோர்வை

| | | |
|---|---|---|
| ; ; | ; ; | ; ; |
| தாங்கிடு<br>தெய்,;தத்,தெய்,<br>தெய்,;தத்,தெய்,<br>தாங்கிடு<br>தத்,தெய்,;தா<br>தளங்குதக்கிடதக<br>தெய்,ஹத்,தெய்,ஹி,<br>தெய்,ஹத்,தெய்,ஹி,<br>தெய்,தெய்,தாம்;<br>தரிகிடதொம் கிடதகதரிகிட | தத், தத்,<br>தாஹாதெய்,;<br>தாஹாதெய்,;<br>தத்,தத்,<br>ஹா;தித்,தெய்,<br>தரிகிடதொம்,கிடதகதரிகிட<br>தெய்,ஹத்,தெய்,ஹி,<br>தெய்,ஹத்,தெய்,ஹி,<br>கிடதகதரிகிடதொம்,கிடதக<br>தொம்,கிடதகதரிகிட | தின், ன, //<br>தித், தெய், தாஹா //<br>தித்,தெய்,தாஹா //<br>தின்,ன, //<br>;தாஹா,//<br>தொம்,கிடதகதரிகிடதொம்,// } 2<br>தெய்,தெய்,திதிதெய், //<br>தெய்,தெய்,திதிதெய் //<br>தரிகிடதொம்,கிடதக //<br>தொம்,கிடதகதரிகிடதொம்,// |

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரை களின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.4** : நடன உருப்படிகளை ரஸ பாவத்துடன் ஆடிக் காட்டுவார்.

**செயற்பாடு 3.4.1** : சப்தத்தின் முதலாவது ஜதியினை ஆடுவோம்.

(ஆயர் சேரியர் ஸரஸி ஜாக்ஷுலு)

**நேரம்** : 01 மணித்தியாலம் 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- சப்தம் பாடல்கள் அடங்கிய ஒலி, ஒளி நாடாக்கள், ஒளிப் படங்கள்
- சப்தத்தின் முதலாவது ஜதி எழுதப்பட்ட அட்டை
- தட்டுக்கழி, தட்டுப்பலகை
- செயற்பத்திரம் 3.5.2 பின்னிணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**
**படி 3.4.1.1**

- சப்தத்தின் முதலாவது ஜதி தாளாங்கக் குறியீட்டுடன் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- எடுத்துக் கொண்ட சப்தத்தின் 1ஆவது ஜதியை ஆசிரியர் தாளத்துடன் பாடிக்காட்டியோ, அல்லது ஒலிப்பதிவு நாடா மூலம் ஒலிக்கச் செய்தோ மாணவரை செவிமடுக்கச் செய்தல்.
- காட்சிப்படுத்திய ஜதிஸ்வரத்தின் முதலாவது ஜதியை ஆசிரியர் கொலுப்பித்தல்.
- குறித்த ஜதியினை ஆசிரியர் ஆடிக்காட்டல்.
- இதில் இடம்பெறும் ஜதி மிச்ர சாபு நடையாகும் என ஆசிரியர் விளக்குதல்.
- பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொண்டு ஆடலை மேற்கொள்ளுங்கள்.

> - நமஸ்காரத்துடன் வகுப்பை ஆரம்பித்தல்.
> - சப்தம் என்னும் உருப்படி வகை நாட்டியக் கச்சேரியில் மூன்றாவதாக இடம்பெறும்.
> - ஸரஸி ஜாக்ஷுலு, ஆயர் சேரியர் ஆகிய சப்தங்கள் இராகமாலிகையாக அமைந்துள்ளன.
> - குறித்த சப்தங்கள் மிச்ர சாபு தாளத்தில் அமைந்துள்ளன.

- சப்தம் ஜதியுடன் ஆரம்பிக்கும்.
- சப்தத்தில் சாஹித்தியமும் ஜதியும் மாறி மாறி இடம்பெறும்.
- ஆயர் சேரியர் எனும் சப்தம் தமிழில் அமைந்துள்ளது.
- ஸரஸி ஜாக்ஷுலு, எனும் சப்தம் தெலுங்கு மொழியிலுள்ளது.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் ஆரம்ப ஜதி யினை ஆசிரியர் முழுமையாக ஆடுதல்.
- எடுத்துக் கொண்ட சப்தத்தின் முதலாவது ஜதியினைத் தாள அங்கக் குறியீட்டு அட்டையைக் காட்சிப்படுத்தி கொலுப்பித்துக் காட்ட வழிப்படுத்தல்.
- எடுத்துக் கொண்ட சப்தத்தின் முதலாவது ஜதியில் இடம்பெறும் அடவுகளில் பயிற்சி அளித்தல்.
- சப்தம் எனும் உருப்படி வகை அட்டமியுடன் ஆரம்பமாகும் என்பதை விளக்குதல்.
- எடுத்துக் கொண்ட சப்தத்தின் முதலாவது ஜதியினைப் பகுதி பகுதியாக ஆசிரியர் ஆடிக்காட்டல்.
- மாணவர்கள் ஆசிரியரைப் பின்பற்றி ஆடுதல்.
- மாணவர்களை எழுமாறாகவும், குழுக்களாக வும், தனியாகவும் ஆடச் செய்தல்.

(30 நிமிடங்கள்)

**படி 3.4.1.2** :

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்துடன் பின்னிணைப்பு 1, ஐயும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தின் அறிவுறுத் தல்களுக்கேற்ப செயல்முறைப் பயிற்சியில் ஈடுபடுகின்றனரா என அவதானியுங்கள்.
- பயிற்சியில் ஈடுபடும் போது ஆசிரியர் அவதானித்து ஆலோசனை வழங்குங்கள்.

(30 நிமிடங்கள்)

**படி 3.4.1.3** :

- ஒவ்வொரு குழுவும் குழுவாகவும், தனியாகவும் 1ஆவது ஜதியினை ஆடச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது பெறுபேறுகளைச் சமர்ப்பிக்கும் போது மறு குழு அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- குழுக்களின் பெறுபேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளுங்கள்.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்துங்கள்.

> - சப்தத்தின் தாளம் மிச்ர சாபு
> - எடுத்துக் கொண்ட சப்தம் இராகமாலிகையாக அமைந்துள்ளது
> - முதலாவது ஜதி காம்போதி இராகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.
> - ஜதியை முதலில் கொலுப்பித்தல்.
> - பின்பு ஜதியைக் கையில் தாளம் போட்டவாறு கொலுப்பித்தல்.
> - அடவுச் சொற்கட்டுகளுடன் கொலுப்பித்தல்
> - அடவுச் சொற்கட்டுகளைத் தாளத்துடன் கொலுப்பித்தல்.
> - அரைமண்டி நிலை, அங்க சுத்தம், முத்திரை சுத்தம் ஆகியனவற்றைக் கவனித்து ஆடுதல்.
> - அடவுச் சொற்கட்டுகளுக்கமைய ஆடுதல்.
> - ஜதிச் சொற்கட்டுக்கமைய ஆடுதல்.
> - முழுமையாகவும், தொடர்ச்சியாகவும் ஆடப் பயிற்சி செய்தல்.
> - சப்தம் எனும் உருப்படி வகை கண்டிகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளமை.
> - சப்தத்தின் (ஆயர் சேரியர் /ஸரஸி ஜாக்ஷூலு) முதலாவது ஜதியை முழுமையாக ஆடப் பயிற்சி செய்தல்.

(20 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. எடுத்துக்கொண்ட சப்தத்தின் இராகங்கள், தாளம் ஆகியவற்றினைக் கூறுவார்.
2. சப்தம் அமைந்துள்ள நடையினைக் குறிப்பிடுவார்.
3. எடுத்துக்கொண்ட சப்தத்தின் 1ஆவது ஜதியினைத் தாளத்துடன் கொலுப்பித்துக் காட்டுவார்.
4. கற்ற சப்தத்தின் 1ஆவது ஜதியினை அங்க சுத்தத்துடனும், லயப்பிடிப்புடனம் ஆடுவார்.

## செயற்பத்திரம் 3.4.1.2

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை இணைப்புடன் சேர்த்து வழங்குங்கள்.

1. எடுத்துக் கொண்ட சப்தத்தின் 1ஆவது ஜதியினைத் தாளத்துடன் கொலுப்பித்து ஆடிக்காட்டுக.

**இணைப்பு**

## சப்தம்

பரத நாட்டிய கச்சேரி அமைப்பு முறையில் மூன்றாவதாக இடம்பெறும் உருப்படி சப்தமாகும். அபிநயம் முதன் முதலில் இந்த உருப்படியில்தான் அறிமுகப்படுத்தப்படுகிறது. சப்தத்தின் சாஹித்தியமானது கண்ணன், முருகப்பெருமான், சிவபெருமான், ஸ்ரீராமன், ஸ்ரீமன் நாராயணன், காளி போன்ற தெய்வங்களைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது. ஆரம்பத்தில் சப்தங்கள் யாவும் காம்போஜி இராகத்திலேயே பாடப்பட்டு வந்தன. ஆனால் தற்போது இராகமாலிகையாகவும் பாடப்படுகிறது. இவ்வுருப்படி பெரும்பாலும் மிஸ்ர சாபு தாளத்திலேயே அமைந்துள்ளது. இதனை ஆடுவதற்கு எடுத்துக்கொள்ளும் காலம் பத்து முதல் பதினைந்து நிமிடங்கள் வரையிலாகும்.

சப்தம் எனும் சொல்லுக்குச் சிறப்புப் பொருள் உண்டு. அதாவது தெய்வத்தைப் புகழ்ந்து பாடுதல் எனப் பொருள்படும். சப்தம் என்னும் இவ்வுருப்படி ஜதியுடன் ஆரம்பமாகி சாஹித்தியத்துடன் தொடர்கிறது. சாஹித்தியத்திற்கு அபிநயம் காண்பிக்கப்படும். சாஹித்தியத்திற்கு நேர்க் கைகளும், சஞ்சாரி பாவத்திற்குரிய கைகளும் அபிநயிக்கப்படுகின்றன. இவ்வுருப்படியின் ஆரம்பத்திலும் இடையிலும் முடிவிலும் ஜதிகள் அமைந்துள்ளன. பாடலின் கருத்து முகபாவங்களினாலும் கை முத்திரைகளினாலும் வெளிக்காட்டப்படுகிறது. இது கண்டிகைகளாக வகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கண்டிகைக்கும் அபிநயம் செய்த பின் தொடர்ந்து வரும் ஜதிகளுக்குக் கோர்வை ஆடப்படுகிறது. சப்தத்தில் இராமாயணம், தசாவதாரம், கஜேந்திர மோக்ஷம். முதலிய தொடர்கதைகளைக் கருவாகக் கொண்டு அமைந்த நீண்ட உருப்படிகளும் உள. கிருஷ்ண சப்தம், மண்டூக சப்தம், கோதண்டராம சப்தம் என்னும் பலதரப்பட்ட சப்தங்கள் உள. சப்தத்தின் இறுதியில் "சலாமுரே" அல்லது "நமோஸ்துதே" என்னும் சொற்கள் இடம்பெறும். இதன் பொருள் வணக்கம் செலுத்துதல் என்பதாகும்.

# சப்தம்

இராகமாலிகை

தாளம் : மிச்ர சாபு

1. இராகம் : காம்போஜி

ஆயர் சேரியர் அறிந்திடாமலும்
அன்னை தந்தையர் தெரிந்திடாமலும்
நேய கோபியர் நெஞ்சம் கவர்ந்திட
மாயவன் குழல் ஊதுறான் - எங்கள்
யாதவன் குழல் ஊதுறான்.

2. இராகம் : ஷண்முகப்ரியா

சுருண்டிருண்ட குழல்கள் அசைந்திட
சுந்தர முகம் துலங்கிட
மருண்ட மானினம் மேய்கை மறந்திட
மாயவன் குழல் ஊதுறான் - பவள
வாயன் குழல் ஊதுறான்.

3. இராகம் : நாட்டைக் குறிஞ்சி

சிறு விரல்கள் அக்குழலைத் தழுவிட
செங்கமலக் கண் சாய்த்திட
குறு வியர்வை அப்புருவம் நெருங்கிட
கோபாலன் குழல் ஊதுறான் - எங்கள்
பாலன் குழல் ஊதுறான்.

4. இராகம் : மத்தியமாவதி

கோவிந்தன் குழல் கீத நாதமும்
கோபியர் செவி சாய்த்திட
மோகம் கொண்டோடி வேகமாய் வர
கண்ணனை தியானம் செய்கிறார்-கமலக்
கண்ணனை தியானம் செய்கிறார்.

## சப்தம்

இராகம் - காம்போதி
தாளம் - மிஸ்ர சாபு
மொழி - தெலுங்கு

ஆ : ஸரிகமபதஸ்
அ : ஸ்நிதபமகரிஸ
சாஹித்யகர்த்தா : தஞ்சை வடிவேல்

1. ஸரஸி ஜாக்ஷுலு // ஜலக மாடே // தருண முன நீ // வச்சடிகி ஜனி //
   ஸரிக சீரலு // மெல்ல செய் கொனி // தருவு நேகிட // ஜுசு சுண்டுட //
   தர்மமா; //, ; ; ; //

2. உட்டி மீதனு // பெட்டி யுண்டே // சட்டி பாலுனி // அட்லெ கனு கொனி //
   கொட்டி சேதுல // பட்டித்ராகின // கெட்டி தனமிதி // காதையா; //, ; ; ; //

3. அல்ல லக்ஷ்மி // வல்ல புடவை // தொல்லி அலரே //, பல்ல லோ பல //
   கொல்ல பாமல //, கூடி திவி அதி // செல்லு நீ கிதி // செல்லு னா, //, ; ; ; //

4. இலனு நினு மதி // தலசி ஜுடக //, நலுகு ரனு நினு //, நகுதஸுரனுசொனு //
   லலித மலையா //எமுன தாகின // பளி பளிர ஶ்ரீ //, பத்ம நாபந //மோஸ்துதே //, ; ; ; //



ஆயர் சேரியர் சப்தம்
இராகம் - காம்போஜி

இராகமாலிகை
தாளம் - மிஸ்ர சாபு

**ஜதி**

பாத // மா// கா // பாத // ஸ்ா // ; //
த : . தெய் தத்த தாம் ;

பபத / மா // கா // பாத / ஸ்ா / ; //
தத்தெய் யா தெய் தத்த தாம் / ;

பபத / ஸ்ஸ் // ஸ்ஸ் // பதத / ஸ்ஸ் / ஸ்ஸ் //
தத்தன தன தன தஜொணு ஜொணு ஜொணு / ;

பதத / ஸ்ஸ் // ஸ்ஸ் // பதத / ஸ்ஸ் / ஸ்ஸ் //
தத்திமி திமி கிட தத்தின் திமி கிட
தா , / ; / தெய், // தத்த / தாம் / ; //

**ஜதி**

தா ;. தெய் // தத்த தாம் ;

தத்தெய் / யா / தெய் // தத்த / தாம் /; //

தத்தண / தண / தண // தஜொணு / ஜொணு / ஜொணு

தத்திமி / திமி / கிட // தத்தின் // திமி / கிட //

தா / ; / தெய் // தத் த // தாம் /; //

**இணைப்பு**

## ஸரஸி ஜாக்ஷலு சப்தம்

## சப்தம்

இராகம் - காம்போஜி
தாளம் - மிஸ்ர சாபு

இராகமாலிகை
பாடல் இயற்றியவர் - தஞ்சை வடிவேல்

**ஜதி**

பாத // மா// கா // பாத // ஸ்ா //;//

த : ..தெய் தத்த தாம் ; //

பபத / மா // கா // பாத / ஸ்ா /;//

தத்தெய் யா தெய் தத்த தாம் ;

பபத / ஸ்ஸ் // ஸ்ஸ் // பதத / ஸ்ஸ் / ஸ்ஸ் //

தத்தன தண தண தஜொணு ஜொணு ஜொணு /;

பதத / ஸ்ஸ் // ஸ்ஸ் // பதத / ஸ்ஸ் / ஸ்ஸ் //

தத்திமி திமி கிட தத்தின் திமி கிட

தா , /;/ தெய், // தத்த / தாம் / ம் ; //

**ஜதி**

த : தெய் தத்த தாம் ; //

தத்தெய் யா தெய் தத்த தாம்

தத்தன தன தண தஜொனு ஜொனு ஜொனு

தத்திமி திமி கிட தத்தின் திமி கிட

தா , /;/ தெய், // தத்த / தாம் / ம் ; //

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரை களின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.4** : நடன உருப்படிகளை ரஸ பாவத்துடன் ஆடிக் காட்டுவார்.

**செயற்பாடு 3.4.2** : சப்தத்தின் முதலாவது கண்டிகைக்கு அபிநயம் செய்வோம். (ஆயர் சேரியர் / ஸரஸி ஜாக்ஷூலு)

**நேரம்** : 02 மணித்தியாலம் 40 நிமிடங்கள் (04 பாடவேளைகள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- சப்தத்தின் பாடல்கள் அடங்கிய ஒலி, ஒளி நாடாக்கள்.
- ஸ்வர சாஹித்தியம் எழுதப்பட்ட அட்டை
- கண்ணனின் படங்கள், பாத நிலைகள்
- தட்டுக்கழி, தட்டுப்பலகை
- செயற்பத்திரம் 3.4.2 2 பின்னிணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**
**படி 3.4.2.1**

- தர உள்ளீடுகளைக் காட்சிப்படுத்தல்.
- சப்தத்தின் பாடலை ஒலிநாடாவைப் பயன்படுத்தி செவிமடுக்கச் செய்யுங்கள்.
- சப்தம் என்னும் உருப்படியை நேரிலோ அன்றி ஒளிப்பதிவு நாடா ஒன்றைப் பயன்படுத்தியோ பார்வையிடச் செய்யுங்கள்.
- சப்தத்தின் சாஹித்தியத்தின் கருத்தினைக் கூறுதல்.
- கண்ணனின் குறும்புகள் பற்றி மாணவர் தமது கருத்துக்களைக் கூற இடமளிக்க.
- சப்தத்தின் சாஹித்தியத்திற்கு அபிநயிக்கும் முறையினை ஆசிரியர் ஆடிக் காண்பித்து, நேர்க்கை, சஞ்சாரி பாவம் பற்றி விபரித்தல்.
- சப்தம் தொடர்பான பின்வரும் விடயங்களை உள்ளடக்கி ஆடலை மேற்கொள்ளுங்கள்.

> - பரத நாட்டியக் கச்சேரியில் மூன்றாவதாக ஆடப்படும் உருப்படி சப்தமாகும்.
> - சப்தத்தின் இசை இராகமாலிகை
> - சப்தத்தின் தாளம் மிச்ர சாப்பு
> - மிச்ர சாபு என்றால் தகிட தகதிமி
> - சப்தத்தின் சாஹித்தியம் கண்டிகைகளாக வகுக்கப்பட்டுள்ளமை

- சப்தத்தில் சாஹித்தியமும் ஜதியும் மாறி மாறி அமையும்.
- பரத நாட்டியக் கச்சேரி நிரலில் முதன் முதலாக சப்தம் எனும் உருப்படியில் அபிநயம் அறிமுகப்படுத்தப்படுதல்.
- ஆயர் சேரியர், ஸரஸி ஜாக்ஷூலு ஆகிய சப்தங்கள் கண்ணனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டுள்ளமை
- கண்ணனின் குறும்புகள் இவ் இரு சப்தங் களிலும் அபிநயம் மூலம் பிரதபலிக்கப்படு கின்றமை
- கண்ணனின் குறும்புகள் பற்றி மாணவர்களின் கருத்துக்களைக் கேட்டறிதல்.
- சப்தத்தில் சஞ்சாரி பாவம் இடம்பெறும் என்பதைக் கூ;தல்.
- நமஸ்காரத்துடன் வகுப்பை ஆரம்பித்தல்
- எடுத்துக்கொண்ட சப்தத்தினை ஆசிரியர் தாளத்துடன் பாடிக் காட்டல்.
- 1 ஆவது கண்டிகையில் ஒரு நேர்க்கையும், சஞ்சாரிபாவத்தை வெளிப்படுத்தும் இரண்டு கைகளும் இடம்பெறுகிறது என்பதை நினைவுறுத்தல்.
- ஆயர் சேரியர் / ஸரஸி ஜாக்ஷூலு சப்தத்தின் முதலாவது கண்டிகையை ஆசிரியர் முழுமை யாக பாடி ஆடிக் காட்டல்.
- எடுத்துக் கொண்ட சப்தத்தின் 1 ஆவது கண்டிகையின் சாஹித்தியத்தில் இடம்பெறும் கருத்துக்களைக் கூறுதல்.
- குறித்த சப்தத்தின் 1 வது கண்டிகையில் இடம்பெறும் 2ஆவது, 3வது கைகளுக்குரிய சஞ்சாரி பாவத்தின் கருத்துக்களைக் கூறுதல்.
- நின்ற நிலையில் / உட்கார்ந்த நிலையில் ஆயர் சேரியர் / ஸரஸி ஜாக்ஷூலு சப்தத்தின் முதலாவது கண்டிகைக் குரிய அபிநயக் கைகளை ஆசிரியர் அபி நயித்துக் காட்ட மாணவர்கள் அவரைப் பின்பற்றி ஆடல்.
- அபிநயத்தில் இடம்பெறும் கை முத்திரைகளை அறிமுகம் செய்தல்.
- காலுடன் கைகளை இணைத்துப் பயிற்சி செய்தல்.
- முத்திரைப் பிரயோகம், முகபாவம் என் பவற்றை அவதானித்து ஆடுதல்.

- குறித்த சப்தத்தின் 2ஆவது கையை நின்ற நிலையில் அபிநயித்துப் பயிற்சி செய்து பின் காலுடன் இணைந்து பயிற்சி செய்தல்.
- எடுத்துக் கொண்ட சப்தத்தின் 3வது அபிநயக் கையை நின்ற நிலையில் / உட்கார்ந்த நிலையில் அபிநயித்துப் பயிற்சி செய்து காலுடன் இணைத்துப் பயிற்சி அளித்தல்.
- முகபாவத்துடனும் அங்க சுத்தத்துடனும் அபிநயித்து ஆடுதல்.
- அபிநயத்திற்குப் பிரயோகிக்கும் அஸம்யுத ஸம்யுத ஹஸ்தங்களை இனங்காணல்.
- மாணவர்கள் தனியாகவும், குழுக்களாகவும் 1ஆவது கண்டிகையைப் பயிற்சி செய்தல்.
- மாணவர்கள் கூச்சமின்றி அபிநயத்தை செய்வதற்கு வழிப்படுத்தல்.
- மாணவர்கள் சப்தத்திற்குரிய சாஹித்தியத்தினை தாளத்துடன் பாடிக்காட்டல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் 1ஆவது கண்டிகையினை இராகத்துடனும் தாளத்துடனும் பாடி, அபிநயித்தல்.

(60 நிமிடங்கள்)

**படி 3.4.2.2** :

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்துடன் பின்னிணைப்பு 1, ஐயும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தின் அறிவுறுத்தல்களுக்கேற்ப செயல்முறைப் பயிற்சியில் ஈடுபடுகின்றனரா என அவதானியுங்கள்.
- பயிற்சியில் ஈடுபடும் போது ஆசிரியர் அவதானித்து ஆலோசனை வழங்குங்கள்.

(60 நிமிடங்கள்)

**படி 3.4.2.3** :

- ஒவ்வொரு குழுவும் தமது பெறுபேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது பெறுபேறுகளைச் சமர்ப்பிக்கும் போது மறு குழு அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- குழுக்களின் பெறுபேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளுங்கள்.

- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்துங்கள்.

> - சப்தத்தின் 1ஆவது கண்டிகையினை இராகத்துடனும் தாளத்துடனும் பாடி ஆடுவதற்கு பயிற்சி அளித்தல்.
> - 1ஆவது கண்டிகையின் 3 அபிநயக் கைகளையும் நினைவுபடுத்தி தொடர்ச்சியாக அபிநயத்துடனும் அங்க சுத்தத்துடனும் ஆட வேண்டிய அவசியத்தை வலியுறுத்திப் பயிற்சியில் ஈடுபடுத்தல்.
> - முதலாவது கண்டிகைக்குரிய சாஹித்தியத்தின் கருத்தினைக் கூறுதல்.
> - சாஹித்தியத்தின் அபிநயக் கைகளின் கருத்துக்களை அறிந்து அபிநயித்தலின் அவசியத்தைக் கூறுதல்.

(40 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

1. சப்தம் நாட்டிய உருப்படி வரிசையில் எத்தனையாவதாக ஆடப்படுகின்றது என்பதைக் கூறுவார்.
2. சப்தம் அமைந்துள்ள இராகம், தாளம் என்பவற்றைக் கூறுவார்.
3. இந்த உருப்படியின் சாஹித்திய கர்த்தாவின் பெயரைக் கூறுவார்.
4. சப்தத்தின் சாஹித்தியத்தில் குறிப்பிடப்படும் கடவுளின் நாமத்தைக் கூறுவார்.
5. 1 ஆவது கண்டிகையில் இடம்பெறும் அபிநயத்திற்குரிய கருத்துக்களைக் கூறுவார்.
6. சப்தத்தின் சாஹித்தியம் கண்டிகைகளாக அமைந்துள்ளது என்பதைக் கூறுவார்.
7. 1ஆவது கண்டிகையினை இராக தாளத்துடன் பாடி அங்க சுத்தத்துடனும், முகபாவத்துடனும் அபிநயித்து ஆடுவார்.

## செயற்பத்திரம் 3.4.2.2

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை இணைப்புடன் சேர்த்து வழங்குங்கள்.

### குழு 1 : செயற்பத்திரம் - 01

1. நாட்டிய உருப்படி வரிசையில் மூன்றாவதாக ஆடப்படும் உருப்படி யாது?
2. சப்தம் அமைந்துள்ள இராகம், தாளம் யாது?
3. சப்தத்தின் சாஹித்திய கர்த்தா யார்?
4. சப்தத்தின் நடன அமைப்பினைச் செய்தவர் யார்?
5. சப்தத்தில் குறிப்பிடப்படும் கடவுளர் யார்?
6. கண்டிகை வடிவில் அமைந்த நாட்டிய உருப்படி எது?
7. மிஸ்ர ஜாதியின் சொற்கட்டு யாது?
8. சஞ்சாரி பாவம் என்றால் என்ன?

## செயற்பத்திரம் - 02 3.4.2.2

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை இணைப்புடன் சேர்த்து வழங்குங்கள்.

1. எடுத்துக்கொண்ட சப்தத்தின் முதலாவது கண்டிகையை இராக, தாளத்துடன் பாடுக.
2. எடுத்துக்கொண்ட சப்தத்தின் முதலாவது கண்டிகையின் சாஹித்தியத்துக்குரிய அபிநயங்களை முகபாவத்துடன் தொடர்ச்சியாக ஆடிக் காட்டுக.
3. நீர் அபிநயித்துக் காட்டிய பகுதிகளுக்குரிய முத்திரைகள் வெளிப்படுத்தும் கருத்துக்களைக் கூறுக.

**இணைப்பு**

### சப்தம்

இராகமாலிகை | தாளம் : மிச்ர சாபு

இராகம் : காம்போஜி
முதலாவது கண்டிகை

1. ஆயர் சேரியர் அறிந்திடாமலும்
அன்னை தந்தையர் தெரிந்திடாமலும்
நேய கோபியர் நெஞ்சம் கவர்ந்திட
மாயவன் குழல் ஊதுறான்.

ஸ்வர ஸாஹித்தியம்

பதத / ஸ்ா / ஸ்ஸ் // பதத / ஸ்ா / ஸ்ஸ் //
ஆயர் சே ரியர் // அறிந்தி டா மலும்

பதஸ்ா / நீ / தப // பதத / ஸ்ஸ் / ஸ்ஸ் //
அன்னை தந் தையர் // தெரிந்தி டா மலும்

, பதஸ்ா / நீ / தத // நீத / பாதப / மக //
; நேய கோ பியர் // நெஞ்சம் கவர்ந் திட

நீத / பாதப / மக // பாத / ஸ்ா / ; //
மாய வன் // குழல் ஊது றான் ;

பதத / ஸ்ா / பதஸ்ா // பதஸ் / நீ / தப //
ஆ . .. // எங்கள் மாய வன் குழல்

பதத / ஸ்ா / ; // பதத / ஸ்ா / ஸ்ா //
ஊது றான் , ஆ ; ;

**இணைப்பு**

## சப்தம்

இராகமாலிகை

தாளம் : மிச்ர சாபு
பாடல் இயற்றியவர் - தஞ்சை வடிவேல்

இராகம் : காம்போஜி
முதலாவது கண்டிகை

| | | | |
|---|---|---|---|
| 1. ஸரஸி | ஜாக்ஷுலு | ஜலக | மாடே |
| தருண | முன நீ | அத்ஸடிகி | சனி |
| சரிக | சீரலு | மெல்ல சே | கொனி |
| தருவு | நேகிட | ஜூசு | சுண்டுட |
| தர்ம | மா ; | ஆ .. | ; |

ஸ்வர ஸாஹித்தியம்

பதத / ஸ்ா / ஸ்ஸ் // பதத / ஸ்ஸ் / ஸ்ஸ் //
ஸரஸி/ ஜா / கூஷ்லு// ஜலக / மா / டே //

பதஸ்/ ஸ்நி / தா // நித / பாதப/ மக //
தருண/ முண / நீ //, அத்ஸ/ டிகி / சனி //

சரிக / சீரலு / மெல்ல // சே/ கொனி //
பதாஸ் / நீ / நித// ,நித / பாதப/ மக //
தருவு / நே/ கிட // ஜூசு / சுண் / டுட //

பாத / ஸ்ா / ; // ஸநிபத/ ஸ்ா / ; //
தர்ம மா; // ஆ ... / ; / ; //

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரை களின் வகைகளையும், கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.5** : வெவ்வேறு வகையான கிராமிய நடனங்களை ஆடிக்காட்டுவார்.

**செயற்பாடு 3.5.1** : "நீலமயிலேறும்" என்ற கும்மியை ஆடுவோம்.

**நேரம்** : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- "நீலமயிலேறும்" என்ற கும்மிப் பாடல் எழுதப்பட்ட அட்டை
- ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி
- தட்டுக்கழி, தட்டுப்பலகை
- செயற்பத்திரம் 3.5.1, பின்னிணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**
**படி 3.5.1.1**

- ஏற்கனவே ஆடப்பட்ட கிராமிய நடனங்களி லொன்றான கும்மி நடனத்தை நினைவூட்டுதல்.
- எடுத்துக்கொண்ட கோலாட்டப் பாடல் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்துதல்.
- ஒலிப்பதிவுக் கருவியை ஒலிக்கச் செய்து செவிமடுக்கச் செய்தல்.
- செவிமடுத்த பாடலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையிற் கலந்துரையாடுங்கள்.

- கும்மியின் சிறம்பம்சங்கள்
- நமஸ்காரத்துடன் வகுப்பை ஆரம்பித்தல்.
- "நீலமயிலேறும்" என்ற கும்மிப் பாடல் எழுதிய அட்டையைக் காட்சிப்படுத்தி
  அதன் இராகம் - ஆனந்த பைரவி
  தாளம் - ஆதி எனக் கூறுதல்.
- குறித்த பாடலை ஆசிரியர் பகுதி, பகுதியாகப் பாட மாணவரும் இணைந்து பாடச் செய்தல்.
- மாணவர் பாடலுக்கேற்றவாறு கைகளைப் பயன்படுத்தி இரு நிரல்களாகப் பிரவேசிக்கும் சுவடு ஒன்றை ஆடியவாறு வரச் செய்தல்.
- இரு நிரல்களிலே நின்று இருவகை எளிய சுவடுகளை ஆடியும் வெவ்வேறு கோலங் களிலும் ஆடச் செய்தல்.
  (V, X, II, அரைவட்டம், -)

- வட்டமாகவோ அல்லது வேறு வடிவங்களிலோ ஆடி மேடைக்கு வெளியே ஒழுங்காகப் பாடலுக் கேற்ப ஆடி நிறைவு செய்வதற்கு வழிப்படுத் துதல்.
- "நீலமயிலேறும் கோல முருகனை" என்ற கும்மி நடனத்தை ஆடற் கோலங்களில் ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து முழுமையாக ஆடுங்கள். மாணவர்களை எழுமாற்றான குழுக்களாகத் தெரிவு செய்து ஆடுவதற்கு இடமளிக்க.

(15 நிமிடங்கள்)

**படி 3.5.1.2** :

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்துடன் பின்னிணைப்பு 1, ஐயும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தின் அறிவுறுத் தல்களுக்கேற்ப செயல்முறைப் பயிற்சியில் ஈடுபடுகின்றனரா என அவதானியுங்கள்.

(15 நிமிடங்கள்)

**படி 3.5.1.3** :

- ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாட்டினைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு ஆடிக்காட்டும் போது மற்றைய குழுக்கள் அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- குழுக்களின் பெறுபேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றினை மேற் கொள்ளுங்கள்.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்துங்கள்.

- கைகளைத் தட்டிப் பாடி ஆடுவது கும்மியின் சிறப்பம்சமாகும்.
- எடுத்துக்கொண்ட கும்மிப் பாடல் ஆனந்த பைரவி இராகத்தில் ஆதி தாளத்தில் அமைந்துள்ளது.
- எடுத்துக்கொண்ட கும்மி நடனத்தை முழுமை யாக ஆடி நிறைவு செய்க.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. கும்மியின் சிறப்பம்சத்தைக் குறிப்பிடுங்கள்.
2. "நீலமயிலேறும் கோலமுருகன்" என்ற பாடல் அமைந்துள்ள இராகம், தாளம் ஆகியவற்றைக் குறிப்பிடுங்கள்.
3. "நீலமயிலேறும் கோலமுருகன்" என்ற கும்மிப் பாடலை முழுமையாகப் பாடுவர்.
4. குறித்த பாடலிற்கு பொருந்தும் வகையில் கும்மி நடனத்திற்குரிய அம்சங்களுடன் கவர்ச்சியாகக் கும்மி நடனத்தை ஆடுவர்.

**இணைப்பு**

இராகம் - ஆனந்தபைரவி தாளம் : ஆதி

1) நீலமயிலேறும் கோல முருகனை
நித்தம் பணிந்திட வாருங்கடி
கால காலனெந்தை ஆலமுண்டர் கொஞ்சும்
கந்தனைப் பாடிட வாருங்கடி.

2) சூலி சிவகாமி தாவி முத்தமிடும்
சுந்தர பாலனைப் பாடுங்கடி
காலிற் சிலம் பொலி கல் கல் எனவரும்
கந்தன் அழகினைப் பாருங்கடி

3) சின்ன முனிவர்க்குச் செந்தமிழ் அமுதை
அன்புடன் பருகத் தந்தவண்டி
வண்ண மயிலேறும் வள்ளலை வாழ்த்தினால்
வந்தின்பம் தருவான் பாருங்கடி

4) வேலுடன் வந்தன்பர் வேதனை தீர்த்தின்பம்
வேண்ட வேண்டத் தரும் மெய்யனடி
நாலு வேதப் பொருள் ஆறு சமயத்து
நாயகன் எம்முயிர் ஐயனடி

5) ஓலமிட்ட சுரர் காலனார் புக்கிட
ஒய்யாரப் போர் செய்யும் வீரனடி
சீல மெல்லாம் தந்து தேவர்கள் நாட்டிற்கு
சேனாதி பதியான தீரனடி

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரைகளின் வகைகளையும், கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.5** : வெவ்வேறு வகையான கிராமிய நடனங்களை ஆடிக்காட்டுவார்.

**செயற்பாடு 3.5.2** : "தன்னையறிந்தின்பமுற வெண்ணிலாவே" என்ற கோலாட்டத்தை ஆடுவோம்.

**நேரம்** : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- "தன்னையறிந்தின்பமுற வெண்ணிலாவே" என்ற கோலாட்டப் பாடல் எழுதப்பட்ட அட்டை
- ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி
- தட்டுக்கழி, தட்டுப்பலகை, கோல்கள்
- செயற்பத்திரம் 3.5.2, பின்னிணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**
**படி 3.5.2.1**

- ஏற்கனவே ஆடப்பட்ட கிராமிய நடனங்களில் ஒன்றான கோலாட்டத்தை நினைவூட்டுதல்.
- எடுத்துக்கொண்ட கோலாட்டப் பாடல் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்துதல்.
- ஒலிப்பதிவுக் கருவியை ஒலிக்கச் செய்து குறித்த கோலாட்டப் பாடலைச் செவிமடுக்கச் செய்தல்.
- செவிமடுத்த பாடலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையிற் கலந்துரையாடி நெறிப்படுத்துங்கள்.

- கோலாட்டத்தின் சிறப்பம்சங்கள் வெவ்வேறு கோலங்களில் ஆடுதல். தாளத்திற்கமைய ஆடுதல், ஒன்றிணைந்து கோல்களைத் தட்டி ஆடுதல்.
- நமஸ்காரத்துடன் வகுப்பை ஆரம்பித்தல்.
- "தன்னையறிந்தின்பமுற வெண்ணிலாவே" என்ற பாடல் எழுதிய அட்டையைக் காட்சிப்படுத்தி அதன் இராகம் - ஆனந்த பைரவி
  தாளம் - ஆதி எனக் கூறுதல்.
- இப்பாடலை ஆசிரியர் பகுதி, பகுதியாகப் பாட மாணவரும் இணைந்து பாடுதல்.
- மாணவர் பாடலுக்கேற்றவாறு கோல்களைப் பயன்படுத்தி இருநிரல்களாகப் பிரவேசிக்கும் சுவடு ஒன்றை ஆடியவாறு வருதல்.

- இரு நிரல்களிலே நின்று இருவகை எளிய சுவடுகளை ஆடியும் வெவ்வேறு கோலங் களிலும் ஆடச் செய்தல். (V, X, அரைவட்டம்)
- வட்டமாகவோ அல்லது வடிவங்களிலோ பாடலுக்கேற்ப ஆடி நிறைவு செய்வதற்கு வழிப்படுத்துதல்.
- தன்னையறிந்தின்பமுற வெண்ணிலாவே என்ற கோலாட்டத்தை ஆடற் கோலங்களில் ஆசிரி யரும் மாணவரும் சேர்ந்து முழுமையாக ஆடுதல்.
- மாணவர்களை எழுமாற்றாகத் தெரிவு செய்து ஆடுவதற்கு இடமளித்தல்.

(15 நிமிடங்கள்)

**படி 3.5.2.2** :

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தின் அறிவுறுத் தல்களுக்கேற்பச் செயற்படுகின்றனரா என உறுதிப் படுத்தி ஆலோசனை வழங்குங்கள்.

*(15 நிமிடங்கள்)*

**படி 3.5.2.3** :

- ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாட்டினைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு ஆடிக்காட்டும் போது மற்றைய குழுக்கள் அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- குழுக்களின் பெறுபேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றினை மேற் கொள்ளுங்கள்.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்துங்கள்.

- கோல்களை வைத்து ஆடுவது இதன் சிறப்பம்ச மாகும்.
- "தன்னையறிந்தின்பமுற" என்ற கோலாட்டப் பாடலின் இராகம் - ஆனந்த பைரவி, தாளம் - ஆதி எனக் குறிப்பிட்டுப் பாடலை முழுமையாக ஆசிரியரும் மாணவரும் பாடுதல்.
- கோலாட்டப் பாடலுக்கேற்ப முழுமையாகக் கோலாட்டத்தை ஆடி நிறைவு செய்தல்.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. கோலாட்டத்தின் சிறப்பம்சங்களை குறிப்பிடுவர்.
2. "தன்னையறிந்தின்பமுற வெண்ணிலாவே" என்ற கோலாட்டப் பாடல் அமைந்துள்ள இராகம், தாளம் ஆகியவற்றை கூறுவர்.
3. இப்பாடல் அமைந்துள்ள நடையினை ஆடிக் காட்டுவார்.
4. தன்னையறிந்தின்பமுற வெண்ணிலாவே என்ற இப்பாடலை முழுமையாகப் பாடுவர்.
5. குறித்த பாடலிற்குப் பொருத்தமாக கோலாட்டத்தினை அதற்குரிய முழுஅம்சங்களுடனும் ஆடுவர்.

## செயற்பத்திரம் 3.5.2.2

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை வழங்கவும்.

1. கோலாட்டத்தின் சிறப்பம்சங்கள் எவை?
2. "தன்னையறிந்தின்பமுற வெண்ணிலாவே" என்ற கோலாட்டப் பாடல் அமைந்துள்ள இராகம், தாளம் ஆகியவற்றைக் குறிப்பிடுக.
3. இக் குறித்த பாடல் அமைந்துள்ள நடை யாது?
4. இப்பாடலை முழுமையாகப் பாடுக.
5. பாடலுக்கேற்றவாறு கோலாட்டத்தை ஆடிக்காட்டுக.

**இணைப்பு**

## கோலாட்டப் பாடல்

இராகம் - ஆனந்தபைரவி | தாளம் : ஆதி

1) தன்னையறிந்தின்பமுற வெண்ணிலாவே - ஒரு
தந்திரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே
நாதர் முடி மேலிருக்கும் வெண்ணிலாவே - அங்கே
நானும் வர வேண்டுகிறேன் வெண்ணிலாவே

2) சச்சிதானந்தக் கடலில் வெண்ணிலாவே - நானும்
தாழ்ந்து விழ வேண்டுகிறேன் வெண்ணிலாவே
இராப்பகல் இல்லாவிடத்தே வெண்ணிலாவே - நானும்
இருக்க எண்ணி வாடுகிறேன் வெண்ணிலாவே

3) யாருமறியாமல் இங்கே வெண்ணிலாவே
அருளாளர் வருவாரோ சொல்வாய் வெண்ணிலாவே
அந்தரங்க சேவை செய்ய வெண்ணிலாவே - எங்கள்
ஐயர் வருவாரோ சொல்வாய் வெண்ணிலாவே

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரைகளின் வகைகளையும், கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.5** : வெவ்வேறு வகையான கிராமிய நடனங்களை ஆடிக்காட்டுவார்.

**செயற்பாடு 3.5.3** : "மாயி மகமாரியம்மா" என்ற கரக நடனத்தை ஆடுவோம்.

**நேரம்** : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- "மாயி மகமாரியம்மா" என்ற கரகப் பாடல் எழுதப்பட்ட அட்டை
- ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி
- தட்டுக்கழி, தட்டுப்பலகை, கரகம்
- கோல்கள், செயற்பத்திரம் 3.5.3.2, பின்னிணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**
**படி 3.5.3.1**

- ஏற்கனவே ஆடப்பட்ட கிராமிய நடனங்களில் ஒன்றான கரக நடனத்தை நினைவூட்டுதல்.
- "மாயிமகமாரியம்மா" என்ற கரகப் பாடல் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்துக.
- ஒலிப்பதிவுக் கருவியை ஒலிக்கச் செய்து கரகப் பாடலைச் செவிமடுக்கச் செய்தல்.
- செவிமடுத்த பாடலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையிற் கலந்துரையாடி நெறிப்படுத்துங்கள்.

- கரகத்தின் சிறப்பம்சங்கள்
- நமஸ்காரத்துடன் வகுப்பை ஆரம்பித்தல்.
- "மாயிமகமாரியம்மா" என்ற பாடல் எழுதிய அட்டையைக் காட்சிப்படுத்தி அது அமைந்துள்ள இராக, தாளத்தினைக் குறிப்பிடுக.
- இப்பாடலை ஆசிரியர் பாட மாணவரும் இணைந்து பாடுதல்.
- குறித்த பாடலுக்குரிய அசைவுகளைக் கரகத்தினைச் சமநிலையாக வைத்து ஆசிரியர் பகுதி பகுதியாக ஆட மாணவரும் தொடர்ந்து ஆடுதல்.
- ஆசிரியரும் மாணவரும் முழுமையாக ஆடுதல்.
- மாணவரைக் குழுவாகவோ, எழுமாற்றாகவோ தெரிந்து தனியாகவோ ஆடச் செய்தல்.

(15 நிமிடங்கள்)

**படி 3.5.3.2** :

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கரகத்தினை ஆடிப் பயிற்சி செய்கின்றனரா என உறுதி செய்யுங்கள்.

(15 நிமிடங்கள்)

**படி 3.5.3.3** :

- ஒவ்வொரு குழுவும் கரகத்தினை ஆடச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு ஆடிக்காட்டும் போது மற்றைய குழுக்கள் அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுங்கள்.

> - கரகத்தினைச் சமநிலையாகத் தலையில் வைத்தல், கைகளைப் பக்கவாட்டில் சமநிலை மாறாதிருக்க வைத்து ஆடுதல் ஆகியன கரக நடனத்தின் சிறப்பம்சகளாகும்.
> - மாயிமகமாரியம்மா என்ற கரகப் பாடல் பைரவி இராகத்திலும் சதுஸ்ர ஏக தாளத்திலும் அமைந்துள்ளமை.
> - முழுமையாகக் குறித்த கரகப் பாடலை ஆசிரியரும் மாணவரும் பாடுதல்.
> - கரக நடனத்தினை முழுமையாக ஆசிரியரும் மாணவரும் ஆடி நிறைவு செய்தல்.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. கரகத்தின் சிறப்பம்சங்களைக் குறிப்பிடுவர்.
2. “மாயிமகமாரியம்மா” என்ற கரகப் பாடலின் இராக, தாளத்தினைக் குறிப்பிடுவர்.
3. எடுத்துக்கொண்ட கரகப் பாடலை இராக, தாளத்துடன் பாடுவர்.
4. கரக நடனத்தினைக் கரகத்தினைச் சமநிலையாக வைத்தோ அல்லது பாவனை செய்தோ ஆடி நிறைவு செய்வர்.

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை இணைப்புடன் சேர்த்து வழங்குங்கள்.

### செயற்பத்திரம் 3.5.3.2

1. கரகத்தின் சிறப்பம்சங்கள் எவை?
2. "மாயிமகமாரியம்மா" என்ற கரகப் பாடலின் இராகம், தாளம் ஆகியவற்றைக் கூறுக.
3. எடுத்துக்கொண்ட கரகப் பாடலை இராக தாளத்துடன் பாடுக.
4. குறித்த பாடலுக்கேற்ற வகையில் ஆடுக.

**இணைப்பு**

### கரக நடனப் பாடல்

மாயி மகமாரியம்மா ...
மாகாளி பைரவியாம் ...
ஆயிரம் கை கண்ணுடையாள் ...
ஆங்காரங் கொண்டவளே...

கரகம் கரகம் அடி முத்துமாரியம்மா
காளியம்மா மாரியம்மா முத்துமாரியம்மா
கரகம் பிறந்த தெல்லோ முத்துமாரியம்மா
கர்ணனூர் மேடையிலே முத்துமாரியம்மா
உடுக்குப் பிறந்த தெல்லோ முத்துமாரியம்மா
உத்திராட்ச மண்டபமாம் முத்துமாரியம்மா
பம்பை பிறந்த தெல்லோ முத்துமாரியம்மா
பளிங்கு மா மண்டபமாம் முத்துமாரியம்மா

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரை களின் வகைகளையும், கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.5** : வெவ்வேறு வகையான கிராமிய நடனங்களை ஆடிக்காட்டுவார்.

**செயற்பாடு 3.5.8** : "அரிவி வெட்டப் போறேன் பெண்ணே" என்ற அரிவி வெட்டு நடனத்தை ஆடுவோம்.

**நேரம்** : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தரவிருத்தி உள்ளீடுக்கள்** :

- "அரிவி வெட்டப் போறேன் பெண்ணே" என்ற அரிவி வெட்டுப் பாடல் எழுதப்பட்ட அட்டை
- ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி
- தட்டுக்கழி, தட்டுப்பலகை
- செயற்பத்திரம் 3.5.8.2, பின்னிணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**
**படி 3.5.8.1**

- ஏற்கனவே ஆடப்பட்ட அரிவி வெட்டு நடனத்தை நினைவூட்டுங்கள்.
- "அரிவி வெட்டப் போறேன் பெண்ணே" என்ற அரிவி வெட்டுப் பாடல் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப் படுத்துங்கள்.
- ஒலிப்பதிவுக் கருவியை ஒலிக்கச் செய்து குறிப் பிட்ட பாடலைச் செவிமடுக்கச் செய்யுங்கள்.
- செவிமடுத்த பாடலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையிற் கலந்துரையாடி நெறிப்படுத்துங்கள்.

- அரிவி வெட்டு நடனத்தின் சிறப்பம்சங்கள்.
- நமஸ்காரத்துடன் வகுப்பை ஆரம்பித்தல்.
- எடுத்துக் கொண்ட பாடல் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தி அதன் இராக தாளத்தைக் குறிப்பிடுதல்.
- பாடலை ஆசிரியர் பாட மாணவரும் இணைந்து பாடுதல்.
- அரிவி வெட்டு நடனத்தினைச் செயன்முறை ஒழுங்கில் ஆசிரியர் ஆட மாணவரும் சேர்ந்து ஆடச் செய்தல்.
- ஆசிரியரும் மாணவரும் முழுமையாக ஆடுதல்.
- மாணவரைக் குழுவாகவோ, தனியாகவோ ஆடச் செய்தல்.

(15 நிமிடங்கள்)

**படி 3.5.8.2** :

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் அரிவி வெட்டு நடனத்தைப் பாடி ஆடிப் பயிற்சி செய்கின்றனரா என உறுதி செய்து ஆலோசனை வழங்குங்கள்.

(15 நிமிடங்கள்)

**படி 3.5.8.3** :

- ஒவ்வொரு குழுவும் அரிவி வெட்டு நடனத்தை ஆடச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு ஆடும் போது மற்றைய குழுக்கள் அதனை அவதானித்துக் தமது கருத்துக்களைக் கூற இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்தும் வகையிற் கலந்துரையாடுங்கள்.

> - அரிவாள் உபயோகித்து ஆடலில் ஈடுபடுவது அறுவடை சம்பந்தமான செயல்கள் முதலியன அரிவி வெட்டு நடனத்தின் சிறப்பம்சங்களாகும்.
> - எடுத்துக்கொண்ட அரிவி வெட்டுப் பாடல் அமைந்துள்ள இராகம், தாளம் என்பவற்றைக் குறிப்பிடுதல்.
> - பாடலை ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து பாடுதல்.
> - அரிவி வெட்டு நடனத்தை ஆசிரியரும் மாணவரும் முழுமையாக ஆடி நிறைவு செய்தல்.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. அரிவி வெட்டு நடனத்தின் சிறப்பம்சங்களைக் குறிப்பிடுவார்.
2. எடுத்துக்கொண்ட அரிவி வெட்டுப் பாடலின் இராக, தாளத்தினைக் கூறுவார்.
3. குறித்த அரிவி வெட்டுப் பாடலை இராக, தாளத்துடன் முழுமையாப் பாடுவர்.
4. கற்றுக் கொண்ட அரிவி வெட்டு நடனத்தை முழுமையாக ஆடி நிறைவு செய்வர்.

## செயற்பத்திரம் 3.5.8.2

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை இணைப்புடன் சேர்த்து வழங்குங்கள்.

1. அரிவி வெட்டு நடனத்தின் சிறம்பம்சங்கள் எவை?
2. நீர் கற்றுக் கொண்ட அரிவி வெட்டுப் பாடலின் இராக, தாளத்தைக் குறிப்பிடுக.
3. குறித்த பாடலை முழுமையாகப் பாடுக.
4. நீர் கற்றுக் கொண்ட அரிவி வெட்டு நடனத்தை முழுமையாக ஆடி நிறைவு செய்க.

**இணைப்பு**

### அரிவி வெட்டுப் பாடல்

சங்கராபரண இராக ஸ்வரஸ்தானங்கள் தாளம் : சதுஸ்ரம்

| | | | |
|---|---|---|---|
| ஸாஸக | காகா | கமாம | மாமா |
| தெந்தென் | னாதென் | னா-தெ | னன்னு |
| காமா | பாமா | மமாப | கா |
| தெந்தென் | னாதென் | னா- | -- |
| ஸாஸக | ; கா | கமாபம | மபாமா |
| தென்னா | , தெ | னா - தெ | னென்னா |
| காமா | பாமா | மா; | , ; , , |
| தெந்தென் | னாதென் | னா- | -- |

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஸாஸக | காகா | கமாம | மாமா |
| | தெந்தென் | னாதென் | னா-தெ | னன்னு |
| 2. | காமா | பாமா | மமாப | கா |
| | தெந்தென் | னாதென் | னா- | -- |

1. அரிவி வெட்டப் போறேன் - பெண்ணே
அரிவாளைக் கொண்டா - நானும்
அறியாமல் சொல்லிப் போட்டேன்
பழஞ் சோற்றைக் கொண்டா

2. நண்டு நறுக்கிப் பொன்னி
ஆணமும் காச்சி
நாலாழி நெல்லுக்குத்திச்
சோறுமாக்கி

3. கொண்டை குலையக் குலையச்
சுமந்த சோற்றை நானும்
கும்பிட்டாலும் இறக்குவேனா
ஏந்திழைப் பொன்னா

4. சுடலை தன்னில் வீற்றிருக்கும்
சாம்பலைப் பூசி - அவர்
சுத்த வெள்ளை யானாரடி
உங்கள் சிவனார்

5. வீடு வாசலில்லாமலே
காட்டில் திரிந்து - அவர்
கடல் மேலே பள்ளி கொண்டார்
உங்கள் பெருமான்.

---***---

**தேர்ச்சி 4.0** : பரத நாட்டியம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.5** : பரத நாட்டிய கச்சேரி அமைப்பு முறைகளையும் அணிசேர் இசைக் கருவிகளையும் விளக்கி வாக்கேய காரர்களின் வாழ்க்கை வரலாறுகளையும் அவர் தம் கலைத் தொண்டினையும் அறிந்து மதிப்பிடுவார்.

**செயற்பாடு 4.5** : பரத நாட்டிய சம்பிரதாய உருப்படிகளின் இலட்சணங்களைக் கற்றுக் கொள்வோம்.

**நேரம்** : 02 மணித்தியாலம் 40 நிமிடங்கள் (04 பாடவேளைகள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- பரத நாட்டிய சம்பிரதாய உருப்படிகளின் (நிருத்த, நிருத்திய) ஒளி, ஒலி நாடாக்கள்.
- உருப்படிகளின் உடை, ஒப்பனைகளடங்கிய படங்கள்.
- செயற்பத்திரம் 4.5.2, பின்னிணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**
**படி 4.5.1**

- பரத நாட்டிய சம்பிரதாய உருப்படிகளை ஒளி நாடாக்கள் மூலம் காட்சிப்படுத்தல்.
- காட்சிப்படுத்திய உருப்படிகளில் நிருத்த, நிருத்திய உருப்படிகளை வகைப்படுத்தல்.
- நிருத்த நிருத்திய உருப்படிகளிடையே உள்ள வேறுபாடுகளைப் பற்றிய வினாக்களை எழுப்பி கலந்துரையாடலை மேற்கொள்வதன் மூலமாக பின்வரும் விடயங்களை வலியுறுத்தல்.

> - பரத நாட்டிய சம்பிரதாய உருப்படிகள்
> - பரத நாட்டிய சம்பிரதாய உருப்படிகளை ஒரு கச்சேரி அமைப்பு முறைக்குள் கொண்டு வந்தவர்கள்.
> - நிருத்த, நிருத்திய உருப்படிகள்
> - இவ்வுருப்படிகளின் சிறப்பம்சங்கள்
> - இவ்வுருப்படிகளை இயற்றியவர்கள்
> - பரத நாட்டிய சம்பிரதாய உருப்படிகளின் உடை, ஒப்பனைகள்

(50 நிமிடங்கள்)

**படி 4.5.2** :

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- செயற்பத்திரத்திற்கமைவாக செயற்படுகின்றனரா என உறுதிசெய்து கொள்ளுங்கள்.

(60 நிமிடங்கள்)

**படி 4.5.3** :

- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்திற்கு அளித்த பதில்களை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழு முன்வைத்த விடயத்தை ஏனைய குழுவினர் அவதானித்து கருத்துக்களைக் கூற இடமளியுங்கள்.
- மாணவர் முன்வைத்தவற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்தும் வகையிற் கலந்துரையாடுங்கள்.

- அலாரிப்பு, ஜதீஸ்வரம், சப்தம், வர்ணம், பதம், கீர்த்தனை, ஜாவளி, அஷ்டபதி, தில்லானா, ஸ்லோகம் ஆகியன் பரத நாட்டிய சம்பிரதாய உருப்படிகள்.
- இவ்வுருப்படிகளை ஒரு கச்சேரி அமைப்பு முறைக்குள் தஞ்சை சகோதரர்கள் கொண்டு வந்தனர்.
- அலாரிப்பு, ஜதீஸ்வரம் நிருத்த உருப்படிகள்
- சப்தம் வர்ணம், பதம், கீர்த்தனை ... நிருத்திய உருப்படிகளாகும்.
- அபிநயங்கள் இன்றி தாளக் கட்டுக்கோப்புக்குள் அடங்கும் உருப்படி நிருத்த உருப்படியாகும்.
- தாளக் கட்டுக்கோப்புக்குள் அடங்கி அபிநயத்தினை வெளிப்படுத்தும் உருப்படி நிருத்தியமாகும்.
- அஷ்டபதி என்னும் உருப்படியை இயற்றியவர் ஜெயதேவர்.
- பரத நாட்டிய சம்பிரதாய உடை பஞ்சகச்சமாகும்.
- பரத நாட்டியத்திற்குரிய பொதுவான ஒப்பனைகள்

(50 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. பரத நாட்டிய சம்பிரதாய உருப்படிகளைக் குறிப்பிடுவார்.
2. இவ்வுருப்படிகளை இயற்றியவர்களின் பெயர்களைக் குறிப்பிடுவார்.
3. இவ்வுருப்படிகளை கச்சேரி முறையில் ஒழுங்கமைத்தவர் பெயர்களைக் குறிப்பிடுவார்.
4. நிருத்த நிருத்திய உருப்படிகளை வகைப்படுத்துவார்.
5. பரத நாட்டிய சம்பிரதாய உருப்படிகளின் இலட்சணங்களைக் கூறுவார்.
6. பரத நாட்டியத்திற்குரிய உடை, ஒப்பனைகள் பற்றிக் கூறுவார்.

## செயற்பத்திரம் 4.5.2

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை இணைப்புடன் சேர்த்து வழங்குங்கள்.

1. பரத நாட்டிய சம்பிரதாய உருப்படிகளைத் தருக..
2. இவ்வுருப்படிகளை ஒரு கச்சேரி அமைப்பு முறைக்குக் கொண்டு வந்தவர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
3. பரத நாட்டிய சம்பிரதாய உருப்படிகளில் இடம்பெறும் நிருத்த உருப்படிகளை வகைப்படுத்துக.
4. இவ்வுருப்படிகளில் இடம்பெறும் நிருத்திய உருப்படிகளை வரிசைப்படுத்துக.
5. நிருத்த நிருத்திய உருப்படிகளின் சிறப்பம்சங்களைத் தருக.
6. பரத நாட்டிய சம்பிரதாய உடையினைத் தருக.
7. அஷ்டபதி என்னும் உருப்படியை இயற்றியவர் யார்?

## பின்னிணைப்பு

**அலாரிப்பு** : அலர் என்ற சொல் தமிழில் மலர்வது என்று பொருள்படும். இவ்வுருப்படி நடனமாடுவர். தன் உடலை மலராக நினைத்து அதனைக் கடவுளுக்கு அர்ப்பணம் செய்வது போல் அமைக்கப்பட்டுள்ளது. உருப்படிகளில் வரிசையில் இது ஆரம்ப நிகழ்ச்சியாக விளங்கும். குரு, தெய்வம், சபையினர் என்போர்க்கு அஞ்சலி செலுத்தும் உருப்படியாகும். அபிநயங்கள் இன்றி “தாம் திதா தெய் ததெய்” என்னும் சொற் கட்டுக்கு விளம்ப, மத்திம, துரித காலங்களில் இடம்பெறுகின்றது. இவ்வுருப்படி நாட்டை இராகத்திலும் திஸ்ர ஏக தாளத்திலும் அமைந் துள்ளது. நாட்டியத்திற்குரிய அங்க, பிரத்தியாங்க, உபாங்கங்களால் தாளக் கட்டுக்கோப்புக்குள் அமைந்த உருப்படியாகும். இது மரபுவழி வந்த ஓர் உருப்படியாகும். அலாரிப்பு திஸ்ர, சதுஸ்ர, கண்ட, மிஸ்ர, சங்கீர்ண நடைகளிலும் இடம்பெறுகின்றது.

**ஜதிஸ்வரம்** : அலாரிப்பிற்கு அடுத்த நிகழ்ச்சி ஜதீஸ்வரமாகும். இது ஸ்வரங்களையும், ஜதிகளையும் கொண்டதாக இருக்கின்றது. இது பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற பகுதிகளையுடையதாக இருக்கின்றது. இவ்வுருப்படியினை மேலும் மெருகூட்டுவதற்காக மெய்யடவு ஜதிஸ்வரத்தின் ஆரம்பத்திலும் சில கோர்வைகளின் இறுதியிலும் செய்யப்படுகின்றது.

ஜதீஸ்வரத்தில் ஸ்வரங்களுக்கு ஏற்றவாறு கோர்வைகள் அமைக்கப் பட்டுள்ளது. ஒரு பல்லவிக்கு பல அடவு கோர்வைகள் அமைக்கப் பட்டிருக்கும். கோர்வைகள் யாவும் தாளக்கதியாலும் அடவுகளினாலும் வேறுபட்டிருக்கும். ஜதீஸ்வரம் பல இராகங்களிலும், தாளங்களிலும் கையாளப்பட்டு வருகின்றது. இவ்வுருப்படியை பொன்னையாபிள்ளை, ஸ்வாதித் திருநாள் மகாராஜா போன்றோர் இயற்றியுள்ளனர்.

**சப்தம்** : நாட்டிய உருப்படிகளின் வரிசையில் மூன்றாவதாக இடம்பெறும் உருப்படியாகும். முதலில் அபிநயத்தை அறிமுகப்படுத்தும் உருப்படியும் இதுவாகும். இவ்வுருப்படி சிவபெருமான், கண்ணன், முருகப்பெருமான், ஸ்ரீராமன் மேல் பாடப்பட்டவையாகும். இவ்வுருப்படி பெரும்பாலும் இராகமாலிகையாகவும் மிஸ்ர சாபு தாளத்திலும் அமைந்துள்ளது.

சப்தம் என்பது இறைவனைப் புகழ்ந்து பாடுதல் எனப் பொருள் படும். இவ்வுருப்படி ஜதியுடன் ஆரம்பமாகும். தொடர்ந்து சாகித்தியம் இடம்பெறும் இதற்கு அபிநயம் செய்யப்படும். சாகித்தியத்திற்கு நேர்க்கை, சஞ்சாரிக்கை என பாவத்திற்கு ஏற்றவாறு அபிநயங்கள் செய்யப்படும். இவ்வுருப்படியின் ஆரம்பத்திலும், இடையிலும் இறுதி யிலும் ஜதிகள் அமைந்துள்ளன.

சப்தத்தில் கிருஷ்ண சப்தம், மண்டுக சப்தம், கோதண்டராம சப்தம் என்று பல வகை சப்தங்கள் உண்டு. இதன் இறுதியில் "சலாமுரே" அல்லது "நமோஸ்துதே" இடம்பெறும்.

**வர்ணம்** : பரத நாட்டிய நிகழ்ச்சியில் சப்தத்தைத் தொடர்ந்து வரும் நிகழ்ச்சி யாகிய வர்ணம் ஒரு நாட்டிய நிகழ்ச்சியின் சிகரமாக விளங்குகிறது. வர்ணம் என்பது இசைக்கும் நடனத்திற்கும் பொதுவானது. இசைக் குரியது தானவர்ணம் என்றும் நடனத்திற்குரியது பதவர்ணம் என்றும் அழைப்பர். வர்ணம் பூர்வாங்கம், உத்தராங்கம் என்னும் இரு பிரிவுகளை உடையது. பூர்வாங்கம் என்பது பல்லவி, அனுபல்லவி முக்தாயிஸ்வரம் என்ற கிரமத்தைக் கொண்டுள்ளது. உத்தராங்கம் சரணம், சரண ஸ்வரங்கள் என்பவற்றைக் கொண்டிருக்கும். சரணத்திற்கு எத்துக்கடைப் பல்லவியென்றும், உப பல்லவியென்றும், சிட்டைப் பல்லவியென்றும் வேறு பெயர்கள் உண்டு. பதவர்ணம் சௌக காலத்திலேயே அமைந் துள்ளது. பதவர்ணங்களில் எல்லா அங்கங்களுக்கும் சாகித்தியம் உண்டு. இவ்வுருப்படி ஆரம்பிக்கும் போது திரிகாலத் தீர்மான மொன்றுடன் ஆரம்பிக்கின்றது. பத வர்ணங்களின் சாகித்தியம் பெரும்பாலும் சிருங்கார ரஸத்தினையே உணர்த்துகின்றது. பதவர்ணத் திற்கு சௌக வர்ணமென்றும் ஆடவர்ணமென்றும் வேறு பெயர்கள் உண்டு. ஜதிகள் உள்ள பதவர்ணங்களும் உள்ளன. அவை பதஜதி வர்ணங்கள் எனப்படும்.

**பதம்** : பதம் என்ற சொல் பொதுவாக வார்த்தைகளைக் குறிக்கும். பொதுவாக பதங்கள் நாட்டியத்திற்காகவே அமைக்கப்பட்டவை. இது அபிநயத் திற்கே முழுவதும் உரியதாக அமைக்கப்பட்டுள்ளது. சங்கீத சாஸ்திர முறைப்படி பதமென்பது நாயக நாயகி பாவம் நிறைந்தது. நாட்டியத்திற்காக அமைக்கப்பட்டிருப்பினும் அதன் தாதுவின் அழகிய அமைப்பை (மெட்டு) இட்டு இசைக்கச்சேரிகளிலும் பாடுவதுண்டு.

இது சிருங்கார பாவத்தினை வெளிப்படுத்தக்கூடிய உருப்படியாகவே இருக்கின்றது. நாயகி ஜீவாத்மாகவும், நாயகன் பரமாத்மாகவும் இருப்பதனால் ஜீவன் முக்திக்கு இது உதவி செய்கிறதாய் அமைந்து, மதுர பக்தியை வெளிப்படுத்துகிறது.

பதங்களை லோகதர்மி, நாட்டியதர்மி ஆகிய இருவகைகளிலும் அபிநயிக்கலாம். பதங்களில் சௌககாலப் பதங்கள், மத்யம கால பதங்கள் என உண்டு. இவை சிருங்கார ரஸம் மட்டும் தருவனவாக அல்லாது பக்தியையும் தரக்கூடியனவாக உள்ளன. பதங்களுக்கு பல்லவி, அனுபல்லவி சரணம் ஆகிய அங்கங்கள் உண்டு. சில பதங்களின் அனுபல்லவியின் அல்லது கடைசி சரணத்தில் இயற்றியவரது முத்திரை அமைந்திருக்கும்.

மாரிமுத்தாப்பிள்ளை, முத்துத்தாண்டவர் போன்ற வாக்கேயகாரர்கள் தமிழில் சொற்பதங்கள் நிந்தாஸ்துதிபதங்களும் அதிகம் இயற்றி இருக்கிறார்கள். கனம் கிருஷ்ணையர், சுப்பராமையர் பாபநாசம் சிவன் ஆகியோரும் தமிழ்ப் பதங்களை இயற்றியுள்ளனர்.

**கீர்த்தனை** : கீர்த்தனை என்னும் சொல் இசைப்பாடல் புகழ்ச்சி எனப் பொருள்படும். கீர்த்தனைகள் கிருதிகளுக்கு முன்னோடியாகும். 15 ஆம் நூற்றாண்டில் தாளப்பாக்கம் அன்னமாச்சாரியார் அவர்கள் இதனை உருவாக்கினார். இவை பல்லவி, சரணம் என்ற அங்கங்களையுடையன. பின் 16ஆம் நூற்றாண்டில் புரந்தரதாசர் பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகிய பிரிவுகளை அறிமுகப்படுத்தினார்.

கீர்த்தனைகள் பக்திச்சுவை மிகுந்தவைகளாகும். இவ்வுருப்படியில் சாகியத்தைப் பாடுவதற்கு தாது ஒரு கருவியாக உபயோகிக்கப்படு கின்றது. கீர்த்தனைகளில் சாகித்தியமே முக்கிய அம்சமாகும். இதனை தியாகராஜர், கோபால கிருஷ்ணபாரதி, மீனாட்சி சுந்தரம்பிள்ளை, பாபநாசம் சிவன், பொன்னையாபிள்ளை போன்றோர் எழுதியுள்ளனர்.

**ஜாவளி** : சிருங்கார ரசத்தையும், நாயக, நாயகி, சகி பாவத்தையும் வெளிப் படுத்தும் ரீதியில் 19 ஆம் நூற்றாண்டில் தோன்றிய உருப்படியே ஜாவளியாகும். இதன் அமைப்பு உற்சாகம் ஊட்டக்கூடியதாகவும், சுலபமானதாகவும் இருக்கும். ஜாவளி, மத்திம, துரித காலங்களில் அநேகமாக பாடப்படும் சில ஜாவளிகள் பல்லவியைத் தொடர்ந்து பல சரணங்களைக் கொண்டிருக்கும். இவை தெலுங்கிலும், கன்னடத் திலும் தமிழிலும் இருக்கின்றன. அநேகமாக நாயகி சகி ஆகியோரால் பாடப்படும் வகையிலேயே அமைந்துள்ளது. இதனை தர்மபுரி சுப்பராயர், பட்டாபிராமையர், ஸ்வாதித்திருநாள், செங்கல் வாராய சாஸ்திரி, பெல்லரி ராஜாராவ், வித்யால நாராய ஸ்வாமி, பூச்சிஸ்ரீனிவாச அய்யங்கார், வெங்கரியப்பா போன்றோர் இயற்றினர்.

**அஷ்டபதி** : ஜயதேவரால் இயற்றப்பட்ட ஒரு உருப்படியாகும். இதனை கீத கோவிந்தம் என்று அழைப்பர். ராதை, கிருஷ்ணன், சகி ஆகிய மூவருமே இக்காவியத்தின் கதாபாத்திரங்களாவர். இது கிருஷ்ணபர மாத்மாவிடம் ராதை கொண்ட அன்பினை சித்தரித்துக் காட்டுவதாக அமைக்கப் பட்டுள்ளது. எட்டுக் கண்டிகைகளைக் கொண்டமையால் அஷ்டபதி எனப் பெயர் பெற்றது. பல இராகங்களிலும் தாளங்களிலும் அமைந் துள்ளது. இவ்வுருப்படி சிருங்கார ரசத்தையே பிரதானமாகக் கொண்டு அமைந்துள்ளது. எட்டுக் கண்டிகைகளைக் கொண்டமையால் அஷ்டபதி எனும் பெயரைப் பெற்றது.

**தில்லானா** : திரித்தில்லானா என்னும் தேசிய வகையினின்று உதித்ததே தில்லானாவாகும். உணர்ச்சியை தட்டி எழுப்பவல்ல வகையில் அமைக்கப்பட்ட நாட்டிய, சங்கீத உருப்படி சொற்கட்டுக்களையே மையமாகக் கொண்டு இயற்றப்பட்ட உருப்படி. இது ஜதிபோல் உச்சரிக் கப்பட்டமையால் பாடப்படும் இசை உருப்படியாகும். இதன் சாகித் தியத்தில் ஸ்வரங்களும், ஜதிகளும் கலந்து வருகின்றன. இதன் அங்கங்கள் பல்லவி சரணம் ஆகியனவாகும். சிலவற்றில் அனுபல்லவியும் உண்டு. இது நாத்துருதீம், உதரதீம் தனதிரனா, தீம், தத்தீம் தீம் போன்ற சொற்கட்டுக்களை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கும். இவ்வுருப்படியை மகாவைத்தியநாதையர், ஸ்வாதித் திருநாள் மகாராஜா, இராமநாதபுரம் சீனிவாசையர். எம்..டி. இராமநாதன், சு. பொன்னையா பிள்ளை, என். தண்டாயுதபாணி பிள்ளை, முரளீதரன் போன்றோர் இயற்றியுள்ளனர்.

**சுலோகம்** : தாளத்தில் பாடப்படாது கவிதைகளை இராகமாக நீட்டிப்பாடுவதற்கு விருத்தம் என்றும் ஸ்லோகம் என்றும் கூறுவர். இதனை தமிழில் வசந்தம் என்றும் வடமொழியில் ஸ்லோகம் என்றும், தெலுங்கில் பத்யம் என்றும் கூறுவர். இம் மூன்று சொற்களும் கவிதையையே குறிக்கும். கிருஷ்ணா காளாபிந்தம் போன்ற வடமொழி கவிதைகளும் நடராசர் பந்து திருவாசகம், பிள்ளைத்தமிழ் போன்ற தமிழ் மொழி கவிதைகளும் பாடப்பட்டு ஆறஅமர அபிநயிப்பர்.

**தேர்ச்சி 5.0** : பரத நாட்டியம், கிராமிய நடனம் என்பன பற்றியும், இலங்கையின் தேசிய கலாசார நடனங்களில் வரலாற்றும் பின்னணி பற்றியும், இவற்றின் இசை பற்றியும், விபரிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 5.2** : சமய விழாக்களிலும் சமூக விழாக்களிலும் இடம்பெறும் கிராமிய நடனங்களினதும் அவற்றின் இசையினதும் கலாசார பின்னணியை அறிந்து விளக்குவார்.

**செயற்பாடு 5.2.1** : திருப்பாவை, ஒளி விழாவில் பாடப்படும் பாடல்களின் சிறப்பினைக் கற்போம்.

**நேரம்** : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- திருப்பாவைப் பாடல்கள் பதியப்பட்ட இறுவட்டு அல்லது ஒலி நாடா யேசுகிறிஸ்துவின் பிறப்பையொட்டி ஒளி விழாக்களில் இடம்பெறும் நடனங்கள் பாடல்கள் பதியப்பட்ட ஒலி, ஒளி நாடாக்கள்.
- படங்கள்
- செயற்பத்திரம் 5.2.2, பின்னிணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**
**படி 5.2.1.1**

- மார்கழி மாதத்தில் அனுஷ்டிக்கப்படும் சமய, சமூக விடயங்களைக் கேட்டறிதல்.
- திருப்பாவை, ஒளி விழா பாடல் அடங்கிய ஒளி நாடாக்களை காட்சிப்படுத்தல்.
- திருப்பாவை விரதம் அனுஷ்டிக்கப்படும் நோக்கம், ஒளி விழா கொண்டாடுவதன் நோக்கம் பற்றியும் கீழ்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளல்.

> - மார்கழி மாதத்தில் இடம்பெறும் விரதங்கள், விழாக்கள் அவற்றில் இசைக்கப்படும் பாடல்களும் அவற்றின் தன்மையும்.
> - திருப்பாவை ஆண்டாள் பாடியது
> - ஒளிவிழாப் பாடல்கள் மேலைத்தேய இசை கீழைத்தேய இசையை ஒட்டியவை
> - ஒளிவிழாப் பாடல்கள் கிறிஸ்து பிறப்பை அடிப்படையாகக் கொண்டவை
> - திருப்பாவைப் பாடல்களின் சிறப்பு

(10 நிமிடங்கள்)

**படி 5.2.1.2** :

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குக.
- திருப்பாவை, ஒளிவிழா தொடர்பான இணைப்புப் பத்திரத்தை ஒவ்வொரு குழுவிற்கும் வழங்குக.
- இணைப்புப்பத்திரத்தைப் பயன்படுத்தி செயற்பத் திரத்திற்கமைவாக செயற்படுகின்றனரா என உறுதி செய்து கொள்ளுங்கள்.

(15 நிமிடங்கள்)

**படி 5.2.1.3** :

- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்திற்கு அளித்த பதில்களை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழு முன்வைத்த விடயத்தை ஏனைய குழு வினரும் அவதானித்துக் கருத்துக்களைக் கூற இடமளியுங்கள்.
- மாணவர்கள் முன்வைத்தவற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்தும் வகையிற் கலந்துரையாடுங்கள்.

> - யேசு கிறீஸ்து மானிடரை மீட்க மண்ணில் மனிதனாகப் பிறந்தார்.
> - இவருடைய பிறப்பையொட்டி ஒளிவிழா கொண்டாடப்படுகின்றது.
> - ஒளிவிழாப் பாடல்களின் இசையமைப்பு மேலைத்தேய, கீழைத்தேய மரபை ஒட்டிய வாறு அமைந்துள்ளது.
> - மார்கழி 25ஆம் திகதி கிறிஸ்து பிறப்பு கொண்டாடப்படுகின்றது. (கிறிஸ்தவர்களால் அனுஷ்டிக்கப்படுகின்றது)
> - மார்கழி மாதத்தில் இந்துக்களால் அனுஷ்டிக் கப்படும் விரதங்கள் - திருவெம்பாவை, திருப்பாவை.
> - திருப்பாவை ஆண்டாள் பாடியது. நாயகன் நாயகி பாவத்தினை வெளிப்படுத்துகின்றது.
> - இறைவனை நாயகனாகவும், தன்னை நாயகி யாகவும் கருதிப் பாடியதாக பாடல்கள் அமைந் துள்ளமை.
> - ஜீவாத்மா பரமாத்மா தொடர்பினை விளக்கு வதாக அமைந்துள்ளமை.
> - ரஸ பாவத்துடன் பாடலைப் பாடக் கூடியதாக வும் அபிநயிக்கக் கூடியதாகவும் உள்ளமை.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. திருப்பாவைப் பாடல்களின் சிறப்பம்சங்களைக் குறிப்பிடுவார்.
2. திருப்பாவை பாடிய சந்தர்ப்பம், பாடலில் வெளிப்படும் ரஸம் என்பவற்றைக் குறிப்பிடுவார்.
3. கிறிஸ்து பிறப்புப் பாடல்களின் சிறப்பம்சங்களைக் குறிப்பிடுவார்.
4. திருப்பாவைப் பாடல்கள் எழுந்த கலாசாரப் பின்னணியை விளக்குவார்.
5. ஒளிவிழாப் பாடல்களின் கலாசாரப் பின்னணியை விளக்குவார்.

## செயற்பத்திரம் 5.2.2

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை இணைப்புடன் சேர்த்து வழங்குங்கள்.

1. பாவை நோன்பு பற்றி நீர் அறிந்தவற்றை எழுதி திருப்பாவைப் பாடல்களில் ஒன்றினைக் கருத்துடன் தருக.
3. ஒளி விழா எக்காலத்தில் கொண்டாடப்படுகிறது?
4. யேசு கிறிஸ்து மண்ணில் அவதரித்தமை பற்றியும் பத்துக் கட்டளைகள் பற்றியும் விபரிக்குக.

**இணைப்பு**

## திருப்பாவை

எட்டடி நாற்சீரொருவிகற்பக் கொச்சகக் கலிப்பா

இராகம் : பிலஹரி
தாளம் : அடதாளம்

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளாம்
நீராடப்போதுவீர் போதுமினோநேரிழையீர்
சீர்மல்கும் ஆய்யாடிச் செல்வச் சிறுமீர்காள்
கூர்வேல் கொடுந் தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணியகோதை யிளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர் மதியம் போல் முகத்தான்
நாராயணனே நமக்கே பதை தருவான்
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்

இராகம் : காம்போதி
தாளம் : அடதாளம்

ஆழி மழைக்கண்ணா ஒன்று நீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்து கொடு ஆரந்தேறி
ஊழி முதல்வனுருவம் போல் மெய்கறுத்து
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்
தாழாதே சார்ங்க முதைத்த சரமழை போல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீ ராட மகிழ்ந்தேலோரெமபாவாய்

**இணைப்பு**

## கிறிஸ்தவப் பாடல்

### மல்லிகை மலர்ந்தது

மல்லிகை மலர்ந்தது சோலையிலே
மணமும் தந்தது பாரினிலே
யேசு பிறந்தது ஏழ்மையிலே
பெத்லகேம் என்னும் ஊரினிலே
பிறந்த நாள் இன்று பிறந்த நாள்
பாலன் யேசுவின் பிறந்த நாள்
நாம் மகிழ்ந்நிடுவோம் இன்று

வானவர் பாட ஆ... ஞானியர் தேட... ஆ...
இடையர்கள் நாட ... மானிடர் கூட ...
வானவர் பாட ஞானியர் தேட
இடையர்கள் நாட மானிடர் கூட
மார்கழி குளிரினில் மரியின் மடியினில்
மகிமையின் பாலன் உதித்தார் மண்ணில்

புது ஒளி பிறந்தது ஆ ... புனிதமும் மலர்ந்தது
மனதினிலே இணைந்தது ஆ ... மாட்சிமை புலர்ந்தது ஆ ...
புது ஒளி பிறந்தது புனிதமும் மலர்ந்தது
மனதினிலே இணைந்தது ஆ மாட்சிமை புலர்ந்தது ஆ
மங்கள இசையினில் ஆ நிறை தொழுவில்
மகிமையின் பாலன் உதித்தார் மண்ணில்

**இணைப்பு**

## திருப்பாவை

கோதை பாடியவை நாச்சியார் திருமொழி. திருப்பாவை முதலியவை.

இந்த நூலில் பாவை நோன்பை மேற்கொள்வதன் மூலம் ஆய்ச்சியர் கண்ணபிரானிடம் பெற்ற இன்பத்தை ஆண்டாள் விளக்கியுள்ளார்.

பாவை நோன்பு என்பது தொன்று தொட்டுத் தமிழகத்தில் நிகழ்ந்து வரும் ஒன்று. அது மார்கழி மாதத்தில் பெண்களால் மேற்கொள்ளப்படுவது. அந்நோன்பை மேற்கொள்வதால் நாடு வளம் பெறும். பெண்கள் தக்க கணவனை அடைவர் என்று கருதப்பட்டது. மார்கழி மாதத்தில் பெண்கள் வைகறையில் நீர்நிலைக்குச் சென்று நீராடி, மண்ணால் பாவை ஒன்றைச் செய்து அதை வழிபடுவர்.

'இதற்கு வேதத்தில் ஆதாரம் இல்லை ஆயினும் புராணத்தில் ஆதாரம்' உண்டு என்பர். பாகவதத்தில் காணப்படும் 'காத்யாயணீ விரதம்' இத்தகையதே ஆகும். இதற்குச் சங்கநூல்களில் ஆதாரம் காணப்படுகின்றது. பரிபாடல் இந்நோன்பு பற்றிக் கூறுகிறது.

**இணைப்பு**

## ஒளிவிழா

ஒன்றுமில்லாமையிலிருந்து இந்த உலகும், அதிலுள்ள அனைத்தும் படைக்கப்பட்டன என்கிறது வேதம். ஆதியில் மானிடனை இவையனைத்தையும் ஆளவென்று இறையவன் படைத்தான். அவன் தனித்திருப்பது நல்லதன்று என உணர்ந்ததால், துணையாக அவனது விலா எலும்பிலிருந்து பெண்ணை உருவாக்கினார். ஆனால், தொடரந்து நிகழ்ந்தது நல்லதாக இருக்கவில்லை. இறைவன் கொடுத்த கட்டளையை முதலில் பெண்ணும், அவன் மூலமாக ஆணும் மீறினர். இந்நிகழ்வானது இறைவனுக்குப் பெருஞ்சினத்தை உருவாக்கியது. எனவே தண்டித்தார்.

இதுவரை காலமும் இருந்த, வாழ்ந்த, அனுபவித்த உன்னத நிலை ஆதிமனிதருக்கு மறுக்கப்பட்டு இன்ப வனத்திலிருந்து துரத்தப்பட்டனர. இவர்கள் இழைத்த தவறால் பாவம் உலகைக் கௌவ்வியது. இறையருளை இழந்தது மனுக்குலம். ஆனால், மனுக்குலத்தின் மீது அன்பு கொண்ட இறையவனோ அவர்களை மீட்கவென ஒரு திட்டத்தினை முன்வைத்தார். பாவ இருளிலிருந்து மனிதரை மீட்டு மீண்டும் தன்னோடு ஒப்புரவாக்க விரும்பினார். அதற்கான முன்வைக்கப்பட்டதே 'மீட்புத்திட்டம்'. இதன் பிரகாரம் கன்னிப் பெண் கருத்தாங்கி ஒரு குமாரனைப் பெறவேண்டுமென்றும், அந்த குமாரனே உலகைப் பாவ இருளிலிருந்து மீட்டெடுப்பவரென்றும், அவர் மனிதனாகப் பிறந்தது தமது பாடுகள், மரணம், உயிர்ப்பினால் மீண்டும் தந்தை இறைவனுடன் மானிடரை ஒன்றுபடுத்துவார் என்பது அத்திட்டம்.

அவ்வாறு இறைமகன் கிறிஸ்து கன்னிப் பெண் மரியாவின் உதரத்தில் வந்து குழந்தையாகிப் பிறந்த நன்னாளே 'நத்தார் தினம்'. அதையே ஒளிவிழாவாக நினைவுபடுத்தி வருடா வருடம் கொண்டாடுகிறோம். மார்கழித்திங்கள் இருபத்து நான்காம் நாள் நள்ளிரவில் அவரது வருகையைப் பாடி வரவேற்கிறது கிறிஸ்தவ உலகம்.

அந்த நாள் மகிழ்வின் திருநாள். எனவே, அந்த மகிழ்வினை எல்லோரோடும் மகிழ்ந்து கொண்டாடுகின்றனர். ஆரம்பக் காலங்களில் இத்திருநாள் கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே உரிய ஒரு நாளாக இருந்த நிலை மாறி இன்று அகில உலகெங்குமுள்ள அனைத்து மக்களுக்கு முரியதாக மாறியுள்ளது. சாதி, மத, இன, பேதமின்றி அனைவரும் கொண்டாடுகின்றனர்.

இப்பண்டிகையையொட்டிக் கொண்டாடப்படும் விழாவே ஒளிவிழா ஆகும். இவ்விழாவில் பாலன் பிறப்பு பற்றிய நடன நிகழ்ச்சிகள், நாடகங்கள், இசை நாடகங்கள், நாட்டிய நாடகங்கள், வில்லுப்பாட்டு போன்றவை நடாத்தப்படும்.

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி 5.0** | : | பரத நாட்டியம், கிராமிய நடனம் என்பன பற்றியும், இலங்கையின் தேசிய கலாசார நடனங்களில் வரலாற்றும் பின்னணி பற்றியும், இவற்றின் இசை பற்றியும், விபரிப்பார். |
| **தேர்ச்சி மட்டம் 5.3** | : | சங்க காலம் தொடக்கம் சோழர் காலம் வரையிலான நடனக்கலை வரலாற்றுப் பின்னணியை விளக்குவார். |
| **செயற்பாடு 5.3** | : | சோழர் காலத்தில் நாட்டியக் கலை வளர்ச்சி பற்றிய விடயங்களைக் கற்போம். |
| **நேரம்** | : | 40 நிமிடங்கள் (01 பாடவேளை) |
| **தரவிருத்தி உள்ளீடுகள்** | : | • சோழர் காலத்தைய நடனம் சம்பந்தமான படங்கள்.<br>• நடன ஓவியம், சிற்பம் சம்பந்தமான படங்கள்.<br>• ஒலிப்பதிவு நாடா, பதி கருவி<br>• செயற்பத்திரம் 5.3.2, பின்னிணைப்பு |

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**
**படி 5.3.1**

- சோழர் காலத்தில் நடனம் சம்பந்தமான ஓவியம், சிற்பம், இவற்றுடன் தொடர்புடைய படங்களைக் காட்சிப்படுத்தல்.
- காட்சிப்படுத்தப்பட்ட படங்கள் புலப்படுத்தும் கருத்துக்களைக் குறிப்பிடல்.
- சோழர் காலத்தில் பரதக் கலையின் வளர்ச்சி பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

- சோழர் காலத்தில் நாட்டியக் கலை வளர்ச்சி பற்றிய விளக்கம்.
- ஆலயங்களிலே நடனசாலை அமைத்தமை
- ஆலயங்களில் நடனமாடுவதற்கென 400 தளிர்ச்சேரிப் பெண்டுகளை நியமித்தமை.
- இக்காலத்தில் தஞ்சை ராஜ ராஜேஸ்வரம் கோயில் கட்டப்பட்டது.
- குறிப்பிட்ட இக்கோயில் தஞ்சைப் பெரிய கோவில் என வழங்கப்பட்டமை.
- நவ சந்திகளில் நடனமாதர் நடனமாடியமை
- நடனக்கலை பற்றிய சாசனங்கள், கல்வெட்டுக்கள்.
- இக்காலத்தே பாடப்பட்ட தேவார திருப்பதிகங் களில் நடனம் பற்றிய குறிப்புகள்.
- தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் 108 (நடன) கரணங்கள்
- சோழர் காலத்தைய இலட்சினை

(10 நிமிடங்கள்)

**படி 5.3.2** :
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப சிறிய குழுக்களாகப் பிரியுங்கள்.
- சோழர் கால நடனக் கலை வளர்ச்சி தொடர்பான இணைப்புப் பத்திரத்தை ஒவ்வொரு குழுவிற்கும் வழங்குங்கள்.
- இணைப்புப் பத்திரத்தைப் பயன்படுத்தி, ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்திற்கு விடையளிக்க நெறிப்படுத்துக.

(20 நிமிடங்கள்)

**படி 5.3.3** :
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்திற்கு விடையளிக்க நெறிப்படுத்துக.
- ஒரு குழு முன்வைத்த விடயத்தை ஏனைய குழுவினரும் அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- மாணவர்கள் முன்வைத்த விடயத்தை அடிப்படையாக்க் கொண்டு பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்தும் வகையிற் கலந்துரையாடுங்கள்.

| |
|---|
| • சோழர் காலம் நடனக் கலையும் மற்றும் கவின் கலைகளும் வளர்ச்சி பெறுவதற்கான பின்னணியைக் கொண்டிருந்தமை<br>• இக்காலத்தே நிலவிய அரசியலில் சமய, சமூக, பொருளாதார ஸ்திரத்தன்மை நடனக் கலை மென்மேலும் வளர்ச்சி அடைவதற்குரிய பின்னணியாக அமைந்தமை<br>• சிவனின் 108 தாண்டவ நிலைகளும் சிற்பங்களாக தஞ்சைப் பெருவுடையார் கோயில் கர்ப்பக் கிருகத்தில் செதுக்கப்பட்டமை<br>• இக்காலத்தே ஆலயங்களில் தீட்டப்பட்ட ஓவியங்கள் நடனமாடும் மாதரைக் கொண்டவையாகத் திகழ்ந்தமை<br>• சோழர் காலத்து இலக்கியங்களில் நடனக் கலை பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றமை |

(10 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. சோழ மன்னர் காலத்தில் கலைகள் வளர்ந்தமைக்கான பின்னணியை விளக்குவார்.
2. சோழர் காலத்தில் பண்ணும் பரதமும் செழிப்புற்று வளர்ந்ததற்கான சான்றுகளைக் குறிப்பிடுவார்.
3. சோழ மன்னர்கள் நாட்டியக் கலைக்கு ஆற்றிய தொண்டினை மதிப்பிடுவார்.
4. சோழர் காலக் கலை வளர்ச்சி எத்துணையளவிற்கு நடனக் கலையில் செல்வாக்குச் செலுத்தியதென்பதை ஆராய்ந்து கூறுவார்.

## செயற்பத்திரம் 5.3.2

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை இணைப்புடன் சேர்த்து வழங்குங்கள்.

1. சோழர் காலத்தில் கலை இலக்கிய வளர்ச்சி ஏற்படுவதற்குத் துணை புரிந்த காரணிகள் எவை?
2. சோழ மன்னர்கள் கலை இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டினை ஆதாரங் களுடன் விபரிக்க.
3. அக்காலத்து கலை இலக்கிய வளர்ச்சி எத்துணையளவிற்கு பரதக் கலையில் செல்வாக்குச் செலுத்திய தென்பதை மதிப்பிடுக.

**இணைப்பு**

### சோழர் காலம்

தமிழ் இலக்கிய வரலாற்றிலே பொற்காலம் எனப் போற்றப்படுவதும் தமிழர்தம் கலை, கலாசாரப் பண்புகளைப் பேணிக் காத்தலில் முதலிடம் பெற்று விளங்குவதும் சோழர் ஆட்சிக் காலம்தான்.

தமிழ் நாட்டிலே பல்லவர், பாண்டியரைத் தொடர்ந்து சோழப் பெருமன்னர்கள் கி.பி 12ஆம் நூற்றாண்டு வரை ஆதிக்கம் பெற்றனர். வடக்கே கங்கை வரையும் தெற்கே மாலை தீவுகள், இலங்கை வரையும் தென்கிழக்குத் திசையாக இந்தோ- சீனத் தீப கற்பகம், சீனா வரையும் சோழர் புகழ் பரவிற்று.

அந்நிய படையெடுப்புகளின்றி அரசியல் ஸ்திரமாக இருந்ததனாலும், பொருளாதாரம் உன்னத நிலையில் இருந்தமையினாலும் சமூகக் கட்டுக்கோப்புக் காணப்பட்டமையினாலும் இக்காலத்திற் கலை இலக்கியங்கள் நன்கு செழிப்புற்று விளங்கின. கலைகளின் பொற்காலம் என விளங்கிய சோழராட்சியில் மக்கள் தன்னிறைவாக வாழ்ந்ததனால் கலைகளும் பிறர் தலையீடின்றிச் சுதந்திரமாகச் செழிப்புற்று விளங்கின. சோழமன்னரதும், மக்களதும் ஆதரவு கலை இலக்கியங்களுக்கு என்றும் இருந்தமை இக்காலத்திற்குரிய சிறப்பம்சமாகும்.

கி.பி 985-1014 வரை சோழ மண்டலத்தை ஆண்ட இராசராசன் சிதைந்து போன சோழ ஆட்சிக்குப் புத்துயிர் கொடுத்தான். அவன் போரில் வென்ற பல நாடுகளிலிருந்து கிடைத்த ஏராளமான வருவாயைக் கொண்டு தன் பேரரசின் கீர்த்தியை நிலைநாட்டுவதற்காகத் தஞ்சாவூரில் இராசேச்சரம் என்னும் பெரிய கோவிலைக் கட்டினான்.

இந்தியாவிலே கட்டப்பட்ட கற்கோவில்களில் மிகப் பெரிதான இதன் கோபுரத்தின் நிழல் நிலத்தில் விழாதவாறு அமைக்கப்பட்டுள்ளது. சோழர்களின் பொற்காலம் என அழைக்கப்படும் இராசராசனின் காலத்திலேயே பாடல் பெற்ற பல ஆலயங்கள் கட்டப்பட்டன. பல கோவில்களில் ஆடலும், பாடலும் சிறப்புற்றிருந்தன. கோவில்களில் தமிழ்க்கூத்து, ஆரியக்கூத்து, சாந்திக் கூத்து ஆடப்பட்டன.

கோவில்களில் பூஜை விழாக்கள் சிறப்பாக நடைபெறுவதற்குப் பல கிராமங்களை மானியமாக அரசன் கொடுத்தான். இக்காலத்திலேயே நம்பியாண்டார் நம்பி தேவாரங்களைத் தொகுத்தார். அவை திருமுறைகள் எனப்பட்டன. நீலகண்ட யாழ்ப்பாணரின் மரபில் வந்த பாணரைக் கொண்டு தேவாரங்களுக்கான பண்களை இராஜராஜன் வகுப்பித்தான். திருப்பதிகம் விண்ணப்பம் செய்ய 48 பேர் இருந்தனர். இவர்கள் பிற்காலத்தில் ஓதுவார் எனப்பட்டனர். உடுக்கை வாசிப்போன், கானம் பாடுவோர், ஆரியம் பாடுவோர், இசைபாடுவோர் எனச் சிலரும் கோவிற் பணிகளைச் செய்ய 400 தேவரடியார்களும் நியமிக்கப்பட்டனர் எனக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. இவர்கள் தளிர்சேரிப் பெண்டிர்கள் எனவும் அழைக்கப்பட்டனர். இவர்களுக்குக் கோவிலுக்கு வடக்கிலுந் தெற்கிலும் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. இசையில் வல்ல பெண்கள் கந்தர்விகள் எனப்பட்டனர். கந்தர்வர்கள் 75 பேர் இருந்தனர். கொட்டிமேளக்காரர், பக்க வாத்தியம், வீணை வாசிப்போர், வங்கியம் பாடுவோன், முரளியம், உடுக்கை வாசிப்போர், கானம் பாடுவோர், ஆரியம் பாடுவோர், இசைபாடுவோர் எனச் சிலரும் கோவிற் பணிகளைச் 400 தேவரடியார்களும் நியமிக்கப்பட்டனர் எனக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இவர்கள் தளிர்சேரிப் பெண்டிர்கள் எனவும் அழைக்கப்பட்டனர். இவர்களுக்குக் கோவிலுக்கு வடக்கிலுந் தெற்கிலும் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. இசையில் வல்ல பெண்கள் கந்தர்விகள் எனப்பட்டனர். கந்தர்வர்கள் 75 பேர் இருந்தனர். கொட்டி மேளக்காரர், பக்கவாத்தியம், வீணை வாசிப்போர், வங்கியம் பாடுவோன், முரளியம், உடுக்கை வாசிப்போர், சகடை, கரடிகை, உமர்கப்பறை முதலிய பறை அடிப்பவர்கள், கோவில் பண்டாரிகள் கணத்தை மெய்க்காப்பாளிகள், பரிசாரகம் செய்வோர், திருவிளக்கு இடுவோர், மாலை கட்டுவோர், வர்ணமிடுவோர், சோதிடர், தச்சர், தட்டார், கன்னர், குடியாதையார், நாவிதர், வண்ணார் முதலியவரும் நியமனம் பெற்றிருந்தனர். நடிகன் ஒருவன் ஆண்டுதோறும் 120 கல நெல் சம்பளமாகப் பெற்றான் எனச் சாசனங்கள் கூறுகின்றன.

மேலும் ராஜராஜ சோழன் காலத்தில் இவனது வரலாறு நாடகமாக எழுதி நடிக்கப்பட்டது. அத்துடன் குலோத்துங்க சோழன் காலத்திலே பூம்புலியூர் நாடகமும். நடைபெற்றதாகக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

திருவிடை மருதூரைச் சேர்ந்த கூத்தில் வல்லான் ஒருவனுக்கு சாக்கைமாராயன் என்ற பட்டமிருந்தது எனக் கல்வெட்டுக் கூறுகின்றது, பலவித நடனசாலைகள் பற்றிப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. தஞ்சைப் பெரிய கோவிலின் நடனசாலை பற்றி கருவூர்த்தேவர் இராசேச்சுரத் திருப்பதிகத்திலும், திருவாவடுதுறைக்கோவில் ஒன்றிலே நானாவித நடனசாலை ஒன்று இருந்ததாகக் கல்வெட்டிலும் குறிப்பிடப்படுகின்றது.

சோழர் காலத்துப் பேரிலக்கியங்களான பெரியபுராணம், கம்பராமாயணம் ஆகியவற்றிலும் நடனம் பற்றித் தெளிவாகக் குறிப்பிடப்படுகிறது. மேலும் சோழர் காலத்துக் கோயிற் கிரியைகளிலே ஓர் அம்சமாக நடனம் இடம்பெற்றது. அரசர்களும் நடனக்கலையைக் கற்றார்கள். ராஜராஜனின் தங்கை நடனமாடுவதைப் போன்ற ஒரு சிற்பம் ரவிகுல மாணிக்க ஈஸ்வரர் கோவிலில் உண்டு.

நாட்டியத்திலே திறமை பெற்றவர்கள் தலைக்கோலிப்பட்டம் பெற்றனரென முதலாம் பராந்தகன் காலக் கல்வெட்டொன்று "மும்முடிச் சோழத் தலைக்கோலி" பற்றிக் குறிப்பிடுகின்றது.

"சிவபாதசேகரன்" எனும் விருதுப் பெயர் கொண்ட முதலாம் ராஜராஜ சோழன் நாட்டிய சாஸ்திரங் கூறும் 108 கரணங்களைக் கல்லிலே வடிக்க எண்ணி கி.பி 11ஆம் நூற்றாண்டில் 1-81 வரையுள்ள கரணங்களைத் தஞ்சைப் பெருவுடையார் கோவிற் கர்ப்பக் கிரகத்தின் மேல் மாடியில் அமைப்பித்தான். கும்பகோணம் சாரங்கபாணிக் கோவிலிலும் இக்கரணங்களை அமைப்பித்தான்.

மேலும் பல நாட்டிய நாடகங்களும் அக்காலத்தில் ஆடப்பட்டன. எடுத்துக்காட்டாக மூவர் உலா, ஒட்டக் கூத்தர் இயற்றிய தக்கயாகப் பரணி முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

சோழர் காலத்தில் நாட்டியக் கலை ஓர் உன்னத நிலையிலிருந்ததென்பதற்கு அக்காலத்து சிற்பங்கள், சாசனங்கள், இலக்கியங்கள், ஓவியங்கள் ஆகியன சான்று பகர்கின்றன.

**தேர்ச்சி 1.0** : பரத நாட்டிய நிகழ்ச்சிகளையும் கிராமிய நடன நிகழ்ச்சிகளையும் பார்த்து தாம் நயந்தவற்றை வெளிப் படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 1.3** : கலை நிறுவனங்களினால் நடாத்தப்படும் கலை நிகழ்ச்சிகளிலும் நடனப் போட்டிகளில் இடம்பெறும் நிகழ்ச்சிகளிலும் தாம் நயந்தவற்றைக் கூறுவார்.

**செயற்பாடு 1:3** : நிருத்திய உருப்படியான கீர்த்தனையை நயப்போம்.

**நேரம்** : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- கீர்த்தனையின் ஒலி, ஒளிப்பதிவு நாடா
- தொலைக்காட்சிக் கருவி
- வீடியோ, பதி கருவி
- செயற்பத்திரம் 1.3.2 பின்னிணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**
**படி 1.3.1**

- கீர்த்தனைகள் அடங்கிய ஒலி நாடாவை ஒலிக்கச் செய்தோ, ஆசிரியர் பாடிக் காட்டியோ, நிகழ்ச்சியை மாணவர்கள் நேரிடையாகப் பார்வையிடச் செய்தோ மாணவர்களை நயப்பதற்கு வழிவகுக்குக.
- கீர்த்தனைகள் அடங்கிய ஒளிப்பதிவு நாடாவை மாணவர்களுக்குப் போட்டுக்காட்டி, இவ் உருப் படியை நயக்கச் செய்தல்.
- ஏற்கனவே கற்றிருந்த கீர்த்தனைகளை நினைவு கூரல்.
- மாணவர்கள் கேட்டும் பார்த்தும் இரசித்த விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

> - கீர்த்தனைகளைச் செவிமடுக்கும் போது ஏற்படும் மன உணர்வுகள்.
> - கீர்த்தனையின் இசையமைப்பு, சாகித்தியத்தின் பாவம், பக்கவாத்தியங்களின் ஒத்திசைவு, அணிசேர்தன்மை.
> - பக்க வாத்தியங்களின் ஒத்திசைவுடன் கூடிய வெளிப்பாடு
> - ஆடை, ஆபரணங்கள், ஒப்பனை
> - கீர்த்தனையில் வெளிப்படுத்தப்படும் பக்தி உணர்வு, விறுவிறுப்பு
> - மேடையைக் கையாளுதல், பிரவேசித்தல், வெளியேறுதல்.
> - பார்வையாளரைக் கவரும் விதம்.
> - கீர்த்தனைகளைப் பார்த்தும் கேட்டும் மாணவர் களுக்கு உண்டான இரசனை.

(10 நிமிடங்கள்)

**படி 1.3.2** :

- மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து செயற் பத்திரத்தை வழங்குக.
- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப் பிக்கும் வகையில் ஆலோசனை வழங்குக.
- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பத்திரத்தைக் கொடுத்து மாணவர்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.

(15 நிமிடங்கள்)

**படி 1.3.3** :

- ஒவ்வொரு குழுவினரும் தமக்கு வழங்கப்பட்ட செயற்பத்திரத்தை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு முன்வைத்த விடயத்தை ஏனைய குழுவினரும் அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- மாணவர் முன்வைத்த கருத்துக்களை அடிப்படை யாகக் கொண்டு பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்தும் வகையிற் கலந்துரையாடுங்கள்.

- மாணவர்கள் அனைவரையும் கீர்த்தனைப் பாடல்கள், ஆடல்கள் அடங்கிய ஒலி, ஒளி நாடாக்களைப் பார்வையிடச் செய்தல்.
- கீர்த்தனைகளுக்கு உதாரணம் :-
  - ஏன் பள்ளி கொண்டீர் ஐயா - மோகனம்
  - நடனமாடினர் வெகு நாகரிகமாகவே கனக சபையில் ஆனந்த - வசந்தா
  - மயில்வாகனா வள்ளி மனமோகனா - மோகனம்
  - நீ உரைப்பாய் ஹனுமானே - இராகமாலிகை
- கீர்தனைகளை இயற்றியவர்கள்
  - அருணாசலக் கவிராயர்
  - கோபால கிருஷ்ண பாரதி
  - பாபநாசம் சிவன்
  - சங்கரதாஸ் சுவாமிகள்
- கீர்த்தனைகளின் பாடல்களையும் ஆடல்களை யும் கேட்டும் பார்த்தும் இரசிக்கும் போது ஏற்படும் சுவை உணர்வு
- இப்பாடல்களுக்குப் பொருத்தமான இசை யமைப்பு, பக்கவாத்தியங்களின் ஒத்திசைவு, அணிசேர்தன்மை
- கீர்த்தனையின் வடிவம் - பல்லவி அனுபல்லவி சரணம் கொண்டமை
- கீர்த்தனைகளில் மத்திம காலக் கீர்த்தனை சௌக காலக் கீர்த்தனை ஆகியவற்றின் விளக்கம்

- கீர்த்தனைகளில் இடம்பெறும் சொற்கட்டு, சிட்டை ஸ்வரங்கள் என்பன எவ்வாறு ஆடலுக்கு மெருகூட்டுகின்றன என்பது
- கீர்த்தனைகள் பெரும்பாலும் முருகன், நடராஜர், விஷ்ணு, துர்க்கை, விநாயகர், பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி தேவி ஆகிய தெய்வங்கள் மீது பாடப்பெற்றுள்ளமை.
- இவை பக்திச் சுவை ததும்பும் பாடல்கள்
- சாகித்தியத்தின் கருத்து, பாடலுக்குப் பொருத்தமான கை முத்திரைகளும், சஞ்சாரி பாவங்கள், பக்கவாத்தியங்களின் ஒத்திசைவு, சாகித்தியத்துக்குப் பொருத்தமான மெட்டமைப்பு, நட்டுவாங்கத்தின் பங்கும் சிறப்பும் போன்ற அம்சங்களை இரசிப்பதன் மூலம் முழுமையான விமர்சனத்தை வெளிப்படுத்துதல்.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. கீர்த்தனை ஒன்றைப் பார்த்தும் கேட்டும் நயந்த அனுபவத்தை விமர்சிப்பர்.
2. கீர்த்தனையின் அமைப்பு முறை பற்றி விமர்சிப்பர்.
3. கீர்த்தனைகளை இரசிப்பதன் மூலம் பாடலாசிரியரின் கலைப் படைப்பை மதிப்பிடுவார்.
4. பல வாக்கேயகாரர்களுடைய கீர்த்தனைகளைச் செவிமடுப்பதால், அவர்களின் பாடல்களையும், நாட்டிய அமைப்பியலாளரின் ஆற்றலையும், கற்பனை வளத்தையும் மதிக்கும் மனப்பாங்கினை வெளிப்படுத்துவார்.
5. இரசிப்பதன் மூலம் நடன மங்கையின் ஆற்றுகைத்திறனை எடுத்துரைப்பார்.

## செயற்பத்திரம் 1.3.2

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை இணைப்புடன் சேர்த்து வழங்குங்கள்.

1. நீர் பார்த்தும் கேட்டும் இரசித்த கீர்த்தனை பற்றி ஒரு விமர்சனக் கட்டுரை வரைக.

**தேர்ச்சி 1.0** : பரத நாட்டிய நிகழ்ச்சிகளையும் கிராமிய நடன நிகழ்ச்சிகளையும் பார்த்து தாம் நயந்தவற்றை வெளிப் படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 1.3** : கலை நிறுவனங்களினால் நடாத்தப்படும் கலை நிகழ்ச்சிகளிலும் நடனப் போட்டிகளில் இடம்பெறும் நிகழ்ச்சிகளிலும் தாம் நயந்தவற்றைக் கூறுவார்.

**செயற்பாடு 1.3.2** : பரத நாட்டியக் கச்சேரியில் முக்கிய உருப்படியான பதவர்ணத்தை நயப்போம்.

**நேரம்** : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- பதவர்ணங்களின் ஆடல் பாடல்களைக் கொண்ட ஒலி, ஒளிப்பதிவு நாடாக்கள்
- தொலைக்காட்சிக் கருவி
- பதவர்ணத்தின் பாடல் தீர்மானம் ஆகியன எழுதப்பட்ட அட்டை
- பதவர்ணத்தில் இடம்பெறும் சில அபிநயங்களை வெளிப்படுத்தும் ஒளிப்படங்கள், வரைபடங்கள்
- வீடியோ, பதி கருவி
- செயற்பத்திரம் 1.3.2.2

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**
**படி 1.3.2.1**

- பதவர்ணங்களின் பாடலுக்கு அபிநயம் காட்டுகின்ற நடன மங்கையரின் ஒளிப்படங்களைக் காட்சிப்படுத் துங்கள்.
- பதவர்ணங்களின் பாடல்கள் பதிவு செய்யப்பட்ட ஒலி நாடாவை மாணவர்கள் செவிமடுக்கச் செய்தல்.
- பதவர்ணங்களின் ஆடலைப் பதிவு செய்த ஒளி நாடாவை மாணவர்கள் பார்வையிடச் செய்தல்.
- ஏற்கனவே கற்றறிந்த பதவர்ணங்களை நினைவு கூரல்.
- மாணவர்கள் கேட்டும் பார்த்தும் இரசித்த விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

> - மாணவர்கள் பதவர்ணங்களின் பாடல்கள், ஆடல்கள் அடங்கிய ஒலி, ஒளி நாடாக்களைப் பார்வையிடச் செய்தல்.
> - கேட்டும் பார்த்தும் இரசித்தவற்றை விமர்சித்தல்.
> - பக்க வாத்தியங்களின் ஒத்திசைவு, அணிசேர் தன்மை

- நிருத்தமும் நிருத்தியமும் மாறி மாறி இடம் பெறுவதனை அவதானிக்கும் போது மாணவர் களுக்கு ஏற்படும் மன உணர்வுகள்
- பாடலாசிரியரின் கற்பனை வளம் பற்றிய மாணவர் கருத்துக் கணிப்பு
- ஆடை, ஆபரணங்கள், ஒப்பனை
- அரங்கத்தைப் பயன்படுத்தும் விதம்
- பதவர்ணங்களின் பாடல்களில் வெளிப்படுத்தப் படும் இராகம், தாளம், இசையமைப்பு உருப் படிகளின் அமைப்பு இயற்றியவர்
- பதவர்ணங்களின் தரம், தன்மை பற்றிய மாணவரின் சுயமான ரசனை அனுபவம் பகிர்வு

(10 நிமிடங்கள்)

**படி 1.3.2.2** :

- மாணவர்களை எண்ணிக்கைக்கேற்ப இரு குழுக் களாகப் பிரித்து செயற்பத்திரத்தை வழங்குக.
- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப் பிக்கும் வகையில் ஆலோசனை வழங்குக.
- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பத்திரத்தைக் கொடுத்து மாணவர்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.

(15 நிமிடங்கள்)

**படி 1.3.3.2** :

- ஒவ்வொரு குழுவினரும் தமக்கு வழங்கப்பட்ட செயற்பத்திரத்தை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு முன்வைத்த விடயத்தை ஏனைய குழுவினரும் அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- மாணவர் முன்வைத்த கருத்துக்களை அடிப்படை யாகக் கொண்டு பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்தும் வகையிற் கலந்துரையாடுங்கள்.

- மாணவர்கள் அனைவரையும் பதவர்ணங்களின் பாடல்கள், ஆடல்கள் அடங்கிய ஒலி, ஒளி நாடாக்களைப் பார்வையிடச் செய்தல்.
- பதவர்ணங்களுக்கு உதாரணம் :-
  - சகியே இந்த வேளையில் ஜாலம் செய்யாதே இராகம் - ஆனந்தபைரவி
  - நீ இந்த மாயம் செய்தால் ஞாயம் தானோ தயாநிதியே இராகம் - தந்யாசி
  - சகியே இந்த ஜாலம் ஏனடி? இராகம் - சங்கராபரணம்
  - மோகமான என் மீதில் நீ இந்த வேளை யில் இராகம் - பைரவி

- பதவர்ணங்களை இயற்றியவர்கள்
    - சு. பொன்னையா
    - சு. சின்னையா
    - பாபநாசம் சிவன்
- பதவர்ணங்களின் பாடல்களையும் ஆடல்களையும் கேட்டும் பார்த்தும் இரசிக்கும் போது ஏற்படும் மன உணர்வு
- பதவர்ணத்தின் வடிவம் - பல்லவி, அனுபல்லவி, சிட்டைஸ்வரம், சிட்டை ஸ்வர சாகித்தியம், சரணம், சரண பல்லவி எத்துக் கடை ஸ்வரங்கள் அவற்றின் சாகித்தியம்
- பதவர்ணத்தில் இடம்பெறும் ஜதிகள், ஸ்வரங்கள், ஸ்வரங்களுக்குரிய அடவுக் கோர்வைகள், அபிநயங்கள், சஞ்சாரி பாவங்கள் என்பன எவ்வாறு ஆடலுக்கு மெருகூட்டுகின்றன என்பது
- பதவர்ணங்களின் சாகித்தியம் முருகக் கடவுள், சிவபெருமான், விஷ்ணு, கிருஷ்ணன், துர்க்கை ஆகிய தெய்வங்கள் மீது பாடப்பெற்றுள்ளமை
- இறைவனைப் போற்றிப் புகழ்வனவாய் இச்சாகித்தியங்கள் காணப்பட்டுள்ளமை
- ஜதியும், அபிநயமும் மாறி மாறி வருவதால் பதவர்ணம் அழகாய் அமைந்துள்ளமை
- சாகித்தியத்தின் கருத்து, பாடலுக்குப் பொருத்தமான கை முத்திரைகளும், சஞ்சாரி பாவங்கள், பக்கவாத்தியங்களின் ஒத்திசைவு, சாகித்தியத்துக்குப் பொருத்தமான மெட்டமைப்பு, நட்டுவாங்கத்தின் பங்கும் சிறப்பும் போன்ற அம்சங்களை இரசிப்பதன் மூலம் முழுமையான விமர்சனத்தை வெளிப்படுத்துதல்.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. பதவர்ணத்தின் விசேட தன்மைகளைக் குறிப்பிடுவர்.
2. பதவர்ணம் ஒன்றைப் பார்த்தும் கேட்டும் நயந்த அனுபவத்தை விமர்சிப்பர்.
3. பதவர்ணத்தின் அமைப்பு முறை பற்றி விமர்சிப்பார்.
4. இவ்வுருப்படியை இரசிப்பதன் மூலம் பாடலாசிரியரின் கலைப் படைப்பை மதிப்பிடுவார்.
5. பதவர்ணத்தின் ஆடல் வடிவத்தைப் பார்த்து இரசித்ததால் நாட்டிய அமைப்பியலாளரின் திறமையை மதிப்பிடுவார்.
6. இரசிப்பதன் மூலம் நடன மங்கையின் ஆற்றுகைத்திறனை எடுத்துரைப்பார்.
7. பல பதவர்ணங்களைப் பார்வையிடுவதால் நாட்டிய அமைப்பியலாளரின் ஆற்றலையும், கற்பனை வளத்தையும் மதிக்கும் மனப்பாங்கினை வெளிப்படுத்துவார்.

## செயற்பத்திரம் 1.3.2

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை வழங்குங்கள்.

| |
|---|
| 1. நீர் பார்த்தும் கேட்டும் இரசித்த பதவர்ணம் ஒன்றினைப் பற்றிய விமர்சனக் கட்டுரை வரைக. |

**தேர்ச்சி 2.0** : சூழலில் காணப்படுகின்ற இயற்கை அம்சங்களையும் கிராமிய நடனம் தொடர்பான ஆக்கச் செயற்பாடுகளையும் வெளிக்கொணர்வார்.

**தேர்ச்சி மட்டம் 2.3** : கிராமியப் பாடல்களுக்கு ஏற்ற எளிய பாத அசைவுகளைத் தாமாகவே அமைத்து ஆடற் கோலங்களை ஆற்றுகைப் படுத்துவார்.

**செயற்பாடு 2.3.1** : மீனவர் நடனம், அரிவி வெட்டு நடனம், தேயிலைக் கொழுந்து பறிக்கும் நடனம் ஆகிய தொழில்சார் நடனங்களைத் தயாரிப்போம்.

**நேரம்** : 01 மணித்தியாலம் 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- மீனவர் நடனம், அரிவி வெட்டு நடனம், தேயிலைக் கொழுந்து பறிக்கும் நடனம் ஆகியவற்றிற்குரிய பாடல்கள் எழுதப்பட்ட அட்டை
- இப்பாடல்கள் அடங்கிய ஒலி, ஒளி நாடாக்கள்
- வீடியோ, பதி கருவி
- செயற்பத்திரம் 2.3.2 இணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**
**படி 2.3.1.1**

- குறிப்பிட்ட தொழில்சார் நடனங்களையும் ஏற்கனவே கற்ற கிராமிய நடனங்களையும் மனதில் இருத்தி, *தொழில்சார் நடனங்களுக்குரிய பாடல்களைப்* பாடியோ அல்லது ஒலி நாடா மூலம் ஒலிக்கச் செய்தோ, நடன அமைப்பினை உருவாக்கத் தூண்டுக.
- தொழில்சார் நடனப் பாடல்கள் எழுதிய அட்டையைக் காட்சிப்படுத்துக.
- நடன அமைப்பு சம்பந்தமாக பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

- நாட்டியம் அமைக்க வேண்டிய பாடல்கள்
  - ♦ மீனவர் பாடல்
  - ♦ அரிவி வெட்டுப் பாடல்
  - ♦ தேயிலைக் கொழுந்து பறிக்கும் பாடல்
- இந் நடனங்களுக்குரிய எளிய பாத சுவடுகள்
- இந்நடனங்களின் தொழிலைப் பிரதிபலிக்கும் அபிநயங்கள்
- அபிநயத்திற்குப் பயன்படுத்தப்படும் கை முத்திரைகள்
- ஆடல்களுக்கேற்ற நடனக் கோலங்கள்
- பரத நாட்டிய அடவுகளைப் பயன்படுத்தாது இலகுவான பாத அசைவுகளைத் தாளத்துடன் ஆடுவதற்கு நெறிப்படுத்துக.

(20 நிமிடங்கள்)

**படி 2.3.1.2** :

- மாணவர்களை எண்ணிக்கைக்கேற்ப மூன்று குழுக் களாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு வகையான தொழில்சார் பாடல்களைக் கொடுத்து அவற்றிற்கு நடனம் அமைக்கச் செய்க.
- ஒவ்வொரு குழுவும் சரியாக நடன அமைப்பினைச் செய்கின்றார்களா என உறுதிப்படுத்துக.
- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப் பிக்கும் வகையில் ஆயத்தம் செய்ய ஆலோசனை வழங்கி ஊக்கமளிக்குக.

(30 நிமிடங்கள்)

**படி 2.3.1.3** :

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களும் அதனை அவதானித்துத் தத்தமது கருத்துக்களைக் கூற இடமளிக்குக.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

| |
|---|
| • நடனம் அமைக்க வேண்டிய பாடல்கள், மீனவர், அரிவி வெட்டு, தேயிலைக் கொழுந்து பறித்தல் என்பதைக் குறிப்பிடுக.<br>• இந்த நடனங்களுக்குரிய எளிய பாத அசைவு களை முதலில் இரண்டாம் காலத்தில் ஆடிப் பயிற்சி செய்த பின்னர் தேவையான இடங் களில் மூன்றாம் காலத்தில் ஆட வேண்டும் என்பதை வலியுறுத்துக.<br>• இவை தொழில்சார் நடனங்கள் ஆதலால், தொழிலுக்கேற்ற அபிநயங்களை, கை முத்திரைகள் மூலமும், முகபாவங்கள் மூலமும் வெளிப்படுத்த நெறிப்படுத்துக.<br>• ஆசிரியரின் ஆலோசனைப்படி தாம் உருவாக்கிய நடனங்களைத் திருத்தமாக தாளத்துடன் ஆடச் செய்க. |

(30 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. தொழில்சார் நடனப் பாடல்கள் ஆகிய மீனவர் பாடல், அரிவி வெட்டுப் பாடல், தேயிலைக் கொழுந்து பறிக்கும் பாடல் ஆகியவற்றுக்கு நடனம் அமைக்கும் திறனைப் பெறுவர்.
2. நடனம் அமைத்த பாடல்களைத் தாளத்துடன் பாடி ஆடுவர்.

## செயற்பத்திரம் 1.3.2

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை இணைப்புடன் சேர்த்து வழங்குங்கள்.

### குழு- 1 :

1. கொடுக்கப்பட்ட மீனவர் பாடலுக்கு அபிநயத்துடன் கூடிய நடனம் ஒன்றை அமைக்குக.
2. நடனம் அமைத்த பாடலைப் பாடி ஆடிக் காட்டுக.

### குழு- 2 :

1. ஏற்கனவே கொடுக்கப்பட்ட அரிவி வெட்டுப் பாடலுக்கு அபிநயத்துடன் கூடிய நடனம் ஒன்றை அமைக்குக.
2. நடனம் அமைத்த பாடலைப் பாடி ஆடிக் காட்டுக.

### குழு- 3 :

1. கொடுக்கப்பட்ட தேயிலைக் கொழுந்து பறிக்கும் பாடலுக்கு அபிநயத்துடன் கூடிய நடனம் ஒன்றை அமைக்குக.
2. நடனம் அமைத்த பாடலைப் பாடி ஆடிக் காட்டுக.

**இணைப்பு**

### மீனவ நடனம்

ஓ ... ஓ ...
ஏலேலோ ஏலேலோ ...

I

அந்தி சாயும் போதினிலே அலைகடலை நோக்கி மச்சான்
வலை எடுத்து செல்லாதே மலை போல் அலை புரளும்

II

வடிவழகி என்மச்சி வலைநிறைய மீன் கொணர்வேன்
விடியு முன்னம் வந்திடுவோம் விடைகொடடி வேல் விழியே
ஏலேலோ ... ஏலேலோ ...

III

கடல் மேலே போற மச்சான் கடுங்காற்று வீசிடுமே
கட்டு மரம் ஏறவேண்டாம் கவலைகள் மிஞ்சிடுமே

IV

கடும் புயல் தான் வீசினாலும் கனமழைதான் பெய்தாலும்
கடல் தெய்வம் காத்திடுமே காலையிலே வந்திடுவோம்.

தகதகிட

V

இரவெல்லாம் ஆழிஅலை தாலாட்ட
இனமெல்லாம் மீன்கணங்கள் சேர்த்திடுவோம்
அதி நீண்ட துரந்தனைக் கடந்தாலே
அதி பெரிய மீனினங்கள் அகப்படுமே.

தகதிமி

VI

மலை மலையாய் அலை வருமே வேணாமே மச்சான்
வள்ளமதில் மூழ்கிடுமே வேணாமே மச்சான்
சுழன்றடிக்கும் சூறைக் காற்று வேணா வேணாமே மச்சான்
சுழற்றிடுமே படகினையே வேணாமே மச்சான்.

VII

மானத்தோடு வாழ்வதென்றால் வழி இந்த கடல்தான்
கை கொடடா படகினை கடல் தள்ளுவோம்
வலை கன்னியை கையெடுப்போம்
கடல் தெய்வத்தை கைதொழுவோம்.

**இணைப்பு**

**தேயிலைக் கொழுந்து கொய்தல்**

I

மலை ஏறி தளிர் கொய்யும் மாதர் அம்மாநாம்
இலை வேலன் மனதிலே சிலையாய் நின்றருளுவான்
நிலை ஓங்க களை பொங்குமே . ஆ ... ஆ ...
மலை ஏறியே இலை ஆயலாம்.

II

ஆய அம்மா காத்திருக்கும் அடுக்களையும் பாத்திருக்கும்
சின்ன பாப்பா பாலுக்கழும், சின்னத்தம்பி சோத்துக்கழும்
சீக்கிரமாய் லாயம் சேர சிங்காரி நீ ஓடிவா

சீதா தேவி சிறை இருந்த செம்மலை இது
எம்மலை
சிவபெருமான் அடிபதித்த செழுமலை இது எம்மலை
மலையில் ஓடும் மான்கள் என மகிழ்ந்து தேயிலை கொய்திடுவோம்
தலையில் சுமையும் தெரிவதில்லை
மகிழ்ந்தே தேயிலை கொய்திடுவோம்.

## அரிவி வெட்டுப் பாடல்

செந்நெல் விளைஞ்சிருச்சி செல்வம் நிறைஞ்சிருச்சி
இங்கோடி வாடி எந்தன் செல்ல மஞ்சாளே
இங்கிதமாய் நாம் நடந்து எங்கள் குருபூஜை செய்து
மங்கயற் சுளகு கொண்டு நெற் கொழிப்போமே.

மணியாய் விளைந்த நெல்லை அணியாய் அளந்து பசி
பிணியால் வரும் துன்பத்தைப் போக்கிடுவோமே - நெல்
மணிகால் வளைந்தோடி நாம் அணியாம் நெல் துள்ளிடவே
மணியாம் சுளகு கொண்டு நெல் கொழிப்போமே

நெல்லைக் குவித்திடுவார் சொல்லாலே கொஞ்சிடுவார்
தில்லானா பாடி இங்கு நாம் நடப்போமே
நெல்லொடு விளைந்த பசி எல்லாம் பறந்திடலாம்
நன்றாய் சுளகு கொண்டு நெல் கொழிப்போமே.

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி 2.0** | : | சூழலில் காணப்படுகின்ற இயற்கை அம்சங்களையும் கிராமிய நடனம் தொடர்பான ஆக்கச் செயற்பாடுகளையும் வெளிக்கொணர்வர். |
| **தேர்ச்சி மட்டம் 2.4** | : | வருடாந்த கலை நிகழ்ச்சியை நடாத்துவார். |
| **செயற்பாடு 2.4** | : | கற்றுக் கொண்ட நடனங்களையும் ஆக்கச் செயற்பாடுகளையும் அரங்கேற்றுவோம். |
| **நேரம்** | : | 01 மணித்தியாலம் 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்) |
| **தரவிருத்தி உள்ளீடுகள்** | : | • மாதிரி அழைப்பிதழ், மாதிரி நிகழ்ச்சி நிரல், பிறிஸ்டல் போர்ட், நிறப் பேனாக்கள், ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக்கருவி, கணினி, ஒளிப்பதிவு நாடா, ஒளிப்பதிவுக்கருவி. |

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**
**படி 2.4.1**

- கலை நிகழ்ச்சியொன்றை ஒலி, ஒளிப்பதிவு நாடாக்களில் போட்டுக்காட்டியும், முன்னர் கற்றுக் கொண்ட நடனங்களையும் ஆக்கச் செயற்பாடுகளையும் நினைவு கூர்ந்து அவற்றை இணைத்துக் கொண்டும், வருடாந்தக் கலைவிழாவில் இடம் பெறும் நிகழ்ச்சிகள் பற்றிக் கலந்துரையாடுக.
- கலை நிகழ்ச்சி அரங்கேற்றுவதற்குப் பொருத்தமான இடம், திகதி, நேரம், அதிதி என்பன பற்றித் தீர்மானிக்க.
- மேற்கூறப்பட்ட விடயங்களை கருத்திற் கொண்டு, மாதிரி அழைப்பிதழ் ஒன்றின் உதவியுடன், புதிய அழைப்பிதழைத் தயாரிக்கச் செய்க. பாடசாலைகளில் காணப்படும் வளத்திற்கமைய கணினியை உபயோகித்து அழைப்பிதழைத் தயாரிக்க வழி காட்டுக.
- அரங்கேற்றப்படக்கூடிய நிகழ்ச்சிகள் தொடர்பாகப் பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடிக் கலை நிகழ்ச்சிகளைத் திட்டமிடுக.

- தனி நடனம் / குழு நடனம்
- பரத நாட்டியம்
- கிராமிய நடனம்
- தேசிய கீதம், பாடசாலை கீதம்
- வரவேற்புரை, நன்றியுரை, அதிதியின் உரை போன்றவை
- தெரிவு செய்த நிகழ்ச்சிகளுக்கு அமைய மாணவர்களைக் குழுக்களாகப் பிரிக்க.

- நிகழ்ச்சிகளுக்குப் பொருத்தமான ஒப்பனை ஆடை, அலங்காரம், ஒலி, ஒளி அமைப்பு, பக்க வாத்தியம் பற்றிக் கலந்துரையாடுக.
- நிகழ்ச்சிகளின் தொகுப்பாளர், அறிவிப்பாளர் ஆகியோரைத் தீர்மானிக்க
- தரமான நிகழ்ச்சி நிரல் ஒன்றினைத் தயாரிக்க வழிகாட்டுக

(20 நிமிடங்கள்)

**படி 2.4.2** :

- நிகழ்ச்சிகளுக்குப் பொருத்தமான மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, ஒவ்வெரு குழுவிற்கும் ஒரு தலைவரை நியமித்து பயிற்சிகளில் ஈடுபடச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஒவ்வொரு குழுவினரும் தத்தம் வேலைகள் பற்றிப் பிரத்தியேகமாகக் கலந்துரையாடித் தீர்மானித்தல்.
- தீர்மானித்தபடி குழுவினர் தமக்குரிய பணிகளில் தனிப்பட ஈடுபடல்.
- கலை நிகழ்ச்சிகளைத் தீர்மானித்தவாறு குறித்த தினத்தில் மேடையேற்றுவதற்கான முயற்சிகளில் மாணவர்கள் ஈடுபடுகின்றனரா என்பதை உறுதி செய்க.

(30 நிமிடங்கள்)

**படி 2.4.3** :

- சகல குழுக்களுக்கும் தத்தமது நிகழ்ச்சிகளைச் செய்து காட்டச் சந்தர்ப்பம் வழங்குக.
- நிகழ்ச்சி நிரலில் உள்ள ஒழுங்கில் ஒத்திகை பார்க்குக.
- ஒத்திகையின் போது நிகழ்ச்சிகளின் தரத்தை மேம் படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்குக.
- நிகழ்ச்சிகளை ஒத்திகை செய்யும் பொழுது குழுக் களின் விமர்சனத்தை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- குற்றங் குறைகளை நிவர்த்தி செய்யும் வழிவகை களை விளக்கி ஆலோசனை வழங்குக.
- கலை நிகழ்ச்சி மேடையேற்றல் சம்பந்தமாகப் பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்தும் வகை யிற் கலந்துரையாடுங்கள்.

- நாட்டியக் கலை நிகழ்ச்சி ஒன்றினை அரங் கேற்றுவதற்கான முன்னோடித் திட்டமிடல்.
- மேடையேற்றப்பட வேண்டிய நிகழ்ச்சிகளைத் தீர்மானித்து பட்டியற்படுத்துக.
- சகல மாணவர்களும் நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் விதத்தில் நிகழ்ச்சிகளைத் தெரிவு செய்தல்.
- கலைவிழா நிகழ்ச்சிகளுக்குப் போதுமான அளவு பயிற்சி செய்தல்.
- அழைப்பிதழில் திகதி, நேரம், இடம், பிரதம அதிதி, கௌரவ விருந்தினர், அழைப்பவரின் பெயர் போன்ற விடயங்கள் இடம்பெறல் வேண்டும்.
- நிகழ்ச்சி நிரலில் வரவேற்புரை, கலை நிகழ்ச்சி கள், தேசிய கீதம், பாடசாலைக் கீதம், அதிதி யின் உரை, நன்றியுரை போன்ற அம்சங்கள் இடம்பெற வேண்டும்.
- அழைக்கப்பட வேண்டியவர்கள், அழைப்பிதழ் தயாரித்தல், நிகழ்ச்சி நிரல் தயாரித்தல், மேடை அலங்காரம், பக்க வாத்தியங்கள், ஆடை அலங்காரம், ஒப்பனை, வரவேற்பு, சிற்றுண்டி ஒழுங்கு முதலான விடயங்கள்.
- வெவ்வேறு குழுக்களிடம் பணிகள் ஒப்படைப்பு
- கலை நிகழ்ச்சி அரங்கேற்றப்படும் பொழுது நிகழ்ச்சி ஒழுங்கமைப்பாளர், அறிவிப்பாளர் ஆகியோரின் பங்கு அவசியம்.

(30 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. மேடையேற்றப்பட வேண்டிய நிகழ்ச்சிகளைத் தீர்மானித்து பட்டியற்படுத்துவார்.
2. மேடையேற்றுவதற்கான பயிற்சிகளில் ஈடுபடுவார்.
3. நிகழ்ச்சிகளை மேடையேற்றுவதற்கான ஆயத்தங்களைச் செய்து முடிப்பார்.
4. நிகழ்ச்சிகளை மேடையேற்றுவார்.
5. இவ்வாறான நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்ய எப்பொழுதும் உற்சாகத்துடன் ஈடுபடுவார்.

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும், கைமுத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.4** : நடன உருப்படிகளை ரச பாவத்துடன் ஆடிக் காட்டுவார்.

**செயற்பாடு 3.4.3** : சப்தத்தின் இரண்டாவது ஜதியினை ஆடுவோம்.

**நேரம்** : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- சப்தத்திற்குரிய பாடல்கள் அடங்கிய ஒலி, ஒளி நாடாக்கள்.
- சப்தத்தின் இரண்டாவது ஜதி எழுதப்பட்ட அட்டை.
- ஜதியில் இடம்பெறும் பாத நிலைகளைக் குறிக்கும் படங்கள்.
- தட்டுக்கழி, தட்டுப்பலகை
- செயற்பத்திரம் 3.4.3.2, பின்னிணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**
**படி 3.4.3.1**

- எடுத்துக்கொண்ட சப்தத்தின் இரண்டாவது கண்டிகையின் ஜதியின் தாளாங்கக் குறியீட்டுக் கமைய எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- இந்த ஜதியை தாளத்துடன் கொலுப்பித்துக் காட்டப் பயிற்சி அளித்தல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் இரண்டாவது ஜதியை ஆசிரியர் ஆடிக்காட்டடல்.
- குறித்த சப்தத்தின் இரண்டாவது ஜதியில் இடம் பெறும் அடவுகளை இனங்காணச் செய்தல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் இரண்டாவது ஜதி தொடர்பாக பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

- நமஸ்காரத்துடன் வகுப்பை ஆரம்பித்தல்.
- இராகமாலிகையாக அமைந்த ஆயர் சேரியர், ஸரஸி ஜாகூஷீலு ஆகிய சப்தங்கள் அமைந்துள்ள தாளம் மிச்ர சாபு.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் இரண்டாவது ஜதி மிஸ்ர நடையில் அமைந்துள்ளது.
- மிஸ்ர நடை என்பது தகிட தகதிமி
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் இரண்டாவது ஜதியினை ஆசிரியர் ஆடிக்காட்டல்.

- எடுத்துக்கொண்ட சப்தத்தின் இரண்டாவது ஜதியின் அங்கக் குறியீட்டு அட்டையைக் காட்சிப்படுத்தி ஜதியைக் கொலுப்பித்துக் காட்ட வழிப்படுத்தல்.
- மாணவர்கள் இரண்டாவது ஜதியில் இடம் பெறும் அடவுகளை இனங்கண்டு கூற வழிப் படுத்தல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் இரண்டாவது ஜதியில் இடம்பெறும் அடவுகளை மிஸ்ர நடையில் பயிற்சி அளித்தல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் இரண்டாவது ஜதியினை ஆசிரியர் ஆடிக்காட்ட மாணவர் அவரைப் பின்பற்றி ஆடச் செய்தல்.
- இந்த சப்தத்தின் இரண்டாவது ஜதியினை மாணவர்கள் முழுமையாக ஆடுவதற்கு வழிப் படுத்தல்.
- மாணவர்களைக் குழுக்களாகவும், தனியாக வும், எழுமாற்றாகவும் ஆடச் செய்தல்.

(15 புள்ளிகள்)

**படி 3.4.3.2** :

- மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்துடன் பின்னிணைப்பையும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தின் அறிவுறுத் தல்களுக்கேற்ப செயல்முறைப் பயிற்சியில் ஈடுபடு கின்றனரா என அவதானியுங்கள்.
- பயிற்சியில் ஈடுபடும் போது ஆசிரியர் அவதானித்து ஆலோசனை வழங்குங்கள்.

(15 நிமிடங்கள்)

**படி 3.4.3.3** :

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஒரு குழு தமது பெறுபேறுகளைச் சமர்ப்பிக்கும் போது மறு குழு அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- குழுக்களின் பெறுபேறுகளைத் தொகுக்கும் வண்ணம் பின்வரும் விடயங்களை மீள வலியுறுத் தும் வகையிற் கலந்துரையாடுங்கள்.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்துங்கள்.

- ஆயர் சேரியர், ஸரஸி ஜாக்ஷுலு ஆகிய சப்தங்கள் இராமாலிகையாக அமைந்துள்ளன.
- மேற்குறிப்பிட்ட இரு சப்தங்களும் மிச்ர சாபு தாளத்தில் ஆடப்படுவன.
- மிச்ர நடை என்பது தகிட தகதிமி ஆகும்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் இரண்டாவது ஜதியில் தத்தெய்தாஹா எனும் குத்தடவு இடம்பெறுகின்றது.
- ஆயர் சேரியர் என்னும் சப்தத்தில் இடம்பெறும் இரண்டாவது ஜதிக்குரிய அடவு மூன்றாவது தத்தெய் தாஹா ஆகும்.
- ஸரஸி ஜாக்ஷுலு எனும் சப்தத்தில் இடம் பெறும் இரண்டாவது ஜதிக்குரிய அடவு முதலாவது தத்தெய்தாஹா அடவு ஆகும்.
- குறித்த ஜதியைத் தொடர்ச்சியாக ஆடப் பயிற்சி செய்தல்.
- குறித்த ஜதியைச் சொற்கட்டுகளுக்கமைய ஆடுவதற்குப் பயிற்சி செய்தல்.
- அரைமண்டி நிலை, அங்க சுத்தம், முத்திரை ஆகியவற்றைக் கவனித்து முழுமையாக ஜதிப் பயிற்சியில் ஈடுபடல்.

(10 நிமிடங்கள்)

### கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

1. எடுத்துக்கொண்ட சப்தத்தின் இராக, தாளத்தினைக் கூறுவர்.
2. சப்தம் அமைந்துள்ள நடையைக் குறிப்பிடுவார்.
3. எடுத்துக்கொண்ட சப்தத்தின் 2ஆவது ஜதியில் இடம்பெறும் அடவுகளை இனங்கண்டு கூறுவார்.
4. எடுத்துக்கொண்ட சப்தத்தின் 2ஆவது ஜதியினைத் தாளத்துடன் கொலுப்பித்துக் காட்டுவார்.
5. கற்ற சப்தத்தின் 2ஆவது ஜதியினை அங்க சுத்தத்துடனும் லயப் பிடிப்புடனும் ஆடுவர்.

### செயற்பத்திரம் 3.4.3.2

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை இணைப்புடன் சேர்த்து வழங்குங்கள்.

1. எடுத்துக்கொண்ட சப்தத்தின் இரண்டாவது ஜதியினைத் தாளத்துடன் கொலுப்பித்து ஆடிக்காட்டுக.

## சப்தம்

இராகமாலிகை | தாளம் - மிச்ர சாபு

"ஆயர் சேரியர்"
இரண்டாவது ஜதி

02. தத்தண / தண / தண // தஜ்ஜொணு / ஜொணு / ஜொணு //
தத்திமி / திமி / கிட // தத்தோம் / தண / கிண //

பதத / ஸ்ஸ் / ஸ்ஸ் // பதத / ஸ்ஸ் / ஸ்ஸ் //
தத்தண தண தண தஜ்ஜொணு ஜொணு ஜொணு
பதத / ஸ்ஸ் / ஸ்ஸ் // பதா / ஸ்ஸ் / ஸ்ஸ் //
தத்திமி திமி கிட தத்தோம் தண கிண

## சப்தம் - ஸரஸி ஜாக்ஷுலு

இராகமாலிகை | தாளம் - மிச்ர சாபு
இரண்டாவது ஜதி

02. தத்தண / தந் / தண // தஜ்ஜொணு / திந் / திமி //
தத்தண / தண / கிண // தத்தோம் / தண / கிண //

பதத / ஸ்ஸ் / ஸ்ஸ் // பதத / ஸ்ஸ் / ஸ்ஸ் //
தத்தண / தந் / தண // தஜ்ஜொணு / திந் / திமி
பதத / ஸ்ஸ் / ஸ்ஸ் // பதா / ஸ்ஸ் / ஸ்ஸ் //
தத்திமி திமி கிட தத்தோம் தண கிண

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும், கைமுத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.4** : நடன உருப்படிகளை ரச பாவத்துடன் ஆடிக் காட்டுவார்.

**செயற்பாடு 3.4.4** : சப்தத்தின் இரண்டாவது கண்டிகைக்கு அபிநயம் செய்வோம்.

**நேரம்** : 1 மணித்தியாலம் 20 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- சப்தத்திற்குரிய (ஆயர் சேரியர், ஸரஸி ஜாக்ஷூலு) பாடல்கள் அடங்கிய ஒலி, ஒளி நாடாக்கள்.
- சப்தத்தின் சாகித்தியம் எழுதப்பட்ட அட்டை.
- கண்ணனின் தோற்றப் படங்கள் ஒட்டப்பட்ட அட்டை.
- சப்தத்துடன் தொடர்புடைய அபிநய நிலைகளைப் பிரதிபலிக்கும் படங்கள் கொண்ட அட்டை
- தட்டுக்கழி, தட்டுப்பலகை
- செயற்பத்திரம் 3.4.4.2, பின்னிணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**
**படி 3.4.4.1**

- ஆயர் சேரியர் அல்லது ஸரஸி ஜாக்ஷூலு எனத் தொடங்கும் சப்தத்தின் சாகித்தியம் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- ஆயர் சேரியர் சப்தம் ஓர் இராகமாலிகையாகும். தாளம் மிச்ர சாபு, ஸரஸி ஜாக்ஷூலு சப்தம் ஓர் இராகமாலிகையாகும். தாளம் - மிச்ர சாபு
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் 2ஆவது கண்டிகையின் சாகித்தியத்தை ஆசிரியர் பாடியோ அல்லது ஒலிநாடா மூலம் ஒலிக்கச் செய்தோ மாணவர் அதை செவிமடுக்கச் செய்தல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் 2ஆவது கண்டிகையினை தாள அங்கக் குறியீட்டுடன் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தி இராகத்துடன் பாடி தாளத்தில் கொலுப்பித்துக் காட்டல்.
- ஆயர் சேரியர் அல்லது ஸரஸி ஜாக்ஷூலு சப்தத்தின் இரண்டாவது கண்டிகையினை ஆசிரியர் பாடி அபிநயித்து ஆடிக்காட்டல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் 2ஆவது கண்டிகை தொடர்பாக பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

- நமஸ்காரத்துடன் வகுப்பை ஆரம்பித்தல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் (ஏற்கனவே கற்ற) முதலாவது கண்டிகையை மாணவர் ஆடிக் காட்டச் செய்க.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் 2ஆவது கண்டிகையின் சாகித்தியத்தினை, தாளஅங்கக் குறியீட்டுடன் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தி மாணவர்கள் இராகத்துடனும் தாளத்துடனும் பாடிப் பயிற்சி பெறுவதற்கு வழிப்படுத்துக.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் 2ஆவது கண்டிகையின் சாகித்தியத்தினை ராக, தாளத் துடன் ஆசிரியருடன் மாணவர் இணைந்து பாடுக.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் 2ஆவது கண்டிகையினை ஆசிரியர் முழுமையாக பாடி ஆடிக்காட்டுக.
- ஆசிரியரால் ஆடிக்காட்டப்பட்ட பகுதியின் கருத்துக்களை மாணவர் கூற வழிப்படுத்துக.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் 2ஆவது கண்டிகையின் சாகித்தியத்தின் கருத்தினைக் கூறுக.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் 2ஆவது கண்டிகையின் நேர்க்கை, சஞ்சாரி பாவத்திற் குரிய கருத்துக்களைக் கூறுக.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் 2ஆவது கண்டிகையின் அபிநயத்துக்குரிய முத்திரை களை அறிமுகம் செய்க.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் 2ஆவது கண்டிகையினை ஆசிரியர் பகுதி பகுதியாக ஆடிக்காட்ட அவரைப் பின்பற்றி மாணவர்கள் ஆடச் செய்க.
- மாணவர்கள் எடுத்துக்கொண்ட 2ஆவது கண்டிகையை முழுமையாக அபிநயத்துடனும் முகபாவத்துடனும் ஆடிக்காட்ட வழிப்படுத்துக.
- மாணவர்களை எழுமாற்றாகவும் குழுக்களாக வும் தனியாகவும் ஆடச் செய்க.

(30 புள்ளிகள்)

**படி 3.4.4.2** :

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப மாணவர்களைச் சிறிய குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்துடன் பின்னிணைப்பையும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தின் அறிவுறுத்தல்களுக்கேற்ப செயல்முறைப் பயிற்சியில் ஈடுபடுகின்றனரா என அவதானித்தல்.
- பயிற்சியில் ஈடுபடும் போது ஆசிரியர் அவதானித்து ஆலோசனை வழங்குங்கள்.

(30 நிமிடங்கள்)

**படி 3.4.3.3** :

- ஒவ்வொரு குழுவும் தத்தமது பேறுகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது பெறுபேறுகளைச் சமர்ப்பிக்கும் போது மறு குழு அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- குழுக்களின் பெறுபேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளுங்கள். கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்துங்கள்.

> - எடுத்துக்கொண்ட சப்தத்தின் இரண்டாவது கண்டிகையின் சாகித்தியத்தை இராக தாளத்துடன் பாடுவதற்குப் பயிற்சி அளித்தல்.
> - நீர் கற்ற சப்தத்தின் 2ஆவது கண்டிகையின் சாகித்தியத்திற்குரிய அபிநய ஹஸ்தங்களை முகபாவத்துடன் ஆட வேண்டிய அவசியத்தை உணரச் செய்து பயிற்சியில் ஈடுபடுத்தல்.
> - 2ஆவது கண்டிகையின் சாகித்தியத்திற்கு இரண்டு வெவ்வேறு வகையான அபிநய ஹஸ்தங்கள் உள்ளன என்பதை விளங்கி அபிநயிக்கச் செய்தல்.
> - சாகித்தியத்தின் கருத்தினை அறிந்து அபிநயித்தலின் அவசியத்தைக் கூறுதல்.
> - எடுத்துக்கொண்ட சப்தத்தின் 2ஆவது கண்டிகையின் சாகித்தியத்திற்கு அபிநயிக்கப்படும் நேர்க்கை, சஞ்சாரி பாவம் ஆகியனவற்றை அங்க சுத்தத்துடனும், முத்திரை, முகபாவத்துடனும் ஆடுதல்.

(20 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. எடுத்துக்கொண்ட சப்தத்தின் 2 ஆவது கண்டிகையின் இராகம், தாளம் இரண்டினையும் குறிப்பிடுவார்.
2. எடுத்துக்கொண்ட சப்தத்தின் 2 ஆவது கண்டிகையின் சாகித்தியத்தின் கருத்தினைக் கூறுவர்.
3. கற்ற சப்தத்தின் 2ஆவது கண்டிகையின் நேர்க்கை, சஞ்சாரிபாவம் போன்றவற்றின் கருத்துக்களைக் கூறுவர்.
4. உறியைக் காண்பிப்பதற்கு உபயோகிக்கும் முத்திரையைக் குறிப்பிடுவர்.
5. கற்ற சப்தத்தின் 2ஆவது கண்டிகைகளை இராகத்துடனும், தாளத்துடனும் பாடுவர்.
6. 'கல்' இதனை அபிநயிக்கப் பிரயோகிக்கும் முத்திரையைக் கூறுவர்.
7. கற்ற சப்தத்தின் 2ஆவது கண்டிகையினை முழுமையாக பாவத்துடனும் அங்க சுத்தத்துடனும் ஆடுவர்.

## செயற்பத்திரம் 3.4.4.2

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை இணைப்புடன் சேர்த்து வழங்குங்கள்.

| | |
|---|---|
| 1. | எடுத்துக்கொண்ட சப்தத்தின் இரண்டாவது கண்டிகைக்குரிய அபிநயங்களை ஆடிக்காட்டுக. |
| 2. | எடுத்துக்கொண்ட சப்தத்தின் இரண்டாவது கண்டிகையைக் கையில் தாளம் போட்டு பாடிக் காட்டுக. |

**இணைப்பு**

## சப்தம் - ஆயர் சேரியர்

இராகமாலிகை — தாளம் - மிச்ர சாபு

இரண்டாவது கண்டிகை
இராகம் :- சண்முகப்பிரியா

02. சுருண்டி ருண்ட குழல்கள் அசைந்திட
சுந்தர முகம் துலங்கிட
மருண்ட மானினம் மேய்கை மறந்திட
மாயவன் குழல் ஊதுறான் - பவள
வாயன் குழல் ஊதுறான்.

ஸ்வர சாகித்தியம்

02. ,ரிக்ரி/ ஸ்ா / ஸ்ஸ் // ,நிஸ்ாஸ் / ஸ்நிரிஸ் / நிதபம //
சுருண்டி ருண் ட // குழல்கள் அசைந் திட //

,பத / நீ / நிநி // நிதரி / ஸ்ா / ஸ்ா //
சுந்த ர முகம் // துலங்கி ட : //

,பபாத/ பதநிஸ் / ரீரீ // ரீகா / க்ரிஸ்நி / ஸ்ாஸ்ா //
மருண்ட மா னினம் // மேய்கை மறந் திட //

,நிஸ் / ஸ்நிரிஸ் / நிதபம // பதரி / ஸ்ா / : //
மாய வன் குழல் // ஊது றான் : //

ரிநீ / ஸ்ா / ஸ்ஸ்ஸ் // ஸ்ஸ்நி / ஸ்ா / நிதபம //
ஆ : : பவ // ளவா யன் குழல் //

பதரி / ஸ்ா / : // ரிநீ / ஸ்ா / : //
ஊது றான் : // ஆ : : ;

**இணைப்பு**

**சப்தம் - ஸரஸி ஜாக்ஷுலு**

இராகமாலிகை

தாளம் - மிச்ர சாபு

இரண்டாவது கண்டிகை
இராகம் :- தந்யாசி

02. உட்டி மீதனு பெட்டி யுண் டே
, சட்டி பாலுனி, அட்லெ கனு கொனி
: கொட்டிசே துல, பட்டி த்ரா கின
, கெட்டி தன மிதி காதை யா:
ஆ . : :

ஸ்வர சாகித்தியம்

02. , நிநி / ஸ்ா / ஸ்ஸ் // ,ஸ்ரி / ஸ்ா / ஸ்நி //
, உட்டி மீ தனு பெட்டி யுண் டே
, நிநி / ஸ்க் / ரிஸ் // ,பநி / ஸ்நி / தப //
, சட்டி பா லுனி // அட்லெ கனு கொனி

, கம / பநி / நிநி // , பநி / ஸ்நி / தப //
, கொட்டி சே துல // , பட்டி த்ரா கின
, மப மக ரிஸ் // ஸகம / பநி / நிப //
, கெட்டி தன மிதி // காதை யா ...

, பநி / ஸ்க் / நிஸ் //
, அ , , / , ,

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும், கைமுத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.4** : நடன உருப்படிகளை ரச பாவத்துடன் ஆடிக் காட்டுவார்.

**செயற்பாடு 3.4.2** : சப்தத்தின் (ஆயர்சேரியர்/ ஸரஸி ஜாகூஷீலு) மூன்றாவது ஜதியினை ஆடுவோம்.

**நேரம்** : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- சப்தத்தின் பாடல்கள் அடங்கிய ஒலி, ஒளி நாடாக்கள்.
- சப்தத்திற்குரிய மூன்றாவது ஜதியினைத் தாளாங்கக் குறியீட்டுடன் எழுதப்பட்ட அட்டை.
- ஜதியில் இடம்பெறும் அடவு நிலை படங்கள் ஒட்டப்பட்ட அட்டை.
- தட்டுக்கழி, தட்டுப்பலகை
- செயற்பத்திரம் 3.4.2.2, பின்னிணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**
**படி 3.4.2.1**

- ஆயர் சேரியர், ஸரஸி ஜாகூஷீலு ஆகிய சப்தங்களின் மூன்றாவது ஜதி எழுதப்பட்ட தாளக் குறியீட்டு அட்டவணையைக் காட்சிப்படுத்தல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் 3ஆவது ஜதியை ஆசிரியர் பாடியோ அல்லது ஒலிநாடா மூலம் ஒலிக்கச் செய்தோ மாணவர் அதை செவிமடுக்கச் செய்தல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் 3ஆவது ஜதியினைத் தாள அங்கக் குறியீட்டு அட்டையைப் பயன்படுத்தி தாளத்துடன் கொலுப்பித்துக் காட்டல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் 3ஆவது ஜதியினை முழுமையாக ஆசிரியர் ஆடிக்காட்டல்.
- ஆடிக் காட்டப்பட்ட ஜதியில் இடம்பெறும் அடவுகளை இனங்காண்பர்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் ஜதியானது மிஸ்ர நடையில் ஆடப்பட வேண்டும்.
- எடுத்துக்கொண்ட 3ஆவது ஜதி தொடர்பாக பின்வரும் விடயங்களை உள்ளடக்கிக் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

- நமஸ்காரத்துடன் வகுப்பை ஆரம்பித்தல்.
- ஆயர் சேரியர், ஸரஸி ஜாக்ஷுலு ஆகிய சப்தங்கள் இராகமாலிகையாக அமைந்துள்ளன. தாளம் மிச்ர சாபு.
- ஒவ்வொரு கண்டிகைகளுக்கும் இடையே ஜதி ஆடப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் 3ஆவது ஜதியினை ஆசிரியர் தாளாங்கக் குறியீட்டு அட்டையைக் காட்சிப்படுத்தி கொலுப்பித்துக் காட்ட வழிப்படுத்தல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் 3ஆவது ஜதியினை ஆசிரியர் முழுமையாக ஆடிக் காட்டல்.
- மாணவர்கள் மூன்றாவது ஜதியில் இடம்பெறும் அடவு களை மாணவர் இனங்கண்டு கூறுதல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் மூன்றாவது ஜதியில் இடம்பெறும் அடவுகளை மிஸ்ர நடையில் பயிற்சி அளித்தல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் மூன்றாவது ஜதியினை ஆசிரியர் ஆடிக்காட்ட மாணவர் அவரைப் பின்பற்றி ஆடச் செய்தல்.
- மூன்றாவது ஜதியினை முழுமைப்படுத்தி ஆட வழிப்படுத்துதல்.
- மாணவர்களை எழுமாற்றாகவும், குழுக் களாகவும், தனியாகவும் ஆடச் செய்தல்.

(15 புள்ளிகள்)

**படி 3.4.2.2** :

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக் கேற்ப குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத் துடன் பின்னிணைப்பையும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தின் அறிவுறுத் தல்களுக்கேற்ப செயல்முறைப் பயிற்சியில் ஈடுபடுகின்றனரா என அவதானியுங்கள்.
- பயிற்சியில் ஈடுபடும் போது ஆசிரியர் அவதானித்து ஆலோசனை வழங்குங்கள்.

(15 நிமிடங்கள்)

படி 3.4.2.3 :

- ஒவ்வொரு குழுவும், தனியாகவும், குழுவாகவும் எடுத்துக்கொண்ட சப்தத்தின் 3ஆவது ஜதியினை ஆடச் சந்தர்ப்பம் வழங்குங்கள்
- ஒரு குழு தமது செயற்பாட்டினை சமர்ப்பிக்கும் போது மறு குழு அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- குழுக்களின் பெறுபேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள் ளுங்கள். கலந்துரையாடலில் பின்வரும் விடயங் களை மீள வலியுறுத்துங்கள்.

> - எடுத்துக்கொண்ட சப்தம் இராகமாலிகையாக அமைந்துள்ளது.
> - சப்தத்தின் தாளம் மிச்ர சாபு
> - சப்தம் மிச்ர நடையில் அமைந்துள்ளது
> - ஆயர் சேரியர் எனத் தொடங்கும் சப்தத்தின் மூன்றாவது ஜதி:-
>   தத்தண/தண/தண// தஜ்ஜொணு/ திட/ திமி//
>   தத்திமி/திமி/கிட// தத்தோம்/ தன/ கிண//
> - ஸரஸி ஜாக்ஷுலு என்று ஆரம்பிக்கும் சப்தத்தின் மூன்றாவது ஜதி:-
>   தத்தண/தந்/தண//தஜ்ஜொணு/ஜொணு/ஜொணு/
>   தத்திமி/திமி/கிட// தத்தீம்/ திமி/ கிட//
> - மேற்குறிப்பிட்ட ஜதியைக் கொலுப்பித்தல்
> - ஜதிக்குரிய அடவுகளைத் தாளத்துடன் கொலுப்பித்தல்
> - ஜதியை தாளத்துடன் கொலுப்பித்தல்
> - எடுத்துக்கொண்ட சப்தத்தின் மூன்றாவது ஜதியை ஆடுதல்
> - குறித்த சப்தத்தின் மூன்றாவது ஜதியைக் கொலுப்பித்தவாறு தொடர்ச்சியாகவும் முழுமையாகவும் ஆடுதல்.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. எடுத்துக்கொண்ட சப்தத்தின் இராக, தாளத்தினைக் கூறுவர்.
2. சப்தம் அமைந்துள்ள நடையைக் குறிப்பிடுவார்.
3. எடுத்துக்கொண்ட சப்தத்தின் 3ஆவது ஜதியினைத் தாளத்தில் கொலுப்பித்துக் காட்டுவார்.
4. கற்ற சப்தத்தின் மூன்றாவது ஜதியினை அங்க சுத்தத்துடனும் லயப் பிடிப்புடனும் ஆடுவர்.

## செயற்பத்திரம் 3.4.2.2

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை இணைப்புடன் சேர்த்து வழங்குங்கள்.

| |
|---|
| 1. எடுத்துக்கொண்ட சப்தத்தின் மூன்றாவது ஜதியினைத் தாளத்துடன் கொலுப்பித்து ஆடிக்காட்டுக. |

**இணைப்பு**

### சப்தம்

இராகமாலிகை தாளம் - மிச்ர சாபு

மூன்றாவது ஜதி :- ஸரஸி ஜாக்ஷூலு

03. தத் தண / தண / தண // தஜ்ஜொணு / ஜொணு / ஜொணு //
தத் திமி திமி / கிட // தத்தோம் / தண / கிண //

மூன்றாவது ஜதி :- ஆயர் சேரியர்

03. தத்தண /தந் / தண // தஜ்ஜொணு / திந் / திமி //
தத்தண தண / கிண // தத்திம் / திமி / கிட //

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும், கைமுத்திரை களின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.5** : நடன உருப்படிகளை ரச பாவத்துடன் ஆடிக் காட்டுவார்.

**செயற்பாடு 3.5.1** : சப்தத்தின் (ஆயர்சேரியர்/ ஸரஸி ஜாக்ஷூலு) மூன்றாவது கண்டிகையின் சாகித்தியத்திற்கு அபிநயம் செய்வோம்.

**நேரம்** : 1 மணித்தியாலம் 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- ஆயர் சேரியர்/ ஸரஸி ஜாக்ஷூலு ஆகிய சப்தங்களின் ஒலி, ஒளி நாடாக்கள்.
- சப்தத்தின் மூன்றாவது கண்டிகையின் சாகித்தியம் எழுதப்பட்ட அட்டை.
- சப்தம் தொடர்பான அபிநய ஹஸ்தங்களையும் பாத நிலைகளையும் வெளிப்படுத்தும் வரை படங்கள், ஒளிப்படங்கள்.
- தட்டுக்கழி, தட்டுப்பலகை
- செயற்பத்திரம் 3.5.1.2, பின்னிணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**
**படி 3.5.1.1**

- ஆயர் சேரியர் சப்தத்தின் மூன்றாவது கண்டிகை
  இராகம் - நாட்டைக் குறிஞ்சி
  தாளம் - மிச்ர சாப்பு
- ஸரஸி ஜாக்ஷூலு சப்தத்தின் மூன்றாவது
  இராகம் - பூர்வி கல்யாணி
  தாளம் - மிச்ர சாப்பு
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் 3ஆவது கண்டிகையின் சாகித்தியத்தை ஆசிரியர் பாடியோ அல்லது ஒலிநாடா மூலம் ஒலிக்கச் செய்தோ மாணவர் அதைச் செவிமடுக்கச் செய்தல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் 3ஆவது கண்டிகையினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தி ராகத்துடன் பாடி தாளத்தில் கொலுப்பித்துக் காட்டல்.
- ஆயர் சேரியர் அல்லது ஸரஸி ஜாக்ஷூலு சப்தத்தின் 3ஆவது கண்டிகையினை ஆசிரியர் பாடி அபிநயத்து ஆடிக்காட்டல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் 3 ஆவது கண்டிகை தொடர்பாகப் பின்வரும் விடயங்களை வலியுறுத்தப் படும் வகையில் கலந்துரையாடலை மேற் கொள்ளுங்கள்.

- நமஸ்காரத்துடன் வகுப்பை ஆரம்பித்தல்.
- ஆயர் சேரியர் அல்லது ஸரஸி ஜாக்ஷூலு சப்தத்தின் ஏற்கனவே கற்ற 1ஆவது, 2ஆவது கண்டிகைகளை மாணவர் ஆடிக் காட்டச் செய்தல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் 3ஆவது கண்டிகையின் சாகித்தியத்தினை தாளாங்கக் குறியீட்டுடன் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தி மாணவர்கள் இராக தாளத் துடன் பாடிப் பயிற்சி பெறுவதற்கு வழிப் படுத்துதல்.
- மாணவர் கற்கவிருக்கும் 3ஆவது கண்டிகை யின் சாகித்தியத்திற்குரிய கருத்தினை ஆசிரியர் கூறுதல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் மூன்றாவது கண்டிகையினை ஆசிரியர் முழுமையாக ஆடிக் காண்பித்தல்.
- ஆசிரியரால் ஆடிக்காட்டப்பட்ட பகுதியின் அபிநயத்திற்குரிய நேர்க்கை, சஞ்சாரிபாவக் கைகளின் கருத்தினை மாணவர்கள் கூற வழிப் படுத்துதல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் 2ஆவது கண்டிகையின் அபிநயத்திற்குரிய முத்திரை களை அறிமுகம் செய்தல்.
- ஆயர் சேரியர் / ஸரஸி ஜாக்ஷூலு சப்தத்தின் 3ஆவது கண்டிகையை ஆசிரியர் பகுதி பகுதியாக ஆடிக்காட்ட அவரைப் பின்பற்றி மாணவர்களும் அபிநயித்து ஆட வழிப் படுத்துக.
- மாணவர்கள் 3ஆவது கண்டிகையினை முழுமையாக அபிநயத்துடனும் முகபாவத் துடனும் ஆடிக்காட்ட வழிப்படுத்துக.
- மாணவர்களை எழுமாற்றாகவும் குழுவாகவும், தனியாகவும் செய்க.

(30 நிமிடங்கள்)

**படி 3.5.1.2 :**

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்துடன் பின்னிணைப்பையும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தின் அறிவுறுத் தல்களுக்கேற்ப செயல்முறைப் பயிற்சியில் ஈடுபடுகின்றனரா என அவதானியுங்கள்.
- பயிற்சியில் ஈடுபடும் போது ஆசிரியர் அவதானித்து ஆலோசனை வழங்குதல்.

(30 நிமிடங்கள்)

**படி 3.5.1.3** :

- ஒவ்வொரு குழுவும் தமது பெறுபேறுகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்
- ஒரு குழு தமது பெறுபேறுகளைச் சமர்ப்பிக்கும் போது மறு குழு அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- மாணவரின் குறைகளை இனங்கண்டு முழுமைப் படுத்துக.
- ஒவ்வொரு குழுவும், குழுவாகவும் தனியாகவும் சப்தத்தின் மூன்றாவது கண்டிகைக்குரிய அபிநயங் களை ஆடச் சந்தர்ப்பம் வழங்குக.
- குழுக்களின் செயற்பாட்டின் மூலம் பெற்ற விடயங் களை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுங்கள்.

> - ஆயர் சேரியர் சப்தத்தின் மூன்றாவது கண்டி கையின் ராகம் சண்முகப்பிரியா
> - தாளம் மிச்ர சாபு
> - நடை மிஸ்ரம்
> - ஸரஸி ஜாக்ஷுலு சப்தத்தின் மூன்றாவது கண்டிகையின் ராகம் -பூர்வி கல்யாணி<br>தாளம் - மிச்ர சாபு<br>நடை - மிஸ்ரம்
> - சப்தத்தின் 3ஆவது கண்டிகையை மாண வருடன் சேர்ந்து ஆடிக்காட்டுக.
> - சப்தத்தின் மூன்றாவது கண்டிகையை ஆசிரி யரும் மாணவரும் இணைந்து இராக தாளத் துடன் பாடுக.

(20 நிமிடங்கள்)

### கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

1. எடுத்துக்கொண்ட சப்தத்தின் 3ஆவது கண்டிகை அமைந்துள்ள இராகம் தாளம் இரண்டினையும் கூறுவர்.
2. எடுத்துக்கொண்ட சப்தத்தின் 3ஆவது கண்டிகையின் சாகித்தியத்தின் கருத்தினையும், சஞ்சாரி பாவங்களின் கருத்தினையும் கூறுவர்.
3. கற்ற சப்தத்தின் மூன்றாவது கண்டிகையை இராக தாளத்துடன் பாடுவர்.
4. கற்ற சப்தத்தின் 3ஆவது கண்டிகையினை அங்கசுத்தத்துடனும், பாவத்துடனும் ஆடுவர்.

## செயற்பத்திரம் 3.5.1.2

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை இணைப்புடன் சேர்த்து வழங்குங்கள்.

| | |
|---|---|
| 1. | எடுத்துக்கொண்ட சப்தத்தின் மூன்றாவது கண்டிகையினை தாளத்துடன் பாடி சாகித்தியத்திற்குரிய அபிநயங்களை ஆடிக்காட்டுக. |

**இணைப்பு**

### சப்தம் - ஆயர் சேரியர்

இராகமாலிகை — தாளம் - மிச்ர சாபு

மூன்றாவது கண்டிகை
இராகம் :- நாட்டைக் குறிஞ்சி

03.
சிறு விரல்கள் அக் குழலை தழுவிட //
செங்கமலக் கண் // சாய்த்திட //
குறு வியர்வை அப்புருவம் நெருங்கிட //
கோபாலன் குழல் // ஊதுறான் //
ஆ ... எங்கள் // பாலன் குழல் //
ஊது றான் : // ஆ ... : : // எங்கள் பாலன் குழல் ஊதுறான்

ஸ்வர சாகித்தியம்

03.
, ஸ நீ த / மா / மா // கமப / கரி / ஸநி //
சிறு வி ரல் கள்அக் குழலை தழு விட
, மகமா / நித / நீப // பதநி / ஸ்ா / : //
, செங்க மலக் கண் சாய்த்தி ட :
, ஸ்மாக / ஸ்ா / ஸ்ா // ஸ்ாஸ் / தநி / பத //
குறு வி யர் வையப் புருவம் நெருங் கிட

, ஸ் ஸ் / நித / மக // மதநி / ஸ்ா / : //
கோபா லன் குழல் ஊது றான் :
நிதநி / ஸ்ா / ஸ்ஸ் // ஸ்ஸா/ நித / மக //
ஆ. : எங்கள் பா லன் குழல்
மதநி / ஸா / : // நிதநி / ஸ்ா / : //
ஊது றான் : ஆ : : :

## சப்தம் - ஸரஸி ஜாக்ஷீலு

இராகமாலிகை

மூன்றாவது கண்டிகை — மொழி - தெலுங்கு

இராகம் :- பூர்வி கல்யாணி — பாடல் இயற்றியவர் - தஞ்சை வடிவேல்

தாளம் - மிச்ர சாப

03. அல்ல லக்ஷ்மி வல்ல புடவை //
தொல்லி அலரே, பல்ல் லோ பல்ல //
கொல்ல பாமல கூடி திவி அதி //
செல்லு நீ கிதி செல்லு ந //
ஆ . , , , , //

ஸ்வர சாகித்தியம்

03. , தத / ஸா / ஸ்ஸ // ஸ்ரி / ஸ்ஸ /ஸ்ரிதா //
அல்ல லக்ஷ் மி வல்ல புட வை //
, தஸ / ரிரி / ரிரி // ,ஸ்ஸ/ தநிநித/தமகா //
தொல்லி அல ரே ,பல்ல லோ பல்ல //

, தஸ்ஸா /தஸ்ஸா / ரிஸா // ,க்ரி /ஸ்ஸ /ஸ்ஸ//
கொல்ல பா மல ,கூடி திவி அதி
, ஸ்நி / தநி / தமகா // தமத / ஸா / : //
செல்லு நீ கிதி செல்லு ந :

கமத / ஸா / ஸா//
ஆ . : :

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும், கைமுத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.4** : நடன உருப்படிகளை ரச பாவத்துடன் ஆடிக் காட்டுவார்.

**செயற்பாடு 3.4.1** : சப்தத்தின் (ஆயர்சேரியர்/ ஸரஸி ஜாக்ஷுலு) நான்காவது ஜதியை ஆடுவோம்.

**நேரம்** : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- சப்தத்தின் பாடல்கள் அடங்கிய ஒலி, ஒளி நாடாக்கள்.
- சப்தத்தின் பாடல் எழுதப்பட்ட அட்டை.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் நான்காவது ஜதியில் இடம்பெறும் பாதநிலைகளைச் சித்தரிக்கும் படங்கள். ஒட்டப்பட்ட அட்டை
- தட்டுக்கழி, தட்டுப்பலகை
- செயற்பத்திரம் 3.4.2,2 பின்னிணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**
**படி 3.4.1.1**

- ஆயர் சேரியர் சப்தத்தின் பாடல் அமைப்பு
  இராகமாலிகை
  தாளம் - மிச்ர சாபு
- ஸரஸி ஜாக்ஷுலு சப்தத்தின் பாடல் அமைப்பு
  இராகமாலிகை
  தாளம் - மிச்ர சாபு
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் பாடலை ஆசிரியர் பாடியோ அல்லது ஒலிநாடா மூலம் ஒலிக்கச் செய்தோ மாணவர் அதைச் செவிமடுக்கச் செய்தல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் 4ஆவது ஜதியினை தாளாங்கக் குறியீட்டு அட்டவணையைப் பயன் படுத்தி தாளத்துடன் கொலுப்பித்துக் காட்டல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் 4ஆவது ஜதியை ஆசிரியர் முழுமையாக ஆடிக்காட்டல்.
- 4ஆவது ஜதியில் இடம்பெறும் அடவுகளை இனங்காணல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் 4 ஆவது ஜதி தொடர்பாகப் பின்வரும் விடயங்களை வலியுறுத்தி ஆடலை மேற்கொள்ள நெறிப்படுத்துதல்.

- நமஸ்காரத்துடன் வகுப்பை ஆரம்பித்தல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் நான்காவது ஜதியைத் தாளாங்கக் குறியீட்டுடன் எழுதப் பட்ட அட்டையைக் காட்சிப்படுத்துதல்.
- காட்சிப்படுத்திய அட்டையில் காணப்படும் ஜதியைக் கையில் தாளம் போட்டுக் கொலுப் பிப்பதற்கு வழிப்படுத்துதல்.
- இந்த ஜதியில் இடம்பெறும் அடவுகள் பற்றிக் கலந்துரையாடுதல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் 4ஆவது ஜதியினை ஆசிரியர் முழுமையாக ஆடிக் காண்பித்தல்.
- மாணவர்கள் ஆசிரியரைப் பின்பற்றி ஆடலை மேற்கொள்ளச் செய்தல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் நான்கு கண்டிகை களையும் அவற்றிற்குரிய ஜதிகளையும் மாணவர்கள் ஆடச் செய்தல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் நான்காவது ஜதியில் இடம்பெறும் அடவுகளை மிஸ்ர நடையில் பயிற்சி அளித்தல்.
- நான்காவது ஜதியினை முழுமைப்படுத்தி ஆட வழிப்படுத்துக.
- தத்தண தண தண என்பது மிருதங்கச் சொற்கட்டு
- தத்தெய், தாஹா என்பது அடவுச் சொற்கட்டு
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் நான்காவது ஜதியினை ஆசிரியர் ஆடிக்காட்ட மாணவர்கள் அதனைப் பின்பற்றி ஆடும்படி செய்தல்.
- 4ஆவது ஜதியினை மாணவர்கள் முழுமையாக ஆட வழிப்படுத்துதல்.
- மாணவர்களை எழுமாற்றாகவும், தனியாகவும், குழுவாகவும் ஆடச் செய்தல்.

(15 நிமிடங்கள்)

**படி 3.4.2 :**

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்துடன் பின்னிணைப்பையும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தின் அறிவுறுத் தல்களுக்கேற்ப செயல்முறைப் பயிற்சியில் ஈடுபடுகின்றனரா என அவதானியுங்கள்.
- மாணவர்கள் பயிற்சியில் ஈடுபடும் போது ஆசிரியர் அவதானித்து ஆலோசனை வழங்குதல்.

(15 நிமிடங்கள்)

**படி 3.4.3** :

- ஒவ்வொரு குழுவும், தனியாகவும் குழுவாகவும் எடுத்துக்கொண்ட சப்தத்தின் 4ஆவது ஜதியினை ஆடச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது செயற்பாட்டினைச் சமர்ப்பிக்கும் போது மறு குழு அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளுங்கள்.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்துங்கள்.

> - சப்தம் என்னும் உருப்படி வகை கண்டிகை களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
> - சப்தத்தில் பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகிய பகுதிகள் காணப்படமாட்டா.
> - சப்தம் எனும் உருப்படியில் சஞ்சாரி பாவங்கள் நிறைய இடம்பெறுகின்றன.
> - கண்ணன் வெண்ணை திருடுதல், நீராடச் சென்ற கோபிகைகளின் ஆடைகளைக் கள வெடுத்து மரத்தின் மீது வைத்தல், கோபிகை களுடன் கூடி விளையாடுதல், சரசமாடுதல் போன்றவை சஞ்சாரி பாவங்கள்.
> - இவ்விரு சப்தங்களும் மிச்ர சாபு தாளத்தில் அமைந்துள்ளன.
> - இவ்விரு சப்தங்களின் ஜதிகளில் பெரும்பாலும் தத்தெய்தாஹா அடவு. காணப்படும்.

(10 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

1. எடுத்துக்கொண்ட சப்தத்தின் இராகம் தாளத்தினைக் கூறுவர்.
2. சப்தம் அமைந்துள்ள நடையினைக் குறிப்பிடுவர்.
3. சப்தத்தின் நாட்டிய அமைப்பினைக் கூறுவர்.
4. சப்தத்தில் இடம்பெறும் சஞ்சாரி பாவங்களின் கருத்துக்களைக் கூறுவர்.
5. சப்தம் எனும் உருப்படியினை முழுமையாகத் தாளத்துடன் கொலுப்பித்துப் பாடுவர்.
6. எடுத்துக்கொண்ட சப்தத்தினை முழுமையான அங்க சுத்தத்துடனும் லயப் பிடிப்புடனும் அபிநயித்து ஆடிக்காட்டுவர்.
7. இவ்விரு சப்தங்களிலும் கூடுதலாக இடம்பெறும் அடவினைக் குறிப்பிடுவர்.
8. அடவுச் சொற்கட்டில் ஜதியைக் கொலுப்பிப்பர்.
9. மிருதங்கச் சொற்கட்டில் ஜதியைக் கொலுப்பிப்பர்.

## செயற்பத்திரம் 3.4.1.2

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை இணைப்புடன் சேர்த்து வழங்குங்கள்.

| | |
|---|---|
| 1. | எடுத்துக்கொண்ட சப்தத்தின் நான்காவது ஜதியினை தாளத்துடன் கொலுப்பித்து ஆடிக்காட்டுக. |

**இணைப்பு**

### சப்தம் - இராமாலிகை

ஆயர் சேரியர் சப்தம்
தாளம் :- மிச்ர சாபு

நான்காவது ஜதி

04. தத்தண / தண / தண / தஜ்ஜொணு / திமி / திமி //
தத்தண / தண / கிண / தத்தோம் / திமி / கிட //

சப்தம் - இராகமாலிகை

ஸரஸி ஜாக்ஷுலு சப்தம்
தாளம்: மிச்ர சாபு

நான்காவது ஜதி

04. தத்தண / தந் / தண // தஜொணு / ஜொணு / ஜொணு. //
தத்திமி / திமி / கிட // தத்தீம் / திமி / கிட //

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி 3.0** | : | பரத நாட்டிய பாத அசைவுகளையும், கைமுத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக்காட்டுவார். |
| **தேர்ச்சி மட்டம் 3.4** | : | நடன உருப்படிகளை ரச பாவத்துடன் ஆடிக் காட்டுவார். |
| **செயற்பாடு 3.4.1** | : | சப்தத்தின் 4ஆவது கண்டிகையின் சாகித்தியத்திற்கு அபிநயம் செய்வோம். |
| **நேரம்** | : | 40 நிமிடம் (01 பாடவேளை) |
| **தரவிருத்தி உள்ளீடுகள்** | : | • எடுத்துக்கொண்ட சப்தத்திற்குரிய பாடல்கள் அடங்கிய ஒலி, ஒளிப்பதிவு நாடாக்கள்.<br>• சப்தத்தின் சாகித்தியம் எழுதப்பட்ட அட்டை.<br>• சப்தத்தின் அபிநயங்களுடன் தொடர்புடைய அபிநய நிலைகளைக் காட்டும் படங்கள் தீட்டப்பட்ட அட்டை<br>• தட்டுக்கழி, தட்டுப்பலகை<br>• செயற்பத்திரம் 3.4.1.2, பின்னிணைப்பு |

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**
**படி 3.4.1.1**

- ஆயர் சேரியர் சப்தத்தின் 4ஆவது கண்டிகை
  இராகம் - மத்தியமாவதி
  தாளம் - மிச்ர சாபு
- ஸரஸி ஜாக்ஷுலு சப்தத்தின் 4ஆவது கண்டிகை
  இராகம் - சுருட்டி
  தாளம் - மிச்ர சாபு
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் 4ஆவது கண்டிகையின் சாகித்தியத்தை ஆசிரியர் பாடியோ அல்லது ஒலிநாடா மூலம் ஒலிக்கச் செய்தோ மாணவர் அதனை செவிமடுக்கச் செய்தல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் 4ஆவது கண்டிகையினைத் தாளாங்கக் குறியீட்டுடன் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தி ராக, தாளத்துடன் பாடிக்காட்டுதல்.
- ஆயர் சேரியர் / ஸரஸி ஜாக்ஷுலு சப்தத்தின் 4 ஆவது கண்டிகையினை ஆசிரியர் பாடி அபிநயித்து ஆடிக்காட்டல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் 4 ஆவது கண்டிகை தொடர்பாகப் பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

- நமஸ்காரத்துடன் வகுப்பை ஆரம்பித்தல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தில் ஏற்கனவே கற்ற மூன்று கண்டிககைகளையும் ஆடிக்காட்டச் செய்தல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் நான்காவது கண்டிகையின் சாகித்தியத்தினை தாளாங்கக் குறியீட்டுடன் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தி மாணவர்கள் இராக தாளத் துடன் பாடிப் பயிற்சி பெறுவதற்கு வழிப் படுத்துதல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் 4ஆவது கண்டிகையினை இராக, தாளத்துடன் ஆசிரி யருடன் இணைந்து பாடுதல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் நான்காவது கண்டிகையினை ஆசிரியர் முழுமையாகப் பாடி ஆடிக் காண்பித்தல்.
- ஆசிரியரால் ஆடிக்காட்டப்பட்ட பகுதியின் கருத்துக்களை மாணவர் கூற வழிப்படுத்துதல்.
- எடுத்துக்கொண்ட கண்டிகையின் சாகித்தியத் திற்குரிய கருத்தினைக் கூறுதல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் நான்காவது கண்டிககையின் நேர்க்கை, சஞ்சாரி பாவத்திற் குரிய கருத்துக்களைக் கூறுதல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் நான்காவது கண்டிகையின் அபிநயத்திற்குரிய முத்திரை களை அறிமுகம் செய்தல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் நான்காவது கண்டிகையினை ஆசிரியர் பகுதி பகுதியாக ஆடிக்காட்ட அவரைப் பின்பற்றி மாணவர் களை ஆடச் செய்தல்.
- மாணவர்கள் எடுத்துக்கொண்ட சப்தத்தின் 4ஆவது கண்டிகையினை முழுமையாக ஆடிக்காட்ட வழிப்படுத்துதல்.
- மாணவர்களை எழுமாற்றாகவும், தனியாகவும், குழுவாகவும் ஆடச் செய்தல்.

(50 நிமிடங்கள்)

**படி 3.4.4.2** :

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக் கேற்ப குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்துடன் பின்னிணைப்பையும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தின் அறிவுறுத் தல்களுக்கேற்ப செயல்முறைப் பயிற்சியில் ஈடுபடுகின்றனரா என அவதானியுங்கள்.

- மாணவர்கள் பயிற்சியில் ஈடுபடும் போது ஆசிரியர் அவதானித்து ஆலோசனை வழங்குதல்.

(40 நிமிடங்கள்)

**படி 3.4.4.3** :

- ஒவ்வொரு குழுவும், தமது பேறுகளைச் சமர்ப் பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது செயற்பாட்டினைச் சமர்ப்பிக்கும் போது மறு குழு அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- குழுக்களின் செயற்பாட்டில் பெற்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களை மீளவும் ஆடச் செய்து நெறிப்படுத்துக.

- ஸரஸி ஜாக்ஷுலு சப்தமானது கண்ணனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது.
- மேற்குறிப்பிட்ட சப்தத்தின் நான்காவது கண்டிகை ஸ்ரீபத்மநாப சுவாமிக்கு வணக்கம் செலுத்துவதாக அமைந்துள்ளது.
- அழகிய மலையாளத்தில் பத்மநாப சுவாமி ஒளிந்து கொண்டிருப்பதாகவும், நாலு பேர் அவரைப் பார்த்து நகைப்பதாகவும் பாடல் வரிகள் தெரிவிக்கின்றன.
- கண்ண பிராணின் குழலோசையைச் செவி மடுத்த கோபியர்கள் மோகம் கொண்டோடி அவரை வணங்குவதாக ஆயர் சேரியர் சப்தத்தின் இறுதிக் கண்டிகையின் வரிகள் கூறுகின்றன.
- தலை வாரிப் பூச் சூடி, கழற்றி வைத்த ஆபரணங்களை மீளவும் அணிந்து, கண்ணுக்கும் புருவத்துக்கும் மை தீட்டி, சுய அழகை இரசிக்கும் போது குழலோசை கேட்டு கோபியர் ஓடுவது போன்ற சஞ்சாரி பாவங்கள், இக்கண்டிகையில் வெளிப்படுத் தப்பட்டுள்ளன.
- ‘கமலக் கண்ணன்’ எனப் பாடும் பொழுது தாமரை போன்ற கண் உடையான் என அபிநயிக்கப்படும்.
- தியானம் செய்கிறார் என்னும் பொழுது அக் கருத்தினைப் புலப்படுத்தக்கூடிய அபிநயத்தை நேர்க்கையாகச் செய்த பின் சஞ்சாரி பாவமாக தூய தீபங்களைக் காட்டிக் கண்ணனை வணங்குவதாக அபிநயிக்கப்படுகிறது.
- இவ்விரு சப்தங்களிலும் கண்ணனின் சிறு பிள்ளைத்தனமான குறும்புகள் அபிநயிக்கப் படுகின்றன.

(30 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

1. எடுத்துக்கொண்ட சப்தத்தின் நான்காவது கண்டிகை அமைந்துள்ள இராகம், தாளம் என்பவற்றைக் கூறுவர்.
2. எடுத்துக்கொண்ட சப்தத்தின் நான்காவது கண்டிகையின் கருத்தினையும், சஞ்சாரி பாவங்களின் கருத்தினையும் கூறுவர்.
3. கற்ற சப்தத்தின் நான்காவது கண்டிகையினை இராக, தாளத்துடன் பாடுவர்.
4. கற்ற சப்தத்தின் நான்காவது கண்டிகையினை அங்க சுத்தத்துடனும் பாவத்துடனும் ஆடுவர்.
5. கற்ற சப்தத்தின் நான்காவது கண்டிகையில் இடம்பெறும் சஞ்சாரி பாவங்களை முக பாவத்துடன் ஆடிக்காட்டுவர்.

## செயற்பத்திரம் 3.4.4.2

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை இணைப்புடன் சேர்த்து வழங்குங்கள்.

| |
|---|
| 1. கற்றுக்கொண்ட சப்தத்தின் நான்காவது கண்டிகையினை தாளத்துடன் பாடி ஆடிக்காட்டுக. |

**இணைப்பு**

## சப்தம் - ஆயர் சேரியர்

இராகமாலிகை
தாளம் :- மிச்ர சாபு
நான்காவது கண்டிகை
இராகம் : மத்தியமாவதி

| | | | |
|---|---|---|---|
| 04. | கோவிந்தன் | குழல் | கீத நாதமும் |
| | கோபியர் | செவி | சாய்த்திட |
| | மோகம் | கொண்டோடி | வேகமாய் வர |
| | கண்ணனை | தியானம் | செய்கிறார் - கமலக் |
| | கண்ணனை | தியானம் | செய்கிறார். |

ஸ்வர சாகித்தியம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 04. | , ரிம் / | ரிரி / | ஸ்ஸ் // | ஸ்ாஸ் / | ஸ்நி / | நிநி // |
| | , கோவிந் | தன் | குழல் | கீத | நா | தமும் |
| | , பநி / | ஸ்ரி / | ரிரி // | நீஸ் / | ரீ / | // |
| | கோபி | யர் | செவி | சாய்த்தி | ட | |
| | , பநி / | ஸ்ரி / | ரிரி // | , ரிம / | ரிரி / | ஸ்ஸ் // |
| | , மோகம் | கொண் | டோடி | வேக | மாய் | வர |
| | நிஸ் / | ஸ்நி / | நிப // | பநிந / | ஸ்ா / | // |
| | கண்ண | னை | தியானம் | செய்கி | றா | ர், |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ரிநீ / | ஸ்ா / | ஸ்ஸ் // | ஸ்நிஸ் / | ஸ்நி / | நிப // |
| ஆ | . | கம | லக்கண்ண | னை | தியானம் |
| பநித / | ஸ்ா / | // | ரிநீ / | ஸ்ா / | // |
| செய்கி | றார் | | ஆ | | |

**இணைப்பு**

## சப்தம் - இராகமாலிகை

தாளம் :- மிச்ர சாபு
பாடல் இயற்றியவர் : தஞ்சை வடிவேல்
நான்காவது கண்டிகை
இராகம் : சுருட்டி

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 04. | இலனு | நினு | மதி | தலசி | ஜுடக | |
| | நலகு | ரனு | நினு | நகுத்ஸ ரனு | | சொனு |
| | லலித | மலையாள | | முன | தா | கின |
| | பளி | பளிர | ஸ்ரீ | பத்ம | நா | பந |
| | மோஸ்து | | தே | | | |

ஸ்வர சாகித்தியம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 04. | , நிதாநி / | ஸ்ஸ் / | ஸ்ஸ் // | , ரிமாக / | ரிஸ் / | ஸ்ஸ் // |
| | இலனு | நினு | மதி | தலசி | ஜு | டக |
| | , நிதநீஸ் / | நீத / | பப // | , பநீத / | நிதபா/ | மகரீ // |
| | நலகு | ரனு | நினு | நகுத்ஸ | ரனு | சொனு |
| | , ரிரீம / | பநி / | நிநி // | , பநி / | ஸ்ஸ் / | நிதபா // |
| | லலித | மலை | யாள | முன | தா | கின |
| | , மமாம / | பப / | பா // | , மமா / | பா / | பாபம // |
| | பளிப | ளிர | ஸ்ரீ | , பத்ம | நா | பந |
| | , பநித / | மகரீ / | ரிமரிம// | ரீ , / | ஸ்ா / | ஸ்ா // |
| | மோஸ்து | | தே | | | |

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும், கைமுத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.4** : நடன உருப்படிகளை ரச பாவத்துடன் ஆடிக் காட்டுவார்.

**செயற்பாடு 3.4.1** : சப்தத்தின் (ஆயர் சேரியர் \ ஸரஸி ஜாக்ஷுலு) ஐந்தாவது ஜதியை ஆடுவோம்.

**நேரம்** : 1 மணித்தியாலம் 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- சப்தத்தின் பாடல் எழுதப்பட்ட அட்டை
- சப்தத்தின் பாடல்கள் அடங்கிய ஒலி, ஒளி நாடாக்கள்.
- எடுத்துக்கொண்ட ஐந்தாவது ஜதியில் இடம்பெறும் பாத நிலைகளைச் சித்தரிக்கும் படங்கள் ஒட்டப் பட்ட அட்டை.
- தட்டுக்கழி, தட்டுப்பலகை
- செயற்பத்திரம் 3.4.1.2, பின்னிணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**
**படி 3.4.1.1**

- கற்றுக்கொண்ட சப்தத்தின் ஐந்தாவது ஜதி எழுதப் பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- காட்சிப்படுத்திய அட்டையில் காணப்படும் குறியீட்டு அட்டவணையைப் பயன்படுத்தி ஜதியைத் தாளத் துடன் கொலுப்பித்தல்.
- கற்றுக்கொண்ட சப்தத்தின் ஐந்தாவதும் இறுதியு மான ஜதியை ஆசிரியர் ஆடிக்காட்டல்.
- ஐந்தாவது ஜதியில் இடம்பெறும் அடவுகளை இனங்காண்பர்.
- கற்றுக்கொண்ட சப்தத்தின் ஐந்தாவது ஜதி தொடர்பாகப் பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

> - நமஸ்காரத்துடன் வகுப்பை ஆரம்பித்தல்.
> - எடுத்துக்கொண்ட சப்தத்தின் ஐந்தாவதும் கடைசியுமான ஜதியைத் தாளாங்கக் குறியீட்டுக்கமைய எழுதப்பட்ட அட்டவணை யைக் காட்சிப்படுத்தல்.
> - காட்சிப்படுத்திய அட்டையில் காணப்படும் ஜதியைக் கையில் தாளம் போட்டுக் கொலுப் பிப்பதற்கு வழிப்படுத்துதல்.

- 5ஆவது ஜதிக்கும் நான்காவது ஜதிக்கும் உள்ள வேறுபாடு பற்றிக் கலந்துரையாடுதல்.
- 5ஆவது ஜதியில் இடம்பெறும் அடவுகளை இனங்காணல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் 5ஆவது ஜதியை ஆசிரியர் முழுமையாக ஆடிக் காண்பித்தல்.
- ஆசிரியரைப் பின்பற்றி மாணவர்கள் ஜதியை ஆடுவதற்கு நெறிப்படுத்தல்.
- எடுத்துக்கொண்ட சப்தத்தின் ஐந்தாவது ஜதியில் இடம்பெறும் அடவுகளை மிஸ்ர நடையில் பயிற்சி அளித்தல்.
- 5ஆவது ஜதியை முழுமைப்படுத்தி ஆடலை மேற்கொள்ள வழிப்படுத்துதல்.

(15 நிமிடங்கள்)

**படி 3.4.1.2** :

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக் கேற்ப சிறிய குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்துடன் பின்னிணைப்பையும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தின் அறிவுறுத் தல்களுக்கேற்ப செயல்முறைப் பயிற்சியில் ஈடுபடுகின்றனரா என அவதானியுங்கள்.
- மாணவர்கள் பயிற்சியில் ஈடுபடும் போது ஆசிரியர் அவதானித்து ஆலோசனை வழங்குங்கள்.

(15 நிமிடங்கள்)

**படி 3.4.1.3** :

- ஒவ்வொரு குழுவும், எடுத்துக்கொண்ட சப்தத்தின் 5ஆவது ஜதியினை ஆடச் சந்தர்ப்பம் வழங் குங்கள்.
- ஒரு குழு தமது செயற்பாட்டினைச் சமர்ப்பிக்கும் போது மறு குழு அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளுங்கள்.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்துங்கள்.

- ஆரம்பத்தில் சப்தம் காம்போஜி இராகத்தில் மட்டுமே பாடப்பட்டு வந்தது.
- சப்தத்தின் (ஆயர் சேரியர்) கடைசிக் கண்டிகை மத்தியமாவதி இராகத்தில் அமைந்திருப்பதால் கடைசி ஜதியும் அதே இராகத்தில் பாடப்படு கின்றமை

- சப்தத்தின் (ஸரஸி ஜாகூஷூலு) கடைசிக் கண்டிகை சுருட்டி இராகத்தில் அமைந்திருப் பதால் கடைசி ஜதியும் அதே இராகத்தில் பாடப்படுகிறது.
- ஒரு சில இராகமாலிகைகளின் இறுதி இராக மாகப் பாடப்படுவது மத்தியமாவதி அல்லது சுருட்டி இராகம்.
- ஐந்தாவது ஜதிக் கோர்வையானது முன்னைய ஜதிகளைப் பார்க்கிலும் சற்று நீளமானதும் கடினமான்தும் ஆகும்.
- சிலர் கடைசி ஜதியையும் காம்போஜி இராகத் திலேயே பாடுவர்.
- முன்னைய காலங்களில் சப்தம் என்னும் உருப்படி வகை காம்போஜி இராகத்தில் மட்டுமே பாடப்பட்டு வந்தது.
- சப்தங்களை இராகமாலிகையாகப் பாடும் வழக்கம் பிற்காலத்திலே அறிமுகப்படுத்தப் பட்டமை.
- சப்தம் என்னும் உருப்படி வகையை பரத நாட்டியக் கச்சேரி நிரலில் முதன் முதலாக அறிமுகப்படுத்தியவர்கள் தஞ்சை நால்வரான பொன்னையா, சின்னையா, சிவானந்தம், வடிவேலு சகோதரர்கள்.
- பக்கவாட்டில் ஆடப்படும் தெய், தெய், திதி தெய் என்னும் அடவு ஐந்தாவது ஜதியில் இடம்பெறுகிறது.
- தத்தெய்தாஹா அடவுகளும் இந்த ஜதியில் காணப்படுகின்றமை.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. சப்தம் என்னும் உருப்படி வகை முடிவு பெறும் இராகங்களைக் குறிப்பிடுவார்.
2. சப்தத்தின் (ஆயர் சேரியர்) கடைசிக் கண்டிகையும் கடைசி ஜதியும் அமைந்துள்ள இராகத்தைக் குறிப்பிடுவார்.
3. ஸரஸி ஜாகூஷூலு சப்தத்தின் கடைசிக் கண்டிகையும் கடைசி ஜதியும் அமைந்துள்ள இராகத்தைக் குறிப்பிடுவார்.
4. ஆரம்ப காலங்களில் சப்தம் எனும் உருப்படி பாடப்பட்டு வந்த இராகத்தைக் குறிப்பிடுவார்.
5. ஐந்தாவது ஜதியில் எவ்வெவ் அடவுகள் இடம்பெறுகின்றன எனக் கூறுவர்.
6. ஐந்தாவது ஜதியினை மிச்ர நடையில் ஆடிக் காட்டுவர்.
7. மிருதங்கச் சொற்கட்டிற்கமைய ஐந்தாவது ஜதியை ஆடிக் காட்டுவர்.
8. ஐந்தாவது ஜதியை முழுமையாகவும் தொடர்ச்சியாகவும் ஆடிக் காட்டுவர்.

## செயற்பத்திரம் 3.4.1.2

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை இணைப்புடன் சேர்த்து வழங்குங்கள்.

| | |
|---|---|
| 1. | எடுத்துக்கொண்ட சப்தத்தின் ஐந்தாவது ஜதியினைத் தாளத்துடன் கொலுப்பித்து ஆடிக்காட்டுக. |
| 2. | எடுத்துக்கொண்ட சப்தத்தை முழுமையாக ஆடிக்காட்டுக. |

**இணைப்பு**

### சப்தம் - ஆயர் சேரியர்

இராகமாலிகை
தாளம் :- மிச்ர சாபு
ஐந்தாவது ஜதி

05. தத்தின்னம் / தகுந்தரி / கிடதக // தகதின்னம் / தகுந்தரி / கிடதக //
தித்தின்னம் / தகுந்தரி / கிடதக // தளாங்குதக / தகததிங் / கிணதொம் //
, தகெய் / யா / தெய் // தத்த / தாம்/ // ஆ/ / //

ஸ்வரத்துடன்

பாஸ்ாஸ்ா / பஸ்ஸ்ஸ் / ஸ்ஸ்ஸ்ஸ் // ாஸ்ஸ்ாஸ் / பஸ்ஸ்ஸ் /ஸ்ஸ்ஸ்ஸ் //
தத்தின்னம் தகுந்தரி கிடதக தகதின்னம் தகுந்தரி கிடதக
பாஸ்ாஸ்ா / பஸ்ஸ்ஸ் / ஸ்ஸ்ஸ்ஸ் // பாஸ்ஸ்ாஸ் / பஸ்ஸ்ஸ் /ஸ்ஸ்ஸ்ஸ்//
தித்தின்னம் / தகுந்தரி / கிடதக // தளாங்குதக / தகததிங் / கிணதொம்//
பதஸ் / பா / மா . // பாத / ஸ்ா / //
பதத / ஸ்ா / ; //
ஆ. / / ; //

பி. கு
இந்த சப்தத்தினைச் சுரப்படுத்தியவர் ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் சங்கீதபூஷணம் திரு. திலகநாயகம் போல் அவர்கள்.

சப்தம் - ஸரஸி ஜாக்ஷுலு
இராகமாலிகை
தாளம் - மிச்ர சாபு பாடல் இயற்றியவர் - தஞ்சை வடிவேல்
ஐந்தாவது ஜதி

05. தத்தண / தண / தண // தஜ்ஜொணு / ஜொணு /ஜொணு //
தத்திமி திமி கிட தத்தோம் தண கிண
தா / / தெய் // தத்த / தா / ம் ://

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி 3.0** | : | பரத நாட்டிய பாத அசைவுகளையும், கைமுத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக்காட்டுவார். |
| **தேர்ச்சி மட்டம் 3.4** | : | நடன உருப்படிகளை ரச பாவத்துடன் ஆடிக் காட்டுவார். |
| **செயற்பாடு 3.4.1** | : | "என்ன புண்ணியம் செய்தனை" என்னும் தேவாரத்தினை பாவத்துடன் ஆடுவோம். |
| **நேரம்** | : | 01 மணித்தியால்ம் 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்) |
| **தரவிருத்தி உள்ளீடுகள்** | : | • தேவாரம் எழுதப்பட்ட அட்டை<br>• ஒலி, ஒளி நாடாக்கள், ஒலிப்பதிவுக்கருவி, வீடியோ பதிகருவி<br>• தட்டுக்கழி, தட்டுப்பலகை<br>• செயற்பத்திரம் 3.4.2, பின்னிணைப்பு |

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**
**படி 3.4.1.1**

- "என்ன புண்ணியம் செய்தனை" எனும் தேவாரம் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- தேவாரத்தின் பொருளையும் பாடப்பட்ட சந்தர்ப்பம், க்ஷேத்திரம், பண் என்பவற்றைக் குறிப்பிடுதல்.
- "என்ன புண்ணியம்" என்ற தேவாரத்தினை இசையுடனும் பாடிக் காண்பித்தல் அல்லது ஒலி நாடாவைப் பயன்படுத்தி தேவாரத்தினை செவிமடுக்கச் செய்தல்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

> - "என்ன புண்ணியம் செய்தனை" எனும் தேவாரத்தின் பொருள் வெளிப்படும்படியாக நேர்க்கையை ஆசிரியர் அபிநயித்துக் காட்ட மாணவர்கள் தொடர்ந்து அபிநயித்துக் காட்டுதல்.
> - அங்க சுத்தம். முத்திரை, முகபாவம் என்பவற்றை நேர்த்தியாகச் செய்வதற்கு மாணவர்கள் வழிப்படுத்தப்படுதல்.
> - மேற்கூறிய தேவாரத்தில் இடம்பெறும் சில பொருத்தமான சம்பவங்களைத் தெரிவு செய்து அதற்குரிய சஞ்சாரி பாவத்தை அபிநயிப்பதற்கு வழிகாட்டல்.
> - ஆசிரியரும் மாணவரும் இணைந்து பாடி ஆடுதல்.

- மாணவர்கள் தனியாகவும் குழுக்களாகவும் அபிநயித்துக்காட்ட இடமளித்தல்.
- "என்ன புண்ணியம் செய்தனை" என்ற தேவாரத்தின் பண் : தாளம் :
- இத்தேவாரம் பாடப்பட்ட சந்தர்ப்பம் க்ஷேத்திரம், இறைவன்

(20 நிமிடங்கள்)

**படி 3.4.1.2** :

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக் கேற்ப சிறிய குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்துடன் பின்னிணைப்பையும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தின் அறிவுறுத் தல்களுக்கேற்ப செயல்முறைப் பயிற்சியில் ஈடுபடுகின்றனரா என உறுதிப்படுத்தி ஆலோசனை வழங்குங்கள்.

(35 நிமிடங்கள்)

**படி 3.4.1.3** :

- குழுக்களின் பெறுபேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற் கொள்ளுங்கள்.
- ஒரு குழு அபிநயித்துக் காட்டும் போது மற்றைய குழுக்களும் அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- குழுக்கள் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளுங்கள்.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்துங்கள்.

- "என்ன புண்ணியம் செய்தனை" என்னும் தேவாரம் அமைந்துள்ள பண் : நட்ட இராகம்-
  இராகம் - பந்துவராளி தாளம் - ஆதி
  பாடியவர் - திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்
- இத்தேவாரத்தினைப் பண்ணுடன் பாடிக்காட்டி, பொருத்தமான அபிநயத்திற்கேற்ப ஆடுதல்.
- அங்க சுத்தம், முத்திரை, பாவம் என்பன வற்றை முறையே கவனத்திற் கொண்டு ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து ஆடுதல்.

(25 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. "என்ன புண்ணியம் செய்தனை" என்னும் தேவாரத்தைப் பாடியவர், பாடப்பட்ட சந்தர்ப்பம் என்பவற்றைக் குறிப்பிடுவார்.
2. இத்தேவாரத்தின் பண், தாளம் என்பவற்றைக் கூறுவார்.
3. தேவாரத்தினை பண்ணோடு முழுமையாகப் பாடிக்காட்டுவார்.
4. தேவாரம் அபிநயிக்கப் பிரயோகிக்கப்படும் முத்திரை, மற்றும் பாத பேதங்களை ஆடிக்காட்டுவார்.
5. தேவாரத்தினை முழுமையாக அபிநயித்துக் காட்டுவார்.

### செயற்பத்திரம் - 1- 3.4.2

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை இணைப்புடன் சேர்த்து வழங்குங்கள்.

1. "என்ன புண்ணியம் செய்தனை" என்ற தேவாரம் யாரால் பாடப்பட்டது.
2. இத்தேவாரம் அமைந்துள்ள பண், தாளம் என்பவற்றைக் குறிப்பிடுக.
3. இத்தேவாரம் பாடப்பட்ட சந்தர்ப்பத்தைக் கூறுக.
4. தேவாரத்தின் பொருளைக் கூறுக.
5. தேவாரத்தில் அமைக்கப்படக்கூடிய சஞ்சாரி பாவங்களைக் கூறுக.

### செயற்பத்திரம் - 2 - 3.4.2

1. "என்ன புண்ணியம் செய்தனை" எனும் தேவாரத்தினைப் பாடி அபிநயித்துக் காட்டுக.
2. தேவாரம் அபிநயிக்கப் பிரயோகிக்கும் முத்திரை, பாதபேதங்களை செய்துகாட்டுக.

**இணைப்பு**

### தேவாரம்

பண் :- நட்டராகம்
இராகம் :- பந்துவராளி

தாளம் : ஆதி
பாடியவர் : திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்
தலம் : திருவலஞ்சுழி

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே
- இருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை
- முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ் சுழி
- வாணனை வாயாரப்
பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும் வழிபடுமதனாலே

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| : கரீக | மா | பா : | தா பா | // | : பா, தபா | / | பா, பதமா// | |
| என்ன | புண் | | ணி யம் | | செய்தனை | | நெஞ்சமே | |
| : பஸ்ா | நிதா : , | | நிஸ்தரீ | // | ஸ்ா : : : | / | : : : : | // |
| இருங் | கடல் | | வையத் | | து ... | | . . . . | |
| : பா: , | தா, | நீ | ஸ்ரீஸா | // | : ஸ்ா ரிஸா, | / | தா, தா நிரீஸ்ா// | |
| முன் | னம் | | நீ புரி | | நல்வினைப் | | பய னிடை | |
| : நிஸா | ரீஸா , | | நிதாபமா | / | கம கா : : | / | : : : : // | |
| முழு | மணித் | | தரளங் | | கள் . . . . | | . . . . | |

## தேவாரத்தின் கருத்து

மனமே! நவமணிகளுள் ஒன்றான முத்துக்கள் நிறைந்த காவிரி ஆறு சூழப்பெற்ற திருவலஞ்சுழிப் பெருமானைப் பக்தியோடு பலமுறை வாயாரப் போற்றிப் புகழ்ந்து பாடி வழிபடும் பேற்றை நீ இப்பொழுது பெற்றுள்ளமையால், ஆழ் கடல் சூழ்ந்த இவ் (பூமியில்) வையகத்தில் நீ ஆற்றிய நல்வினைப் பயன்களுக்கு மத்தியில் இப்பேற்றை அடைவதற்கு ஏதுவாய் என்ன புண்ணியம் செய்தாய்? அது பெரிது.

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும், கைமுத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.5** : வெவ்வேறு வகையான கிராமிய நடனங்களை ஆடிக் காட்டுவார்.

**செயற்பாடு 3.5.4** : "சென்னிக் குளநகர் வாசன் தமிழ்" என்ற காவடி நடனத்தை ஆடுவோம்.

**நேரம்** : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- "சென்னிக் குளநகர் வாசன் தமிழ்" என்ற காவடிப் பாடல் எழுதப்பட்ட அட்டை.
- ஒலி, ஒளி நாடாக்கள், ஒலிப்பதிவுக்கருவி.
- தட்டுக்கழி, தட்டுப்பலகை
- செயற்பத்திரம் 3.5.4,2 பின்னிணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**
**படி 3.5.4.1**

- ஏற்கனவே ஆடப்பட்ட கிராமிய நடனங்களிலொன்றான காவடி நடனத்தை நினைவூட்டுதல்.
- எடுத்துக்கொண்ட காவடிப்பாடல் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்துதல்.
- ஒலிப்பதிவுக்கருவியை ஒலிக்கச் செய்து காவடிப் பாடலைச் செவிமடுக்கச் செய்தல்.
- செவிமடுத்த பாடலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

- காவடியின் சிறம்பம்சங்கள்.
- நமஸ்காரத்துடன் வகுப்பை ஆரம்பித்தல்.
- "சென்னிக் குளநகர் வாசன் தமிழ்" என்ற காவடிப் பாடல் எழுதிய அட்டையைக் காட்சிப்படுத்தி அதன் இராகம் - ஆனந்தபைரவி தாளம் - ஆதி எனக் கூறுதல்.
- இப்பாடலை ஆசிரியர் பகுதி, பகுதியாகப் பாட மாணவரும் இணைந்து பாடுதல்.
- குறித்த பாடலுக்கேற்றவாறு காவடிகளைத் தோளில் வைத்து இரு நிரல்களாகப் பிரவேசிக்கும் சுவடு ஒன்றை ஆடியவாறு மாணவர் வருதல்.
- இரு நிரல்களிலே நின்று இரு வகை எளிய சுவடுகளை ஆடியும் வெவ்வேறு கோலங்களிலும் ஆடச் செய்தல் (V, X, / அரைவட்டம்)

- வட்டமாக அல்லது வேறு வடிவங்களில் பாடலுக் கேற்ப ஆடி நிறைவு செய்வதற்கு வழிப்படுத்தல்.
- "சென்னிக் குளநகர் வாசன் தமிழ்" என்ற காவடி நடனத்தை பல்வேறு ஆடற் கோலங் களில் ஆசிரியரும், மாணவரும் சேர்ந்து முழுமையாக ஆடுதல்.
- மாணவர்களை எழுமாற்றான குழுக்களாகத் தெரிவு செய்து ஆடுவதற்கு இடமளித்தல்.

*(15 நிமிடங்கள்)*

**படி 3.5.4.2** :

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக் கேற்ப சிறிய குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்துடன் பின்னிணைப்பையும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தின் அறிவுறுத் தல்களுக்கேற்ப செயல்முறைப் பயிற்சியில் ஈடுபடுகின்றனரா என அவதானியுங்கள்.
- மாணவர்கள் பயிற்சியில் ஈடுபடும் போது ஆசிரியர் அவதானித்து ஆலோசனை வழங்குங்கள்.

(15 நிமிடங்கள்)

**படி 3.5.4.3** :

- ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாட்டினைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு ஆடிக்காட்டும் போது மறு குழு அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- குழுக்களின் பேறுகளைத் தொகுத்து பின்வரும் கலந் துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

- நேர்த்திக்கடன் செலுத்துதல், காவடி தோளில் வைத்து ஆடுதல் ஆகியன காவடி நடனத்தின் சிறப்பம் சங்கள் ஆகும்.
- "சென்னிக் குளநகர் வாசன் தமிழ்" என்ற காவடிப் பாடல் ஆனந்தபைரவி இராகத்திலும் ஆதி தாளத்திலும் அமைந்துள்ளமை.
- காவடிச்சிந்துப் பாடலை ஆசிரியரும், மாணவரும் சேர்ந்து பாடுதல்.
- அந்தப் பாடலுக்குரிய காவடி நடனத்தினை முழுமையாக ஆடுதல்.

(10 நிமிடங்கள்)

### கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

1. காவடி நடனத்தின் சிறப்பம்சங்களைக் குறிப்பிடுவர்.
2. "சென்னிக் குளநகர் வாசன் தமிழ்" என்ற காவடிச் சிந்து அமைந்துள்ள இராகம், தாளம் ஆகியவற்றைக் கூறுவர்.
3. குறிப்பிட்ட காவடிப் பாடலை முழுமையாகப் பாடுவர்.
4. காவடி நடனத்தினைப் பல்வேறு கோலங்களில் ஆடுவர்.

### செயற்பத்திரம் - 3.5.4.2

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை இணைப்புடன் சேர்த்து வழங்குங்கள்.

1. காவடியின் சிறப்பம்சங்கள் எவை?
2. "சென்னிக் குளநகர் வாசன் தமிழ்" என்ற காவடிப் பாடல் அமைந்துள்ள இராகம், தாளம் ஆகியவற்றைக் கூறுக.
3. இக்காவடிப் பாடலை முழுமையாகப் பாடுக.
4. குறித்த காவடிப் பாடலுக்கேற்றவாறு காவடி நடனத்தை ஆடுக.

### காவடிச் சிந்து - சென்னிக் குளநகர்

இராகம் : ஆனந்தபைரவி — தாளம் : ஆதி (திஸ்ர நடை)

| | | | |
|---|---|---|---|
| பபம | கமக | ரிரிக | , ஸஸ |
| சென்னிக் | குளநகர் | வாசன் | தமிழ் |
| ஸரிகாரி | கமகாரி | ரீரி | , ஸஸ |
| தேருமண் | ணாமலை | தாசன் | செய்யும் |
| ரிகமாமம | ரிகமாமம | பதபாமக | ரிகஸாஸஸ |
| ஜெகமெச்சிய | மதுரக்களி | அதனைப்புய | வரையில் புனை |
| ரீகஸரி | ரிபமக | ஸாஸ | |
| தீ. ரன் | அயில் | வீரன் | |

1. வண்ண மயில் முருகேசன் - குற
வள்ளி பதம் பணி நேசன் - உயிர்
வரமே தரு கழுகாசல பதிகோயிலில் வள நான்மற
வாதே சொல்வேன் மாதே

2. சந்நிதியில் துஜஸ்தம்பம் - விண்ணில்
தாவிவருகின்ற கும்பம் - என்னுந்
சலராசியை வடிவார்பல - கொடியீடிய முடி மீதிலே
தாங்கும் உயர்ந்தோங்கும்

3. அருணகிரி நாவில் பழக்கம் - தரும்
அந்தத் திருப்புகழ் முழக்கம் - பல
அடியார்கண மொழியோதினி அமராபதி இமையோர் செவி
அடிக்கும் அண்டம் உடைக்கும்

4. கருணை முருகனைப் போற்றி - தங்க
காவடி தோளின் மேல் ஏற்றி - கொழுங்
கனலேறிய மெழுகாய் வருப வரே வரும்மிக வேகதி
காண்பார் இன்பம் பூண்பார்

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும், கைமுத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.5** : வெவ்வேறு வகையான கிராமிய நடனங்களை ஆடிக் காட்டுவார்.

**செயற்பாடு 3.5.5** : "முந்தி முந்தி விநாயகரே" என்ற ஒயிலாட்ட நடனத்தை ஆடுவோம்.

**நேரம்** : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- "முந்தி முந்தி விநாயகரே" என்ற ஒயிலாட்டப் பாடல் எழுதப்பட்ட அட்டை.
- ஒலி, ஒளி நாடாக்கள், ஒலிப்பதிவுக்கருவி.
- தட்டுக்கழி, தட்டுப்பலகை
- செயற்பத்திரம் 3.5.5.2 பின்னிணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**
**படி 3.5.5.1**

- ஏற்கனவே ஆடப்பட்ட ஒயிலாட்டத்தை நினைவூட்டுதல்.
- "முந்தி முந்தி விநாயகரே" என்ற ஒயிலாட்டப் பாடல் எழுதப்பட்ட பாடலைக் காட்சிப்படுத்துதல்.
- ஒலிப்பதிவுக்கருவியை ஒலிக்கச் செய்து குறிப்பிட்ட பாடலைச் செவிமடுக்கச் செய்தல்.
- செவிமடுத்த பாடலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்கள் தொடர்பாக நெறிப்படுத்துங்கள்.

- ஒயிலாட்டத்தின் சிறம்பம்சங்கள்.
- நமஸ்காரத்துடன் வகுப்பை ஆரம்பித்தல்.
- எடுத்துக்கொண்ட ஒயிலாட்டப் பாடல் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தி அதன் இராக, தாளத்தினைக் குறிப்பிடுதல்.
- பாடலை ஆசிரியர் பாட மாணவரும் இணைந்து பாடுதல்.
- ஒயிலாட்டத்தின் பாடலுக்கேற்றவாறு இரு நிரல்களாகப் பிரவேசிக்கும் சுவடு ஒன்றை ஆடியவாறு மேடைக்கு வரச் செய்தல்.
- இரு நிரல்களிலே நின்று இரு வகை எளிய சுவடுகளை ஆடியும் வெவ்வேறு கோலங்களிலும் ஆடச் செய்தல் (V, X, /,\ அரைவட்டம்)

- வட்டமாகவோ அல்லது வேறு வடிவங்களிலோ பாடலுக் கேற்ப ஆடி நிறைவு செய்வதற்கு நெறிப்படுத்தல்.
- எடுத்துக்கொண்ட ஒயிலாட்டத்தை ஆடற் கோலங்களுக்கேற்ப ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து முழுமையாக ஆடுதல்.
- மாணவர்களை எழுமாற்றான குழுக்களாகத் தெரிவு செய்து ஆடுவதற்கு இடமளித்தல்.

(15 நிமிடங்கள்)

**படி 3.5.5.2** :

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தின் அறிவுறுத் தல்களுக்கேற்பச் செயற்படுகின்றனரா என உறுதிப் படுத்தி ஆலோசனை வழங்குங்கள்.

(15 நிமிடங்கள்)

**படி 3.5.5.3** :

- ஒவ்வொரு குழுவும் ஒயிலாட்டத்தினை ஆடச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு ஆடும் போது மறு குழு அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிக்க இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்தும் வகை யிற் கலந்துரையாடுங்கள்.

- கைகளிலே வண்ணக் கைக்குட்டைகளை ஏந்தி ஆடுவது, ஆண்கள் தனியாகவோ அல்லது ஆண்களும் பெண்களும் சேர்ந்தோ ஆடுவது ஒயிலாட்டத்தின் சிறப்பம்சங்களாகும்.
- எடுத்துக்கொண்ட ஒயிலாட்டப் பாடல் அமைந் துள்ள இராகம், தாளத்தினைக் குறிப்பிடுதல்.
- குறித்த பாடலை ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து பாடி, ஆடி நிறைவு செய்தல்.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. ஒயிலாட்டத்தின் சிறப்பம்சங்களைக் குறிப்பிடுவர்.
2. எடுத்துக்கொண்ட ஒயிலாட்டப் பாடலின் இராக, தாளத்தினைக் கூறுவர்.
3. குறித்த பாடலை முழுமையாகப் பாடிக்காட்டுவார்.
4. குறித்த ஒயிலாட்டத்தினை அதற்குரிய அம்சங்களுடன் ஆடி நிறைவு செய்வர்.

**செயற்பத்திரம் - 3.5.5.2**

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை இணைப்புடன் சேர்த்து வழங்குங்கள்.

1. ஒயிலாட்டத்தின் சிறப்பம்சங்கள் எவை?
2. எடுத்துக்கொண்ட ஒயிலாட்டப் பாடலின் இராக, தாளம் என்ன?
3. குறித்த பாடலை முழுமையாகப் பாடுக.
4. நீர் கற்றுக்கொண்ட ஒயிலாட்டத்தினை முழுமையாக ஆடி நிறைவு செய்க.

**இணைப்பு**

**ஒயிலாட்டப் பாடல்**

தன்னன்னானா தினம் தன்னானே
முந்தி முந்தி விநாயகரே முருகா நல்லா சரஸ்வதியே
கந்தனுக்கு முன் பிறந்த நல்ல கணபதியே முன்னாடவா
வேலவர்கு முன் பிறந்த வேதநாயகனே முன்னாடவா

தன்னன்னானா தினம் தன்னானே
இந்த சந்தனப் பொட்டுக்கும்
இப்படியா மொளக் கொட்டுறது
தன்னன்னானா தினம் தன்னானே
முத்து மகமாயி வீற்றிருக்கும்
நல்ல மேடைக்கு வந்த இளவட்டங்கள்
தன்னன்னானா தினம் தன்னானே
அப்பேற்பட்ட மாரிக்கு அங்கு அருமையுடன்
மொளக் கொட்டுவீரோ
தன்னன்னானா தினம் தன்னானே
சந்தனமான முத்து மாரி நல்ல
சாந்த குணமுள்ள முத்து மாரியர்க்கு
தன்னன்னானா தினம் தன்னானே
முந்தி முந்தி விநாயகரே முருகா நல்லா சரஸ்வதியே

என் மணியே தன்மையுள்ள
காதலியே என் ஜானகியே
உண்மையான தந்தை உன் சொல்
ஓங்கி வனம் சென்று வாறேன்
செல்லமுள்ள தன்மையிலே
சீவன் உள்ள ரஞ்சிதமே
வன்மை தவம் புரிந்து வாறேன் ஓங்கி
வனம் சென்று வாறேன்.
காதலியே என் ஜானகியே
பதினாறு வருடம் மட்டும்
பாரா வனம் சென்று வாறேன்
பத்தினியே என் ஜானகியே
பாங்கான பெண்மயிலே
பாராவனம் செல்வதென்றால்
பதருதையா எந்தன் உள்ளம்

பத்தினியா நான் கேட்கிறேன்
பத்தாது நீ உரைப்பீர்
பட்டம் தரிப்பது யாரு
அதைப் பாங்குடனே கூறு
சிற்றன்னையார் திட்டமிட்டார்

பரதனுக்கே பட்டம் கட்ட
பதினாழு வருடம் மட்டும்
பாராவனம் சென்றிருந்தேன்
அந்த ஜனகன் பெண்ணே வளர்த்த கண்ணே (2)
அரண்மனை சிம்மாசனம்
அத்தனையும் தான் இழந்து (2)
ஆரணியும் செல்வதென்றால்
அங்கம் எல்லாம் கருகுதையா
யார் தரிக்கக் கூடும்
இந்த அலங்கோலத்தைப் பாரும்

கண்மணியே தன்மையுள்ள காதலியே ஜானகியே
அரண்மனை சிம்மாசனம் அத்தனையும் தான் இழந்து
ஆரணியும் போரேன் நீ
அஞ்ச வேண்டாம் பெண்ணே
பதினாழு வருடம் மட்டும் பாராவனம் சென்றுவாறேன்
பத்தினியான பெண்ணே
அந்த ஜனகவான் வளர்த்த கண்ணே

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும், கைமுத்திரை களின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.5** : வெவ்வேறு வகையான கிராமிய நடனங்களை ஆடிக் காட்டுவார்.

**செயற்பாடு 3.5.6** : "இறைவன் வாழும்" என்ற குறத்தி நடனத்தை ஆடுவோம்.

**நேரம்** : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- "இறைவன் வாழும்" எனத் தொடங்கும் குறத்திப் பாடல் எழுதப்பட்ட அட்டை.
- ஒலி, ஒளி நாடாக்கள், ஒலிப்பதிவுக்கருவி. வீடியோ பதிகருவி
- தட்டுக்கழி, தட்டுப்பலகை
- செயற்பத்திரம் 3.5.6.1 பின்னிணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**
**படி 3.5.6.1**

- ஏற்கனவே ஆடப்பட்ட கிராமிய நடனங்களிலொன் றான குறத்தி நடனத்தை நினைவூட்டுதல்.
- எடுத்துக்கொண்ட குறத்திப் பாடல் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்துதல்.
- ஒலிப்பதிவுக்கருவியை ஒலிக்கச் செய்து குறத்திப் பாடலைச் செவிமடுக்கச் செய்தல்.
- செவிமடுத்த பாடலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடி நெறிப்படுத்துங்கள்.

- குறத்தி நடனத்தின் சிறப்பம்சங்கள்.
- நமஸ்காரத்துடன் வகுப்பை ஆரம்பித்தல்.
- "இறைவன் வாழும்" என்ற குறத்திப் பாடல் எழுதிய அட்டையைக் காட்சிப்படுத்தி அதன் இராகம் - ஆனந்தபைரவி, தாளம் - ஆதி எனக் கூறுதல்.
- இப்பாடலை ஆசிரியர் பகுதி, பகுதியாகப் பாட மாணவரும் இணைந்து பாடுதல்.
- குறித்த பாடலுக்குரிய அபிநயத்தினை ஆசிரியர் பகுதி, பகுதியாக அபிநயிக்க, மாணவரும் தொடர்ந்து அபிநயிக்கச் செய்தல்.
- ஆசிரியரும் மாணவரும் முழுமையாகப் பாடி அபிநயித்தல்.
- மாணவரைக் குழுவாகவும், எழுமாற்றாகவும் தெரிவு செய்து தனியாகவும் அபிநயிக்கச் செய்தல்.

(15 நிமிடங்கள்)

**படி 3.5.6.2** :

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்தின் அறிவுறுத் தல்களுக்கேற்பச் செயற்படுகின்றனரா என உறுதிப் படுத்தி ஆலோசனை வழங்குங்கள்.

(15 நிமிடங்கள்)

**படி 3.5.6.3** :

- ஒவ்வொரு குழுவும், குழுவாகவும்,தனியாகவும் பாடலைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு பாடும் போது மறு குழு அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்தும் வகையிற் கலந்துரையாடுங்கள்.

> - குறத்தி நடனத்தின் சிறப்பம்சங்களாவன:
> - மலை வளத்தினைக் குறத்தி கூறுவதாக அமைந்திருத்தல்.
> - ஆடை, ஆபரணங்கள், ஒப்பனை ஆகியன ஏனைய கிராமிய நடனங்களை விட வேறுபட்டுக் காணப்படுதல்.
>   (கட்டம் போட்ட சேலை, பாசிமணிமாலை, குறி சொல்லும் இறகு, தலையிலே இறகு)
> - குறத்திப் பாடலின் இராகம்- ஆனந்தபைரவி, தாளம் - ஆதி எனக் குறிப்பிட்டுப் பாடலை ஆசிரியரும், மாணவரும் சேர்ந்து பாடுதல்.
> - பாடலுக்கேற்ப முழுமையாகக் குறத்தி நடனத்தை ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து ஆடி நிறைவு செய்தல்.

(10 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

1. குறத்தி நடத்தின் சிறப்பம்சங்களைக் குறிப்பிடுவர்.
2. "இறைவன் வாழும்" என்ற குறத்திப் பாடல் அமைந்துள்ள இராகம், தாளம் ஆகியவற்றைக் கூறுவர்.
3. "இறைவன் வாழும்" என்ற குறத்திப் பாடலை முழுமையாகப் பாடுவர்.
4. இக் குறித்த பாடலிற்கு முழுமையாகக் குறத்தி நடனத்தினை ஆடுவர்.

## செயற்பத்திரம் - 3.5.6.2

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை இணைப்புடன் சேர்த்து வழங்குங்கள்.

1. குறத்தி நடத்தின் சிறப்பம்சங்கள் எவை?
2. "இறைவன் வாழும்" என்ற குறத்திப் பாடல் அமைந்துள்ள இராகம், தாளம் என்ன?
3. குறத்திப் பாடலை முழுமையாகப் பாடுக.
4. பாடலுக்கேற்றவாறு குறத்தி நடனத்தை முழுமையாக ஆடுக.

**இணைப்பு**

## குறத்திப் பாடல்

இராகம் - ஆனந்தபைரவி                                        தாளம் - ஆதி

தானானே    தானனே    தானானே    தானே

1. இறைவன் வாழும் கைலை மலை
   எங்கள் மலையம்மே
   இமையமும் வேங் கடமும் எங்கள் மலையம்மே
   மறை முனிவர் வசிக்கும் பொதியம்
   எங்கள் மலையம்மே
   மந்தரமும் விந்தியமும்
   எங்கள் மலையம்மே

2. உறையும் தெய்வ பழனிமலை
   எங்கள் மலையம்மே
   உயர்ந்த மகா மேரு மலை
   எங்கள் மலையம்மே
   நிறைவுடைய மலைகளெல்லாம்
   எங்கள் மலையம்மே
   நிலவளமும் குலவளமும்
   எங்கள் மலையம்மே

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி 3.0** | : | பரத நாட்டிய பாத அசைவுகளையும், கைமுத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக்காட்டுவார். |
| **தேர்ச்சி மட்டம் 3.5** | : | வெவ்வேறு வகையான கிராமிய நடனங்களை ஆடிக் காட்டுவார். |
| **செயற்பாடு 3.5.7** | : | "தாம் திமிதிமிதந்தக தந்தோம்" என்ற தேயிலைக் கொழுந்து கொய்யும் நடனத்தை ஆடுவோம். |
| **நேரம்** | : | 40 நிமிடங்கள் (01 பாடவேளை) |
| **தரவிருத்தி உள்ளீடுகள்** | : | • "தாம் திமிதிமி" என்ற தேயிலைக் கொழுந்துப் பாடல் எழுதப்பட்ட அட்டை.<br>• ஒலி, ஒளி நாடாக்கள், ஒலிப்பதிவுக்கருவி, வீடியோ பதிகருவி<br>• தட்டுக்கழி, தட்டுப்பலகை<br>• செயற்பத்திரம் 3.5.7.2 பின்னிணைப்பு |

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**
**படி 3.5.7.1**

- ஏற்கனவே ஆடப்பட்ட தேயிலைக் கொழுந்து நடனத்தை நினைவூட்டுங்கள்.
- "தாம்திமிதிமி" என்ற தேயிலைக் கொழுந்து கொய்யும் பாடல் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்துங்கள்.
- ஒலிப்பதிவுக்கருவியை ஒலிக்கச் செய்து குறிப்பிட்ட பாடலைச் செவிமடுக்கச் செய்யுங்கள்.
- செவிமடுத்த பாடலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடி நெறிப்படுத்துங்கள்.

> - தேயிலைக் கொழுந்து நடனத்தின் சிறம்பம்சங்கள்.
> - நமஸ்காரத்துடன் வகுப்பை ஆரம்பித்தல்.
> - "தாம்திமிதிமி" என்ற தேயிலைக் கொழுந்து கொய்யும் பாடல் எழுதிய அட்டையைக் காட்சிப்படுத்தி அதன் தாளத்தினைக் குறிப்பிடுதல்.
> - இப்பாடலை ஆசிரியர் பாட மாணவரும் இணைந்து பாடுதல்.
> - தேயிலைக் கொழுந்து கொய்யும் நடனத்தின் அசைவுகளைப் பகுதி பகுதியாக ஆசிரியர் ஆட மாணவரும் சேர்ந்து ஆடச் செய்தல்.

- ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து நடனத்தை முழுமையாக ஆடுதல்.
- மாணவரைக் குழுவாகவோ எழுமாற்றாகவோ தெரிவு செய்து தனியாகவும் ஆடச் செய்தல்.

(15 நிமிடங்கள்)

**படி 3.5.7.2** :
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் தேயிலைக் கொழுந்து கொய்யும் நடனத்தை ஆடிப் பயிற்சி செய்கின்றனரா என உறுதிசெய்யுங்கள்.

(15 நிமிடங்கள்)

**படி 3.5.7.3** :
- ஒவ்வொரு குழுவும், தேயிலைக் கொழுந்து கொய்யும் நடனத்தை ஆடச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு ஆடும் போது மறு குழு அதனை அவதானித்துத் தமது கருத்துகளைத் தெரிவிக்க இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்தும் வகையிற் கலந்துரையாடுங்கள்.

- தேயிலைக் கொழுந்து கொய்து போடும் கூடையைப் பின்னே இணைத்து ஆடுவது, கொழுந்து கொய்வது போன்றன இந் நடனத்தின் சிறப்பம்சங்களாகும்.
- பாடல் ஏகதாளத்தில் திஸ்ர நடையில் அமைந்துள்ளமை.
- பாடலை ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து பாடுதல்.
- தேயிலைக் கொழுந்து நடனத்தை ஆசிரியரும் மாணவரும் முழுமையாக ஆடி நிறைவு செய்தல்.

(10 நிமிடங்கள்)

### கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

1. தேயிலைக் கொழுந்து கொய்யும் நடத்தின் சிறப்பம்சங்களைக் குறிப்பிடுவர்.
2. "தாம்திமிதிமி" என்ற தேயிலைக் கொழுந்து கொய்யும் பாடலின் தாளத்தினையும் நடையினையுங் குறிப்பிடுவர்.
3. குறித்த பாடலை முழுமையாகப் பாடுவர்.
4. தேயிலைக் கொழுந்து நடனத்தினை ஆடி நிறைவு செய்வர்.

### செயற்பத்திரம் - 3.5.1.2

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை இணைப்புடன் சேர்த்து வழங்குங்கள்.

1. தேயிலைக் கொழுந்து நடனத்தின் சிறப்பம்சங்கள் எவை?
2. "தாம்திமிதிமி" என்ற தேயிலைக் கொழுந்துப் பாடலின் தாளத்தைக் குறிப்பிடுக.
3. குறித்த பாடலை முழுமையாகப் பாடுக.
4. குறித்த பாடலுக்கேற்ப முழுமையாக நடனத்தை ஆடி நிறைவு செய்க.

**இணைப்பு**

தாளம் - ஏகம் (திஸ்ர நடை)

தாம்தி மிதிமி தந்தக தந்தோம்
தீம்தி மிதிமி திந்தக தந்தோம்
தாம்தி மிதிமி தீம்தி மிதிமி
தந்தக்க ... திந்தக்க தந்தன தந்தோம்
தந்தானே ...தன தான னனே தன
தந்தானே தன தான ன்னனே
எழுந்து வாங்கோ தேயிலைக்கொழுந்து - கொய்யமலை
ஏறிடுவோம் காலை பனியும் பெய்ய
கழுத்து இல்லா கூடை தலையில் மாட்டி நாமே
கச்சிதமாய்த் தேயிலை கொழுந்து கொய்வோம்
(தந்தானே)

கொழுந்து கொய்வோமே தேயிலைக் கொழுந்து கொய்வோமே
நெளிந்து நெளிந்து மலையில் ஏறி வளைந்து வளைந்து
- தேயிலைத் தோட்டத்தில்
வளைந்து போகும் மலைப் பாதையிலே நாமே
வளர்த்த செடி தேயிலைக்கன்றின் தளிர்
அளந்து பார்த்தே கொய்தே கூடைக்குள்ளே போட்டு
அதை நிரப்பிக் கங்காணியிடம் கொடுப்போம்.
(தந்தானே)

**தேர்ச்சி 4.0** : பரத நாட்டியம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.4.1** : தாண்டவம், லாஸ்யம், அடவு தீர்மானம், கோர்வை, சொற்கட்டு, எடுப்பு, பாத்திரம், அபாத்திரம், குரு, சிஷ்யன், சபாநாயகன், சபை, பஞ்சபாணங்கள், நாட்டிய தர்மி, லோக தர்மி ஆகியவற்றின் எண்ணக் கருக்களை விளக்குவார்.

**செயற்பாடு 4.4.1** : பஞ்சபாணங்கள் பற்றிக் கற்போம்.

**நேரம்** : 01 மணித்தியாலம் 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- பஞ்சபாணங்களின் பெயர்கள் எழுதப்பட்ட அட்டை, பஞ்சபாணனின் வரைபடம்.
- பஞ்சபாணனின் ஒளிப்படம்.
- செயற்பத்திரம் 4.4.1.2, பின்னிணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**
**படி 4.4.1.1**

- பஞ்சபாணங்களின் பெயர்கள் குறிக்கப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- பஞ்சபாணங்கள் எவை எனக் கூறி விளக்குதல்.
- பஞ்சபாணன் என்றால் யாரைக் குறிக்கிறது எனக் கூறுதல்.
- பஞ்சபாணனின் மறு பெயர்களைக் குறிப்பிடுதல்.
- பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

> - பஞ்சபாணனுக்குரிய வேறு பெயர்கள் :- அனங்கன், மதனன், மதனவேள், மன்மதன்
> - பஞ்சபாணங்கள்:- தாமரை, அசோகம், சூதம், (மா) முல்லை, நீலோத்பலம்.
> - மன்மதனின் அம்பு தைத்தவுடன் காதலர்களுக்கு ஏற்படும் அவஸ்தைகள் - நேத்திரோற்சவம், சித்தசங்கமம், ஸ்மரணம், குணகீர்த்தனம், அரதி, தாபம், லஜ்ஜாத்தியாகம், கமனம், மூர்ச்சை, தன்னியதா
> - மதன சைந்நியாவஸ்தைகள்

(25 நிமிடங்கள்)

**படி 3.5.2** :

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- பஞ்சபாணம் பற்றிய குறிப்புகள் அடங்கிய இணைப்புப் பத்திரத்தை ஒவ்வொரு குழுவிற்கும் வழங்குங்கள்.
- இணைப்புப் பத்திரத்தைப் பயன்படுத்தி ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்திற்கு விடையளிக்க நெறிப்படுத்துக.

(35 நிமிடங்கள்)

**படி 3.5.3** :

- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளுங்கள்.
- ஒரு குழு முன்வைத்த விடயத்தை ஏனைய குழுவினரும் அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- மாணவர்கள் முன்வைத்த விடயத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்தும் வகையிற் கலந்துரையாடுங்கள்.

> - தாமரை, அசோகம், சூதம், முல்லை, நீலோத்பலம் ஆகிய ஐந்து மலர்களும் மன்மத பாணங்களாகும்.
> - தாமரை - காம நினைவுகளை உண்டாக்கும்,
>   அசோகம் - உணவை வெறுப்பர்,
>   சூதம் - பச்சை நரம் போடச் செய்தல்,
>   முல்லை - சோகம் உண்டாக்கும்,
>   நீலோத்பலம் - மரண மூர்ச்சையை உண்டாக்கும்.
> - மன்மதனின் அம்பு தைத்த மாத்திரத்தில் காதலர்களுக்கு ஏற்படும் அவஸ்தைகளைக் கூறுதல்.
> - பதினெட்டு வகை மதன சைந்நியாவததைகள எவை என்பதைக் குறிப்பிடுதல்.

(20 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. பஞ்சபாணம் என்பதன் இலட்சணத்தைக் குறிப்பிடுவர்.
2. ஐந்து வகையான மன்மத பாணங்களையும் குறிப்பிட்டு அவை காதலர்களுக்கு ஏற்படுத்தும் அவஸ்தைகளையும் குறிப்பிடுவர்.

## செயற்பத்திரம் - 4.4.1.2

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை இணைப்புடன் சேர்த்து வழங்குங்கள்.

| |
|---|
| 1. மன்மதனின் சைந்நியாவஸ்தைகள் எவை எனக் கூறுவர். |
| 2. ஐந்து வகையான மலர் அம்புகளையும் குறிப்பிடுவர். |
| 3. மலர்கள் ஒவ்வொன்றும் ஏற்படுத்தும் காதலுணர்வுகள் எவை என்பதைக் கூறுக. |

## பஞ்சபாணம்

**இணைப்பு**

**சுலோகம் :-**

அரவிந்த மசோகஞ்ச சூதஞ்ச நவமல்லிகா /
நீலோத்பலஞ்ச பஞ்சைதே பஞ்சபாணஸ்ச ஸாயக //

**கருத்து :-**

தாமரை, அசோகம், சூதம் (மா) முல்லை, நீலோத்பலம் ஆகிய இவ்வைந்து மலர்களும் மதனவேளின் பாணங்களாகும்.

1. தாமரை :- இந்த அம்பினால் காம நினைவுகள் ஏற்படும்.
2. அசோகம் :- தமது ஆசை பூர்த்தியாகும் வரையில் உணவை வெறுப்பார்.
3. சூதம் (மா) :- இந்தப் பாணம் வருமேயானால் காதலருக்கும் பசலை உண்டாக்கும். வெட்கத்தால் பச்சை நரம்போடச் செய்யும்.
4. முல்லை :- மிக வருத்தம், சோகம் உண்டாகும்.
5. நீலோத்பலம் : - ஆசை உடனே நிறைவேறாவிட்டால் மரணமும் அல்லது மரண மூர்சையும் உண்டாகும்.

மதனனின் அம்பு தைத்த மாத்திரத்தில் காதலர்களுக்கு ஏற்படும் பத்து அவஸ்தைகள் வருமாறு

| | | | |
|---|---|---|---|
| 1. | நேத்திரோற்சவம் | :- | நாயகனைக் கண்குளிரப் பார்த்து ஆனந்தப்படுதல். |
| 2. | சித்தசங்கமம் | :- | உள்ளத்தால் அவனைக் கூடிக் களித்தல். |
| 3. | ஸ்மரணம் | :- | எப்போதும் காதலன் நினைவாகவே இருத்தல். |
| 4. | குணகீர்த்தனம் | :- | நாயகனின் குணங்களைச் சொல்லிச் சொல்லிக் கொண்டாடுதல். |
| 5. | அரதி | :- | இவ்வளவு நினைவுகள் ஏற்பட்டதால் தனியே இருப்பதை நினைத்துப் பிரிவாற்றமையால் வருந்துதல். |
| 6. | தாபம் | :- | அந்த வருத்தத்தால் காமஜ்வரமும் உண்டாகும். |
| 7. | லஜ்ஜாத்தியாகம் | :- | லஜ்ஜையை (வெட்கத்தை) விடுதல். |
| 8. | கமனம் | :- | கூச்சத்தை விடுத்து நாயகனைத் தேடி வலுவில் செல்லுதல். |
| 9. | மூர்ச்சை | :- | பிரிவு தாங்காமல் மூர்ச்சையாகுதல். |
| 10. | தன்னியதா | :- | இவ்வளவு கஷ்டப்பட்டு நாயகனை அடைந்தவுடன் ஒரு கணமும் பிரியாமல் அவனைச் செல்வம் போல் உடன் வைத்துக் கொள்வாள். இந்த அவஸ்தைகள் ஆண் பெண் இருபாலாருக்கும் பொருந்தும். |

## பதினெட்டு மதன சைந்நியாவஸ்தைகள்

| | | | |
|---|---|---|---|
| 01. | தென்றல் | :- | புலி போல் பாய்தல் |
| 02. | இருள் | :- | முட்டுதல் |
| 03. | கிளி | :- | ஊசி போன்ற சொற்கள் நுழைதல் |
| 04. | ஸ்திரிகள் | :- | கை கொட்டிச் சிரித்தல் |
| 05. | மகரம் | :- | கவ்வுதல் |
| 06. | சந்திரன் | :- | அனல் போல் காய்ந்து கொப்புளம் உண்டாகுதல் |
| 07. | சமுத்திரத்தின் அலைகள் | :- | உடல் நடுங்குதல் |
| 08. | குயில் தொனி | :- | பயப்படுதல் |
| 09. | மயிலாட்டம் | :- | கண் கூசுதல் |
| 10. | அம்சம் | :- | நடை தள்ளாடுதல் |
| 11. | கட்கம் | :- | பிரமையுண்டாகுதல் |
| 12. | தும்பி | :- | காது அடைத்தல் |
| 13. | கரும்பு | :- | புன்சிரிப்பு உண்டாகுதல் |
| 14. | தாமரை | :- | நினைத்தல் |
| 15. | சூதம் | :- | விம்மி விம்மித் தேகம் இளைத்தல், வளையல்கள் நழுவுதல் |
| 16. | அசோகம் | :- | கண் சிறுத்தல், வாய் புலம்பல் |
| 17. | முல்லை | :- | மூர்ச்சையாகுதல் |
| 18. | நீலோத்பலம் | :- | மரண மூர்ச்சை |

## மதன சைந்நியங்கள்

| | | | |
|---|---|---|---|
| 01. | இரதம் | :- | தென்றல் |
| 02. | கஜம் | :- | இருள் |
| 03. | துரகம் | :- | கிளி |
| 04. | சைந்நியம் | :- | ஸ்திரிகள் |
| 05. | துவஜம் | :- | மகரம் |
| 06. | சந்திரம் | :- | சந்திரன் |
| 07. | வாகனம் | :- | ஹம்ஸம் (அன்னப்பறவை) |
| 08. | கட்கம் | :- | மாந்தளிர் |
| 09. | பேரிகை | :- | சமுத்திர அலை |
| 10. | கானம் | :- | குயில் |
| 11. | தடி | :- | மயில் |
| 12. | நாண் | :- | தும்பி |
| 13. | பாணம் | :- | புஷ்பம் |
| 14. | ஆசனம் | :- | சகனம் |
| 15. | தனுசு | :- | கரும்பு |
| 16. | கிரகம் | :- | சுரதாலயம் |

**தேர்ச்சி 4.0** : பரத நாட்டியம் தொடர்பான அடிப்படை அம்சங் களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.4.2** : தாண்டவம், லாஸ்யம், அடவு தீர்மானம், கோர்வை, சொற்கட்டு, எடுப்பு, பாத்திரம், அபாத்திரம், குரு, சிஷ்யன், சபாநாயகன், சபை, பஞ்சபாணங்கள், நாட்டிய தர்மி, லோக தர்மி ஆகியவற்றின் எண்ணக் கருக்களை விளக்குவார்.

**செயற்பாடு 4.4.2** : நாட்டிய தர்மி, லோக தர்மி என்பவை பற்றிக் கற்போம்.

**நேரம்** : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- நாட்டிய தர்மி, லோக தர்மி ஆகியவை பற்றி எழுதப்பட்ட அட்டை
- ஒலி, ஒளிநாடாக்கள், வீடியோ பதிகருவி
- செயற்பத்திரம் 4.4.2.2, பின்னிணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**
**படி 4.4.2.1**

- நாட்டிய தர்மி, லோக தர்மி பற்றி எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- காட்சிப்படுத்திய அட்டையில் உள்ளவற்றை மாணவர்கள் வாசித்தல்.
- பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.
    - பரத நாட்டியத்தில் தர்மி இருவகைப்படும் அவையாவன நாட்டிய தர்மி, லோக தர்மி
    - நாட்டிய தர்மி என்பது அன்றாட வாழ்க்கையில் இடம்பெறும் அம்சங்களை மார்கி வகையில் வெளிப்படுத்துவது
    - லோகதர்மி என்பது அன்றாட நிகழ்வுகளை தத்ரூபமாக வெளிப்படுத்துவது

(10 நிமிடங்கள்)

**படி 4.4.2.2** :
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப மாணவர்களைச் சிறிய குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை வழங்குங்கள்.
- செயற்பத்திரத்திலுள்ளவற்றுக்கமைய மாணவர்கள் செயற்படுகின்றனரா என அவதானித்து ஆலோசனை வழங்குங்கள்.

(20 நிமிடங்கள்)

**படி 4.4.2.3** :

- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்திற்கு அளித்த விடைகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- ஒரு குழு முன்வைத்த விடயத்தை ஏனைய குழுவினரும் அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- மாணவர்கள் முன்வைத்த விடயத்தை அடிப்படை யாகக் கொண்டு பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்தும் வகையிற் கலந்துரையாடுங்கள்.

    - நாட்டிய தர்மி என்பது மார்கி வகையில் ஒரு நிகழ்வினைச் சித்தரித்துக் காட்டுவது.
    - நாட்டிய தர்மி சாஸ்திரீய வடிவத்தில் வெளிப் படுத்தப்படுவது.
    - லோக தர்மி என்பது உலகியல் வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகளை அவ்வாறே தத்ரூபமாகச் சித்தரித்தல்.
    - லோக தர்மி சாஸ்திரீய நடனம் அல்லாதது.
    - நாட்டிய தர்மி, லோக தர்மி என தர்மிகள் இரு வகைப்படும்.

(10 நிமிடங்கள்)

### கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

1. நாட்டிய தர்மி என்றால் என்ன என்பதனைக் குறிப்பிடுவர்.
2. லோக தர்மி என்றால் என்ன என்பதைக் கூறுவார்.
3. இரு தர்மிகளுக்கும் இடையே உள்ள வேறுபாட்டினைக் கூறுவார்.

### செயற்பத்திரம் - 4.4.2.2

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை இணைப்புடன் சேர்த்து வழங்குங்கள்.

1. நடனத்தில் தர்மிகளின் வகைகளைக் கூறுக.
2. நாட்டிய தர்மி என்பதன் விளக்கத்தைத் தருக.
3. லோக தர்மி என்றால் என்ன எனக் கூறுக.
4. நாட்டிய தர்மியின் வெளிப்பாடு ஒன்றைச் செய்துகாட்டுக.
5. லோக தர்மிக்குரிய உதாரணம் ஒன்றைச் செய்துகாட்டுக.

## நாட்டிய தர்மி

நாட்டிய தர்மி என்றால் உலக இயல்புக்கு சற்று அப்பாற்பட்டு கலை வடிவத்துக்கு முதல் இடம் அளிக்கும் நாடக வழக்கு ஆகும். உதாரணமாக கண்ணீர் சிந்துவது போல கை ஜாடை காட்டுவது நாட்டிய தர்மி.

## லோக தர்மி

லோக தர்மி என்றால் இயல்பான உலக வழக்கு ஆகும். உதாரணமாக கண்ணீர் சிந்தி நடிப்பது லோக தர்மியாகும்.

**தேர்ச்சி 4.0** : பரத நாட்டியம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.5** : பரத நாட்டிய கச்சேரி அமைப்பு முறையினையும் அணிசேர் இசைக் கருவிகளையும் விளக்கி வாக்கேய காரர்களின் வாழ்க்கை வரலாற்றினையும் அவர் தம் கலைத் தொண்டினையும் அறிந்து மதிப்பிடுவார்.

**செயற்பாடு 4.5** : பரத நாட்டியக் கச்சேரிக்கு அணி செய்யும் இசைக் கருவிகளின் பங்களிப்பினை அறிவோம் - மிருதங்கம், வயலின்.

**நேரம்** : 02 மணித்தியாலங்கள் (03 பாடவேளைகள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- இசைக்கருவிகளின் படங்கள் வரையப்பட்ட அட்டைகள்
- ஒளிப்பதிவு நாடாக்கள், வீடியோ பதிகருவி
- செயற்பத்திரம் 4.5.2.2, பின்னிணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

**படி 4.5.1.1**

- இசைக்கருவிகளின் படங்கள் வரையப்பட்ட அட்டைகளைக் காட்சிப்படுத்தல்.
- காட்சிப்படுத்திய படங்களில் உள்ள இசைக்கருவிகள் பற்றிக் கலந்துரையாடலை மேற்கொள்ளல்.
- பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

| |
|---|
| • இசைக்கருவிகளின் வகைகள்<br>• பரத நாட்டியத்துக்கு அணிசேர் இசைக் கருவிகள்<br>• மிருதங்கத்தின் அமைப்பு, பயன்பாடு பற்றிய விளக்கம் |

(30 நிமிடங்கள்)

**படி 4.5.1.2** :
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப மாணவர்களைக் சிறிய குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் செயற்பத்திரத்தை வழங்கி மாணவர்களை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.

(50 நிமிடங்கள்)

**படி 4.5.1.3** :

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளை முன்வைக்கச் சந்தர்ப்பத்தை வழங்குங்கள்.
- ஒரு குழு முன்வைத்த விடயத்தை ஏனைய குழுவினரும் அவதானித்துக் கருத்துக்களைக் கூற இடமளியுங்கள்.
- மாணவர்கள் முன்வைத்த விடயத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்தும் வகையிற் கலந்துரையாடுங்கள்.

> - இசைக்கருவிகள், தோற்கருவிகள், நரம்புக் கருவிகள், துளைக்கருவிகள் (காற்றுக் கருவிகள்), கஞ்சற் கருவிகள் எனப் பலவாகும்.
> - பரத நாட்டியத்திற்கு முக்கியமான அணிசேர் இசைக்கருவிகள் மிருதங்கம், வயலின் என்பன
> - தோல் வாத்தியம் - மிருதங்கம்
>   - அதன் அமைப்பு
> - பரத நாட்டியத்தில் அதன் பயன்பாடு
> - நரம்பு வாத்தியம் - வயலின்
>   - வயலினின் அமைப்பு
> - பரத நாட்டியத்தில் அதன் பயன்பாடு

(40 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. இசைக் கருவிகளின் வகைகளைக் குறிப்பிடுவர்.
2. பரத நாட்டித்திற்கு முக்கியமான அணிசேர் இசைக்கருவிகள் பற்றிக் கூறுவார்.
3. மிருதங்கம் தோல் வாத்தியம் எனக் கூறுவார்.
4. மிருதங்கத்தின் அமைப்பு, பரதத்தில் இதன் பயன்பாடு பற்றி விளக்குவார்.
5. நரம்பு வாத்தியம் வயலின் எனக் கூறுவார்.
6. வயலினின் அமைப்பு, பரதத்தில் இதன் பயன்பாடு பற்றிக் கூறுவார்.

## செயற்பத்திரம் - 4.5.1.2

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை இணைப்புடன் சேர்த்து வழங்குங்கள.

> 1. இசைக்கருவிகளின் வகைகளைத் தருக.
> 2. பரத நாட்டியத்திற்கு பயன்படுத்தப்படும் முக்கியமான அணிசேர் இசைக்கருவிகள் எவை?
> 3. மிருதங்கத்தின் அமைப்பினை உருவப்படம் ஒன்றின் மூலம் விளக்குக.
> 4. பரதத்தில் இவ்வாத்தியம் பயன்படுத்துவதற்கான காரணங்கள் இரண்டு தருக.
> 5. பரதத்தில் பயன்படுத்தப்படும் முக்கியமான நரம்புக்கருவி ஒன்று தருக.
> 6. பரதத்தில் இவ்வாத்தியம் பயன்படுவதற்கான காரணங்கள் இரண்டு தருக.
> 7. இவ்வாத்தியத்தின் அமைப்பினை உருவப்படம் ஒன்றின் மூலமாக விளக்குக.
> 8. பின்னிணைப்பை வாசித்த பின்னர் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

# மிருதங்கம்

தென்னிந்திய நடன சங்கீதக் கச்சேரிகளில் முக்கியத்துவம் வாய்ந்த தாள வாத்தியமாக மிருதங்கம் விளங்குகிறது. மிருதங்கம் என்னும் சொல் "களிமண் அமைப்பு" எனப் பொருள்படும். பிரம்மதேவன் மிருதங்க வாத்தியத்தை மகாதேவனது நாட்டியத்திற்கு வாசிப்பதற்கென படைத்ததாகப் புராணம் கூறுகிறது. இந்த வாத்தியத்தை நந்திகேஸ்வரர் முதன் முதலாக வாசித்ததாகவும், வாத்திய த்ரயங்களுள் மூன்றாவதாகவும் சொல்லப்படுகிறது.


## அமைப்பு :

பலாமரம், கருங்காலிமரம் போன்றவை மிருதங்கம் செய்ய உபயோகமாகின்றன. இது நடுப்பாகம் பருத்தும் இரு பக்கங்களிலும் குறுகிய அமைப்பையும் கொண்டுள்ளது. இக்கருவியின் நீளம் சுமார் 2 அடியாகவும், இடப்பக்கம் சுமார் 8 அங்குல விட்டத்தையும் வலப்பக்கம் சுமார் 7 அங்குல விட்டத்தையும் கொண்டிருக்கும். உள்ளே உள்ளீடு இருக்கும். இரண்டு ஓரங்களிலும் பொருத்தப்பட்டுள்ள தோல் வளையங்களுள் வாரினாலான கயிறுகளைச் செலுத்தி இழுத்துக் கட்டப்பட்டிருக்கும். மிருதங்கத்தின் உடலுக்கும் வாருக்கும் இடையே உருளையான கட்டைகள் பொருத்தப்பட்டுள்ளன. இவற்றை நகர்த்தி தோலின் கட்டினை அதிகரித்தோ, குறைத்தோ தேவையான ஸ்ருதிக்கு சரி செய்யப்படுகிறது. வலது பக்கம் வலந்தலை என்றும், இதில் மூன்று வளையங்களாக தோல் பொருத்தப்பட்டுள்ளது. இவைகளின் வெளிவளையம் கன்றுக்குட்டியின் தோலினால் அமைந்தது. உள்வளையம் ஆட்டின் தோலினால் ஆனது. வெளிவளையத்திற்கு "மீட்டுத்தோல்" எனவும் உள்வளையத்திற்கு "சாபுதோல்" எனவும் பெயர். மையத்திலுள்ள வளையத்தில் ஸ்திரமான கருமையான பசை போன்ற பொருள் பொருத்தப்பட்டுள்ளது. இந்தக் கறுப்பு பசையானது மங்கனீசு பொடி, சோற்றுப் பருக்கை, புளியஞ்சாறு ஆகியவற்றிலான கலவையாகும். இதற்கு சோறு, கரணை, மருந்து என்ற பெயர்கள் வழங்கப்படுகின்றன. இந்தப்பசை உள்வளையத்தின் மையத்தில் கனமாகவும், ஓரங்களில் மெல்லியதாகவும் பூசப்படுகிறது. இதை அவ்வப்போது ஒரு தனிவகை கல் கொண்டு தேய்த்து ஒழுங்குபடுத்த வேண்டும். இந்தப் பகுதிதான் மிருதங்கத்துக்கு கணீர் என்ற ஒலியைக் கொடுக்கிறது. இடது பக்கத்திற்கு இடந்தலை அல்லது தொப்பி என்று பெயர். இடது பக்கத்தில் இரு வளையங்காளக உள்ள தோல் பொருத்தப்பட்டுள்ளது. இதன் வெளி வளையம் எருமைத் தோலினாலும் உள் வளையம் ஆட்டுத் தோலினாலும் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மையத்தில் தற்காலிகமாக ரவையும் தண்ணீரும் கலந்து "சுஜி" என்ற கலவை பூசப்படுகிறது. வாசித்த பின் இந்தப் பொருள் அகற்றப்படுகிறது. இடதுபக்கம் பொதுவில் ஒருவித மந்த ஒலியைக்தான் கொடுத்து உதவும்.

## ஸ்ருதி செய்யும் முறை :

மிருதங்கத்தின் வலப்பக்கத்தை ஆதார ஸ்ருதிக்கு சரியாக ஸ்ருதி செய்து கொள்ளலாம். ஒரு சிறு சுத்தியலால் கீழ் நோக்கியும், மேல் நோக்கியும் தேவையான இடங்களில் தட்டி தோலின் கட்டை இறுக்கியும் தளர்த்தியும் ஸ்ருதியை தேவையான அளவிற்கு சேர்க்கப்படுகிறது. மேல்நோக்கித் தட்டினால் ஸ்ருதி குறையும், கீழ் நோக்கித் தட்டினால் ஸ்ருதி அதிகமாகும்.

## மிருதங்கம்



1. மரத்திலான உடற்பாகம்
2. வார்
3. பின்னப்பட்ட மூட்டுத்தோல்
4. மீட்டுத் தோல்
5. நாதச் சுண்ணம்
6. சாப்புத்தோல்
7. தாங்கித்தோல்
8. இடப்புற மூட்டு
9. இடப்புற உள்தோல்
10. புள்

## வயலின்

வயலின் நரம்பு வாத்தியமாகும். இதனை பிடில் என்றும் குறிப்பிடுவதுண்டு. தஞ்சை நால்வருள் ஒருவரான வடிவேலுப்பிள்ளையின் பிடில் வாசிப்பினை திருவாங்கூர் மன்னரான சுவாதித்திருநாள் மகாராஜா பாராட்டி ஒரு தந்தத்தினாலான வயலினை பரிசாகக் கொடுத்தார். இந்த வயலினை தஞ்சையில் இன்றும் காணலாம்.

**முறை :**

வயலின் முழுவதும் மரத்தினாலே செய்யப்பட்ட இசைக் கருவியாகும். வயலின் தோற்றம் ஒரு மிருதங்கத்தின் உடலமைப்பினை ஒத்தது. சாரல்கள் உள்ள மரம் வயலின் செய்வதற்கு மிகவும் ஏற்றது. இதன் உடலானது மேல்பலகை, பின்பலகை, ஆறு விலாப் பலகைகளால் இணைக்கப்பட்டது. உடலின் மேல் பாகத்தில் *S துளைகள் இரு பக்கங்களிலும்* உள்ளன. இந்த துளைகள் நாதம் இனிமையுடன்வெளிவர உதவுகின்றன. வயலின் உட்பாகத்தைச் செய்வதற்கு சில குறிப்பிட்ட மரங்களை அளவாக வெட்டி பல ஆண்டுகள் நிழலில் உலர்த்திப் பதப்படுத்துவார்கள். இத்தகைய மரங்கள் பைன், மேப்பின், சிகமோர், சில்வர் ஓக், சிடர் முதலியவை. விரல் பலகை, பிரடைகள் தந்தி தாங்கி, மேல் மெட்டு முதலியவைகளுக்கு கருங்காலி மரத்தைப் பயன்படுத்துவார்கள்.


தந்திகள் நரம்புகளால் அல்லது உலோகங்களால் செய்யப்பட்டிருக்கும். நான்கு பிரடைகளிலும் நான்கு தந்திகள் கட்டப்பட்டு விரல் பலகையின் மேலாகவும் குதிரையின் மேலாகவும் சென்று வால் துண்டுடன் கட்டப்பட்டுள்ளன. வால்த்துண்டு வயலினின் மேற்புறத் தில்ள பொ ானுடன் பிணைக்கப்பட்டுள்ளது. விரல் பலகைக்கும், குதிரைக்கும் இடையிலுள்ள இடபே தந்திகளின் மேல் விரல் போட்டு ஒலியை எழுப்பும் பாகமாகும். குதிரைக்குக் கீழ்

நாதக்குச்சி வழியாகத்தான் மேல் பாகத்திலுள்ள தந்திகளின் மீது வில்லினை உராய்ச்சி உண்டாக்கப்படும் நாதமானது பின்புறத்துக்கு பரவி வலுப்பெறுகிறது. வில் போடுவதற்கு வலது உபயோகப்படுகிறது. வில் போடும் போது இடக்கை விரல்களை ஸ்வரஸ்தான பலகையின் மேல் தந்திகளின் மீது உரிய ஸ்தானங்களில் வைத்து தேவையான ஸ்வரங்கள் உருவாக்கப்படுகின்றன. வாசிக்கும் தந்திகள் நான்காகும். வில்லின் நீளம் $29\frac{1}{2}$ அங்குலம். வில்முனை கீழிருந்து மேலே சிறுத்துக் கொண்டே போகும்.

உரோமம் அல்லது மயிர் குதிரையின் வால் மயிர்களில் சமநீளமாக உள்ளவைகளில் எடுத்து சுத்தம் செய்து 80 அல்லது 90 மயிர்களை வில்லில் பொருத்துவது வழக்கம். குச்சியின் அடிப்பாகத்திலுள்ளது திருகு எனப்படும்.

இன்று இந்தக் கலையில் முன்னணியில் இருப்பவர்கள் சங்கீத கலாநிதி பேராசிரியர் டி.என். கிருஷ்ணன், லால்குடி ஜெயராமன், குன்னக்குடி வைத்தியநாதன், எம். எஸ்.கோபாலகிருஷ்ணன் ஆகியோர்.

**வயலின் (VIOLIN)**




1. சுருள் தலை (Scroll)
2. பிரடை (Peg)
3. விரல் பலகை (Finger Board)
4. மேல் பலகை (Belly)
5. கீழ்ப் பலகை (Back)
6. விலா பலகை (Ribs)
7. வாசிக்கும் தண்டுகள் (4 Stringn)
8. f வடிவ துளைகள் (F-holes)
9. குதிரை (Bridge)
10. மந்திர ஸ்தாயி கட்டம்
11. நாதக் குச்சி
12. திருகுகள் (Screw adjuster)
13. டெய்ல் பீஸ் (Tail Peice)
14. பொத்தான் (Tail Pin)
15. உடல் பாகம் (Body)
16. விரடைப் பெட்டி (peg Board)
17. வில் முனை
18. உரோம இணைப்பு
19. குதிரை முடி உரோமங்கள்
20. முத்துச்சிப்பித் தகடு
21. வில் திருகு (Bow Screw)
22. பூண்

**தேர்ச்சி 4.0** : பரத நாட்டியம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.5.2** : பரத நாட்டியக் கச்சேரி அமைப்பு முறையினையும் அணிசேர் இசைக்கருவிகளையும் விளக்கி வாக்கேயகாரர்களின் வரலாற்றினையும் அவர் தம் கலைத் தொண்டினையும் அறிந்து மதிப்பிடுவார்.

**செயற்பாடு 4.5.2** : பரத நாட்டிய கச்சேரிக்கு அணி செய்யும் இசைக் கருவிகளின் பங்களிப்பினை அறிவோம்.
நட்டுவாங்கத் தாளம், புல்லாங்குழல்

**நேரம்** : 01 மணித்தியாலம் 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- இசைக்கருவிகளின் படங்கள் வரையப்பட்ட அட்டைகள்
- ஒளிப்பதிவு நாடாக்கள், வீடியோ பதிகருவி
- செயற்பத்திரம் 4.5.2.2, பின்னிணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**
**படி 4.5.2.1**

- இசைக்கருவிகள் வரையப்பட்ட அட்டைகளைக் காட்சிப்படுத்தல்.
- காட்சிப்படுத்தப்பட்டவற்றில் உள்ள காற்றுக் கருவி, கஞ்சற்கருவி பற்றி கலந்துரையாடல்.
- பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

> - இசைக்கருவிகளில் சில துளைக்கருவிகள்
> - பரத நாட்டியத்திற்கு அணிசேர் இசைக்கருவிகளுள்
>   துளைக்கருவி - புல்லாங்குழல்
>   கஞ்சற்கருவி - நட்டுவாங்கத்தாளம்
> - புல்லாங்குழலின் விளக்கம்
> - நட்டுவாங்கத் தாளத்தின் விளக்கம்

(20 நிமிடங்கள்)

**படி 4.5.2.2** :
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப மாணவர்களைக் சிறிய குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் செயற்பத்திரத்தை வழங்கி செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.

(30 நிமிடங்கள்)

**படி 4.5.2.3** :

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளை முன்வைக்கச் சந்தர்ப்பத்தை வழங்குங்கள்.
- ஒரு குழு முன்வைத்த விடயத்தை ஏனைய குழுவினரும் அவதானித்துக் கருத்துக்களைக் கூற இடமளியுங்கள்.
- மாணவர்களின் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்தும் வகையிற் கலந்துரையாடுங்கள்.

> - பரத நாட்டியத்திற்கு அணிசேர் இசைக்கருவிகளாக புல்லாங்குழல், நட்டுவாங்கத்தாளம் என்பன அமைந்துள்ளன.
> - துளைக்கருவி - புல்லாங்குழல், நாதஸ்வரம், கிளாரினெட்
>   கஞ்சற்கருவி - நட்டுவாங்கத்தாளம்
> - பரத நாட்டியத்தில் பாரம்பரியமாகப் பயன்படுத்தப்படும். துளைக்கருவி - புல்லாங்குழல்
> - புல்லாங்குழலின் புறவுருவப்படமும் அதன் பகுதிகளும்.
> - நட்டுவாங்கத்தாளம் பற்றிய விளக்கம் (பின்னிணைப்பு)
> - நட்டுவாங்கத் தாளத்தின் வரைபடம்

(30 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

1. துளைக் கருவிகள், கஞ்சற் கருவி போன்றவற்றைக் குறிப்பிடுவர்.
2. புல்லாங்குழல், காற்றுக்கருவி என்பதைக் குறிப்பிடுவர்.
3. நட்டுவாங்கத் தாளம் கஞ்சற்கருவி எனக் கூறுவர்.
4. பரதத்தில் இவற்றின் பயன்பாடு பற்றி தெளிவுறுத்துவார்.

## செயற்பத்திரம் - 4.5.2.2

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை இணைப்புடன் சேர்த்து வழங்குங்கள்.

> 1. துளைக் கருவிகள் மூன்றின் பெயர்களைத் தருக.
> 2. கஞ்சற் கருவி ஒன்றின் பெயரைத் தருக.
> 3. பரத நாட்டியத்தில் பாரம்பரியமாகப் பயன்படும் துளைக்கருவி யாது?
> 4. புல்லாங்குழல் ஒன்றின் புற உருவப்படம் வரைந்து அதன் பகுதிகளைக் குறிப்பிடுக.
> 5. புல்லாங்குழலின் அமைப்பு பற்றி சுருக்கமாக விளக்குக.
> 6. நட்டுவாங்கத் தாளத்தின் பகுதிகளையும் அவற்றின் விளக்கத்தையும் தருக.

**இணைப்பு**

## புல்லாங்குழல்

புல்லாங்குழல் காற்றுக் கருவியாகும். இந்த வாத்தியம் முரளி, வேணு என்ற வடமொழிப் பெயர்களாலும் சூழல் என்ற தமிழ்ச் சொல்லாலும் குறிப்பிடப்படுகிறது. வாத்திய த்ரயங்களில் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவுடன் இணைந்துள்ள வாத்தியம் இதுவே.

### அமைப்பு :


இது சுமார் 14 அங்குல நீளத்தையும் ¾ அங்குல விட்டத்தையும் கொண்ட சீரான உருளை வடிவமான குழாயாகும். இதன் ஒருமுனை மூடப்படும். மறுமுனை திறந்தும் இருக்கும். குழலின் மேல் பகுதியில் 9 துளைகள் இடப்பட்டிருக்கும். மூடப்பட்ட முனையில் இருந்து ¾ அங்குல தூரத்தில் ஊதும் துவாரம் அமைந்திருக்கும். இத்துவாரம் முத்திரைத்துளை, முகரந்தம் என்றும் அழைக்கப்படுவதுண்டு. துவாரத்திற்கு நேர்கோட்டில் மற்றைய 8 ஸ்வரத் துளைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை ஊதும் துவாரத்தை விட சிறியதாக இருக்கும். ஊதும் துவாரத்திற்கு அண்மையிலுள்ள துவாரம் மிக உயர்ந்த சுருதியையுடைய ஸ்வரத்தை உருவாக்கும். இத்துளை "தாரரந்திரம்" என்று அழைக்கப்படுகிறது. புல்லாங்குழல் செய்வதற்கு தந்தம், சந்தணமரம், எபோனி, கதிரமரம், கருங்காலி போன்றவைகள் உபயோகப்படுகின்றன. மூங்கிற்குழலே இயற்கையில் இனிமைமிகு இசையை எழுப்பும் தன்மையில் சிறந்தது.

### வாசிக்கும் முறை :

ஊதும் துவாரத்தின் வழியாக காற்றைச் செலுத்தி ஸ்வரத்துளைகளை விரல்களால் மூடியும் திறந்தும் காற்றுப் பரிமாணத்தின் நீளத்தை வேறுபடுத்துவதன் மூலம் ஸ்வரங்கள் எழுப்பப்படும்.

இடது துவாரத்தின் வழியாக காற்றைச் செலுத்தி ஸ்வரத்துளைகளை விரல்களால் மூடியும் திறந்தும் காற்றுப் பரிமாணத்தின் நீளத்தை வேறுபடுத்துவதன் மூலம் ஸ்வரங்கள் எழுப்பப்படும்.

**புல்லாங்குழல்**




புல்லாங்குழலின் பாகங்கள்

1. திறந்த பக்கம்
2. ஊதுத் துவாரம் (முகரந்திரம்)
3. விரல் துளைகள்
4. மூடிய பக்கம்

இடது கைவிரல்களில் கட்டை விரலையும் நீக்கி எஞ்சியுள்ள மூன்று விரல்களையும் வலதுகை விரல்களில் கட்டை விரலைத் தவிர மற்ற நான்கு விரல்களையும் எழுதுளைகளின் மீது வைத்து முத்திரைத் துளைக்கு வாயின் வழியாக காற்றைச் செலுத்தி மூடித் திறக்கும் போது இசை பிறக்கிறது. உதட்டிற்கு வலது பக்கமே குழலானது பொருத்தப்பட்டிருக்கும்.

## கஞ்சற் கருவி - தாளம்


கஞ்சற் கருவிகளுள் தாளம் பிரதான வாத்தியமாகக் கருதப்படுகிறது. தாளம் நடனத்திற்கு மிக முக்கியமானதொன்றாக விளங்குகின்றது. நடனத்திற்கு பயன்படுத்தப்படும் தாளம் கனதியானதும், வெண்கலத்தினால் ஆக்கப்பட்டதுமாகும். இத்தாளம் சிறிய குவியல் வடிவில் வட்டமாகச் செய்யப்பட்டு சுருதியின் அளவு கூடப் பிரதிபலிப்பதற்கு ஏற்ப உருவாக்கப் பட்டுள்ளது.

இத்தாளத்தின் வட்டம் பீடமாகும். குமிழ் சிவலிங்கமாகும். கயிறு இராகு, கேது எனவும் கூறப்படும். இதிலிருந்து வெளிப்படும் ஓசை சிவமாகும். ஓங்கார ஓசை தொனிக்கும் தாளத்திற்கும் அதிதேவதை பிரதானமாகும்.

நடனத்தின் ஜதி, சொறகட்டு ஸ்வரம், சாகித்தியம் என்பவற்றிற்கு ஏற்ப வல்லின, மெல்லினமாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

### தாளமும் அதில் அடங்கும் அதிதேவதைகளும்

| | |
|---|---|
| 01. தாளம் பிடித்த வலக்கை கபித்தம் | விஷ்ணு |
| 02. இடக்கை அராளம் | பிரம்மா |
| 03. வலது குமிழ் | இலட்சுமி |
| 04. இடது குமிழ் | சரஸ்வதி |
| 05. தாள வட்டம் | சூரியன் |
| 06. இடது வட்டம் | சந்திரன் |
| 07. துளை | வாயுதேவன் |
| 08. கயிறு | இராகு, கேது |
| 09. இடது தாள ஓசை | சக்தி |
| 10. வலது தாள ஓசை | சிவம் |
| 11. தாக்கி எழுந்த ஓசை | சக்தி சிவமயமாகும் |



நட்டுவாங்கத் தாளம்

**தேர்ச்சி 4.0** : பரத நாட்டியம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.5** : பரத நாட்டியக் கச்சேரி அமைப்பு முறையினையும் அணிசேர் இசைக்கருவிகளையும் விளக்கி வாக்கேய காரர்களின் வாழ்க்கை வரலாற்றினையும் அவர் தம் கலைத் தொண்டினையும் அறிந்து மதிப்பிடுவார்.

**செயற்பாடு 4.5.1.1** : அருணாசலக் கவிராயரின் வாழ்க்கை வரலாற்றையும் பரதக் கலைக்கு அவர் ஆற்றிய தொண்டினையும் அறிந்து கொள்வோம்.

**நேரம்** : 01 மணித்தியாலம் 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- அருணாசலக் கவிராயரின் படம், இவரது உருப்படிகள் அடங்கிய ஒலி, ஒளி நாடாக்கள் ஒளிப்பதிவுக்கருவி
- செயற்பத்திரம் 4.5.1.2 பின்னிணைப்பு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**
**படி 4.5.1.1**

- அருணாசலக் கவிராயரின் படத்தைக் காட்சிப்படுத்தி இவரது உருப்படிகள் அடங்கிய ஒலிப்பதிவு நாடாவை அல்லது இறுவட்டை ஒலிக்கச்செய்தோ, அல்லது ஆசிரியர் பாடல்களைப் பாடிக் காட்டியோ வாக்கேயகாரரை இனங்காணச் செய்தல்.
- அருணாசலக் கவிராயர் தொடர்பான பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

- அருணாசலக் கவிராயர்: (1711-1778)
- இவர் 1711 ஆம் ஆண்டு மாயூரத்தை அடுத்துள்ள தில்லையம்பாடி என்னும் சிற்றூரில் பிறந்தார்.
- இவரின் குரு:- அம்பலவாணக் கவிராயர் என்னும் பண்டார சந்நிதிகள்
- கல்வி :-
  - ♦ தமிழ் இலக்கண இலக்கியங்களில் தேர்ச்சி
  - ♦ சமய நூல்களிலும் தக்க புலமை
  - ♦ வடமொழி, வடுகு ஆகிய இரு மொழிகளிலும் ஓரளவு பயிற்சி
  - ♦ இசைத் தமிழ்ப் பாடல்களையும் இயற்றமிழ்ப் பாடல்களையும் இயற்றுவதில் திறமை
- பரத நாட்டியத்திற்குப் பயன்படுத்தப்பட்ட கீர்த்தனைகள்

- ♦ ஏன் பள்ளி கொண்டீர் ஐயா
  இராகம் - மோகனம்
- ♦ யாரோ என்றெண்ணாமலே நாளும்
  இராகம் - சங்கராபரணம்
- ♦ யாரோ இவர் யாரோ என்ன பேரோ
  இராகம் - பைரவி

- இயற்றிய இசை நாடகங்களுள் பிரசித்தி பெற்றது
  - ♦ இராம நாடகக் கீர்த்தனை
- இயற்றிய ஏனைய நூல்கள்
  - ♦ சீர்காழிக் கோவை
  - ♦ சீர்காழி ஸ்தல புராணம்
  - ♦ அனுமார் பிள்ளைத் தமிழ்
  - ♦ அசோமுகி நாடகம்
- இவரை ஆதரித்த மன்னர்கள்
  - ♦ துளஜா மகாராஜா
  - ♦ உடையார் பாளையத்து மன்னராகிய உபரங்கப்ப உடையார்
  - ♦ ஏனைய குறுநில மன்னர்கள்
- இறையடி சேர்ந்த ஆண்டு 1778 ஆம் ஆண்டு

(20 நிமிடங்கள்)

**படி 4.5.1.2** :

- மாணவர்களைச் சிறிய குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குக.
- அறிவுறுத்தல்களுக்கமைய மாணவர்கள் செயற்பாட்டில் ஈடுபடுகின்றனரா என அவதானித்து ஆலோசனை வழங்குக.
- ஒரு குழு முன்வைத்ததை ஏனைய குழுவினரும் அவதானித்துச் செயற்பாட்டில் ஈடுபடச் செய்க

(30 நிமிடங்கள்)

**படி 4.5.1.3** :

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களும் அவற்றை அவதானித்துக் கருத்துக்களைக் கூற இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்தும் வகையிற் கலந்துரையாடலை மேற்கொள்க.

- அருணாசலக் கவிராயர் வாழ்க்கைக் காலம்: 1711-1778
- இவர் பிறந்த இடம் : தில்லையம்பாடி
- இவருடைய தந்தையார் : நல்லதம்பிப்பிள்ளை
- இவருடைய தாயார் : வள்ளியம்மை
- அம்பலவாணக் கவிராயர் என்னும் பண்டார சந்நிதிகளே இவரது முதல் குரு.
- கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கினார்
- இவர் இயற்றிய இலக்கியங்களின் தாக்கம் - கீர்த்தனைகள் கச்சேரிகளில் பாடப்படுகின்றன. கீர்த்தனைகள் நடனங்களில் பயன்படுத்தப்படு கின்றன.
- தமிழ் இலக்கண இலக்கியங்களில் தேர்ச்சி பெற்றார்.
- கல்வித் தகைமை வடமொழி, வடுகு ஆகிய இரு மொழிகளிலும் ஓரளவு தேர்ச்சி பெற்றார். சைவாகமம், புராண இதிகாசங்களைக் கற்றார்.
- “ஏன் பள்ளி கொண்டீர் ஐயா” என்னும் கீர்த்தனையை ஸ்ரீரங்கத்தில் பாடினார்.
- சிறப்புப் பெயர் - சீர்காழி அருணாசலக் கவிராயர்.
- இவரது இராம நாடகக் கீர்த்தனைகள் உலகப் புகழ் பெற்றவை.
- இராம நாடகக் கீர்த்தனை நூல் ஸ்ரீரங்கத்தில் அரங்கேற்றப்பட்டது.
- இவர் இயற்றிய வேறு நூல்கள் சீர்காழி தல புராணம், சீர்காழிக்கோவை, அனுமார் பிள்ளைத் தமிழ், அசோமுகி நாடகம்.
- இறையடி சேர்ந்த ஆண்டு : 1778

(30 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. அருணாசலக் கவிராயரின் வாழ்க்கைக் காலத்தைக் குறிப்பிடுவர்.
2. இவரது கலைப்பணி பற்றி விளக்குவர்.
3. இவர் இயற்றிய இசை நாடகங்களுள் பிரசித்தி பெற்ற நாடகத்தைக் கூறுவர்.
4. இவரின் வரலாறு, கலைப்பணி என்பவற்றைக் கற்பதன் மூலம் நடனக் கலைஞர்களை ஊக்குவிக்கும் மனப்பாங்கைப் பெற்றுக்கொள்வார்.

## செயற்பத்திரம் - 4.5.1.2

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை இணைப்புடன் சேர்த்து வழங்குங்கள்.

1. அருணாசலக் கவிராயரது வாழ்க்கைப் பின்னணி பற்றிய குறிப்புகளைத் தருக.
2. அருணாசலக் கவிராயரால் இயற்றப்பட்டு மிகவும் பிரபல்யம் அடைந்த கீர்த்தனை நூல் யாது?
3. அன்னார் இயற்றி அருளிய இசை நாடகங்கள் எவை?
4. 'அருணாசலக் கவிராயரின் இலக்கியப் பணி கலைப்பணியாக மிளிர்ந்தது' இக் கூற்றினை விளக்குக.

**இணைப்பு**

## அருணாசலக் கவிராயர் (18ஆம் நூற்றாண்டு)

சோழ நாட்டிலே மாயூரம் என்னும் தலத்தை அடுத்துள்ள தில்லையாடி என்னும் ஊரில் வேளாளர் மரபில் பிறந்த நல்லதம்பிப்பிள்ளை, வள்ளியம்மை என்போருக்கு 1711 ஆம் ஆண்டு பிறந்தார். பெற்றோர் தம் அருந்தவப் புதல்வர்க்கு முறைப்படி ஐந்தாம் வயதில் வித்தியாரம்பம் செய்வித்து பல கலைகளையும் கற்க மார்க்கமும் தேடிக் கொடுத்து அவரைப் பல துறைகளிலும் பாண்டித்தியமடையும்படி செய்தார்கள். ஆனால் பாவம் பெற்றோர்கள் தமது செல்வனின் பெரும் புகழ்காணக் கிட்டாதவர்களாக தாய் முன்னும் தந்தையார் பின்னுமாக இவ்வுலக வாழ்வை நீத்துச் சென்றனர். கவிராயர் அவர்கள் தமது அண்ணன்மார் களோடு வசிக்க நேர்ந்தது.

கவிராயர் அவர்கள் தமது கல்வியை மேலும் விருத்தி செய்வதன் பொருட்டு தமது இடத்திற்கு அருகாமையிலுள்ள தர்மபுரத்திற்குச் சென்று அங்குள்ள சைவ மடாலயத்தில் இருந்த தம்பிரான்களிடம் தமிழும் சமஸ்கிருதமும் கற்று பாண்டித்தியமடைந்தார். அன்றியும் அங்கிருந்த அம்பலவாணக் கவிராயரிடத்தில் தமிழ்க் கல்வியையும் சைவாகம புராண இதிகாசங்களையும் கற்றார். கவிராயரது அதி தீவிர உயர்ச்சியைக் கண்ட அம்பலவாணக் கவிராயரான பண்டாரச் சந்நிதியவர்கள் தமது மடத்திற்குள் தலைமைப் பதவியை வழங்க முன்வந்தார். அவரும் அதை ஏற்றுக்கொண்டார். 12 ஆண்டுகள் மடத்தில் இருந்து பின்பு அங்கிருந்து தம்மூர் வந்து சேர்ந்து மென்மேலும் தமிழ் மொழியின் கண்ணுள்ள அரிய நூல்களையும் இடையறாது படித்து தம் புலமையை விருத்தி செய்து கொண்டார்.

பின்பு தமது முப்பதாவது வயதில் கருப்பூரில் தம் உறவினர் குடும்பத்திற் பிறந்த பெண் ஒருத்தியை விவாகஞ் செய்து இல்லறத்தை நடாத்துவாராயினர். தமது வாழ்க்கையைத் திறம்பட நடாத்த காசுக்கடை ஒன்றை வைத்து வர்த்தகம் செய்து வந்தார். கவிராயர் அவர்கள் சீர்காழியில் வசித்த பொழுது அசோமுகி நாடகம், சீர்காழி தல புராணம், சீர்காழிக்கோவை, அனுமார் பிள்ளைத் தமிழ் என்பவற்றை இயற்றிப் புகழடைந்தார். இவர் சீர்காழியில் 25 ஆண்டுகள் வாழ்ந்தார். சீர்காழியிலேயே இருந்ததால் "சீர்காழி அருணாசலக் கவிராயர்" என பெயர் வழங்கலாயிற்று.

சீர்காழிக்கு அடுத்த சட்ட நாதபுரம் என்ற கிராமத்தில் வசித்து வந்த வெங்கட்ராமையர், கோதண்டராமையர் என்ற சங்கீத விற்பன்னர்களின் சிநேகம் கவிராயருக்கு கிட்டியது. இதன் பயனாகத் தாம் இராமாயணக் கதையைக் கீர்த்தனைகளாகச் செய்யும் மார்க்கத்திற்கு

அவ்விரு இசை விற்பன்னர்களின் உதவியோடு வால்மீகிரிஷி ஸ்லோகமாகவும், கம்பர் விருத்தப்பாவாகவும் பால பாரதியார் சந்த விருத்தமாகவும் பாடி இருப்பதைத் துணை கொண்டார். முதலில் "விநாயகர் சரணம்" என்ற கணபதியின் பேரில் கீர்த்தனையைப் பாடி யான் செய்யப் புகும் இராம நாடகக் கீர்த்தனைகளை இனிது நிறைவுற அருள் புரிவாயே எனக் கேட்டுக் கொண்டார். அதற்கேற்ப காண்டங்களாக வகுத்த முறைப்படி கீர்த்தனங்களாப் பாடி கம்பரவர்கள் இராமாயண அரங்கேற்றம் செய்த ஸ்ரீரெங்கத்தில் தாமும் அரங்கேற்றினார்.

பின்பு தஞ்சையில் துளஜா மகாராஜாவின் சபையிலும் அரங்கேற்றம் செய்தார். அதைத் தொடர்ந்து மணலி முத்துக் கிருஷ்ண முதலியார் கூட்டிய சபையிலும் பாடிப் பரிசில்களும் பெற்றார். இவரது கீர்த்தனைகள் இன்றும் பலரால் கச்சேரிகளிலும் நாடகங்கள் நடனங்களிலும் பாடப்பட்டு வருகின்றன.

இவரது உருப்படிகளில் நாடகப் பாணிக்கேற்ப ஆங்காங்கு நவரசங்களும் இராக தானமும் பொருத்தமாக இருப்பதைக் காண எவரும் வியப்படையாமல் இருக்க முடியாது.

தற்காலத்தில் தோன்றிய தமிழ் இசை இயக்கத்திற்கு உறுதுணையாக இவரது கீர்த்தனைகளே வழிகாட்டின எனலாம். கவிராயர் அவர்கள் விவாகத்திற்கு பின்பு 12 வருடங்கள் சீர்காழியிலும் வசித்தார். இவரது 60ஆம் வயதில் இராம நாடகக் கீர்த்தனைகளைப் பாடினார். இவர் தமது 67ஆம் வயதில் இறைவனடி சேர்ந்தார் என இவரது சரித்திரக் குறிப்புக்கள் கூறுகின்றன.

**தேர்ச்சி 5.0** : பரத நாட்டியம், கிராமிய நடனம் என்பன பற்றியும், இலங்கையின் தேசிய கலாசார நடனங்களின் வரலாற்றுப் பின்னணி பற்றியும் இவற்றின் இசை பற்றிய விளக்கங்களையும் அறிந்து வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 5.4** : இலங்கையிலுள்ள பிரதேசங்களுக்குரிய கூத்து வகைகளின் கலாசாரப் பின்னணியை விளக்குவார்.

**செயற்பாடு 5.4.1** : மட்டக்களப்பு அண்ணாவி மரபுக் கூத்துக்களில் தென்மோடி நாட்டுக் கூத்தின் தோற்றம், ஆட்ட முறை, ஆடை அணிகள், ஒப்பனை பக்கவாத்தியம் என்பன பற்றிக் கற்போம்.

**நேரம்** : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- தென்மோடி நாட்டுக்கூத்து சம்பந்தமான படங்கள்.
- தென்மோடி நாட்டுக்கூத்துப் பாடல்கள் அடங்கிய ஒலி, ஒளி நாடாக்கள்.
- வீடியோ பதி கருவி, தொலைக்காட்சிக் கருவி
- செயற்பத்திரம் 5.4.1.2 பின்னிணைப்பு

## கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:
## படி 5.4.1.1

- நாட்டுக்கூத்து சம்பந்தமான படங்களைக் காட்சிப் படுத்திக் கலந்துரையாடுங்கள்.
- தென்மோடி நாட்டுக்கூத்துப் பாடல்களைச் செவிமடுக்கச் செய்தல்.
- நாட்டுக்கூத்தின் வரலாறு, நாட்டிய அமைப்பு, இசை, பக்கவாத்தியம் ஆகிய அம்சங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

> - தென்மோடி நாட்டுக்கூத்து வழக்கிலிருக்கும் பிரதேசம்.
> - ஒரு நாட்டின் கலாசாரம், பண்பாடு என்பவற்றை நாட்டுக்கூத்துக்கள் பிரதிபலிக்கும்.
> - தென்மோடிக் கூத்துக்கள் சிலவற்றின் பெயர்கள்.
> - தென்மோடிக் கூத்துக்கள் மட்டக்களப்பில் இன்றும் ஆடப்பட்டு வருகின்றமை.
> - தென்மோடிக் கூத்துக்கள் இன்பியல் நாடகங்கள்.
> - வடமோடிக் கூத்து வடிவம் பற்றிய விளக்கம்.

(10 நிமிடங்கள்)

**படி 5.4.1.2** : 

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப மாணவர்களைச் சிறிய குழுக்களாகப் பிரியுங்கள்.
- தென்மோடி நாட்டுக்கூத்து வரலாறு தொடர்பான இணைப்புப் பத்திரத்தை ஒவ்வொரு குழுவிற்கும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பத்திரத்தை வழங்குங்கள்.
- இணைப்புப் பத்திரத்தைப் பயன்படுத்தி ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்திற்கு விடையளிக்க நெறிப்படுத்துங்கள்.

(20 நிமிடங்கள்)

**படி 5.4.1.3** : 

- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்திற்கு விடை யளிக்க நெறிப்படுத்துக.
- ஒரு குழு முன்வைத்த விடயத்தை ஏனைய குழுவினரும் அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- மாணவர்கள் முன்வைத்ததை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்தும் வகையிற் கலந்துரையாடுங்கள்.

> - தென்மோடி நாடகங்கள் :- பவளமல்லி நாடகம், அலங்கார ரூபன் நாடகம், வாளபிமன் நாடகம், நொண்டி நாடகம் என்பன
> - இவை இன்பியல் நாடகங்கள்
> - முக்கியமான இரஸம் - ஷ்ருங்காரம்
> - அற்புத இரஸம், ஹாஸ்ய இரஸம் ஆகியனவும் இடம்பெறும்.
> - தரு என்னும் பாடல் அமைப்பு உண்டு.
> - பாடல்கள் சௌக காலத்தில் பாடப்படும்.
> - வசனங்கள் வேகமாகப் பேசப்படமாட்டா
> - தென்மோடிக் கூத்தில் நடிகர் வளைந்து வளைந்து ஆடுவர்.
> - இக்கூத்தில் பாரமற்ற உடைகளை அணிவர்.
> - அரசர்களது முடி பூவினாற் செய்யப்பட்டிருக்கும்.
> - தென்மோடிக் கூத்தில் நடிகர்கள் பாடிக் கொண்டே நடிப்பார்கள்.
> - இதில் கடைசிப் பகுதியை மட்டுமே பிற்பாட்டுக் காரர் பாடுவார்.
> - இதன் இசை பழைய பாணியில் அமைந்திருக்கும்.
> - வடமோடி, தென்மோடிக் கூத்துக்களை ஒப்பிட்டு நோக்குவர்.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. தென்மோடி ஆட்டங்கள் எவை எனக் குறிப்பிடுவர்.
2. தென்மோடி இசை, ஆடை, அணிகள் எவ்வாறு அமைந்திருக்கும் எனக் கூறுவர்.
3. தென்மோடியில் இடம்பெறும் இரசங்கள் பற்றி விளக்குவர்.
4. தென்மோடி நாட்டுக் கூத்துப் படங்களைச் சேகரித்து வெளிக்களப் புத்தகம் ஒன்றைத் தயாரிப்பர்.

## செயற்பத்திரம் - 5.4.1.2

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை இணைப்புடன் சேர்த்து வழங்குங்கள்.

### குழு 1:

1. தென்மோடிக் கூத்தின் உற்பத்தி, வளர்ச்சி என்பன பற்றி ஆராய்க.
2. தென்மோடிக் கூத்தின் ஆட்ட முறைகள், இசை, ஒப்பனை பற்றிக் கட்டுரை வரைக.
3. இலங்கையில் பயில் நிலையிலுள்ள கூத்து வடிவங்களை ஆராய்க.

### குழு 2:

1. வடமோடி, தென்மோடி நாட்டுக் கூத்துக்களை பின்வரும் அம்சங்கள் தொடர்பாக ஒப்பிடுக. (பின்னிணைப்பு ஆண்டு -10 இல் வடமோடி பின்னிணைப்பைப் பயன்படுத்துக)
   - ஆட்ட முறை
   - ஆடை அணிகள்
   - பாடல் அமைப்பு
   - ஒப்பனை

**இணைப்பு**

## தென்மோடி நாட்டுக் கூத்து

நாட்டுக் கூத்துக்கள் பல நூற்றாண்டுகளாக இலங்கையில் ஆடப்பட்டும் பாடப்பட்டும் வந்துள்ளன. யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, சிலாபம், மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் இக் கூத்துக்கள் நடைபெறுகின்றன.

மட்டக்களப்பில் ஆடப்பட்டு வரும் நாட்டுக் கூத்துக்கள் இரு வகைப்படும். ஒன்று வடமோடி, மற்றையது தென்மோடிக் கூத்து. இக் கூத்துக்களுக்கான மூலாதாரத்தை இதுவரை எவரும் தெரிந்திலர். ஆயினும், இந்தியாவின் வடக்கே இருந்து இலங்கை வந்த ஆரியக் கூத்தே வடமோடி எனவும் வடக்கேயிருந்து வந்தமையால் வடமோடி ஆயிற்று எனவும், இந்தியாவின் தெற்கேயிருந்து வந்த தமிழ்க் கூத்தே தென்மோடிக் கூத்து ஆயிற்று எனவும் சிலர் கூறுவர். மேலும் தென்மோடியானது தமிழகத்தில் தென் பகுதியான மதுரையில் ஆடப்பட்ட கூத்தின் தாக்கம் பெற்றுத் தென் பகுதியிலிருந்து வந்தமையினால் தென்மோடி ஆயிற்று எனவும் கூறுவர்.

தென்மோடிக் கூத்துக்கள் பெரும்பாலும் தமிழ் நாட்டுக் கதைகளைக் கூறுவனவாய் அமைந்துள்ளன. இன்பியல் நாடகங்களான இவை ஷ்ருங்கார இரஸத்தையே முக்கியமாகக் கொண்டு விளங்குகின்றன. தென்மோடிக் கூத்துக்களின் கதை, காதற் சுவையை அடிப்படை யாகக் கொண்டு ஈற்றில் காதல் நிறைவேறுவதாகக் கற்பனை செய்யப்பட்டுள்ளன. இக்கூத்துக்களில், ஷ்ருங்கார இரஸத்தைத் தவிர, ஹாஸ்யம், அற்புதம் ஆகிய இரசங்கள் காணப்படுகின்றன். பவளக்கொடி நாடகம், அலங்கார ரூபன் நாடகம், வாளபிமன் நாடகம், நொண்டி நாடகம் ஆகிய தென்மோடிக் கூத்துக்களிற் குறிப்பிடற்பாலன.

ஆட்டம், இசையைப் பொறுத்தவரையில் இருமோடிகளுக்குமிடையே கணிசமான *வேறுபாடுகளைக் காணலாம். தென்மோடி ஆட்டங்கள் வடமோடி ஆட்டங்களைப் பார்க்கிலும்,* நுணுக்கமானவையாகவும் கடினமானவையாகவும் உள்ளன. தென்மோடி ஆட்டக்காரர் வரவு ஆட்டம் ஆடியதும் களைத்துப் போய்விடுவார். ஆதலால் வரவைக் குறிக்கும் பாடலை அண்ணாவியார் அல்லது பக்கப்பாட்டுக்காரர் பாட கூத்தர் ஆடுவர். இசையைப் பொறுத்த வரையில் தென்மோடியில் பாடல்கள் சௌக காலத்தில் பாடப்படும். மேலும், இக் கூத்தின் இறுதிப் பகுதியை மட்டுமே பிற்பாட்டுக்காரர் தொடர்ந்து படித்த பின் பாட்டு முழுவதற்கும் உரிய தருவைப் பாடுவார். தரு பாடும் பொழுது கூத்தர் ஆடுவர். தரு என்பது கூத்துப் பாடல்களைப் பாடும் முறையை அமைத்துக்காட்டும் ஒருவித சொற்கோப்பாகும். இத் தரு பாடும் வழக்கம் தென்மோடி நாட்டுக்கூத்தில் மட்டுமே காணப்படுகிறது.

தரு என்பது மறுதரு, தோற்றத் தரு, விளையாட்டுத் தரு, சொரிசகத் தரு எனப் பல வகைப்படும். இவற்றை தவிர தாழிசைத் தரு, கலிப்பாத் தரு, ஊஞ்சற் தரு, வழிநடைத் தரு, தாராட்டுத் தரு, வாழித் தரு ஆகிய தருக்களும் காணப்படுகின்றன. தென்மோடி நாட்டுக் கூத்தின் தனித்தன்மையும், சிறப்பம்சங்களுமாக கொச்சகத் தரு, இன்னிசை, சிந்து, கலித்துறை, தாழிசை, பதம், உலா, கலிப்பாத் தரு ஆகியன விளங்குகின்றன.

தென்மோடிக் கூத்தில் தெய்யத் தாக சந்தத்துமி என்ற தாளம் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. மற்றும் மட்டக்களப்பு நாட்டுக் கூத்துக்களில் பலவகையான ஆட்ட முறைகள் காணப்படுகின்றன. அவை ஆரம்ப ஆட்டம், தாளம் தீர்தல், இடை ஆட்டம், முடிவு ஆட்டம் ஆகியனவாம். தென்மோடியில் பாவிக்கப்படும் தாளக் கட்டுக்களும் தனித்துவம் வாய்ந்தவை. தென்மோடியில் அரசன், அரசி, தூதுவர், பணியாள் போன்ற அனைத்து கதாபாத்திரங்களுக்கும் "ததித்துனா தக ததிங்கின திமிதக தா தெய்யத்தா தோம்" என்ற தாளக் கட்டும் வீரர்களுக்கு "தக திகதாதாதாம்" என்ற தாளக்கட்டுமாக இரண்டு தாளக்கட்டுக்களே பயன்படுத்தப்படுகின்றன.

தென்மோடியில் காணப்படும் ஆஹார்ய அபிநயம் தனித்துவமானது. இக் கூத்து வடிவில் கூத்தாடுபவர் உடல் வருந்த வளைந்து வளைந்து ஆடுவதால், ஆடை அணிகலன்கள் பாரம் குறைந்தனவையாகக் காணப்படுகின்றன. அரச வேடம் பூண்டு ஆடுபவர்களது முடி பூமுடியாக இருக்கும். அரசியின் வேடம் பூண்பவர் தலையில் தலைச்சோடனைகளையும் மூக்கில் மிராக்கு, மூக்குத்தி, நத்து ஆகிய நகைகளையும், காதில் தோடுகளையும், கழுத்தில் அட்டியலையும், மார்பில் நெஞ்சுப் பதக்கத்தையும், இடுப்பில் ஒட்டியாணத்தையும், புஜத்தில்

கைப்புஜத்தையும், கைகளில் கடகத்தையும், கால்களில் குறைந்த அளவு எண்ணிக்கைகளைக் கொண்ட சதங்கைகளையும் அணிவர்.

வீரர்கள், தலையாரிமார் போன்ற வேடதாரிகள் தலையில் குல்லா, தொப்பி, வர்த்தி என்பனவற்றையும், மார்பில் இழைப்புச் சட்டை என்பதனையும், இடுப்பில் பட்டி, மர உரி ஆகியவற்றையும், கால்களிற் சதங்கைகளையும், கைகளில் கடகம் என்னும் ஆபரணத்தையும் அணிவர்.

தென்மோடிக் கூத்தர்கள் முகத்திற்குச் செய்து கொள்ளும் ஒப்பனை 'முகப்பூச்சு' என்றழைக்கப்படும். ஒவ்வொரு விதமான கதாபாத்திரங்களுக்கு வெவ்வேறு விதமான முக ஒப்பனை செய்யப்படும்.

ஆரம்ப காலங்களில் இக் கூத்துக்களுக்கென பிரத்தியேகமான ஓர் அரங்கம் இருக்கவில்லை. இக் கூத்துக்கள் திறந்தவெளி அரங்குகளில் அக்கால கட்டத்தில் இடம்பெற்றன. இதன்பின் ஐரோப்பியரின் வருகையால் மூன்று பக்கம் அடைக்கப்பட்டதும் ஒரு பக்கம் பார்வையாளர்களைக் கொண்டதுமான மேடையமைப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இது புறசீனியம் (Procenium) மேடையமைப்பு எனக் கொள்ளப்பட்டது.

இலங்கையில், மட்டக்களப்புப் பிரதேசத்தில் வழக்கிலிருக்கும் இக் கூத்துக்கள் தமிழர் தம் கலை கலாசாரப் பண்பாடுகளின் குறியீடுகளாகக் காணப்படுகின்றன.

# பகுதி - III

# கணிப்பீடும் மதிப்பீடும்

## 11.3.1 கணிப்பீடும் மதிப்பீடும்

கற்றல் - கற்பித்தற் செய்கையின் மூலம் எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறுகளைத் தெளிவாகப் பெற்றுக் கொள்வதற்கும், மாணவர்கள் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்குமாக வகுப்பறையில் இலகுவாகச் செயற்படுத்த முடியுமான ஒன்றுக் கொன்று தொடர்புபட்ட இரண்டு வேலைத்திட்டங்களாகக் கணிப்பீட்டையும், மதிப்பீட்டையும் கருதலாம். கணிப்பீடு சரியான முறையில் நடைபெறுமெனின், வகுப்பில் கற்கும் ஒவ்வொரு பிள்ளையும் உரிய தேர்ச்சியின் (நிபுணத்துவத்தின்) அண்மிய மட்டத்தையாவது பெற்றுக் கொள்வது கடினமல்ல. மதிப்பீட்டின் மூலம் எதிர்பார்க்கப்படுவது பிள்ளைகள் பெற்றுக் கொண்ட தேர்ச்சி எம்மட்டத்தில் காணப்படுகிறது என்பதைக் கண்டுகொள்வதாகும்.

கணிப்பீட்டைச் செயற்படுத்தும்போது ஆசிரியர்கள் மாணவர்களுக்கு இரண்டு விதமாக வழிகாட்டல்களை வழங்கலாம். இவ்வழிகாட்டல்கள் இரண்டும் பொதுவாகப் பின்னூட்டல் (Feed Back), முன்னோக்கிய ஊட்டல் (Feed Forward) என அழைக்கப்படுகின்றன. மாணவர்களின் பலவீனம், இயலாமை என்பவற்றை இனங்கண்டு கொண்டபின் அவர்களிடம் காணப்படும் கற்றல் தொடர்பான பிரச்சினைகளை நீக்கிக் கொள்வதற்கு பின்னூட்டலையும், மாணவர்களின் பலம், இயலுமை என்பவற்றை இனங்கண்டு கொண்டபின் அவற்றை மேலும் விருத்தி செய்து கொள்வதற்கு முன்னோக்கிய ஊட்டலையும் வழங்குவது ஆசிரியரின் கடமையோடு சார்ந்த பொறுப்பாகும்.

கற்றல் - கற்பித்தல் செய்கையின் வெற்றி பாடத்திட்டத்திலுள்ள தேர்ச்சிகளில் எத்தேர்ச்சிகளை மாணவர்கள் எந்த மட்டத்தில் அடைந்துள்ளனர் என்பதை அறிவதன் மூலம் இனங்காணப்படுகின்றது. கற்றல் - கற்பித்தல் செய்கையின் போது மாணவர்கள் அடைந்த தேர்ச்சி மட்டங்களை அளவிடுவது எதிர்பார்க்கப்படுவதோடு, அடைந்த தேர்ச்சி மட்டங்கள் பற்றிய விபரங்களை பெற்றோர் உள்ளிட்ட மற்றும் உரிய நபர்களுக்கும் தொடர்பாடல் செய்வது ஆசிரியரின் பொறுப்பாகும்.

உங்களிடம் முன்வைக்கப்பட்டுள்ள இப்பாடத்திட்டம் மாணவர் மையமான (Student-Centered), தேர்ச்சி மட்ட (Competency-Based), செயற்பாடு சார்ந்த (Activity-Oriented) பிரவேசத்தைக் கொண்டது. வாழ்வைக் கருத்துள்ளதாக்கிக் கொள்வதற்கு, செயற்பாட்டினூடாகக் கற்றல் என்பது ஆசிரியரின் உருமாற்றப் பங்களிப்பில் காணப்படும் பிரதான அம்சமாகும்.

ஏற்கனவே தயாரிக்கப்பட்ட செயற்பாடுகளின் தொடரகத்தின் ஊடாகச் செயற்படுத்தப்படும் இப்பாடத்திட்டமானது, கற்றல்-கற்பித்தலை கணிப்பீடு-மதிப்பீடு என்பவற்றோடு ஒன்றிணைப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயற்பாட்டிலும் அதன் இரண்டாம் படியில் மாணவர்கள், குழுவாக ஆய்வில் ஈடுபடும்போது அவர்களை கணிப்பீடு செய்வதற்கும் செயற்பாட்டின் மூன்றாம் படியில் மாணவர்கள் தமது கண்டுபிடிப்புக்கள், பேறுகள் என்பவற்றைச் சமர்ப்பிக்கும்போது மாணவர்களை மதிப்பீடு செய்வதற்கும் ஆசிரியருக்கு முடியுமாகின்றது. மாணவர்கள் குழுவாக ஆய்வில் ஈடுபட்டிருக்கும்போது அவர்களினூடே சென்று அவர்களது வேலைகளை அவதானிப்பதன் மூலம், மாணவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை வகுப்பறையில் தீர்ப்பதற்குரிய வசதிகளையும், வழிகாட்டல்களையும் வழங்குவது ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படுகின்றது.

கணிப்பீடு, மதிப்பீடு என்பவற்றை இலகுவாகச் செய்துகொள்வதற்கு ஐந்து பொது நியதிகள் முன்வைக்கப்படுகின்றன. இந்நியதிகளில் முதன் மூன்று நியதிகளும் உரிய தேர்ச்சி மட்டத்தோடு தொடர்பான அறிவு, மனப்பாங்கு, திறன்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதாகவும், அடுத்த இரண்டு நியதிகளும் வாழ்க்கைக்குத் தேவைப்படும் முக்கியமான இரண்டு திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கானதாகவும் இருத்தல் வேண்டும். இந்த ஐந்து நியதிகளுடன் இணைந்ததான நடத்தை மாற்றங்கள் வகுப்பறையில் மாணவர்களிடம் காணப்படுகின்றதா என்பதைக் கண்டுகொள்வதற்கு ஆசிரியர் முயற்சி எடுக்க வேண்டியதோடு கணிப்பீட்டின் மூலம் கண்டுகொள்ளப்படும் மாணவர்கள் பெற்றுள்ள இத்திறன்களின் அளவை மதிப்பீட்டின் மூலம் ஆசிரியர் அளந்து கொள்ள வேண்டும்.

கணிப்பீடு தொடர்பான வேலைத்திட்டங்களை அபிவிருத்தி செய்துகொள்வதன் மூலம் கற்றல் - கற்பித்தற் செய்கையை விரிவுபடுத்திக் கொள்ளலாம். இதற்காக முதலில் செயற்பாட்டுத் தொடரகத்தில் வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகளை கணிப்பீட்டு வகைகளை அடிப்படையாகக் கொண்டதான தொகுதிகளாக வேறாக்கிக் கொள்க.

மாணவர்களின் கற்றலை மலரச் செய்யக்கூடியதாக, உரிய பாடவிடயத்துடன் தொடர்பான செயற்பாட்டைத் தெரிவு செய்க. இனி, உரிய கற்றல் - கற்பித்தல் செய்கைக் கான சாதனங்களைத் தயாரித்துக் கொள்க. ஒவ்வொரு செயற்பாட்டின் ஆரம்பத்தில் உரிய உபகரணங்களைக் குழுக்களுக்கு வழங்க வேண்டும். கற்றல் - கற்பித்தல் செய்கையை விரிவாக்கும் போது அவை அமையக்கூடிய வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- எண்ணக்கருப்படம் (Concept Map)
- சுவர்ப்பத்திரிகை (Wall News Paper)
- புதிர்ப்போட்டி (Quizze)
- வினாவிடைப் புத்தகம் (Question and Answer Book)
- மாணவர் செயற்பாட்டுக் கோவை (Portfolio)
- கண்காட்சி (Exhibition)
- விவாதம் (Debate)
- குழுக் கலந்துரையாடல் (Panel Discussion)
- கருத்தரங்கு (Seminar)
- சமயோசிதப் பேச்சு (Impromptu Speeche)
- நடிபங்கு (Role Play)
- இலக்கியக் கருத்துக்களையும், விமர்சனங்களையும் முன்வைத்தல் (Presentation of Literature Review)
- வெளிக்களப் புத்தகம் / தினக் குறிப்புப் புத்தகம் / வேலைப்புத்தகம் (Field Books / Nature Diary)
- செய்முறைச் சோதனை (Practical Test)

பாட வழிகாட்டியின் மூன்றாம் பகுதி, உத்தேச கற்றல் - கற்பித்தற் செய்கைகளை விரிவாக்கும் வகைகளைக் கொண்ட செயற்பாடுகளையும் அதற்கான கற்றல் - கற்பித்தல் சாதனங்களையும் அறிமுகஞ் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளினுள் கணிப்பீடும், அதனோடு தொடர்பான மதிப்பீடும் இணைக்கப்பட்டுள்ளதால் கற்றல் - கற்பித்தற் செய்கை மேலும் விரிவாக்கப்பட்டுள்ளதோடு மாணவர்கள் ஆர்வத்தோடும் மகிழ்ச்சியோடும் கற்றலில் ஈடுபடுவதற்கு முடியுமாகின்றது.

- மாணவர் கற்றலில் உயர்மட்ட அடைவைப்பெற வேண்டுமாயின் தொடர்ச்சியான கணிப்பீட்டிற்கு உட்படுத்த வேண்டியது அவசியமாகும்.

- மாணவர் கற்றல் அடைவு கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் போதும், பாட அலகின் முடிவிலும், மாத முடிவிலும், தவணை முடிவிலும், ஆண்டு இறுதியிலும் கணிப்பீடும் மதிப்பீடும் செய்யப்படும்.

- பரத நாட்டிய கணிப்பீட்டில் அறிமுறை, செய்முறை ஆகிய இரண்டும் இடம்பெற வேண்டும்.

- இப்புதிய பாடத்திட்டத்தில் கற்றல் செயற்பாடுகள் தனியாள் நிலையிலும் குழு நிலையிலும் இடம்பெறுவதால் இவ்விரு நிலைகளிலும் மாணவர் கணிப்பிடப்படல் வேண்டும்.

- இரசித்தல், ஆக்கத்திறன் என்பவை தொடர்பான கணிப்பீட்டிற்கு வகுப்பறையில் கூடிய சந்தர்ப்பங்களை வழங்க வேண்டும். அவற்றை அவதானிப்பதன் மூலம் மதிப்பீடு செய்தல் வேண்டும்.

- மாணவர்களின் அறிதல் ஆட்சித்திறன், மனவெழுச்சிப் பண்புகள், உளவியக்கத் திறன்கள், கற்றவற்றை நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்தும் ஆற்றல் என்பவற்றை விருத்தி செய்வதற்கு உதவுவதோடு அவர்களின் பலம், பலவீனம் என்பவற்றை இனங்கண்டு அவர்களுக்கு உதவும் வகையில் பாடசாலை மட்டக் கணிப்பீட்டுத் திட்டத்தை பாடசாலைகளில் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்காக முன்னர் கூறப்பட்ட மாதிரிக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட செயற்பாடுகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

## 11.3.2 கற்றல் - கற்பித்தலை மேலும் விரிவுபடுத்தலுக்கான கருவிகள்

### கருவி - 01

**01. கணிப்பீட்டுச் சந்தர்ப்பம்** : தவணை - 1

**02. உள்ளடங்கும் தேர்ச்சி மட்டம்** : 3.3

**03. கருவிக்குரிய பாடப்பகுதிகள்** : அடவு தத்தெய்தாஹா - 3

**04. கருவியின் தன்மை** : செயன்முறை

**05. கருவியின் நோக்கம்** :
- ❖ 3ஆவது தத்தெய்தாஹா அடவினைக் கொலுப் பிப்பர்.
- ❖ மூன்று காலங்களிலும் இவ் அடவினை அங்க சுத்தத்துடன் ஆடுவர்.

**06. கருவியைப் பயன்படுத்தும் முறை பற்றிய ஆலோசனைகள்.**

**ஆசிரியருக்கு** :
- ❖ மாணவரைத் தனித்தனியாக ஆடச் சந்தர்ப்பம் வழங்குக.
- ❖ ஆடும் போது மதிப்பீட்டிற்குரிய நியதிகளுக் கேற்பக் கணிப்பீடு செய்க.

**மாணவருக்கு** :
- ❖ 3ஆவது தத் தெய் தாஹா அடவினைத் தாளத் துடன் கொலுப்பித்துப் பயிற்சி செய்க.
- ❖ குறித்த அடவினைத் திரிகாலங்களிலும் ஆடிப் பயிற்சி செய்க.

**07. புள்ளி வழங்கும் நியதிகள்** :
- ❖ கொலுப்பித்தல்
- ❖ அரைமண்டி
- ❖ அங்கசுத்தம், லயம்
- ❖ மூன்று காலங்களிலும் ஆடுவர்
- ❖ சமர்ப்பணம்

**08. புள்ளித்திட்டம்** :
(நியதிகளுக்கேற்ப)
- ❖ மிக நன்று - 04 புள்ளிகள்
- ❖ நன்று - 03 புள்ளிகள்
- ❖ சாதாரணம் - 02 புள்ளிகள்
- ❖ விருத்தியடைய வேண்டும் - 01 புள்ளிகள்

மேற்படி நியதிகள் ஒவ்வொன்றிலும் அவதானிக்கப்பட வேண்டிய அம்சங்கள் வருமாறு:

- **கொலுப்பித்தல்** : தெளிவான உச்சரிப்புடன் ஜதிகளைக் கூறுதல், தாளத்திற்கமைய, லயப்பிடிப்புடன் திரிகாலங்களிலும் கொலுப்பித்தல்.
- **அரைமண்டி** : ஆயத நிலையை சுத்தமாகக் கடைப்பிடித்தல், பாதங்களின் விரிந்த நிலை, கோடு போல் பாதங்கள் இருத்தல்.
- **அங்க சுத்தம், லயம்** : லயப் பிடிப்புடன் ஆடுதல், அங்க சுத்தம், அடவு சுத்தம், ரேகா இவற்றைக் கவனித்தல்.
- **மூன்று காலங்களிலும் ஆடுவர்.** : முதலாம் காலம், இரண்டாம் காலம், மூன்றாம் காலம் ஆகிய திரிகாலப் பிரமாணங்களில் ஆடுதல்.
- **சமர்ப்பணம்** : மேற்கூறிய நான்கு அம்சங்களும் பொருந்திய ஒரு முழுமையான வெளிப்பாடு.

# கருவி - 02

**01. கணிப்பீட்டுச் சந்தர்ப்பம்** : தவணை - 2

**02. உள்ளடங்கும் தேர்ச்சி மட்டம்** : 4.5

**03. கருவிக்குரிய பாடப்பகுதிகள்** : பரத நாட்டிய உருப்படிகளின் இலட்சணம்

- ❖ சப்தம்
- ❖ பதவர்ணம்
- ❖ பதம்

**04. கருவியின் தன்மை** : வினா விடைப் புத்தகம்

**05. கருவியின் நோக்கம்** :

- ❖ சப்தம், வர்ணம், பதம் ஆகியவற்றின் இலட்சணங்களின் விளக்கத்தைப் பெறுவார்.
- ❖ கொடுக்கப்பட்ட அம்சங்கள் தொடர்பான வினாக்களை விடைகளுடன் தயார்செய்து வினா விடைப் புத்தக வடிவில் சமர்ப்பிப்பர்.

**06. கருவியைப் பயன்படுத்தும் முறை பற்றிய ஆலோசனைகள்.**

**ஆசிரியருக்கு** :

- ❖ செயற்பாட்டை ஆரம்பிக்கும் முன்னர் இக்கருவி பற்றி வகுப்பிற்கு அறிமுகம் செய்க.
- ❖ வினாவிடைப் புத்தகம் தயாரிக்கும் முறை பற்றிய அறிவுறுத்தல்களை மேற்கொள்க.
- ❖ வினாக்களின் வகைகள் பற்றி மாணவர்களுக்கு ஆலோசனைகளை வழங்குக.
- ❖ சப்தம், வர்ணம், பதம் ஆகிய பகுதிகளில் வினாக்களையும் விடைகளையும் தயார் செய்யப் பணிக்குக.
- ❖ ஒவ்வொரு மாணவரும் தனித்தனியாகச் செயற்பட வேண்டும் என்பதைக் கூறுக.
- ❖ கொடுக்கப்பட்ட கால எல்லைக்குள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதைக் கூறுக.

**மாணவருக்கு** :

- ❖ கொடுக்கப்பட்ட பகுதிகளில் வினாக்களை விடைகளுடன் தயார்செய்க.
- ❖ கொடுக்கப்பட்ட கால எல்லைப் பகுதியை ஆசிரியரிடம் கேட்டு அறிக.
- ❖ ஒவ்வொரு மாணவரும் தனித்தனியாகச் செயற்பாட்டில் ஈடுபடுக.

**07. புள்ளி வழங்கும் நியதிகள்** :
- ❖ வினாக்கள் மாணவரின் சுய ஆக்கமாக இருத்தல்.
- ❖ தயாரிக்கப்பட்டுள்ள வினாக்களின் தன்மையும் தரமும்.
- ❖ உற்சாகத்துடன் செயற்படல்.
- ❖ விடைகளின் பொருத்தம்.
- ❖ குறித்த காலத்தில் சமர்ப்பித்தல்.

**08. புள்ளித்திட்டம்**
(நியதிகளுக்கேற்ப) :
- ❖ மிக நன்று - 04 புள்ளிகள்
- ❖ நன்று - 03 புள்ளிகள்
- ❖ சாதாரணம் - 02 புள்ளிகள்
- ❖ விருத்தியடைய வேண்டும் - 01 புள்ளிகள்

# கருவி - 03

**01. கணிப்பீட்டுச் சந்தர்ப்பம்** : தவணை - 3

**02. உள்ளடங்கும் தேர்ச்சி மட்டம்** : 3.5

**03. கருவிக்குரிய பாடப்பகுதிகள்** : வெவ்வேறு வகையான கிராமிய நடனங்கள்
- கும்மி

**04. கருவியின் தன்மை** : செயன்முறைச் சோதனை

**05. கருவியின் நோக்கம்** :

- ❖ "நீலமயிலேறும்" என்ற கும்பிப் பாடலை இராக, தாளத்துடன் பாடுவர்.
- ❖ "நீலமயிலேறும்" என்ற கும்மி நடனத்தைக் கவர்ச்சியுடனும் பாவ, லயத்துடனும் ஆடுவர்.
- ❖ குழு என்ற உணர்வுடன் குறித்த நடனத்தை சமர்ப்பிப்பர்.

**06. கருவியைப் பயன்படுத்தும் முறை பற்றிய ஆலோசனைகள்.**

**ஆசிரியருக்கு** :

- ❖ மாணவரைக் குழுவாக ஆடச் சந்தர்ப்பம் வழங்குக.
- ❖ ஆடும் போது மதிப்பீட்டிற்குரிய நியதிகளுக் கேற்பக் கணிப்பீடு செய்க.
- ❖ குழு நிலையில் ஆற்றுகைப்படுத்தும் போது தனித்தனியாக ஒவ்வொரு மாணவரது திறனை யும் அவதானித்து மதிப்பீட்டிற்குரிய நிபந்தனை களுக்கேற்ப கணிப்பீடு செய்க.

**மாணவருக்கு** :

- ❖ "நீலமயிலேறும்" என்ற கும்மியைப் பாடி ஆடிப் பயிற்சி செய்க.
- ❖ குழு ஒழுங்கமைப்புடன் ஆடிப் பயிற்சி செய்க.

**07. புள்ளி வழங்கும் நியதிகள்** :

- ❖ கும்மிக்குரிய அம்சங்கள்
- ❖ பாடலுக்கேற்ப ஆடுதல்
- ❖ பாவம், லயம்
- ❖ ஒத்திசைவு
- ❖ சமர்ப்பணம்

**08. புள்ளித்திட்டம்** :
(நியதிகளுக்கேற்ப)

- ❖ மிக நன்று - 04 புள்ளிகள்
- ❖ நன்று - 03 புள்ளிகள்
- ❖ சாதாரணம் - 02 புள்ளிகள்
- ❖ விருத்தியடைய வேண்டும் - 01 புள்ளிகள்

භරත නාට්‍යය 11 (දෙ)
பரத நாட்டியம்

2010 / T /11 / TIM / 4000